[illegible]

[illegible] 10 செப்டம்பர் 1997

TL
V2;1m, N70TA
N94
173 P2


தமிழரசு
16.7.1994 ரூ.3
குமரி மாவட்டத்தில்...




219382

DIPR No.678/DIS/93/247

**தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்**

குறளகம், சென்னை - 600 108


## இந்த இதழில்...


69 சதவிகித இட ஒதுக்கீடு: மாண்புமிகு முதல்வர் விளக்க அறிக்கை: .......... 2

69 சதவிகித இட ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு மேதகு குடியரசுத் தலைவர் அங்கீகாரம்: மாண்புமிகு முதல்வர் அறிக்கை..... 8

முழுமையான நிரந்தரத் தீர்வே நமது ஒரே குறிக்கோள்! - குமரி மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை......... 10

தமிழ் மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதே நமது தலையாய கடமை! - சேலம் மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை......... 18

பர்கூர் தொகுதி மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் உதவி....... 29

நூல் நயம் .................... 31



# தமிழரசு

**திருவள்ளுவராண்டு: 2025**

**ஆடித் திங்கள்: 32**

**மலர்: 25** **இதழ்: 2**

**16.7.1994**

**விலை ரூபாய் மூன்று**




## இதழ்தோறும் ஓர் இனிய குறள்

**வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல.** *(4)*

■ விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போது எவ்விடத்திலும் துன்பம் இல்லை

# "சமூக நீதி காத்த வீராங்கனை" புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் அரசு 69 சதவீத இட ஒதுக்கீட்டு முறை தொடர்ந்திட எடுத்த நடவடிக்கை குறித்த விளக்க

## அறிக்கை



தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் சமுதாய மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, அதே உணர்வுடன் தமிழ்நாட்டில் அந்த மக்களுக்குச் சமூக நீதி கிடைத்திடும் வண்ணம் 69 சதவீத இட ஒதுக்கீட்டு முறை தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக, சட்டபூர்வமான அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுத்துவருகின்றது.

தமிழக அரசின் அதிகாரத்திற்கு உட்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்து வந்திருந்தாலும், குறுகிய அரசியல் லாபத்தை மட்டுமே கருத்தில் கொண்டு, தமிழக அரசு எடுத்து வந்த நடவடிக்கைகளை இருட்டடிப்பு செய்து சில தவறான செய்திகளைத் தமிழக மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றார்கள்.

எப்போது உச்சநீதிமன்றத்தில் 50 சதவீதத்திற்கு மேல் இட ஒதுக்கீடு வழங்கக்கூடாது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டதோ, அப்போதே இந்தப் பிரச்சினை தமிழகத்தின் தலையாயப் பிரச்சினையாக – உயிர்நாடிப் பிரச்சினையாக ஏற்றுக்கொண்டு நாங்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த இட ஒதுக்கீட்டு முறை எப்படியேனும் தொடர்ந்து செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று, 7.1.1993 அன்று முடிவு செய்தோம். அந்த முடிவின்படி 22.3.1993 அன்று உச்சநீதிமன்றத்தில் ஒரு மறு ஆய்வு மனுவும் – Review Petition பின்னர் ஒரு தெளிவாக்க மனுவும் – Clarification Petition தாக்கல் செய்தோம். சட்டரீதியாக நாம் மேற்கொண்ட முயற்சிகள் பயன் தராமல், 7.5.1993 அன்று மறு ஆய்வு மனுவும், தெளிவாக்க மனுவும் உச்சநீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டன. மீண்டும் 28.9.1993 அன்று உச்சநீதிமன்றத்தில் ஒரு Special Leave Petition போட்டோம். 7.10.1993 அன்று மூல வழக்கின் மீது தமிழக அரசின் எதிர் தரப்பு வாதங்களை எடுத்து வைத்தோம். Voice(Consumer Care)Council என்ற நிறுவனம் தமிழக அரசு உச்சநீதிமன்றத்தின் ஆணையை நிறைவேற்றவில்லை என்று நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தொடர்ந்தபோது அதையும் நாங்கள் துணிவுடன் எதிர்கொண்டோம்.

4.11.1993 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், 69 சதவீத இடங்களில் 50 சதவீதத்தை மட்டும் பூர்த்தி செய்துவிட்டு, மீதம் உள்ள 19 சதவீத இடங்களை உச்சநீதிமன்றத்தில் இருந்து நமக்குச் சாதகமான ஆணை கிடைக்கப்பெற்ற பின்பு நிரப்பலாம் என்று முடிவு எடுத்தோம்.

சட்டரீதியான நடவடிக்கைகளை ஒரு புறம் எடுத்து வந்தாலும், தமிழக மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற வண்ணம் 9.11.1993 அன்று தமிழ்நாட்டில் 69 சதவீத இட ஒதுக்கீட்டு முறை தொடர்ந்து செயல்படுத்தத் தேவையான அரசியல் சட்டத் திருத்தத்தை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று ஒரு தீர்மானத்தைத் தமிழகச் சட்டமன்றப் பேரவையில் ஒரு மனதாக நிறைவேற்றியதுடன், 16.11.1993 அன்று முழு கதவடைப்பு-பொது வேலை நிறுத்தத்தையும் மேற்கொண்டு மத்திய அரசுக்கு நமது உணர்வுகளை வெளிப்படுத்தினோம். தமிழகச் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றிய தீர்மானத்தை, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கு, நான் கடிதம் மூலம் அனுப்பி வைத்தேன். பின்னர் 26.11.1993 அன்று அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி அவர்களின் கருத்துக்களை நானே நேரில் கேட்டறிந்து, தமிழ்நாட்டில் 69 சதவீத இடஒதுக்கீட்டுமுறை தொடர, ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்றுவது என்ற தீர்மானத்தைஒருமனதாக நிறைவேற்றினோம். அதன்படி, சட்டமன்றப் பேரவையில் ஒரு புதிய சட்டத்தை 31.12.1993 அன்று நிறைவேற்றி, 19.1.1994 அன்றே மேதகு குடியரசுத் தலைவர் அவர்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். எனது ஆணையின் பேரில், பல்வேறு கால கட்டங்களில், தமிழக அரசின் முதுநிலை அலுவலர்கள், மத்திய அரசின் பல்வேறு அமைச்சகத்துடன் தொடர்புகொண்டு, இந்தப் புதிய சட்டத்திற்குக் குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்தார்கள். நேர்முகக் கடிதங்களும், டெலக்ஸ் செய்திகளும் பல்வேறு தினங்களில் அனுப்பி வைக்கப்பட்டன.

1994-95 கல்வி ஆண்டில், மாணவ மாணவியர்களைக் கல்வி நிறுவனங்களில் சேர்க்கின்ற போது இந்தப் பிரச்சினை மீண்டும் விஸ்வரூபம் எடுக்கும் என்பதை அறிந்து, எப்படியேனும் விரைவில் புதிய சட்டத்திற்கு மேதகு குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்தைப் பெற்று தர வேண்டுமென, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. பி.வி.நரசிம்மராவ் அவர்களுக்கு 3.6.1994 அன்று நான் கடிதம் எழுதினேன்.

பிரதமரிடமிருந்து இது குறித்து பரிசீலனை செய்வதாக எனக்குப் பதில் கடிதம் வந்துள்ளதே தவிர, தமிழ்நாட்டில் எழுந்துள்ள பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஏற்படும் என்ற உறுதியை அளிக்கவில்லை. எனவே, எனது ஆணையின்பேரில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 14.6.1994 அன்று டெல்லியில் பாரதப் பிரதமர் திரு. பி.வி.நரசிம்மராவ் அவர்களைச் சந்தித்து, புதிய சட்டத்திற்கு மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலை விரைவில் பெற்றுத் தர வேண்டும் என்றும், அவ்வாறு பெற்றுத் தரவில்லை என்றால் ஏற்படுகின்ற பிரச்சினைகளையும் விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்கள்.

தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வுகளை மீண்டும் மத்திய அரசுக்கு உணர்த்துகின்ற வகையில், தமிழகம் முழுவதும் 17.6.1994 அன்று முழு கதவடைப்பு-பொது வேலை நிறுத்தம் மேற்கொண்டோம். அது மட்டுமின்றி அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் அடங்கிய குழு ஒன்றுக்குத் தலைமை ஏற்று, டெல்லிக்குச்சென்று பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, தமிழக மக்களின் உணர்வுகளை எடுத்துரைப்பது என்று முடிவு செய்து உள்ளேன். பாரதப் பிரதமர் இதற்கென நாள் ஒதுக்கியவுடன், முறையான அழைப்பு அனைவருக்கும் அனுப்பி வைக்கப்படும்.

இவ்வாறு நானும், தமிழக அரசும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சமூக நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு ஆக்கப்பூர்வமான ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிப்பதை விட்டுவிட்டு, குறுகிய அரசியல் லாபத்திற்காக, சில தவறான செய்திகளைத் தமிழக மக்களுக்கு அளித்துப் பொய்ப் பிரச்சாரத்தைச் செய்து வருகின்றார்கள்.

உச்சநீதிமன்றத்தின் வழக்கின்மீது, தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பது போன்ற ஒரு தவறான செய்தியை மக்கள் மத்தியிலே ஒரு சிலர் பரப்பி வருகின்றார்கள். உச்சநீதிமன்ற ஆணையை அவமதிப்பதாகத் தொடரப்பட்ட ஒரு வழக்கில் தமிழக அரசின் தலைமைச்



69 சதவிகித இடஒதுக்கீடு குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களை 25.6.94 அன்று புதுடெல்லியில் சந்தித்துப் பேசினார்.

செயலாளரும், கல்வித் துறை மற்றும் சுகாதாரத் துறைகளின் செயலாளர்களும் நேரிடையாகப் பதில் சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலை எழுந்தது என்றால், எந்த அளவிற்கு இந்த வழக்கில் நமக்குச் சாதகமான தீர்ப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், 69 சதவீத இட ஒதுக்கீட்டைத் தொடர்ந்து செயல்படுத்திட வேண்டும் என்பதற்காகவும், சட்ட ரீதியாகப் போராடி இருக்கிறோம் என்பது தெளிவாகும் என்று கருதுகிறேன்.

தமிழக அரசு தாக்கல் செய்த மறு ஆய்வு மனு மற்றும் தெளிவாக்க மனு போன்றவை தள்ளுபடி செய்யப்பட்ட பின்பும், உச்ச நீதிமன்றத்தின் ஆணையைச் செயல்படுத்த இயலாத சூழ்நிலைகளை விளக்கி நாம் தாக்கல் செய்த எதிர் மனுவும், உச்சநீதி மன்றத்தில் அவமதிப்பு வழக்கு இன்னும் நிலுவையில் இருக்கின்ற சூழ்நிலையில் நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது எந்த அளவிற்கு ஒரு பொய்யான வாதம் என்பதைத் தமிழக மக்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

73 சதவீத இட ஒதுக்கீட்டு முறை கர்நாடக மாநிலத்தில் உச்சநீதிமன்றத்தின் ஆணைக்கு எதிராகச் செயல்படுத்தி வருவது போல, ஏன் தமிழ்நாடும் செய்யக்கூடாது என்று சிலர் கேட்டு வருகின்றார்கள். இரண்டு மாநிலங்களைப் பொருத்தவரையில் இடஒதுக்கீட்டுப் பிரச்சினை ஒன்று போலத் தெரிந்தாலும், சட்டரீதியாக அணுகுகின்றபோது, கர்நாடக மாநிலத்தைப் பொருத்தவரையில் அந்த அரசு பிறப்பித்த இட ஒதுக்கீட்டு ஆணையை எதிர்த்து நீதிமன்றத்தில் யாரும் வழக்கு தொடர்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால், தமிழ்நாட்டைப் பொருத்தவரையில் இட ஒதுக்கீட்டு அரசு ஆணையை எதிர்த்து உச்சநீதிமன்றத்திலும், உயர்நீதிமன்றத்திலும் பல வழக்குகள் நடைபெற்று ஆணைகளும் வழங்கப்பட்டுள்ளன. எனவே, சட்டரீதியாக அத்தகைய ஆணைகள் தமிழ்நாட்டை மட்டும் கட்டுப்படுத்துகின்ற ஒரு சூழ்நிலை இருந்து வருகின்றது. உச்சநீதிமன்றத்தின் ஆணையை எதிர்த்து வழக்குத் தொடராத நிலையில் கர்நாடக மாநிலத்தை நேரிடையாகப் பாதிக்கவில்லை. அதுமட்டுமின்றி, கர்நாடக மாநிலத்தைப் பொருத்தவரையில் பொருளாதார வசதி படைத்தவர்கள் எனக் கருதப்படும் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், நிலச்சுவான்தார்கள், வருமான வரி மற்றும் விற்பனை வரி செலுத்துபவர்கள், ஒரு குறிப்பிட்ட வருமானத்





திற்கு அதிகமாக ஊதியம் பெறுகின்ற அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு, இட ஒதுக்கீடு தரப்படவில்லை. சில குறிப்பிட்ட தொழிலைச் செய்கின்ற மக்களுக்கு என்று 5 சதவீத இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தைப் பொருத்தவரையில் சமூக மற்றும் பொருளாதாரப் பேதமின்றி, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் இட ஒதுக்கீடு சலுகை வழங்கப்பட்டு வருகின்றது. எனவே, சட்டரீதியாக இரண்டு மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பது சரியானது அல்ல. ஆந்திராவிலும், மஹாராஷ்டிராவிலும் 50 சதவீதத்திற்கு மேலாக இட ஒதுக்கீட்டு முறை செயல்பட்டு வருவது போன்று சில தவறான தகவல்கள் மக்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. ஆந்திர மாநிலத்தில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பிற்பட்டோருக்கு, 47 சதவீத இட ஒதுக்கீடும், மஹாராஷ்டிராவில் 50 சதவீத இட ஒதுக்கீடும்தான் நடைமுறையில் உள்ளது. எத்தகைய தவறான தகவல்கள் மக்களுக்குத் தரப்படுகின்றன என்பதற்கு இது ஒரு உதாரணம்.

அருணாசலப் பிரதேசத்தைப் பொருத்தவரையில் அம்மாநில மக்கள் தொகையில் கிட்டதட்ட 90 சதவீதத்தினர் மலைச் சாதியினர் என்பதைக் கருத்தில் கொண்டு, சட்டபூர்வமாக வழங்கப்பட்ட சிறப்புச் சலுகையாகும். அப்படிப்பட்ட ஒரு மாநிலத்தைத் தமிழ்நாட்டுடன் ஒரு சிலர் ஒப்பிட்டுக் காட்டுவது சற்றும் பொருத்தம் இல்லாத செயலாகும். காஷ்மீரைப் பொருத்தவரையில், இந்திய அரசியல் நிர்ணய சட்டத்தில் அவர்களுக்கு என வழங்கப்பட்ட சிறப்புச் சலுகையை மறைத்துவிட்டு, அரசியல் லாபத்திற்காகத் தமிழகத்தோடு ஒப்பிட்டுப் பேசுவதைப் பார்க்கும்போது உண்மையில் வேதனையாக இருக்கிறது.

தமிழக அரசின் சக்திக்கு உட்பட்டு, சட்டரீதியாக அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்துள்ளோம். 69 சதவீத இட ஒதுக்கீடு தொடர்ந்து செயல்படுத்த இயலாத ஒரு சூழ்நிலை ஏற்படுவதற்கும், தமிழக அரசு இயற்றிய புதிய சட்டத்திற்கு மேதகு குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்தை இதுவரை பெற்றுத் தராததற்கும் மத்திய அரசின் மெத்தனப் போக்குத் தான் காரணம் என்பது தான் உண்மை நிலை. நானும், தமிழக அரசும் எடுத்து வருகின்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பையும் ஆதரவையும் கொடுப்பதற்கு மாறாக, குறுகிய அரசியல் லாபத்திற்காக, எங்களுடைய முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவித்து, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சமூக நீதி பெற்றுத் தருகின்ற எங்கள் செயல்பாட்டைப் பலவீனப்படுத்துகின்ற முயற்சியில், யார் ஈடுபட்டாலும் தமிழக மக்கள் அவர்களை ஒதுக்கித் தள்ளி விடுவார்கள் என்பதைக் காலம் விரைவில் உணர்த்தும்.

இட ஒதுக்கீடு 50 சதவீதத்திற்கு மேல் அமையக்கூடாது என்று உச்சநீதிமன்றம் தான் முதன் முதலில் ஆணையிட்டது. நம்மைப் பொருத்தவரையில் 69 சதவீத இட ஒதுக்கீட்டு முறை தொடர வேண்டும் என்று தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றோம்.

உச்சநீதிமன்றத்தின் தலையீட்டை மாற்றுவதற்குப் பாராளுமன்றத்திற்கும், மத்திய அரசுக்கும் தான், அதிகாரமும் உரிமையும் உண்டு. முதன் முதலாக இந்திய அரசியல் சட்டத்திற்குக் கொண்டு வரப்பட்ட திருத்தமே, தமிழ்நாட்டில் அன்று எழுந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காணத்தான் என்பதை நினைவுகூரக் கடமைப்பட்டு உள்ளேன்.

நாம் இயற்றிய சட்டத்திற்கு, மேதகு குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்தைப் பெற்று தந்து, தமிழ்நாட்டில் சமூக நீதியை நிலை நாட்டுவதற்கு, மத்திய அரசுக்குப் பொறுப்பும், கடமையும் உண்டு. எனது கரங்களை வலுப்படுத்துகின்ற வகையில், மற்றவர்கள் அனைவரும் சேர்ந்து மத்திய அரசின் கடமையைச் சுட்டிக் காட்டி, குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு உதவி புரிந்திருந்தால், இன்று நிலைமை வேறாக இருந்திருக்கும். அதை விட்டுவிட்டு தி.மு.கழகத் தலைவர் திரு. கருணாநிதி அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் என்னை எதிர்த்துப் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்து உள்ளார்கள். அதுமட்டும் இன்றி, கர்நாடக மாநிலத்தைக்



69 சதவிகித இடஒதுக்கீடு குறித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பல்வேறு கட்சிக் குழுவினருடன் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களை 25.6.94 அன்று புதுடெல்லியில் சந்தித்தார்.

காரணம் காட்டி, நீதிமன்ற ஆணையை ஏன் மீறக் கூடாது என்று கேட்கிறார்கள். நம்மைப் பொருத்தவரையில் காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் கர்நாடக மாநிலம் உச்சநீதி மன்ற ஆணையை மதிக்க வேண்டும் என்று தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றோம். நீதித்துறையின் மீதும், நீதி மன்றங்களின் மீதும் அசைக்கமுடியாத நம்பிக்கையை வைத்துள்ள நாம், அதே நீதிமன்ற ஆணையை மீறினோம் என்றால், காவிரிப் பிரச்சினையில் கர்நாடக மாநிலம், நீதிமன்ற ஆணைக்குக் கட்டுப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்ற தார்மீக உரிமையை இழந்துவிட மாட்டோமா? அதே நேரத்தில், உச்ச நீதிமன்றத்தின் ஆணையினால் எழுந்துள்ள பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் கை கட்டி இருக்க வேண்டியதில்லை. எனவேதான் ஒரு புதிய சட்டத்தை உருவாக்கி, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். அச்சட்டத்திற்குக் குடியரசுத் தலைவரின் அங்கீகாரம் கிடைக்கின்றபோது, அது சட்டமாகிவிடும். அப்போது நீதிமன்ற ஆணை நம்மைக் கட்டுப்படுத்த இயலாது. அதே நேரத்தில் தமிழகத்தில் தொடர்ந்து 69 சதவீத இட ஒதுக்கீட்டு முறையைச் சட்டரீதியாக நாம் செயல்படுத்த முடியும்.

இன்று என்னையும், தமிழக அரசையும் குறைகூறுகின்ற பாணியில் கேள்வி கேட்கின்ற அரசியல் கட்சித் தலைவர்கள் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கு மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று தராத மத்திய அரசை ஏன் தட்டிக் கேட்கத் தயங்குகிறார்கள்? நானும் தமிழக அரசும் எடுத்துள்ள நடவடிக்கைகளை குறுகிய அரசியல் லாபத்திற்காக ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். என்னை எதிர்த்துப் போராட்டம் நடத்துவேன் என்று அறிவிக்கின்ற வாழப்பாடி ராமமூர்த்தி போன்றவர்கள், டெல்லியை எதிர்த்து அல்லவா போராட்டம் நடத்த வேண்டும்; மத்திய அரசை எதிர்த்து அல்லவா கொடி பிடிக்கவேண்டும்? எனக்கும் தமிழக அரசுக்கும் அக்கறை இல்லை என்று வெட்டிப் பேச்சு பேசுகின்ற நேரத்தில், தமிழக மக்கள் சார்பாகப் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் நலனில் அக்கறை கொண்டு மத்திய அரசைத் தட்டிக் கேட்டிருக்க வேண்டாமா?

தமிழகத்தின் . உயிர்நாடிப் பிரச்சினையில் ஒரு நிரந்தரத் தீர்வுக்கு வழி காண வேண்டும் என்ற அக்கறை இல்லாமல், குறுகிய அரசியல் கண்ணோட்டத்துடன், அடுத்த பொதுத் தேர்தலில் யாரோடு கூட்டணி அமைப்பது என்ற ஒரே சிந்தனையில் இருப்பவர்கள், இதை ஒரு காரணமாக்கிக் கொண்டு எனக்கு எதிராக ஒரு 'கூட்டணியை' உருவாக்க முயற்சி



செய்கிறார்கள். தமிழக மக்களுக்குச் சமூக நீதியைப் பெற்றுத் தருவதற்குப் பாடுபடுவதை விட்டுவிட்டு, தவறான அணுகுமுறையுடன் செயல்படுபவர்களைத் தமிழக மக்கள் நிச்சயமாகத் தட்டிக் கேட்பார்கள்.

பாராளுமன்றத்தில், தமிழ்நாட்டிற்குத் தனிச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்பதை வலியுறுத்துவதை விட்டுவிட்டு, இங்கு நான்கு பேர் சேர்ந்து கொண்டு எனது செயல்களைக் குறை கூறி மக்களைத் திசை திருப்பும் முயற்சியில் ஈடுபடுவது விரும்பத்தக்கது அல்ல. மக்களுடைய பிரச்சினையை அரசியலாக்கி, அரசியல் லாபம் தேட முயலும்போது, பொதுமக்கள் உயிர்நாடிப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காமல் அந்தப் பிரச்சினை அடிப்பட்டுப் போகும் என்பதைக் கூட இவர்கள் உணர முடியாது அளவிற்கு, என் மீதுள்ள காழ்ப்புணர்ச்சி இவர்களது கண்களையும் கருத்தையும் மறைத்துள்ளது.

> ***கோயில்***
>
> *கற்களால் கட்டப்படும் கோயில்களைவிட, நரம்பாலும், தசையாலும் கட்டப்பட்டுள்ள மனித உடல்களே உண்மையான கோயில்கள்.*
>
> *-அண்ணல் காந்தியடிகள்*

சமூக நீதியைப் பாதுகாக்க, சட்ட ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துவருகின்ற எனக்கும், எனது அரசிற்கும் இவர்கள் உதவிக்கரம் வழங்கவில்லை என்றாலும், எங்களது முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற வகையில் செயல்பட்டால் தமிழக மக்கள் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். மத்திய அரசிடம் துணிவுடன் தட்டிக் கேட்க வேண்டியவர்கள், இங்கே மாநில அரசைப் பார்த்து குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் அவர்களுக்கு இருக்கும் நாட்டத்தைவிட, எனக்கு எதிராக அடுத்த தேர்தலில் ஒரு கூட்டணியை அமைப்பதில் இருக்கின்ற நாட்டம் தான் அதிகமாக இருக்கின்றது.

எந்தச் சமூக நீதி பெறுவதற்காக தந்தை பெரியார், பெருந்தகை அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் பாடு பட்டார்களோ, அதே புனிதப்பணியில், அவர்கள் வழி நடந்து வருகின்ற நாங்களும் வீரத்துடனும், விவேகத்துடனும், உறுதியுடனும் செயல்பட்டு வருகிறோம் என்பதை நிரூபிக்கும் வண்ணம் 16.6.1994 அன்று ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த முடிவு ஒன்றை அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொண்டோம்.

69 சதவீத இட ஒதுக்கீடு அமலில் இருக்கும் போது, கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களில், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எத்தனை இடங்கள் கொடுக்கப் பட்டு வந்ததோ, அத்தனை இடங்கள் இந்த ஆண்டும் கிடைக்கும் வண்ணம், அந்தக் கல்வி நிறுவனங்களில் உள்ள இடங்களின் எண்ணிக்கையைத் தேவையான அளவிற்குக் கூடுதலாக்குவது என முடிவு செய்துள்ளோம். சமூக நீதியைக் காக்கும் இந்த முயற்சிக்குத் தேவையான ஆசிரியப் பெருமக்கள், ஆய்வுக் கூடங்கள், கட்டட வசதிகள் மற்றும் கருவிகள் ஆகியவற்றைப் பெற்றுத் தருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைவில் எடுக்க வேண்டுமென அதிகாரிகளுக்கு ஆணையிட்டுள்ளேன். கடுமையான நிதி நெருக்கடிகளுக்கு இடையே, இந்தக் கூடுதல் இடங்களை ஏற்படுத்திக் கொடுப்பதால் தமிழக அரசுக்குக் கூடுதல் நிதிச் சுமை ஏற்படும்; அதை நாங்கள் தாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். சமூக நீதியைப் பாதுகாப்பதற்கு நானும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகமும், தமிழக அரசும் என்றும் பின் வாங்கமாட்டோம் என்பதைத் தான் இது காட்டுகிறது. இந்த உயிர்நாடிப் பிரச்சினையில் ஆக்கபூர்வமான பணிகளுக்கு ஆதரவையும், ஒத்துழைப்பையும் அனைவரும் நல்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் குறுகிய அரசியல் லாபத்திற்காக, ஒட்டுமொத்த தமிழக மக்களின் உணர்வுகளை மதிக்காமல், தேவையற்ற செயல்பாடுகளில் ஈடுபடுபவர்களைத் தமிழக மக்கள் வெறுத்து ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**ஜெ. ஜெயலலிதா**
**தமிழக முதலமைச்சர்**

## 69% இட ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு மேதகு குடியரசுத் தலைவர் அங்கீகாரம்:

# சத்திய வேள்விக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி!

## - மாண்புமிகு முதல்வர் அறிக்கை

**த**மிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற வண்ணம், 69 சதவிகித இடஒதுக்கீடு முறை தமிழ்நாட்டில் என்றென்றும் தொடருவதற்காகத் தமிழகச் சட்டமன்றப் பேரவை நிறைவேற்றி அனுப்பி வைத்த சட்டத்திற்கு, மேதகு குடியரசுத் தலைவர் தனது ஒப்புதலையும், அங்கீகாரத்தையும் அளித்துள்ளார் என்ற இனிய செய்தியை, எனது அன்பிற்குரிய தமிழக மக்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றேன்.

தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளித்து, தமிழகத்தில் சமூக நீதியைக் காப்பதற்காக நாம் மேற்கொண்ட 'சத்திய வேள்வி'க்குக் கிடைத்த மாபெரும் வெற்றி இது. சமூக நீதியைக் காப்பதிலும், தமிழக மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதிலும் தனக்கு எத்தகைய ஈடுபாடு உண்டு என்பதை வெளிப்படுத்திய மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு எனது சார்பிலும், தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகள், சமுதாய நல இயக்கங்களின் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் புனிதப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு,



தமிழகத்தில் சமூக நீதியைக் காப்பதற்காக ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொண்ட மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சமூக நீதியைக் காக்க நாங்கள் மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளுக்கும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், மத்திய அமைச்சரவையும் தங்களது ஒத்துழைப்பையும், ஆதரவையும் தொடர்ந்து நல்கவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வெற்றி நாம் மேற்கொண்ட 'சத்திய வேள்வி'க்குக் கிடைத்த முதல்கட்ட வெற்றியாகும். நமது இலட்சியங்கள் நேரானவை; உத்தமமானவை; சமூக நீதியைப் பெற்றுத் தரும் சத்திய வல்லமை படைத்தவை என்பதை உலகிற்கு உணர்த்துகின்ற மகத்தான வெற்றி ஆகும்.

சமூக நீதிச் சரித்திரத்தில் 'பொன் எழுத்துக்களால்' பொறிக்கப்பட வேண்டிய ஒரு அற்புதமான நிகழ்ச்சி இது. சரித்திரத்தில் தனக்கு என ஒரு இடத்தைப் பெற்றுள்ள இந்தச் சாதனையை எனது அன்பிற்குரிய தமிழக மக்கள் ஒவ்வொருவருக்கும் உரித்தாக்குவதில் நான் பெருமைப்படுகின்றேன். தனக்குக் கிடைத்த ஒரு வெற்றி என்று தமிழக மக்கள் ஒவ்வொருவரும், மகிழ்ச்சி அடையவேண்டும் என்பதே எனது எண்ணம். இந்தப் புனிதப் பணியில் எனக்கு உறுதுணையாகவும், பக்கபலமாகவும் இருந்து ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும், சமுதாய நல இயக்கத் தலைவர்களுக்கும், என் மீது அன்பையும், பாசத்தையும் பொழியும் எனது அன்பிற்குரிய தமிழக மக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக நீதியைப் பெற்றுத் தரும் ஒரு அறப்போராட்டத்தில் நாம் தொடர்ந்து வெற்றிபெறுவோம் என்பதற்கு இது ஒரு நல்ல அறிகுறி, ஒரு வெற்றிகரமான தொடக்கம், இனி தொடர்ந்து நாம் வெற்றி பெறுவோம் என்பதற்கும் இனி ஒரு அடிப்படை. எத்தகைய சக்திகள் நமக்கு எதிராகச் செயல்பட்டாலும், அந்தச் சக்திகள் அனைத்தையும் எளிதில் வெல்லுகின்ற ஒரு நெஞ்சுரத்தையும், வலிமையையும் இந்த வெற்றி நமக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. சமூக நீதியைக் காக்கும் நமது 'சத்திய வேள்வியை' மேலும் தீவிரமாகவும், முழு வேகத்துடனும் மேற்கொள்வோம் என்று உறுதிகூற விரும்புகிறேன்.



☐ **நமது மக்கள் தொகையில் ஏறத்தாழ பாதிப்பேராய் இருக்கிற மகளிரைப் பாதுகாப்பாக உயர்த்திவிடுவதுதான் சுதந்திரம் பெற்ற நாகரிகமுள்ள சமூகத்தில் ஓர் அரசின் கடமை என்ற கருத்தில் பெண்கள் முன்னேற்றம், பெண்கள் உயர்வு ஆகியவற்றுக்கு எல்லா முன்னுரிமைகளும் வழங்கப்படும்.**

அரசியல் அமைப்புச் சட்டத்தில், தகுந்த திருத்தங்களை மேற்கொள்ளச் செய்து, ஒவ்வொரு மாநிலத்திற்கும், அந்தந்த மாநிலத்தில் நிலவுகின்ற பல்வேறு சூழ்நிலைகளின் அடிப்படையில், இட ஒதுக்கீட்டு அளவை நிர்ணயம் செய்யும் அடிப்படை உரிமையைப் பெற்ற தருவதுதான் நமது உறுதியான மற்றும் இறுதியான கொள்கையாகும். இந்தக் கொள்கையை முன்வைத்து நாம் தொடரும் இந்தப் புனிதப் பணிக்குத் தமிழகத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும், சமுதாய நல இயக்கங்களும், எனது அன்பிற்குரிய தமிழகத்து மக்கள் அனைவரும் என்னுடன் துணை நிற்பார்கள்; எனது கரத்தை வலுப்படுத்துவார்கள் என்று பரிபூரணமாக நம்புகிறேன்.

'பகுத்தறிவுப் பகலவன்' தந்தைப் பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் நமக்குக் காட்டிச்சென்ற புனிதப் பாதையில் தொடர்ந்து நடைபோட்டு, அவர்கள் கட்டிக் காத்த சமூக நீதியை, தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் ஆகிய அனைத்து மக்களுக்கும் பெற்றுத் தருவதில் தொடர்ந்து முனைப்புடன் செயல்படுவோம் என்று உறுதி கூறிக் கொள்கிறேன்.

**ஜெ. ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்





### இட ஒதுக்கீடு - தமிழகத்தின் உயிர்நாடிப் பிரச்சினை:

# முழுமையான நிரந்தரத் தீர்வே நமது ஒரே குறிக்கோள்!

## கன்னியாகுமரி மாவட்ட அரசு விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை

முக்கடலும் சங்கமிக்கும், முத்தமிழும் தழைத்தோங்கும், தனிப்பெரும் சிறப்பை, தன்னகத்தே பெற்று விளங்கும், தமிழகத்தில் தென்கோடித் திருத்தலம், கன்னியாகுமரி! இயற்கை வளங்களும், இனிய சூழல்களும் தன்னகத்தே கொண்ட இந்த மாவட்டத்திற்கு வருகை தந்து, உள்ளங்களில் உவகையுடனும், எண்ணங்களில் எழுச்சியுடனும், முகங்களில் மலர்ச்சியுடனும், அலை கடல் எனத் திரண்டு என்னைக் காண்பதற்கும், என் பேச்சைக் கேட்பதற்கும், பெருந்திரளாக வருகை தந்திருக்கும், உங்கள் அனைவரையும் இன்று காண்பதில், நான் பேருவகையும், பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

நமது அருமைத் தமிழகத்திற்கு மட்டுமின்றி, இந்தியத் திருநாட்டிற்கே, தென் திசை எல்லையாகத் திழ்ந்திடும், தனிச் சிறப்பைப் பெற்று விளங்கும், கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாட்டின் இயற்கை எழில்மிக்க மாவட்டங்களுள் ஒன்று. சரித்திரமும், சமயமும், பன்னெடுங்காலமாய் கோலோச்சிய, இந்தத் தென்குமரி மாவட்டத்தின் பெருமைகளையும், சிறப்புக்களையும், எடுத்துச் சொல்லிக்கொண்டே போகலாம்.

பரந்து கிடக்கும், நமது பாரத பூமியின் இதயம், இங்கே தான் மறைந்து கிடக்கிறது என்பதை, தனது மெய்ஞான உள்ளுணர்வால், உலகிற்கு எடுத்துக்காட்டிய 'இளம் துறவி', சுவாமி விவேகானந்தர் அவர்கள், நமது நாட்டின் ஆன்மீகப் பெருமையை, உலகிற்குப் பறைசாற்றுவதற்காக, குமரி முனையிலிருந்துதான், தனது புனிதப் பயணத்தை மேற்கொண்டார் என்பதை நினைவு கூரும்போது, நமது மனம் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறது.

1992-ஆம் ஆண்டு, புயல் வெள்ளத்தால், இந்த மாவட்டத்தின் பல பகுதிகள் பாதிக்கப்பட்டபோது, நிவாரண உதவிகளுடன் விரைந்து வந்து, உங்களைச் சந்தித்தேன். இன்று நாகர்கோயில் நகரில் நடைபெறும், இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் காணுகின்ற நல்வாய்ப்பு, கிடைத்ததை எண்ணி நான் அகமகிழ்கிறேன்.

மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, தமிழகத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும், கடந்த மூன்று ஆண்டுக் காலமாக, வெற்றிப் பாதையில் வீரநடை பயின்று வரும் உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்த அரசு உங்கள் அரசு – நிகரற்ற சாதனைகளைப் படைத்து, வளர்ச்சிப் பாதையில், துரித நடை போட்டுச் சென்று கொண்டிருக்கிறது.

அதே உணர்வுடன்தான், இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு, ஏற்படும் குந்தகங்களை முறியடிப்பதிலும், சமூக நீதியைப் பெற்றுத் தருவதிலும், நாங்கள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். ஆனால், சிலர் தமிழகத்தின் உயிர் மூச்சுப் பிரச்சினையான, 69 சதவிகித இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைவிட, குறுகிய கண்ணோட்டத்துடன், அரசியலாக்குகின்ற முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். எங்களைப் பொருத்தவரையில், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, சமூக நீதி பெற்றுத் தர வேண்டும் என்பதிலும் அவர்களின் பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்கு, இட ஒதுக்கீட்டை 69 சதவிகித அளவில் தொடர வேண்டும் என்பதிலும், ஆத்மார்த்த ஈடுபாடு உண்டு. எனவே தான், உச்சநீதி மன்றத்தின் ஓர் ஆணையால், எழுந்த பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, 'அரசியல் நிர்ணய சட்டத்தில், தேவையான திருத்தங்களை மேற்கொண்டு, 69 சதவிகித இட ஒதுக்கீடு, தமிழ்நாட்டில் என்றென்றும் தொடர்ந்திட வேண்டும்" என்று, 9.11.1993 அன்றே, தமிழகச் சட்டமன்றப் பேரவையில், ஒரு தீர்மானத்தை ஒரு மனதாக நிறைவேற்றி, மத்திய அரசிற்கு அனுப்பி வைத்தோம். 16.11.1993 அன்று முழு கடையடைப்பு பொது வேலை நிறுத்தத்தை மேற்கொண்டு, இந்தப் பிரச்சினையின் தீவிரத்தை, மத்திய அரசுக்கு உணர்த்தினோம். ஆனால், மத்திய அரசிடமிருந்து, இன்றுவரை, எந்தப் பதிலும் கிடைக்கப் பெறவில்லை.

இந்தப் பிரச்சினையில், அரசியல் கட்சிகளிடையே, ஒருமித்த ஒரு பொதுக் கருத்தை, உருவாக்க வேண்டும் என்பதற்காக, நான் அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை, 26.11.1993 அன்று கூட்டினேன். அந்தக் கூட்டத்தில், 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறை, தமிழ்நாட்டில் என்றென்றும் தொடர்வதற்கு, அரசியல் நிர்ணயச் சட்டம், பிரிவு 31 சி-ன் கீழ், நமது மாநில அளவில், ஒரு சட்டத்தை நிறைவேற்றுவது என்ற தீர்மானம், ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அந்த முடிவின் அடிப்படையில், 31.12.1993 அன்று, சட்டமன்றப் பேரவையில், ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்றி, குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத் தரும்படி, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளோம்.

ஒட்டுமொத்த தமிழக மக்களின், உள்ளார்ந்த உணர்வுகளை மத்திய அரசிற்கு வெளிப்படுத்தவும், புதிய சட்டத்திற்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத் தர வலியுறுத்தவும், 17.6.1994 அன்று, முழு கடை அடைப்பு பொது வேலை நிறுத்தத்தை மேற்கொண்டோம்.

புதிய சட்டத்திற்கு, மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் / பெற்றுத்தர வேண்டும் என்று வற்புறுத்துவதற்கும், அரசியல் நிர்ணயச் சட்டத்தில், தகுந்த திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும், என்று வலியுறுத்துவதற்கும், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுடனும், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களையும், மேதகு குடியரசுத் தலைவர் அவர்களையும் சந்திப்பதற்காக, நேரம் ஒதுக்கித் தரக் கேட்டு இருக்கிறேன்; டில்லி பயணத்திற்குத் தயாராக இருங்கள் என்று, அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் கடிதம் எழுதினேன். எனது அழைப்பை ஏற்று, இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண, அனைவரும் ஓரணியில் சேருவார்கள், என்ற மக்களின் எதிர்பார்ப்பை மீறி, சிலர், என்னுடன் டில்லிக்கு வர மறுத்ததோடு, முதலமைச்சர் எங்களை மதிக்கவில்லை என்றும், வேறு பல குதர்க்கமான வாதங்களையும் எடுத்துக் கூறி, அறிக்கை விட்டார்கள்.

இருப்பினும், இந்தியப் பிரதமர், தமிழகத்தில் இருந்து வருகின்ற, அரசியல் கட்சித் தலைவர்களின் குழுவைச் சந்திப்பதற்கு, நேரத்தை ஒதுக்கியதற்குப் பின்பு, மீண்டும் எல்லா அரசியல் கட்சித் தலைவர்களுக்கும், தந்தி மூலமாக அந்தத் தகவலை அனுப்பி, அழைப்புவிடுத்தேன். அரசியல் காரணங்களுக்காக, மக்கள் நலனை மதிக்காமல், சிலர் இந்தக் குழுவில், இடம் பெறாமல் ஒதுங்கி விட்டார்கள் என்பதை, மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பின்னர் எனது அழைப்பை ஏற்று, என்னுடன் வந்து ஒத்துழைத்த கட்சித் தலைவர்களுடன், இந்தியப் பிரதமர் அவர்களை, 25.6.1994 அன்று சந்தித்து, புதிய சட்டத்திற்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத்தர வேண்டும் என்றும் அரசியல் நிர்ணயச் சட்டத்தில், தக்க திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில், தமிழக மக்களின் உள்ளார்ந்த உணர்வுகளை மதித்து, இப்பிரச்சினைக்குத் தீர்வு காண மத்திய அரசு முன் வர வேண்டும் என்றும் முன் வராத பட்சத்தில், ஏற்படும் விளைவுகளையும் எடுத்துரைத்தேன் - வாதாடினேன்.

இந்திய நாட்டின் Attorney

**மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 6.7.94 அன்று கன்னியாகுமரி மாவட்ட அரசு விழாவில், நலிந்தோர்க்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரையின் முழு விவரம்:**

General வெளி நாடு சென்றிருப்பதால், அவர் திரும்பிய பின்பு, இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண, நடவடிக்கை எடுப்பதாக, பிரதமர் என்னிடம் எடுத்துரைத்தார்கள். சட்ட ரீதியாகத் தீர்வு காண, மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறேன். அதற்குக் கால அவகாசம் கொடுத்து, அவர்களின் முடிவுக்குக் காத்துக் கொண்டிருக்கும், இத்தகைய ஒரு சூழ்நிலையில், தமிழக மக்களின் நலனைக் காக்க, ஓரணியில் நின்று, நமது உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டிய, ஒரு கால கட்டத்தில் மத்திய அரசிற்கு நமது ஒற்றுமையை நிரூபித்து, நமக்கு வேண்டிய அரசியல் சட்டத் திருத்தத்தைப் பெற வேண்டிய நேரத்தில் சிலர் எதிர்மறையான செயல்களில் ஈடுபட்டு வருவதும், அரசியல் ரீதியாக எங்களால் எதிர்க்க முடியும் என்றாலும், பொது மக்களின் நலன் காக்க, ஓரணியில் திரண்டு நிற்க, இவர்கள் மறுப்பதும்தான், வருத்தமாக உள்ளது.

மேலும், ஒரு சில அரசியல் கட்சிகள், இந்தப் புதிய சட்டத்திற்கு, மேதகு குடியரசுத் தலைவரின் அங்கீகாரம் கிடைத்தாலும், அது செல்லுபடியாகாது என்றும், அரசியல் நிர்ணயச் சட்டத்தில், திருத்தங்களை மேற்கொள்வது தான், இந்தப் பிரச்சினைக்குச் சரியான பரிகாரம் என்றும், திடீரென ஆலோசனை கூறத் தொடங்கிவிட்டார்கள். சட்ட மன்றப் பேரவையில், முதன் முதலில் தீர்மானத்தை நிறைவேற்றி வைத்ததே, தக்க அரசியல் சட்டத் திருத்தத்தை, மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால், ஒரு புதிய சட்டத்தை நம் மாநிலத்திற்காக, நாமே இயற்றிக் கொள்ள வேண்டும் என்ற முடிவோ, நானோ, அல்லது என்னுடைய அரசோ, தனிப்பட்ட முறையில் எடுத்த முடிவு அல்ல. 26.11.1993ந் தேதியன்று, அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூடிய, ஒரு கூட்டத்தில் தான், இத்தகைய முடிவு எடுக்கப்பட்டது.

நமது மாநிலத்தில் ஒரு புதிய சட்டத்தை, இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், பிரிவு 31 சி-ன் கீழ், இயற்ற வேண்டும் என்று, ஒருமனதாக அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அந்தத் தீர்மானத்தில், யார் யார் கையெழுத்து இட்டார்களோ, எந்த எந்த அரசியல் கட்சிகள், அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக, தங்கள் கருத்தைத் தெரிவித்தார்களோ, அவர்கள் அதை முழுமையாக மறைத்துவிட்டு, இன்று திடீரென, பல்வேறு அரசியல் காரணங்களுக்காக, ஒரு புதிய கருத்தை முன்வைக்கிறார்கள்.

அன்று அரசியல் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், ஒரு கருத்தைத் தெரிவித்துவிட்டு, ஒரு தீர்மானத்தைப் போட்டுவிட்டு, இன்று சிலர், இவ்வாறு மாற்றிப் பேசிவருவது, உண்மையிலேயே வருத்தத்தைத் தருகிறது. இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற நல்ல எண்ணம், அவர்களிடம் இல்லை, என்பதைத்தான், இது எடுத்துக் காட்டுகிறது என்று கருதவேண்டி உள்ளது.

எது எப்படி இருந்தாலும், எங்களைப் பொருத்தவரையில், இந்தப் பிரச்சினைக்கு, முழுமையான தீர்வு காண வேண்டும் என்பதே எங்களின் ஒரே குறிக்கோள். எனவே தான், இந்தப் புதிய சட்டத்திற்கு, குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்தைக் கேட்பதோடு, அரசியல் நிர்ணயச் சட்டத்திலும், தகுந்த திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும், வலியுறுத்திக் கொண்டு வருகிறோம்.

50 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையை, தமிழக அரசு ஏற்றுக்கொண்டுவிட்டது என்று, மக்கள் மத்தியில், உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தி பரப்பப்படுகின்றது. 50 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையை; நாங்கள் ஒப்புக் கொண்டிருந்தால், உச்சநீதிமன்றத்தில், வழக்கு எப்படி இன்னும் நிலுவையில் இருக்க முடியும்?

எதிர் மனு - Counter Affidavit தாக்கல் செய்திருக்க வேண்டிய அவசியம் எழுந்திருக்காதே? தெளிவாக்க மனுவும், மறு பரிசீலனை மனுவும், தாக்கல் செய்யப்பட வேண்டிய அவசியம் எழுந்திருக்காதே?

ஒரு நீதிமன்றத்தின் ஆணையை, மதிப்பது என்பது வேறு அதே ஆணையை ஏற்றுக் கொள்வது என்பது வேறு. சட்டப்படி அமைந்துள்ள ஒரு அரசு, அரசியல் நிர்ணய சட்டத்தின் கீழ், இயங்க வேண்டிய சூழ்நிலையில், நாம் உச்சநீதிமன்ற ஆணையை மதிக்கின்றோம்,/ ஆனால் உச்சநீதிமன்றத்தின் ஆணையை ஏற்றுக் கொள்ளவில்லை. இதுதான் உண்மை நிலை. எனவேதான், நாம் ஏற்றுக் கொள்ளாத, ஏற்றுக் கொள்ள விரும்பாத ஆணை



யினால், ஏற்படும் விளைவுகளைத் தவிர்க்க உடனடியாகப் புதிய சட்டத்தை நிறைவேற்றி அதற்கு ஒப்புதல் கேட்கிறோம். அவசியம் என்றால், அரசியல் நிர்ணயச் சட்டத்தில், திருத்தத்தையும் மேற்கொள்ள வேண்டும், என்றும் வற்புறுத்துகிறோம்.

தமிழகத்தின் உயிர்நாடிப் பிரச்சினையில், ஒரு நிரந்தரத் தீர்வு காண, நாம் ஆக்கபூர்வமான, அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம். இந்தப் பிரச்சினைக்கு, ஒரு நிரந்தரத் தீர்வு காணாமல், ஓயமாட்டோம் என்பது மட்டும் உறுதி.

பொதுவாழ்க்கையில் ஈடுபட்ட பின்பு, தமிழகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று, அப்பகுதி வாழ் மக்களின் தேவைகளை, உணர்ந்து வைத்திருந்ததால்தான் நான் முதலமைச்சர் ஆன பின்பு, அந்த இனிமையான அனுபவங்கள், அந்தப் பகுதி வாழ் மக்கள் நலன்காக்க, நல்ல பல திட்டங்களைத் தீட்டுவதற்கு, எனக்கு உதவியாக அமைந்துள்ளன. அதே அடிப்படையில், இந்த கன்னியாகுமரி மாவட்டத்தின், முக்கியப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க, இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

இன்று, இந்த மாவட்டத்தில், 108 கோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு திட்டங்களுக்கு, அடிக்கல் நாட்டியும், சில திட்டங்களைத் துவக்கியும் உள்ளேன். நலத்திட்ட உதவிகளை வழங்கவும் உள்ளேன். இன்று, 36 கோடி ரூபாய் மதிப்புள்ள, அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை, இம்மாவட்டத்து நலிந்த பிரிவைச் சார்ந்த, 30,000க்கும் மேற்பட்ட மக்களுக்கு வழங்க உள்ளேன். சற்று முன்பு, 67 கோடி ரூபாய் மதிப்புள்ள, பல புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதிலும், 5 கோடி ரூபாய் மதிப்புள்ள கட்டடங்களையும், திட்டங்களையும் துவக்கி வைத்ததிலும், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆரல்வாய்மொழியில் அமைந்துள்ள, மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை வளாகத்தில், 3 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில், 4 காற்றாலைகளை அமைப்பதற்காக, அடிக்கல் நாட்டியதில், பெருமிதம் அடைகின்றேன். ஏற்கெனவே, மரபு சாராத் துறையில், குறிப்பாக, காற்றாலை மூலம், மின் உற்பத்தித் தயாரிக்கும் துறையில், அகில இந்திய அளவில், தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு, ஒரு முன்னோடியாக விளங்கிக் கொண்டிருக்கிறது. மின் உற்பத்தியில், புதிய சரித்திரத்தை உருவாக்கி வரும் நாம், அதில் தன்னிறைவைக் காணுகின்ற நாள், வெகு தூரத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செண்பகராமன் புதூரில், 40 கோடி ரூபாய் மதிப்பில், 230 கிலோ வாட் திறனுள்ள, மின் நிலையம் அமைப்பதற்கு, இன்று நான் அடிக்கல் நாட்டி உள்ளேன். இந்த மாவட்டத்தின் மின் தேவையைப் பூர்த்தி செய்வதில், இது ஒரு மைல் கல்லாக அமையும், என்று நம்புகிறேன். பல ஆண்டுகளாக, கிடப்பில் போட்டுவிடப்பட்டிருந்த, இந்தத் திட்டத்திற்கு வடிவம் கொடுத்து, பொருளாதார ஆதாரத்தைத் திரட்டி, செயல்படுத்த முன் வந்த ஒரே அரசு, உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, உங்கள் அரசு தான் என்பதைத் தெரிவிப்பதில், நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

அதுமட்டுமின்றி, இந்த மின் நிலையம்தான், கன்னியாகுமரி மாவட்டத்திலேயே, 230 கிலோ வாட் மின் திறன் கொண்ட, முதல் மின் நிலையம் என்ற செய்தி, நமக்கு எல்லாம் மகிழ்ச்சி தரும் செய்தி ஆகும். இந்த மின் நிலையம், 1996 ஆம் ஆண்டில், செயல்படும்போது, இம்மாவட்டம் முழுவதிலும், தடையற்ற, நிலையான மின்சாரம் கிடைக்கும் மின் தடங்கல் தவிர்க்கப்படும் மின் சக்தி இழப்பு குறையும் கூடுதல் மின் இணைப்புகள் வழங்க இயலும். இதுமட்டுமின்றி, நாகர் கோயில் புறநகர் மின் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், மின் வினியோகத்தைச் சீராக்குவதற்கு, 3 கோடி ரூபாய் செலவில், நிறைவேற்றப் பட்டு வரும் திட்டம் முன்சிறைக் கிராமத்தில், 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் அமைய உள்ள துணை மின் நிலையம் ஆகியவை இம்மாவட்டத்தில் மேலும் புதிய தொழில்கள் தொடங்குவதற்கு, வழி வகுக்கும் என்பதை எண்ணி, மகிழ்ச்சி அடைகின்றேன்.

மருத்துவத் துறையைப் பொருத்தவரையில், நாகர்கோயிலில் அமைந்துள்ள, அரசு மருத்துவமனையில், குழந்தைகளுக்கு என்று பிரத்தியேகமாக, 10 படுக்கைகள் கொண்ட, ஒரு தனிப் பகுதியை அமைப்பதற்கும் வெள்ளிச் சந்தை,





கிள்ளியூர், அருமநல்லூர் ஆகிய இடங்களில், ஆரம்பச் சுகாதார நிலையங்களை, 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைப்பதற்கும், அடிக்கல் நாட்டி உள்ளேன்.

எங்கள் அரசைப் பொருத்த வரையில், ஒரு குடிநீர் ஆதாரம் கூட இல்லாத கிராமம், தமிழகத்தில் இருக்கக் கூடாது, என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில், துரிதமாகச் செயல்பட்டு வருகின்றது. அந்த எண்ணத்தின் ஒரு வெளிப்பாடுதான், 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பில், இன்று என்னால் அடிக்கல் நாட்டப்பட்ட, காட்டாத்துறை முளகுமூடு வாழ்வச்சகோஷ்டம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

1 இலட்சம் பேர் பயன்பெறும் இத்திட்டம், இப்பகுதிவாழ் மக்களின் அடிப்படைத் தேவையான, குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் என்பதை எண்ணி, நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மீனவப் பெருங்குடி மக்களின், வாழ்க்கை முன்னேற்றத்திற்கும், அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும், உங்கள் அரசு, பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. ஆண்டொன்றுக்கு மீனவர்களுக்காக 1000 குடியிருப்புகள் மட்டுமே, கட்டப்பட்டு வந்த நிலையை மாற்றி, தற்போது ஆண்டொன்றுக்கு 2000 வீடுகளை ஒவ்வொன்றும் 26,000 ரூபாய் மதிப்பில் கட்டி, இலவசமாக வழங்கி வருகின்றோம். அந்த வகையில், கடந்த மூன்றாண்டுகளில் மட்டும், இந்த மாவட்டத்தில், 3 கோடி ரூபாய் செலவில், 1124 வீடுகள், மீனவர்களுக்குக் கட்டித் தரப் பட்டுள்ளன. மேலும், 247 குடியிருப்புகள், அழிக்கால், குறும்பனை, மற்றும் குளச்சல் ஆகிய இடங்களில், இந்த ஆண்டு கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும், தமிழக மீனவர்களுக்கு, இலங்கைக் கடற்படையினரால், இழைக்கப்படும் கொடுமைகளுக்கு, ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று, நான் தொடர்ந்து இந்தியப் பிரதமரையும், மத்திய அரசையும், வற்புறுத்தி வருகின்றேன். என்னுடைய வற்புறுத்தலின் காரணமாகத்தான், இன்று இலங்கைக் கடற்படையினரின் அத்துமீறல்கள், கட்டுப் படுத்தப்பட்டுள்ளன. மேலும், IBL எனப்படும், 'சர்வதேச எல்லைக் கோட்டை', தவறுதலாகக் கடக்கும்போது, நமது மீனவர்களை, மனிதாபிமான முறையில் நடத்துவதற்கும் மீனவர்களின் உயிருக்கு, உத்தரவாதம் பெற்றுத் தரவும் பாதிக்கப்படும் மீனவர்களின் குடும்பங்களுக்கு, தக்க நிவாரண உதவித் தொகை வழங்கவும் எனது வற்புறுத்தலின் காரணமாக, இந்தியாவும், இலங்கையும், ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்வதற்கு, வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கடற்கரை ஓரங்களில் வாழும் மீனவர்கள், ஆழ்கடலுக்குச் செல்லாமலேயே, இரால் வளர்ப்புப் பண்ணைகள் அமைத்து, தங்களது தொழிலை மேற்கொள்ள, உங்கள் அரசு, 150 எக்டேர் நிலத்தை ஒதுக்கி உள்ளது. இத்திட்டத்தை, 16 கோடி ரூபாய் செலவில் செயல் படுத்த, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதும் உள்ள, 1,20,000 மீனவர்கள், பயன் பெறும்வண்ணம், மீன்பிடித் தொழில் செய்ய இயலாத, 4 மாதக் காலத்திற்கு, மாதம் 270 ரூபாய், நிவாரண நிதி வழங்கும் திட்டமும், தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தைப் பொருத்த வரையில், இத்திட்டத்தின் கீழ், 40,000 மீனவர்கள், பயன்பெற்று வருகிறார்கள். இதே போல், மீனவர்கள் மரணம் அடையும்போது, அவர்களுடைய குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த, 25,000 ரூபாய் நிவாரணத் தொகையை, நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, 50,000 ரூபாயாக உயர்த்தி, வழங்கி வருகின்றோம் என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாவட்டத்தில் தேங்காய்ப் பட்டினத்திலும், குளச்சலிலும், மீன்பிடித் துறைமுகங்கள், 26 கோடி ரூபாய் செலவில் அமைப்பதற்குத் திட்டம் ஒன்றைத் தயாரித்து, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளோம். அத்திட்டம் செயல்படுத்தப்படும்போது, அப்பகுதி வாழ் மீனவப் பெருங்குடி மக்களின் தொழிலிலும், பொருளாதார வளர்ச்சியிலும், நிச்சயம் முன்னேற்றம் ஏற்படும்.

இறால் மீன் குஞ்சுகளின் உணவான, Artemia எனப்படும் உயிரினம் குறித்து, தகுந்த ஆராய்ச்சி மேற்கொண்டு, அதனை உற்பத்தி செய்து, இறால் உணவாகப் பயன்படுத்த, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் ஒரு பிரிவாக, 8 கோடி ரூபாய் செலவில், Artemia ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம், அமைக்க, இன்று அடிக்கல் நாட்டியதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தப் பயிற்சி நிலையம், Artemia -வை உற்பத்தி செய்வதன் மூலம், இறால் உற்பத்தியும், இறால் ஏற்றுமதியும் பெருகி, மீனவர்களின் வாழ்க்கையில், ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் என்று, நான் உறுதியாக நம்புகின்றேன்.

இந்த மாவட்டத்தில், அரபிக் கடலை ஒட்டியுள்ள, கடற்கரைப் பகுதிகள், கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்டு வருவதும் அங்கு வசிக்கும் மீனவப் பெருங்குடி மக்களின், உயிருக்கும் உடைமைக்கும், பல சமயங்களில் ஆபத்து ஏற்படுவதையும், நான் நன்கு அறிவேன். அத்தகைய, 12 கரையோரக் கிராமங்களில், தடுப்புச் சுவர் கட்டுதல் போன்ற, கடல் அரிப்புத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, 3 3/4 கோடி ரூபாய் மதிப்பில், ஒரு திட்டம், அரசின் பரிசீலனையில் உள்ளது. முதல் கட்டமாக, மண்டைக்காடு புதூர் கிராமத்தில், 47 இலட்சம் ரூபாய் செலவில், 830 மீட்டர் நீளமுள்ள, கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு, இன்று நான் அடிக்கல் நாட்டி உள்ளேன். இம்மாவட்டத்தின் நீண்ட நாள் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் பணியில், இது முதல் கட்ட முயற்சி ஆகும்.

ஒரு மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும், அடிப்படைக் காரணமாக விளங்கும், போக்குவரத்து வசதியைக் கன்னியாகுமரி மாவட்டத்தின், மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள, 44 மீனவக் குக் கிராமங்களுக்கும், ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதற்காகக் கீழ் மணக்குடிக்கும் மேல்மணக் குடிக்கும் இடையே, பழைய ஆற்றின் மீது ஒரு பாலமும் தேங்காய்ப் பட்டினத்தையும், இரையமன்துறையையும் இணைக்கும், தாமிரபரணி ஆற்றின் மீது, பாலம் ஒன்று கட்டுவதற்கும் மேற்குக் கடற்கரைச் சாலைத் திட்டத்தில், வழி வகுக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்திற்காக நிதி ஆதாரத்தைத் திரட்டி, மத்திய அரசின் அனுமதியைப் பெற்று, நிறைவேற்றும்போது, புதிதாக அமைக்கப்படும் சாலை, பாலங்கள், ஆகியவற்றால், சுற்றியுள்ள கிராமங்களில் வசிக்கும், ஒரு இலட்சம் பேர், பயன் பெறுவார்கள் என்பதை, இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்த மாவட்டத்தைப் பொருத்த வரையில், போக்குவரத்து முழுமையாகத் 'தேசியமயம்' ஆக்கப்பட்டுள்ளது. தனியார் பேருந்துகளே இந்த மாவட்டத்தில் கிடையாது. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும், முப்பதுக்கும் மேற்பட்ட, புதிய பேருந்து வழித் தடங்களில், பேருந்துகளை இயக்கி உள்ளோம். அதேபோல இன்றும், 9 புதிய பேருந்து வழித் தடங்களை ஆரம்பித்து வைத்ததில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

நேசமணி போக்குவரத்துக் கழகத்தில், தற்போதுள்ள 591 பேருந்துகளில், 140 பழைய பேருந்துகளை மாற்றி, 8 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில், 140 புதிய பேருந்துகள் பெறப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாவட்டத்தின் சாலைகளை மேம்படுத்துவதிலும், போக்குவரத்து வசதிகளை அதிகப்படுத்துவதிலும், எங்கள் அரசு, ஒரு புதிய உத்வேகத்துடன் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோதையாறு துணைத் திட்டத்தின் கீழ் உள்ள கால்வாய்கள், குளங்கள் மற்றும் கிணறுகள் ஆகியவற்றைச் சீரமைக்கவும், செம்மைப் படுத்தவும், 30 கோடி ரூபாய் செலவில், தேசிய நீர் ஆதாரங்கள் ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ், திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, உலக வங்கியின் ஒப்புதலுக்கு, அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. விரைவில் உலக வங்கியின் ஒப்புதலும், நிதி உதவியும் கிடைத்த பின்பு, இத்திட்டம் நிறைவேற்றப் படும். 2000 ஆம் ஆண்டில், இத்திட்டம் முடிவடையும் போது, இப்பகுதியின் பாசனத் தேவையை வெகுவாகப் பூர்த்தி செய்யும் என்று நம்புகிறேன்.

நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு, கன்னியாகுமரி மாவட்டத்தில், அறிவொளி இயக்கம், சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு, இன்று அதன் முதல் கட்டம் முடிவுற்று, முழுமையான எழுத்தறிவு கல்வி பெற்ற மாவட்டமாக, அறிவிக்கப்படுகிறது. அறிவொளி இயக்கத்தின் 2 வது கட்டத்தை, இன்று துவக்கி வைத்து, இந்த மாபெரும் மக்கள் இயக்கத்தில், தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, பணியாற்றும் அனைவருக்கும், எனது நன்றியையும், பாராட்டுதல்களையும், தெரி

வித்துக் கொள்கிறேன்.

இந்த மாவட்டத்திற்கு என அமைக்கப்பட்ட, அனைத்து மகளிர் காவல் நிலையத்தினை, நாகர்கோவிலில் இன்று மாலை, நான் திறந்துவைக்க உள்ளேன். ஏற்கெனவே, நான் பல முறை விளக்கிக் கூறியதைப் போன்று, எங்களது அரசால், ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டு வரும், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், புதியதோர் மகளிர் முன்னேற்றச் சிந்தனையின் வெளிப்பாடு ஆகும். மாறி வரும் மகளிர் சமுதாயத்தின், புதிய தேவைகளை, ஈடுசெய்ய, உருவாக்கப்பட்ட, புரட்சிகரமான ஓர் அமைப்பு, இந்த 'அனைத்து மகளிர் காவல் நிலையம்' என்பதை, இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மகளிருடைய சமூகப், பொருளாதார முன்னேற்றத்திற்கும், சமுதாயத்தில் அவர்களுக்குக் கிடைக்கின்ற பாதுகாப்பிற்கும், நெருங்கிய தொடர்பு உண்டு, என்று நான் கருதுகின்றேன். பாதுகாப்பு குறைந்துள்ள சமுதாயத்தில், மகளிர் முன்னேற்றத்தில், பின்னடைவு ஏற்படும்.

அதேசமயத்தில், பாதுகாப்புச் சூழ்நிலை, நிறையப் பெற்றுள்ள ஒரு சமுதாயத்தில், மகளிர் முன்னேற்றம் விரைந்து காணப்படும். இந்தக் கருத்தின் அடிப்படையில் தான், மகளிருக்கு இழைக்கப்படும் பல்வேறு சமுதாயக் கொடுமைகளிலிருந்து, அவர்களைக் காப்பாற்ற வேண்டும் சட்டப்படி அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய, நியாயமான உரிமைகளைப் பெற்றுத் தரவேண்டும் தங்கள் பிரச்சினைகளை மனம் திறந்து விவாதிக்க, ஒரு சூழ்நிலை உருவாக்கித் தரவேண்டும் என்ற உயர்ந்த எண்ணங்களின் அடிப்படையில்தான், அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடத்திலும் அமைத்து நானே சென்று திறந்து வைத்து வருகின்றேன். அந்த வகையில், இந்த மாவட்டத்தில் அமையவுள்ள, அனைத்து மகளிர் காவல் நிலையத்தை, இந்த மாவட்டத்துப் பெண்கள், நல்ல முயற்சியில் பயன்படுத்தி தங்களுடைய உரிமைகளை நிலைநாட்டி பொருளாதார உரிமைகளைப் பெற்று சமுதாயத்தில் சரிநிகர் சமானமாக விளங்க வேண்டும் என்ற, எனது பேரவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழைகளின் தோழராய், பாட்டாளிகளின் உரிமைக் குரல் எழுப்பி, தியாகத் தழும்புகளை ஏற்ற, சமதர்ம ஞானி, அமரர் ஜீவா அவர்கள் பிறந்த பூமி இது. பூதப்பாண்டியில் பிறந்த அந்தப் பெருமகனாரின், தன்னிகரற்ற சேவையை, உலகம் உணரும் வண்ணம், ஒரு நினைவகம் அமைக்க வேண்டும் என்று, இப்பகுதி வாழ் மக்கள், வெகு நாட்களாகக் கேரிக்கை கொடுத்து வருகிறார்கள், என்பதை நான் அறிவேன். இம்மாவட்ட மக்களின் மனம் குளிரும் வண்ணம், வெகு விரைவில், அமரர் ஜீவா அவர்களுக்கு, இந்த மாவட்டத்தில், ஒரு நினைவகம், ( Memorial ) தமிழக அரசின் சார்பில் அமைக்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவட்டாறு சட்டமன்ற உறுப்பினர் அன்புச் சகோதரர் திரு அப்புநடேசன் அவர்கள் சற்று முன்பு பேசும்போது, இம்மாவட்டத்தில் ஓட்டு வீடுகளுக்கு வழங்கப்பட்டதைப் போல 1992-ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் காரணமாகப் பாதிக்கப்பட்ட கல்சுவர் கொண்ட ஓலை வீடுகளுக்கு மானியமும், கடன் உதவியும் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை என் முன் வைத்தார்கள். இந்த மாவட்ட மக்களின் நலன் கருதி 1992 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட கல்சுவர் அமைந்த ஓலைக் குடிசைகளுக்கு மானியமும், கடன் உதவியும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் அரசு மானியம் 3,000 ரூபாயும், கடன் உதவி 6,000 ரூபாயும் வழங்க வேண்டும் என இதே விழா மேடையில் அதிகாரிகளுக்கு நான் ஆணையிட்டுள்ளேன். இந்த மானியமும், கடன் உதவியும் வழங்கப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல மலையாள மொழி பேசும் தமிழ்நாட்டு மக்கள் பயன்பெறும் வண்ணம் மலையாளத்துப் புத்தகங்களை அச்சிட்டு இப்பகுதி மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை திரு அப்பு நடேசன் அவர்கள் என் முன் வைத்தார்கள். இந்த மாவட்ட மக்களின் கோரிக்கையை ஏற்று அவர்களுக்குத் தேவையான மலையாளப் புத்தகங்கள் தமிழக அரசின் சார்பில் அச்சிட்டு வழங்கப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புத்தகங்கள் விரைவில் அச்சிடப்பட்டு வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழா • சீரோடும், சிறப்போடும் நடைபெற, அனைத்து ஏற்பாடுகளையும், வெகு விமரிசையாக செய்துள்ள, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு கே. லாரன்ஸ் அவர்களுக்கும், அவருடன் இணைந்து பணியாற்றிய, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்களுக்கும், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி அவர்களுக்கும், மற்றும் அரசு அலுவலர்கள், காவல் துறை அலுவலர்கள் ஆகியோருக்கும், எனது நெஞ்சார்ந்த பாராட்டுதல்களையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று, அரசு நலத்திட்ட உதவிகளைப் பெறுகின்ற, 30,000-க்கும் மேற்பட்ட, எனது அன்பிற்குரிய மக்கள் ஒவ்வொருவருக்கும், நானே எனது கரங்களால், இந்த உதவிகளை நேரில் வழங்க வேண்டும், என்று மனதார விரும்பினாலும், நேரம் இன்மையின் காரணமாக, ஒரு சிலருக்கு மட்டும், இந்த மேடையில் வழங்க உள்ளேன். அதேநேரத்தில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அதிகாரிகளும், மற்றவர்களுக்கு, அவர்கள் உட்கார்ந்து இருக்கின்ற இடத்திற்கே சென்று, எனது சார்பில், அரசு நலத்திட்ட உதவிகளை, நேரில் வழங்குவார்கள்.

அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெறுகின்றவர்கள், இந்த உதவிகளை, ஒரு அடிப்படையாக வைத்துக்கொண்டு, தங்களது உழைப்பு என்ற மூலதனத்தையும் செலுத்தி, வாழ்க்கையில் உயர்வையும், பொருளாதார முன்னேற்றத்தையும், அடையவேண்டும் என்று, எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இவை அனைத்திற்கும் மேலாக, என் மீது அளப்பரிய பாசத்தையும், நேசத்தையும், தங்களது நெஞ்சங்களில் தேக்கி, என்னைக் காண்பதற்காகவும், எனது பேச்சினைக் கேட்பதற்காகவும், பெரும்திரளாக இங்கு கூடியிருக்கும், எனதருமை குமரி மாவட்ட மக்களுக்கும் நான் சென்ற இடம் எல்லாம், உணர்ச்சிப்பூர்வமான வரவேற்பினை நல்கிய, நல்ல இதயங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியையும், அன்பினையும் தெரிவித்துக் கொள்வதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மாபெரும் நம்பிக்கையை, என் மீது வைத்துள்ள, எனது அன்பிற்குரிய கன்னியாகுமரி மாவட்டத்து மக்கள் அனைவரும், எல்லா வளங்களும், நலன்களும் பெற வேண்டும், என்ற பேரவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சிறந்த வழி

கடவுளை அறிய உண்மை, அகிம்சை,
அன்பு இம்மூன்றும் சிறந்த வழிகளாகும்.

-அண்ணல் காந்தியடிகள்



பெண்கள் விழிப்பு அடைந்தால், குடும்பம் முன்னேறும்; கிராமங்கள் முன்னேறும்; தேசமே முன்னேறும்.

நாடு முன்னேற வறுமையும் அறியாமையும் போக வேண்டும். இவை இரண்டும் போனாலன்றி நாடு முன்னேறியதாகச் சொல்ல முடியாது.

நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதிலும், ஒற்றுமையோடு பாடுபடுவதிலுந்தான் நமது முன்னேற்றம் இருக்கிறது.

அப்பாவியான ஏழை மக்களை வசதி படைத்தவர்களும், கல்மனம் படைத்தவர்களும் கசக்கிப் பிழிந்து விடாதபடி தடுக்க வேண்டியது அவசியம்.

**பெருந்தலைவர் காமராஜ் பிறந்த நாள்: ஜூலை-15**





## எத்தனை இன்னல்கள், இடையூறுகள், நிதி நெருக்கடி இருப்பினும்

# தமிழக மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதே நமது தலையாய கடமையாகும்!

### சேலம் மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை

கொங்கு பூமியின் ஒரு பகுதியான, மலைகள் நிறைந்த சேலம் மாவட்டத்திற்கு வருகை தந்து, இயற்கை அன்னை அளித்த வரப்பிரசாதங்கள் அனைத்தையும், தங்களது கடுமையான உழைப்பைக் கொண்டு, வளம் கொழிக்கும் செல்வங்களாக் மாற்றிவரும், இம்மாவட்டத்து மக்களின், எழுச்சி மிகுந்த, மலர்ந்த முகங்களைக் காணும்பொழுது நான் பேருவுவகையும், பெரு மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

தொன்மையான வரலாற்றுச் சிறப்புடன், முற்போக்கான சிந்தனைகளின் உலைக்களமாக, விளங்கும் இந்த மாவட்டம், அனைத்துத் துறைகளிலும், மற்றவர்களுக்கு வழிகாட்டியாக, முன்னோடியாக இருந்து வந்துள்ளது. பண்டைய தமிழகம் ரோமாபுரியுடன் வர்த்தகம் நடத்தியபோது, இங்கே உள்ள கஞ்சமலைப் பகுதியிலும், சேந்தமங்கலம் பகுதியிலும் தயாரிக்கப்பட்ட இரும்பு ஆயுதங்களை, ரோமாபுரியைச் சேர்ந்தவர்கள் விரும்பி வாங்கிச் சென்றார்கள் என்பதையும், கிரேக்க நாட்டு மாவீரன் அலெக்சாண்டர், இங்கே நெய்யப்பட்ட, துணி வகைகளையும், தயாரிக்கப்பட்ட இரும்பு ஆயுதங்களையும் உபயோகிப்பதில் தனி ஆர்வத்தைக் காட்டினார் என்பதையும் சரித்திர ஆசிரியர்கள் வாயிலாக அறியும் போது, இம்மாவட்டத்துத் தொன்மைச் சிறப்பை நினைத்து மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

18-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயருக்கும் ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தானுக்கும் இடையே நடந்த ஆதிக்கப் போராட்டத்தின் போது, இந்த மாவட்டம் ஒரு போர்க்களமாக மாறிவிட்டது. பின்னர் ஒரு காலத்தில் ஹைதர் அலியின் ஆதிக்கத்தின் கீழ் சேலம் மாவட்டம் முழுமையும் இருந்தது. அதன்பின் ஆங்கிலேயரின் கிழக்கு இந்தியக் கம்பெனியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இவ்வாறு தனக்கென்று சரித்திரச் சிறப்பையும் கலாச்சார பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் தன்னகத்தே கொண்ட இந்த மாவட்டத்தில் என்னைக் கவர்ந்த வேறு ஒரு அம்சமும் உண்டு. சமுதாயத்தில், பெண்களுக்குச் சரிநிகர் இடத்தைக் கொடுத்து, உயரிய பண்பாட்டை, உலகிற்கு, தமிழ்நாடு பறைசாற்றிய இடம் என்பதால், இந்தத் திருச்செங்கோடு நகரத்தின் மீது, எனக்குத் தனி ஈடுபாடு உண்டு.

ஆணும், பெண்ணும் சமம், என்கின்ற உன்னதமான கோட்பாடும் சமமாகச் சேர்ந்து வாழ்வதே, உயர்ந்த வாழ்க்கை என்பதும் தமிழக மக்களின் மனத்தில், ஆழமாக பதிந்துள்ளன என்பதை வெளிப்படுத்த, இங்கே திருச்செங்கோட்டில் அருள்புரியும் சிவபெருமான், உமையவளுக்குத் தன்னில் சரிபாதியைக் கொடுத்துள்ளார். வாழ்விலும், வளத்திலும், பெண்களுக்குச் சமஉரிமை உண்டு என்பதை, ஆண்டாண்டுகளாக உணர்த்திக்கொண்டு வரும், புண்ணிய பூமி இது. அந்த வகையில் ஒரு காலத்தில், ஆணும் பெண்ணும் சமம் என்கிற த்த்துவத்தை, உலகிற்கு எடுத்துக் காட்டிய அதே பூமி, பின்னொரு காலத்தில், பெண் குழந்தைகள் பிறப்பதே பாவம் அவர்கள் வீட்டிற்கும், சமுதாயத்திற்கும் ஒரு பாரம் என்கிற பிற்போக்கு எண்ணங்களால் உந்தப்பட்டு, பெண் குழந்தைகளை, இளம் பிராயத்திலேயே, அழித்துவிடுகின்ற ஒரு கொடிய பழக்கத்திற்கு, எவ்வாறு அடிமையானது, என்பதை எண்ணிப்பார்க்கும்போது, எனது மனம் வேதனை அடைந்தது.

21-ஆம் நூற்றாண்டில், அடியெடுத்து வைக்கும் நேரத்திலும், விஞ்ஞானத்தின் பல்வேறு கூறுகளில், அசுர வளர்ச்சியை அடைந்து கொண்டிருக்கும், ஒரு காலகட்டத்திலும் இன்றும் பெண் சிசுக்களை அழிக்கின்ற, காட்டுமிராண்டித்தனமான, பத்தாம் பசலித்தனமான, கொடிய சமுதாயப் பழக்கத்திற்கு, எப்படியேனும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், என்ற எண்ணம், எனது மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது. பெண் சமுதாயத்தினர், அனைத்து உரிமைகளையும் பெற்று, ஆண்களுக்குச் சரி நிகர் சமானமாக வாழவேண்டும், என்கிற தமிழகத்தின் பாரம்பரியப் பண்பாட்டையும், பெருமைகளையும், கட்டிக் காப்பதற்காக உருவான திட்டம் தான், 'அரசு தொட்டில் குழந்தைகள் திட்டம்' வறுமையின் காரணத்தினாலும், பிற்போக்கு சிந்தனைகளாலும், பெண் குழந்தைகளை வெறுத்து ஒதுக்கும், தவறான கண்ணோட்டத்தைக் கொண்டுள்ள பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பாரம் என்று கருதி, வளர்க்க விரும்பவில்லை என்றாலும் அவர்களை இந்த அரசே, தாய் உள்ளத்தோடு, அன்புடன் தத்து எடுத்து வளர்க்கின்ற, தொட்டில் குழந்தைகள் திட்டத்தை, உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, 1992-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல், சமுதாய முன்னேற்றத் திட்டமாக, ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் செயல்படுத்தி வருகின்றது.

***மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 15.7.94 அன்று சேலம் மாவட்ட அரசு விழாவில், நலிந்தோர்க்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரையின் முழு விவரம்:***

*இத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட, 66 குழந்தைகள், பல்வேறு அரசு தொண்டு நிறுவனங்களில், நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். அக்குழந்தைகள், கல்வி அறிவைப் பெறவும், பொருளாதார மற்றும் சமூகப் பாதுகாப்பை பெறவும், அந்தக் குழந்தைகள் அனைவருக்கும், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், அனைத்துச் சலுகைகளும் வழங்க, ஆணையிட்டுள்ளேன். அதுமட்டுமின்றி, இந்தக் குழந்தைகள் தொடர்ந்து, பேணிப் பாதுகாக்கப்பட்டு, உரிய வயதில் அவர்களுக்குத் திருமணம் செய்துவைத்து, அவர்கள் வாழ்க்கையில், ஒரு நல்ல நிலையை அடையச் செய்வதை எங்களது ஆத்மார்த்த சமுதாயக் கடமையாக, நாங்கள் கொண்டுள்ளோம்.*

*சேலம் மாவட்டத்தில், மக்கள்தொகைக் கணக்குப்படி, ஆண்களைவிட, பெண்கள் எண்ணிக்கை குறைவாக உள்ளதைப் பலர் வருத்தத்துடன், என்னிடம் சுட்டிக்காட்டி உள்ளார்கள். ஆனால், உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, உங்கள் அரசு, இந்தச் சூழ்நிலையை மாற்றி வருகிறது. நாங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள், சமுதாயத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. ஒரு புதிய விழிப்புணர்ச்சியை உண்டாக்கி உள்ளது. இம் மாவட்டத்தில், பெண் குழந்தைகளின் இறப்பு விகிதம், இந்தத் திட்டம் செயல்படத் தொடங்கிய பின்பு, குறைந்துள்ளதைக் காணும் போது, உண்மையில் என் மனம் மகிழ்ச்சி அடைகிறது. 1992-ஆம் ஆண்டு, 3,578 என்ற அளவில், இருந்த குழந்தைகளின் மரணம் 1993-ஆம் ஆண்டில், 2,541 என்ற அளவிற்குக் குறைந்துள்ளது என்பதை ஒப்பிட்டு நோக்கும் போது எங்களது முயற்சிகள், ஒரு புதிய விழிப்புணர்ச்சியையும், தாக்கத்தையும் ஏற்படுத்தி இருக்கின்றன என்று, நான் உறுதியாக நம்புகின்றேன். பெண் குழந்தைகளின் சமுதாய வாழ்க்கை, சீர் பெற வேண்டும் என்பதற்காக, நாங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும், எனக்கு ஒரு மன நிறைவைத் தருகின்றன, என்பதைத் தெரிவிப்பதில், நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.*

*'பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்' கீழ், 1992-93-ஆம் ஆண்டில், 750 பயனாளிகளும், 1993-94-ஆம் ஆண்டில் 6136 பயனாளிகளும் சேர்க்கப்பட்டு பயனடைந்து வருகின்றனர். இந்த நிதி ஆண்டில், முதல் மூன்று மாதங்களில் மட்டும், 3696 பேர், சேர்க்கப் பட்டுள்ளனர். இந்த ஆண்டு இத்திட்டத்தைச் செயல்படுத்த, 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறை, தமிழ்நாட்டில் என்றென்றும் தொடருவதற்கு, நாங்கள் உறுதி பூண்டு உள்ளோம் என்பதை, நாகர்கோயிலில் நடைபெற்ற அரசு விழாவில், நான் மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டு இருந்தேன். இருப்பினும், சில அரசியல் கட்சிகள், தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளாமல், தொடர்ந்து தேவையற்ற அறிக்கைகளை விட்டுக் கொண்டும், போராட்டத்தை நடத்திக் கொண்டும், இந்தப் பிரச்சினையை அரசியலாக்கிக் கொண்டு வருகின்றன. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சமூக நீதியைப் பெற்றுத் தருவதற்காக, இந்த அரசும், இந்த அரசை வழிநடத்திச் செல்லுகின்ற, உங்கள் அன்புச் சகோதரியாகிய நானும், மேற்கொண்டு வருகின்ற எல்லா நடவடிக்கைகளையும், பல முறை விவரமாக விளக்கி இருக்கிறேன். எனவே, அவற்றை எல்லாம், மீண்டும் இந்த இடத்தில், எடுத்துரைக்க வேண்டிய அவசியம் இல்லை, என்று கருதுகிறேன்.*

*திராவிடப் பாரம்பரியத்தில் வந்த நாங்கள், பிரச்சினைகளை கண்டு ஓடி ஒளிபவர்கள் அல்ல. துணிவுடன் பிரச்சினையை எதிர்கொண்டு, விவேகத்துடன் அணுகி, அவற்றைத் தீர்த்து வைக்கும் நெஞ்சுரமும், உறுதியும் படைத்தவர்கள் நாங்கள். ஆனால், சில அரசியல் கட்சித் தலைவர்கள், இந்த உயிர் மூச்சுப் பிரச்சினைக்கு, ஒரு தீர்வு காண்பதை விட்டுவிட்டு, இதில் அரசியல் குளிர்காயும் செயல்களில், ஈடுபட்டு வருகிறார்களே அது ஏன்? என்பதுதான், என்னுடைய உள்ளார்ந்த வேதனையாகும்.*

*ஒருபுறம் அறிக்கை விடுகிறார்கள்; இன்னொருபுறம் விதவிதமான போராட்டங்களை நடத்துகிறார்கள் - அல்லது நடத்தத் தூண்டுகிறார்கள். சிலர் இந்தியப் பிரதமருக்கும், அகில இந்தியக் கட்சித் தலைவர்களுக்கும், கடிதங்களை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் இதுவரை சொல்லிக் கொண்டு வந்ததைத்தானே இவர்கள் இப்போது . சொல்கிறார்கள்? அறிக்கை விடுகிறார்கள்? கடிதம் எழுதுகிறார்கள்? இவர்கள் புதிதாக ஒன்றையும் கூறிவிடவில்லையே? எல்லாமே ஏற்கெனவே நாங்கள் சொல்லிக் கொண்டு இருப்பவை தானே? இப்படி இருக்குப்போது, எதற்காக இந்தத் தேவையற்ற கூப்பாடு? பகல் வேஷம்?*



*பொது நலன்தான் முக்கியம், என்று கருதியிருந்தால் இந்தப் பிரச்சினைக்கு, ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டும், என்று நினைத்திருந்தால் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்ற எங்களுடன் சேர்ந்து, ஓரணியில் நின்று, உரிமைக் குரல் கொடுத்து இருக்க வேண்டாமா? நமது நடவடிக்கைகளுக்கு ஆதரவு கொடுத்து, நமது கரங்களைப் பலப்படுத்தி இருக்க வேண்டாமா? அதை விட்டுவிட்டு, எங்களைத் தாக்கி அறிக்கைகளை விட்டுக்கொண்டும் எங்களுக்கு எதிராகப் போராட்டங்களைத் தூண்டி விட்டும் சட்டம் ஒழுங்கைக் குலைக்க வழி வகுத்து இந்தப் பிரச்சினையைத் திசை திருப்பி அரசியல் ஆதாயம் தேட முயற்சிப்பதால் தமிழக மக்களுக்கு என்ன நன்மை ஏற்படப் போகிறது? மாணவ, மாணவியர்களின் எதிர்காலத்தை, நிச்சயமாக இதுபோன்ற செயல்களால், காப்பாற்றி விடமுடியாது என்பது தான் உறுதி.*

*டெல்லிக்குச் சென்று, அங்கேயும் மறியல் செய்கிறார்கள் சிலர். அங்கே கைது செய்யப்படும்போது, முக்கனியை உண்ட பேரானந்தத்தைத் தருகின்றது, என்று பரவசம் அடையும் இவர்களுக்கு · இங்கே நமது மாநிலத்தில், சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட, சிலரைக் கைது செய்தால், அதுமட்டும் எட்டிக் காயாகக் கசப்பது ஏன்? டெல்லியிலே இவர்களைக் கைது செய்தால், அங்கே காவல் துறையினருக்குப் பாராட்டு தெரிவிக்கிறார்கள். அதையே தமிழ் நாட்டில் செய்தால், இது அடக்கு முறை சர்வாதிகாரம்;/ எவ்வாறு எங்களைக் கைது செய்யலாம் என, வானத்திற்கும் பூமிக்கும் குதிக்கிறார்களே? அது ஏன்? ஆக, குறுகிய அரசியல் லாபம் தான் இவர்கள் மனதில் முன் நிற்கின்றதே தவிர, பிரச்சினைக்குத் தீர்வு காணும் உண்மையான எண்ணம் அல்ல, என்பது தெளிவாகிறது. இவர்களது சுயநலம்தான், இவர்கள் இப்படியெல்லாம் நடக்க உந்துதலாக அமைந்துள்ளதே தவிர, ஒட்டு மொத்த தமிழக மக்களின் பொது நலம் அல்ல. ஆனால், இந்த விவகாரத்தை அரசியல் ஆக்கி, ஆதாயம் தேடும் எண்ணம், எங்களுக்குச் சற்றும் இல்லை. தமிழக மக்களுக்குச், சமூக நீதியைப் பெற்றுத் தருகின்ற, ஒரு 'சோதனை வேள்வி'யாகத் தான், நாங்கள் இந்தப் பிரச்சினையை அணுகி, ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன், செயல்பட்டு வருகிறோம்.*

*அண்டை மாநிலமான கர்நாடகத்திலே கூட, அரசியல் நடக்கின்றது. அங்கேயும் அரசியல் கட்சிகள் இருக்கின்றன; அவர்களிடமும் மனமாச்சரியங்கள் இருக்கின்றன; கொள்கை வேறுபாடுகள் இருக்கின்றன; அங்கேயும் தான் முதலமைச்சரைக் குறை கூறுகிறார்கள். ஆனால் 'காவிரிப் பிரச்சினை' என்ற, ஒரு பொதுப் பிரச்சினை வந்துவிட்டால், அவர்கள் அனைவரும் ஒன்றாக, ஓரணியில் திரண்டு விடுகிறார்களே! இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை என்றால், எல்லோரும் ஒன்று சேர்ந்து ஓரணியில் நிற்கிறார்களே! கர்நாடகத்தில் முதல் அமைச்சர், இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் எடுக்கும் அத்தனை நடவடிக்கைகளுக்கும், அங்கே அனைத்துக் கட்சியினரும், இட ஒதுக்கீட்டை எதிர்த்து, நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவில்லை. அப்படி என்றால், அங்கே இருக்கின்ற அரசியல்வாதிகள் மட்டும்தான், மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள், என்றுதானே எண்ணத் தோன்றும்? தங்களது அரசியல் ஆதாயத்தைவிட, நாட்டு மக்களின் பொது நலன்தான் முக்கியம், என்று கருதுகின்ற நாகரீகமும், பண்பாடும், அங்கே மட்டும் இருக்கிறது; ஆனால், இங்கே இல்லை, என்றுதானே கருதவேண்டியுள்ளது?*

*இந்தப் பிரச்சினையைத் தீர்க்க, உயிரைக் கொடுப்பேன் செத்து மடிவேன் என்று மக்கள் மத்தியில், ஆவேசமாகச் சிலர் வீர வசனம் பேசுகிறார்கள். ஆனால், இவர்களது பேச்சுக்கும், செயலுக்கும், எந்தத் தொடர்பும் இல்லை. உயிரைத் தருவேன் என்று, ஒரு*

புறம் வசனம் பேசுகிறவர்கள் மறைமுகமாக வேறு சிலரை வைத்து, நீதிமன்றத்திலே, தேவையற்ற முறையில், வழக்குகளைத் தொடுத்து தடை ஆணைகளைப் பெற்று பிரச்சினையைப் பெரிதாக்கி, மகிழ்ச் அடைகிறார்களே? பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டி விடுவது போல, சிலர் நம் மாநிலத்தில் செயல்படுகிறார்களே? இத்தகைய கீழ்த்தரமான அரசியல் நடத்துகிறார்களே? இது தமிழ்நாட்டின் துரதிருஷ்டம், என்பதுதான் எனது கருத்து.

வேறு சிலர், அரசியல் லாபம் கருதி, மாணவ மாணவியர்களின் மத்தியில், போராட்டத்தைத் துண்டிவிட வேண்டும் என்று, பகிரங்கப் பிரயத்தனம் செய்தார்கள். ஒரு தொழிற்சாலையில் பணி புரியும் தொழிலாளர்களின் பிரச்சினைகளை, 'வாயில் கூட்டம்' அதாவது, Gate Meeting என்று ஒரு கூட்டத்தைக் கூட்டி, விவாதிக்கின்ற ஜனநாயக நடைமுறை, பலகாலமாக இங்கே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் சிலர், இடஒதுக்கீட்டுப் பிரச்சினை பற்றி விவாதிக்க, கல்வி நிறுவனங்களின் முன்பு, இந்த வாயில் கூட்டம் Gate Meeting நடத்தி, ஒரு தவறான முன் உதாரணத்தை ஏற்படுத்த முனைந்தார்கள். நம்மால் நல்லவை செய்ய முடியவில்லை என்றாலும், தீயவை செய்யாமலாவது, விலகி இருப்பது நல்லது என்று, வள்ளுவப் பெருந்தகை குறிப்பிட்டதை, இந்த இடத்தில் நினைவு கூர்வது, பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். கல்வி நிறுவனங்களின் முன்பு, வாயில் கூட்டம் நடத்துவது என்பது, அங்கேயும் அரசியலை நுழைப்பதற்கும், வன்முறையைத் தூண்டி விடுவதற்கும் தான், வழி வகுக்கும் என்பதை, அனைவரும் ஒப்புக் கொள்வார்கள். இந்தப் பிரச்சினைக்கு, இதன் மூலமாகத், தீர்வு காண முடியாது என்றும் சிலரது சதி வேலைகளால், தமிழக மாணவ, மாணவியர்களின், ஒளிமயமான எதிர்கால வாழ்க்கை, பாதிக்கப்படும் என்பதையும் அனைவரும் அறிவார்கள். ஆனால் என் அன்பிற்குரிய தமிழகத்து மாணவ, மாணவிகள், சதிகாரர்களின் சூழ்ச்சி வலையில் சிக்கிக் கொள்ளாமல், "நாங்கள் புத்திசாலிகள் தீயவர்களின் கைப் பாவைகள் ஆகிவிடமாட் டோம்", என்று உணர்த்திவிட்டார்கள். தங்கள் வருங்காலத்தை, வீணர்களின் கையில் சிக்கி வீணடித்துக் கொள்ளக்கூடாது, என்பதைப் புரிந்து கொண்டு விட்டார்கள். 12-ஆம் தேதியன்று, கல்வி நிறுவனங்களின் முன் Gate Meeting நடத்த வேண்டும் என்று, சில அரசியல் கட்சிகள் அறைகூவல் விடுத்திருந்தன. ஆனால், ஒரு கல்லூரியில் கூட, இந்த வாயில் கூட்டம், நடைபெறவில்லை என்பதிலிருந்து, தமிழகத்து மாணவ, மாணவிகள் எவ்வளவு புத்திசாலிகள் என்பதை, வாயில் கூட்டங்கள் நடக்கும் என்று எதிர்பார்த்து, ஏமாந்து போன அரசியல் கட்சித் தலைவர்கள், உணர்ந்து கொள்ளவேண்டும். பொறுப்புணர்ச்சியுடனும், புத்திசாலித்தனத்துடனும் செயல்பட்ட, எனது அன்பிற்குரிய தமிழக மாணவ, மாணவியர்களுக்கு, எனது நெஞ்சார்ந்த நன்றியையும், பாராட்டுதல்களையும், தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் எதிர்கால வாழ்க்கை ஒளிமயமாகவும், சிறப்பாகவும் அமைவதற்கு, நான் உத்தரவாதம் தருகிறேன். உங்கள் நலன்காக்க, இந்தப் பிரச்சினைக்கு, ஒரு நிரந்தரத் தீர்வு காணாமல், ஓய மாட்டோம் என்பதை, மீண்டும் உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய முன்தினம், 13-ந் தேதியன்று, மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு எஸ்.பி. சவான் அவர்கள், என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்கள். அன்று காலை, டெல்லியில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்தி, அவர்களின் கருத்துக்களைக் கேட்டு அறிந்ததைப் பற்றி, குறிப்பிட்டார்கள். தமிழக மக்கள் அனைவரும், மகிழ்ச்சி பெறும் வண்ணம், நாம் மத்திய அரசிற்கு



அனுப்பிவைத்த, இட ஒதுக்கீடு சட்டத்திற்கு, குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்தைப் பெற்றுத் தருவதற்கு, மத்திய அரசு பரிந்துரை செய்ய முடிவு எடுத்துள்ளது, என்ற நல்ல செய்தியை, எனக்குத் தெரிவித்தார்கள். இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை தொடர்பாக, மாறுபட்ட கருத்துக்களோ, தவறாகப் புரிந்துகொள்ளும் மனப்பாங்கோ, யாருக்கும் இருக்க வேண்டாம் என்று, என்னிடம் கேட்டுக் கொண்டார்கள்.

மத்திய அரசின் இந்த முடிவு, சமூக நீதியைப் பெற்றுத் தருவதற்காக, உங்கள் சகோதரி நடத்திய, ஒரு மாபெரும் 'சத்திய வேள்விக்குக் கிடைத்த மகத்தான வெற்றி, நமது கோரிக்கைகளில் உள்ள நியாயத்தை, உலகிற்கு உணர்த்துகின்ற ஒரு ஆரம்பம் இது. முட்டுக்கட்டைகள் விலகிப் போகும், என்பதற்கான ஒரு அறிகுறி இது. ஆரம்பத்தில் இருந்து, இந்த அரசும், இந்த அரசை நடத்திச் செல்கின்ற, உங்கள் அன்புச் சகோதரியும், எடுத்த எல்லா நடவடிக்கைகளுக்கும், உங்கள் பேராதரவும், பேரன்பும் இருந்ததால் தான், இத்தனை இடர்ப்பாடுகளையும், சோதனைகளையும், என்னால் தாங்கிக்



கொள்ள முடிந்தது. இந்த முதல் கட்ட வெற்றி, நாம் சரியான திசையை நோக்கி, வெற்றிப் பயணம் செய்துகொண்டு இருக்கிறோம் என்ற உணர்வை, நமது உள்ளங்களிலே ஏற்படுத்தி இருக்கின்றது. எனது கோரிக்கைகளை ஏற்று, இப்பிரச்சினைக்குத் தீர்வு காண, நடவடிக்கைகளை எடுத்து வரும், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி. நரசிம்ம ராவ் அவர்களுக்கும், அவரது உத்தரவின் பேரில், அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை நடத்திய, மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு எஸ்.பி. சவான் அவர்களுக்கும், எனது சார்பிலும், உங்கள் அனைவரின் சார்பிலும், மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு இந்தியப் பிரதமரிடம், நான் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துச் சென்று, கொடுத்த கோரிக்கையில் உள்ள நியாயத்தை உணர்ந்து, இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டும் என்று, தமிழக மக்கள் சார்பாகப், பொதுநல நோக்குடன், நல்ல கருத்துக்களை முன்மொழிந்த, அகில இந்தியக் கட்சித் தலைவர்களுக்கும், எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகச் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி, அனுப்பிவைத்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டுச் சட்டத்திற்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவது என்பது, நமது முதல் கட்ட நோக்கம் ஆகும். அதைத் தொடர்ந்து, இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 31 B-ன்படி இந்தச் சட்டத்தை, 9 வது அட்டவணையில் சேர்ப்பதற்கும், இச்சட்டத்திற்குத் தகுந்த பாதுகாப்பைக் கொடுக்கவும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் தகுந்த திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று, நான் மத்திய அரசையும், அகில இந்திய அரசியல் கட்சித் தலைவர்களையும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். எவ்வளவு சதவிகித இட ஒதுக்கீட்டு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று,



ஒவ்வொரு மாநிலமும், அந்த மாநிலத்தில் நிலவும் பல்வேறு சூழ்நிலைகளையும், அவசியத்தையும் பொருத்து, சுயமாகத் தாங்களே நிர்ணயம் செய்து கொள்கின்ற ஓர் உரிமையைப் பெற்றுத் தருவதற்கு, மத்திய அரசு, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில், தகுந்த திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று, ஒரு தொலைநோக்குப் பார்வையுடன், கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, இந்த முறையும், நான் 351 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களோடு, உங்களைச் சந்திக்க வந்துள்ளேன். 97 கோடி ரூபாய் மதிப்பில், இன்று பல திட்டங்களைத் தொடங்கி வைத்துள்ளேன். 227 கோடி ரூபாய் மதிப்பில், புதிய திட்டங்களுக்குச் சற்றுமுன், அடிக்கல் நாட்டியுள்ளேன். இதே விழா மேடையில், இம்மாவட்டத்தைச் சேர்ந்த நலிந்த பிரிவினர், 54,000 பேருக்கும் மேற்பட்டவர்களுக்கு, 27 கோடி ரூபாய் மதிப்பில், அரசு நலத்திட்ட உதவிகளை, வழங்க உள்ளேன் என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை, மதுரை மற்றும் சேலம், ஆகிய 3 மாநகரங்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவும் கூடுதல் குடிநீர் வசதியைச் செய்து தருவதற்காகவும் 85 நடுத்தர மற்றும் சிறிய நகரங்களுக்கும், 966 வழியோரக் கிராமங்களுக்கும், குடிநீர் வசதியைப் பெற்றுத் தருவதற்கும் உலக வங்கியின் உதவியுடன், 322 கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஒரு திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது.

எங்களுக்கு முன்பு ஆட்சியில் இருந்தவர்கள், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தாமல், கிடப்பில் போட்டுவிட்ட காரணத்தால், உலக வங்கி, தன் உதவியை நிறுத்திக் கொள்கிற அளவிற்குப் போய்விட்டது.

ஆனால், உங்கள் சகோதரியின் தலைமையில், அமைந்துள்ள இந்த அரசு, உங்கள் அரசு, அந்தத் திட்டத்தை முனைப்புடன், மீண்டும் செயல்படுத்த தொடங்கியதைக் கண்டவுடன் உலக வங்கி, தனது பாராட்டுதல்களைத் தெரிவித்ததோடு, இத்திட்டத்தை நிறைவேற்ற, 31.12.1994 வரை, கால அவகாசத்தை நீட்டிப்புச் செய்து கொண்டுள்ளது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே, முதன் முறையாக, உலக வங்கி, இந்த கால நீட்டிப்பினைச் செய்து கொடுத்துள்ளது. வேறு சில மாநி




லங்களில் பணி முன்னேற்றம் இல்லை, என்கின்ற காரணத்தைக்காட்டி, தனது நிதி உதவியை, நிறுத்திக் கொண்ட உலக வங்கி இங்கே, தமிழ்நாட்டில், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு திட்டத்தை, நான் மீண்டும் முனைப்புடன் துரிதமாகச் செயல்படுத்தி வரும் விதத்தைப் பாராட்டி முதன்முறையாக, கால நீட்டிப்பு செய்து கொடுத்துள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தின் கீழ்தான், சேலம் மாவட்ட வாழ் மக்களின், குடிநீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு, சேலம் - ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் 1985 இல் துவக்கப்பட்டது. சேலம் மாநகராட்சி, 11 நகரங்கள், மற்றும் 264 வழியோரக் கிராமங்கள் பயன் பெறும் வண்ணம், அமைக்கப்பட்ட இத்திட்டம், முதன்முதலில் உலக வங்கியின் நிதி உதவியுடன், 50 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்பட்டது. ஆறு ஆண்டுகளில், பணி, ஆமை வேகத்தில் நடைபெற்றது. 1985 முதல் 1991 வரை, ஆறு ஆண்டுகளில், இத்திட்டத்தைச் செயல்படுத்த, 24 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டது. ஆனால், உங்கள் சகோதரியின் தலைமையில், அமைந்த இந்த அரசு, மூன்றே ஆண்டுகளில், 30 கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்டு, இத்திட்டத்தை முடித்துவைத்துள்ளது.

மேட்டூர் நீர்த்தேக்கத்தில் இருந்து, நாளொன்றுக்கு, 88 மில்லியன் லிட்டர் தண்ணீரைப் பெற்று விஞ்ஞான ரீதியில், சுத்திகரிப்பு செய்து 90 கிலோ மீட்டர் தூரம் வரை, குழாய்கள் மூலம், சேலம் மாநகராட்சி உட்பட, பல நகரங்களுக்கும், கிராமங்களுக்கும், குடிநீர் வழங்கும், 60 கோடி ரூபாய் மதிப்புள்ள இந்தக் கூட்டு குடிநீர்த்திட்டத்தை, இம்மாவட்டத்து மக்களுக்கு, இன்று அர்ப்பணித்ததில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன். கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டக் குடிநீர்த் திட்டங்களையும், இதே வேகத்தில் செயல்படுத்தி, எப்படியேனும், இவ்வாண்டு இறுதிக்குள் முடித்துவைக்க, அனைத்து நடவடிக்கைகளையும், நாங்கள் மேற்கொள்வோம் என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று ஒரு கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவில், கட்டி முடிக்கப்பட்டுள்ள, 28 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைத் திறந்து வைத்ததில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ்நாட்டில் உள்ள எல்லா மக்களுக்கும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும் என்பதில், நாங்கள் ஒரு உண்மையான ஈடுபாட்டுடன், செயல்பட்டு வருகின்றோம். இன்னல்கள், இடையூறுகள், நிதி நெருக்கடி, எத்தனை இருப்பினும் நாங்கள் இந்தக் கொள்கையில், உறுதியுடன் இருக்கிறோம் என்பதன் வெளிப்பாடுதான், ஒரே நேரத்தில் இன்று, என்னால் திறந்து வைக்கப்பட்ட, 28 மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள். அதே போல, மேலும் 19 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை, ஒரு கோடியே, 13 இலட்சம் ரூபாய் செலவில் அமைப்பதற்கு, இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன். 58 கிராமக் குடிநீர்த் திட்டங்களை, 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தவும் கனியனூர் திட்டத்தை 19 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தவும் இன்று நான் அடிக்கல் நாட்டியதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

DANIDA நிதி உதவியுடன், 50 சுகாதாரத் துணை மையக் கட்டடங்களைத் திறந்து வைத்ததிலும், நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

'குடும்பத்திற்கு ஒரு வீடு' என்கின்ற கொள்கையின் அடிப்படையில், இன்று சேலம் மாவட்டத்தில், 8 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில், நாமக்கல், தத்தம்பட்டி, ஐயம் பெருமாள்பட்டி ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள 836 குடியிருப்புக்களைத் திறந்து வைத்ததிலும் நாமக்கல், வகுரம்பட்டி, சந்தம்பட்டி, அன்னதானப்பட்டி ஆகிய பகுதிகளில், 1075 குடியிருப்புகளையும், வீடுகளையும், 16 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டியதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நெசவாளர்களின் நலன் காக்க, நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்திவருகின்ற எங்கள் அரசு, சேலம் மாவட்டத்தில், ஒரு முன்னோடித் திட்டமாக, நெசவாளர்களுக்காக, 25 குடியிருப்பு வீடுகள்



கட்டி முடித்துள்ளது. இந்தக் குடியிருப்புகளை, இன்று நெசவாளர்களுக்கு அர்ப்பணிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மாவட்டத்தில் கூடுதலாக, 20 புதிய பேருந்து வழித் தடங்களைத் தொடங்கிவைத்ததிலும், அண்ணா போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த, 809 பேருந்துகளில், 115 பழைய பேருந்துகளுக்குப் பதிலாக, 9 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில், 115 புதிய பேருந்துகளை வழங்கியதிலும், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இன்றைக்கும், அகில இந்திய அளவில், மிகக் குறைவான கட்டணத்தை வசூலித்து, திறமையுடன் செயல்படும் போக்குவரத்துக் கழகங்கள்,



நமது மாநிலத்தில்தான் உள்ளன, என்பதை எண்ணிப் பார்க்கும் போது மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையான, மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு, புதிய ஈடுபாட்டுடன், செயல்பட்டு வரும் எங்கள் அரசு, 20 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில், மேலும் 7 புதிய துணை மின் நிலையங்களை, இம் மாவட்டத்தில் அமைக்க உள்ளது.

மல்லூர், நாமகிரிப்பேட்டை, தும்பல், பள்ளிப்பாளையம், இளநகர், கபிலர்மலை, கொளத்தூர் ஆகிய 7 இடங்களில், இந்தத் துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு, அடிக்கல் நாட்டியதிலும் வலையப்பட்டியில், 3 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில், கட்டி முடிக்கப்பட்ட துணை மின் நிலையத்தைத் திறந்து வைத்ததிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்தத் துணை மின் நிலையங்கள் செயல்படும் போது, இந்த மாவட்டத்திற்குக் கூடுதல் மின் இணைப்புகள் வழங்க, வழிவகை செய்யப்படும் நிலையான மற்றும் உறுதியான மின் சக்தியை, இம்மாவட்டத்து மக்கள் பெறுவார்கள் என்பதிலும் இம்மாவட்டத்தின் விரைவான தொழில் வளர்ச்சிக்கு, இந்தக் கூடுதல் மின் இணைப்புகள், உதவியாக அமையும் என்பதிலும், ஐயமில்லை.

தேனிரும்புத் தொழிற்சாலை ஒன்றினை, SISCOL - Southern Iron and Steel Company Limited நிறுவனத்தின் மூலமாக 194 கோடி ரூபாய் மதிப்பில் TIDCO நிறுவனத்தின் கூட்டுத்துறையில் நிறுவுவதற்காக, நான் சென்ற முறை 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில் அடிக்கல் நாட்டினேன். இத்திட்டத்தைச் செயல்படுத்த 200 ஏக்கர் நிலம், ஏற்கெனவே நில எடுப்புச் செய்யப்பட்டுள்ளது. உற்பத்தியை விரைவில் தொடங்க அனைத்து ஆயத்தப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும், 1995-ஆம் ஆண்டு இந்த நிறுவனம் தனது உற்பத்தியைத் தொடங்கும் என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், SISCOL நிறுவனம் 256 கோடி ரூபாய் மதிப்பில், எஃகு இரும்பு உருக்கு மற்றும் உருட்டாலை ஒன்று அமைப்பதற்கும், நிலக்கரியிலிருந்து கல்கரியை, அதாவது COKE தயாரிக்கும் திட்டத்தை 160 கோடி ரூபாய் செலவிலும், செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

160 கோடி ரூபாய் மதிப்பில் COKE தயாரிக்கும் திட்டத்திற்கு இன்று அடிக்கல் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இத்திட்டத்தைச் செயல்படுத்த பீகாரிலிருந்து தேவையான நிலக்கரியைப் பெறுவதற்கு, நாம் மத்திய அரசின் அனுமதியை, ஏற்கெனவே பெற்றுள்ளோம். இத்திட்டத்திற்கென, 165 ஏக்கர் நிலம், விரைவில் ஆர்ஜிதம் செய்யப்பட்டு 3 வருட காலக் கட்டத்தில், இந்த நிறுவனம் உற்பத்தியைத் தொடங்கும் என்பதையும், பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேனிரும்புத் தொழிற்சாலைக்குத், தேவையான கல்கரி எனும் COKEஐ, தற்போது நாம் வெளிநாடுகளிலிருந்து, இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம். இன்று என்னால் அடிக்கல் நாட்டப்பட்ட, இந்தத் திட்டத்தின் கீழ், இந்தத் தேனிரும்பு தொழிற்சாலைக்குத், தேவையான COKE மட்டுமின்றி, உபரியானது, தேனிரும்பை, வார்ப்பு இரும்பாக மாற்றும் FOUNDRY களுக்கும், மற்றவர்களுக்கும் வழங்கப்படும் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது மாநிலத்திற்குத் தேவையான கல்கரியில், தன்னிறைவைக் காணுகின்ற ஒரு வாய்ப்பை, இந்தத் திட்டம் ஏற்படுத்திக் கொடுக்கும் என்று பரிபூரணமாக நம்புகிறேன்.

மேலும், கல்கரி தயாரிக்கப்படும்போது, உபரியாகக் கிடைக்கின்ற நிலக்கரி வாயு, COAL GASஐ வைத்து, 10 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கபபடும் என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு, இந்த மூன்று தொழிற்சாலைகளும், செயல்படும்போது, ஆயிரக்கணக்கானோருக்கு, நேரடி வேலைவாய்ப்பும், மறைமுக வேலைவாய்ப்பும், கிடைக்கும் என்பதை எண்ணி மன நிறைவு அடைகிறேன்.

சமுதாயத்தின் ஒட்டுமொத்த நலனுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்துள்ள, உங்கள் அரசு, கிராமப்புறங்களில் வாழ்கின்ற, ஏழை எளிய மக்களும், மருத்துவ வசதியையும், மருந்துகளையும் பெற, மருத்துவ நல முகாம்களை நடத்தி வருகின்றது. பணம் படைத்தவர்களுக்கு மட்டும் தான், நவீன மருத்துவ வசதியும், உயிர்காக்கும் மருந்துகளும் கிடைக்கும், என்ற சூழ்நிலையை மாற்றி கிராமப்புறங்களில் வாழும், ஏழை எளிய பாமர மக்களுக்கும், அனைத்து மருத்துவ வசதிகளும், மருந்துகளும், அவர்கள் தங்கியிருக்கின்ற இடத்திற்கே, சென்று அடையச் செய்ய வேண்டும், என்கின்ற ஒரு எண்ணத்தின் அடிப்படையில் தான் இந்த மருத்துவ முகாம்களை, எங்கள் அரசு, உங்கள் அரசு, தொடர்ந்து நடத்தி வருகின்றது.

இந்தியாவின் எதிர்காலச் சிற்பிகளாம், தமிழகத்தின் பள்ளிக் குழந்தைகளின் உடல் நலமும், மன நலமும் பேணிப் பாதுகாக்கபட வேண்டும் என்பதற்காக, மாநில அளவிலான, 'பள்ளி மாணவ மாணவியர் மருத்துவ முகாமை', சற்று முன்பு தொடங்கி வைத்ததில், நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். 5 வயதிலிருந்து 15 வயதிற்கு உட்பட்ட, ஒரு கோடியே 34 இலட்சம், பள்ளிச் சிறார்கள், இத்திட்டத்தினால் பயன்பெறுவார்கள். உடல் நலம் மட்டுமின்றி, குழந்தைகள் மன நலமும், முதன் முறையாக இந்தத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான மருத்துவச் சிகிச்சை, இலவசமாக வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களான பள்ளி மாணவ மாணவியர்கள், நல்ல கல்வி கற்பதோடு, சத்தான உணவையும், உட்கொண்டு, நல்ல உடல் நலத்துடனும், மனநலத்துடனும், நாட்டிற்கும், வீட்டிற்கும் பயன் படுகின்ற, சிறந்த குடிமக்களாக உருவாக வேண்டும், என்ற எனது



பேரவாவினை, இத்தகைய மருத்துவ முகாம்கள் நிறைவேற்றும் என்பதில், எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, ஆரம்பச் சுகாதார மையங்கள் ஒவ்வொன்றிற்கும், மருந்துகள் வழங்குவதற்காகத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, உடல் நலம் குறித்தும், மன நலம் குறித்தும், ஒரு புதிய விழிப்புணர்ச்சியை, அவர்கள் மனங்களிலே ஏற்படுத்தி வைப்பதற்காக, 'பள்ளி மாணவ மாணவியர்கள் நல்வாழ்வு வாரம்' ஒன்றை, எல்லா பள்ளிகளிலும் நடத்துவதற்கும், ஏற்பாடு செய்யப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீண்டதொரு பாரம்பரியத்தையும், பண்பாட்டு வரலாற்றையும், தன்னகத்தே கொண்டு விளங்கும் தமிழ்ச் சமுதாயம், மீண்டும் ஏற்றம்பெற வேண்டும் என்றால், தமிழக மகளிருக்குச் சங்க காலத்திலும், அதற்குப் பின்பும், சமுதாயத்தில் வழங்கப்பட்டு வந்த, சரி நிகர் சமான இடத்தை, வழங்க வேண்டும் என்பதிலும் இன்றைய சூழ்நிலையில், பொருளாதார ஆதரவுக்காக, யாரையும் சாராமல், தன்னிச்சையாகச் செயல்படுகின்ற ஒரு சூழ்நிலை, பெண்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதிலும் எனக்குத் தீவிரமான ஈடுபாடு உண்டு. அதே நேரத்தில், நமது கலாச்சாரத்தின் ஆணி வேரான, அன்பும் பாசமும் நிறைந்த, குடும்பச் சூழ்நிலை மாசுபடாமல், பெண்களின் முன்னேற்றம் தொடர வேண்டும் என்பதிலும், நான் தீவிரமாக இருக்கிறேன்.

பெண்களின் பொருளாதார, சமுதாய முன்னேற்றத்திற்கு, வழி வகை காணவேண்டும் என்கின்ற, எனது ஈடுபாட்டின் வெளிப்பாடு தான், மாவட்டந்தோறும், நானே நேரில் சென்று திறந்து வைக்கும், 'அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்'. சட்டப்படி 'மகளிருக்குப் பாதுகாப்பு கிடைக்கவும், வரதட்சணை போன்ற சமுதாயக் கொடுமைகளிலிருந்து அவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கும், மனம் திறந்து தங்களது பிரச்சினைகளைப் பேசித் தீர்வு காண்பதற்கு ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் இந்த 'அனைத்து மகளிர் காவல் நிலையம்' உதவியாக இருக்கும் என்று, நான் பூரணமாக நம்புகிறேன்.

இன்று பிற்பகல், சேலம் மாவட்டத்திற்கான, அனைத்து மகளிர் காவல் நிலையத்தை, சேலம் நகரில் திறந்து வைக்க உள்ளேன். இந்த 'அனைத்து மகளிர் காவல் நிலையத்தில்' பணிபுரியும் ஆய்வாளரும், உதவி ஆய்வாளரும், பெண் காவலர்களும், உதவி நாடி வருபவர்களை, மனுதாரர்கள் என்று கருதாமல், தங்கள் உடன் பிறவாச் சகோதரிகளாக நினைத்து, அவர்களது பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு கண்டு அவர்கள் நல்வாழ்விற்கு, வழி வகுக்க வேண்டும் என்பதே, எனது பேரவா. எனது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றாற்போல், அவர்கள் செயல்படுவார்கள் என்று நம்புகிறேன். மேலும், சேலம் மாவட்டப் பெண்கள், இந்த 'அனைத்து மகளிர் காவல் நிலையத்தை' நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிலப்பதிகாரக் காவிய நாயகி, பத்தினித் தெய்வம் கண்ணகிக்கு சிறப்பு செய்யும் வண்ணம், திருச்செங்கோட்டில், "கண்ணகிக் கோட்டம்" ஒன்றை அமைக்க வேண்டும் என்ற எண்ணம், இப்பகுதி வாழ் மக்கள் மனதில், பல காலமாக இருப்பதை, நான் நன்கு அறிவேன். மக்கள் எண்ணம் அறிந்து செயல்படுவதில், உங்கள் சகோதரியின் அரசுக்கு, எப்போதும் ஒரு தனி ஈடுபாடு உண்டு. திருச்செங்கோடு நகரத்தில், ஒவ்வொரு ஆண்டும், கண்ணகிக்கு விழா எடுக்கும், தமிழ் உணர்வு படைத்த மக்கள், அனைவரின் விருப்பத்தின்படி, தமிழக அரசின் சார்பில், திருச்செங்கோடு நகரில் "கண்ணகி கோட்டம்" ஒன்று அமைக்கப்படும் என்பதை, பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் "கண்ணகி கோட்டம்" அமைப்பதற்கான, ஆயத்த நடவடிக்கைகள் அனைத்தையும், தமிழக அரசு வெகு விரைவில் மேற்கொள்ளும், என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழா, வெகு விமரிசையாக ஏற்பாடு செய்யப்பட்டு, சீரோடும், சிறப்போடும் நடந்தேறிக் கொண்டிருக்கிறது. திருச்செங்கோடு நகரத்தின் வரலாற்றில், தனக்கென ஒரு தனியிடத்தைத் தேடிப் பிடிக்கும் இந்த விழாவை, இத்தனைச் சிறப்புகளோடு ஏற்பாடு செய்த, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், அன்புச் சகோதரர் திரு டி.எம். செல்வகணபதி அவர்களுக்கும் அவருடன் இணைந்து பணியாற்றிய, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள் ஆகியோருக்கும் என் நெஞ்சார்ந்த பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை, 54,000 க்கும் மேற்பட்ட, என் பேரன்பிற்குரிய மக்கள் ஒவ்வொருவருக்கும், நானே எனது கரங்களால் வழங்க வேண்டும், என்று மனதார விரும்பினாலும் நேரத்தின் அருமையைக் கருதி, ஒரு சிலருக்கு மட்டும், இந்த விழா மேடையில் வழங்க உள்ளேன். நான் உதவிகளை மேடையில் வழங்குகின்ற அதே நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அதிகாரிகளும், மற்ற பயனாளிகளுக்கு, அவரவர் அமர்ந்திருக்கின்ற இடத்திற்கே சென்று, அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்குவார்கள்.

இந்த நலத்திட்ட உதவிகளை, நானே உங்கள் வீடு தேடி, உங்களுக்கு வந்து கொடுத்ததாகக் கருதி, இந்த உதவிகளை, ஒரு அடிப்படையாக வைத்துக் கொண்டு, உங்களது வாழ்க்கை



முன்னேற்றத்திற்கு, ஒரு புதிய பாதையை, நீங்கள் வகுத்துக் கொள்ளவேண்டும், என்று கேட்டுக் கொள்வதோடு நீங்கள் ஈடுபடுகின்ற அத்தனை முயற்சிகளிலும், வெற்றிகண்டு வாழ்க்கையில் மேம்பாட்டையும், பொருளாதார முன்னேற்றத்தையும் அடைய வேண்டும் என்று எனது நெஞ்சத்து நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்து, என்னைக் காண்பதற்காகவும், எனது பேச்சினைக் கேட்பதற்காகவும், பெருந்திரளாக இங்கு வந்து, தங்களது நெஞ்சங்களில் தேக்கி வைத்துள்ள, அளவிட முடியாத அன்பையும், பாசத்தையும் பொழிந்த, சேலம் மாவட்ட மக்களுக்கு, எனது நெஞ்சார்ந்த நன்றியையும், அன்பினையும் தெரிவித்துக் கொள்வதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒவ்வொரு முறையும், உங்களது இதய பூர்வமான வரவேற்பையும், அன்பையும், ஆதரவையும் காணும்போது, எனது மனம் நெகிழ்ச்சி அடைகின்றது. என் மீது நீங்கள் வைத்திருக்கின்ற, அளவிட முடியாத நம்பிக்கையை, மேலும் உறுதிப்படுத்துகின்ற வண்ணம், எங்கள் செயல்பாடு அமையும் என்பதை எடுத்துரைத்து சேலம் மாவட்டத்து மக்கள் அனைவரும், எல்லா வளங்களும், நலன்களும் பெற வேண்டும் என்ற, எனது பேரவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

TNSC BANK

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 2.9.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE




# பர்கூர் தொகுதி மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் உதவி

**பி**ன் தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்தில் பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அந்தத் தொகுதி மக்களின் குறைகளைக் கேட்டு அவற்றைக் களைய வேண்டும் என்பதற்காக, பர்கூர் நகரின் தொகுதி அலுவலகம் ஒன்றைத் துவக்கி மனுக்களைப் பெற்று வருகிறார்.

அந்த அலுவலகத்தில் பெறப்படும் அனைத்து மனுக்களையும் தனது நேரடிப் பார்வையில் பரிசீலனை செய்து, அரசுத் துறையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய மனுக்களைப் பல்வேறு அரசுத் துறையின் பிரிவுகளுக்கு மேல் நடவடிக்கைக்கு அனுப்பி வைத்து, அரசின் சார்பிலான உதவிகளைப் பெற்றுத் தருகிறார்கள். எஞ்சியுள்ள மனுக்களில், அரசு உதவிகள் கிடைக்க இயலாத வண்ணம் உள்ள மனுக்களைத் தெரிந்தெடுத்து, அந்த மனுதாரர்களுக்கு வேண்டிய உதவிகளைத் தனது சொந்த நிதியிலிருந்து பொருட்களை வாங்கியும், நிதியாக வழங்கியும் வருகின்றார். இதுவரை 892 நபர்களுக்கு இத்தகைய உதவிகள் பொருட்களாகவும், நிதி உதவியாகவும் வழங்கப்பட்டுள்ளன.

4.7.1994 அன்று மேலும் 196 நபர்களைத் தனது இல்லத்திற்கு வரவழைத்து, தனது சொந்தச் செலவிலிருந்து, பொது நிதி உதவி கோரிய 29 நபர்களுக்கும், பெட்டிக்கடை வைக்க உதவி கோரிய 20 நபர்களுக்கும், காய்கறிக் கடை வைக்க நிதி உதவி கோரிய 14 நபர்களுக்கும், ஆடுகள் வாங்க நிதி உதவி கோரிய 6 நபர்களுக்கும், மளிகைக் கடை வைக்க நிதி உதவி கோரிய 10 நபர்களுக்கும் நிதி உதவியினை வழங்கினார்.

மேலும், வீடு கட்ட நிதி உதவி கோரிய 5 நபர்களுக்கும், திருமணம் செய்வதற்காக நிதி உதவி கோரிய 6 நபர்களுக்கும், மருத்துவச் சிகிச்சைக்காக நிதி உதவி கேரிய 15 நபர்களுக்கும் நிதி உதவியினை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் நேரில் வழங்கினார்.

இவை மட்டுமின்றி, கறவை மாடு கோரிய 10 நபர்களுக்குக் கன்றுடன் கூடிய உயர்ந்த ரகக் கறவை மாடுகள் தலா ஒவ்வொன்றும், மாட்டு வண்டி கோரிய 5 நபர்களுக்கு, உயர்ந்த ரகக் காளை மாடுகளுடன் கூடிய இரட்டை மாட்டு டயர் வண்டி தலா ஒவ்வொன்றும், தையல் இயந்திரம்





கோரிய 12 நபர்களுக்குத் தலா ஒரு தையல் இயந்திரமும், சலவைப் பெட்டி கோரிய 10 நபர்களுக்குத் தலா ஒரு சலவைப் பெட்டியும், உடல் ஊனமுற்ற ஒருவருக்கு மூன்று சக்கர வண்டியும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

மேலும், டீக்கடை வைக்க நிதி உதவி கோரிய 7 நபர்களுக்கும், துணி வியாபாரம் செய்ய நிதி உதவி கோரிய 7 நபர்களுக்கும், சுய தொழில் செய்ய நிதி உதவி கோரிய 3 நபர்களுக்கும், டயர் வல்கனைசிங் கடை வைக்க நிதி உதவி கோரிய ஒரு நபருக்கும், சவுண்டு சர்வீஸ் கடை வைக்க நிதி உதவி கோரிய 2 நபர்களுக்கும், மிட்டாய்க் கடை வைக்க நிதி உதவி கோரிய ஒரு நபருக்கும், புத்தகப் பைண்டிங் கடை வைக்க நிதி உதவி கோரிய ஒரு நபருக்கும், கல்வியைத் தொடர நிதி உதவி கோரிய 2 நபர்களுக்கும், சலூன் கடை வைக்க நிதி உதவி கோரிய 3 நபர்களுக்கும், நிதி உதவியினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

அரிசி கடை வைக்க, வளையல் கடை வைக்க, எலக்டிரிகல்ஸ் கடை வைக்க நிதி உதவி, தச்சு வேலை செய்ய, இரும்புக் கடை வைக்க, மிதியணி கடை வைக்க நிதி உதவி கோரிய ஒவ்வொருவருக்கும் நிதி உதவியினை வழங்கியும், 10 நபர்களுக்கு சைக்கிள் கடை வைக்கத் தலா 6 சைக்கிள்களும், உடன் கடை வைக்கத் தேவையான இதர உபகரணங் களையும், கட்சிப் பணி செய்ய சைக்கிள் கேட்ட ஒரு நபருக்கு சைக்கிளும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

மேலும், பார்வையற்ற 3 நபர்களுக்கு நிதி உதவியும், உடல் ஊனமுற்ற 6 நபர்களுக்கு நிதி உதவியினையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.



**'பண்பாளர் பட்டுக்கோட்டையார்'**

**ஆசிரியர்:** கலைமாமணி தில்ருபா சண்முகம்

**வெளியீடு:** தில்ருபா பதிப்பகம்
20, முதல் தெரு,
புலியூர் 11வது தெரு,
டிரஸ்ட்புரம்,
சென்னை600 024

**பக்கம்144** **விலை ரூ.20**

தமிழ்த் திரைப்பட உலகில் கொடிகட்டிப் பறந்த கவிஞர்களில் குறிப்படத்தக்கவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். அவரது பாடல் தொகுப்புகள் சில வெளிவந்துவிட்டன. ஆனால், இந்நூல் அந்த ரகம் அல்ல கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்த ரத்தின் பண்பு நலனை விரித்துரைப்பது.

பலபேரிடம் கேட்டெழுதியது அல்ல பல்லாண்டுக்காலம் கவிஞரோடு பழகியறிந்த இசைப்புலமை மிக்க நூலாசிரியரால் எழுதப்பட்ட பெருமைமிக்கது. "நான் முதன்முதல் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தை 1951 அக்டோபர் 13இல் சந்தித்தேன் அதிலிருந்து இன்பத்திலும், துன்பத்திலும் நெருங்கிப் பழகி வந்தவர்கள் நாங்கள். கடைசியாக அவரை 1959 அக்டோபர் 7இல் சந்தித்தேன். அதற்கு மறுநாள் அவர் மறையாப் புகழை நிலை நிறுத்தி மாண்டுபோனார்..." என்றெல்லாம் சம்பவங்களைத் தேதி ஆண்டு வாரியாகக் குறிப்பிட்டு எழுதியுள்ளார் ஆசிரியர்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனோடு ஏற்பட்ட தொடர்பை விளக்குவது உட்பட கவிஞர் பட்டுக்கோட்டையாரைப் பற்றி 15 தலைப்புகளிலான தனித்தனிக் கட்டுரைகள் மட்டுமல்ல 'அண்ணே, இதுக்குமேல ஓடலே' என்று பாதியில் நிறுத்தப்பட்ட அவர் பாடல்களும் இதுவரை வெளிவராத அவர் எழுத்தோவியங்களும் கூட இதில் வகையுறச் சேர்க்கப்பட்டுள்ளன.

கலையுலகினர் கவிஞர்கள் மட்டுமல்ல, அவர்பால் பற்றுக்கொண்ட ரசிகர் பெருமக்களும் அவசியம் படிக்கவேண்டிய நூல் இது.

**'கங்கைகொண்டான்'**

**'உங்கள் மனமும் உங்கள் முன்னேற்றமும்'**

**ஆசிரியர்:** மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு

**வெளியீடு:** மணிமேகலைப் பிரசுரம்
த.பெ. எண் 1447
4, தணிகாசலம் சாலை

# நூல் நயம்

தியாகராயநகர்
சென்னை600 017

**பக்கம்128** **விலை ரூ.17.50**

நன்மையும் தீமையும் பிறர் தர நமக்கு வருவதில்லை, என்பதை வலியுறுத்திச் சொல்லும் நூல். மனம் அதன் செயல்பாடுகள், முன்னேற்றம், தாழ்வு என்று மனம் சம்பந்தப்பட்ட அத்தனை விஷயங்களும் அலசி ஆராயப்பட்டிருக்கிறது. வாழ்வில் முன்னேற, மன அமைதி பெற இந்நூல் நல்ல குரு.

**'உதவித் திருமணம்'**

**ஆசிரியர்:** மலையமான்

**வெளியீடு:** அன்புப் பதிப்பகம்
63A, ரங்காச்சாரி சாலை
சென்னை18

**பக்கம்160** **விலை ரூ.21**

சிறு சிறு நாடகங்கள் நகைச்சுவையோடு எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாடகமும் ஒவ்வொரு செய்தியைச் சொல்லுகின்றன.

மாணவ மாணவியர் மட்டுமன்றி, அனைவரும் படித்து ரசிக்கத்தக்க நாடகங்கள் இவை.



'தமிழரசு' அச்சகத்தில், தேர்வு நிலை பிளானடா ஆப்செட் டெக்னிஷியனாகப் பணிபுரிந்த திரு ஆர்.அண்ணாமலை அவர்கள் 2.6.94 அன்று இயற்கை எய்தினார். அவரது குடும்பத்தாருக்குத் 'தமிழரசு' தமது ஆழ்ந்த இரங் கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

**- ஆசிரியர்**

**'அன்புள்ள மகனுக்கு'**

**ஆசிரியர்:** டி.என். சுகிசுப்பிரமணியன்

**வெளியீடு:** அமிழ்தம் பதிப்பகம்
15, முத்துப்பிள்ளைத் தெரு
வ.உ.சி. நகர் வேலூர்-1

**பக்கம்13** **விலை ரூ.104**

தந்தை மகனுக்குக் கடிதவாயிலாக அறிவுரை கூறுவதாக அமைந்த நூல். ஒவ்வொரு கடிதத்திலும் ஒரு பொருள் கையாளப்பட்டிருக்கிறது.

கடிதத்தின் பயன், திடமானது, அன்பு, விநயம், மொழி, கல்வி, பிறரிடம் பழகும் முறை, கவனம் என்று இளைஞர்கள் என்றும் நினைவில் கொண்டு கடைப்பிடித்து முன்னேற அற்புதமான அறிவுரை கூறப்பட்டிருக்கிறது. இளைஞர்களுக்கு மிகவும் பயனுள்ள நூல்.

**'ஊருக்குத் தெரியாத உறவு'**

**ஆசிரியர்:** நெல்லை செல்வம்

**வெளியீடு:** செல்லப் பாப்பா பதிப்பகம்
6, கஸ்தூரிபாய் நகர்
4வது தெரு, அனகாபுத்தூர்,
சென்னை600 070

இது ராணுவ வீரர் ஒருவரின் கதை. தாய் நாட்டுப் பற்று, தாய்மொழிப் பற்று ஆகியவை வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது.

ராணுவ வீரனின் மனிதாபிமானம், கடமையுணர்வு நினைவில் நிற்பவை.

**'தூண்டிலில் சிக்காத மீன்கள்'**

**ஆசிரியர்:** மன்னார்குடி விஸ்வநாதன்

**வெளியீடு:** மோகனா பதிப்பகம்
9ஏ, பதின்மூன்றாவது தெரு
மன்னார்குடி614 001

**பக்கம்204** **விலை ரூ.25**

கதை தஞ்சை மாவட்டத்தில் நடைபெறுகிறது. எனவே, இக்கதையின் பாத்திரங்களோடு தஞ்சை மாவட்டத்தையே சுற்றுகிறோம். கதை முடியும் வரை தஞ்சை மாவட்டத்திலேயே இருக்கும் உணர்வு. மண்வாசனையுடன் கூடிய நல்ல கதை.

**என்.கே. சாமி**

சிறு சேமிப்பு - உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# செழிப்பான வாழ்விற்கு இன்றே முதலீடு செய்வீர்

# கிசான் விகாஸ் பத்திரம்

**உங்கள் முதலீடு 5½ ஆண்டுகளில் இருமடங்கு வளர்கிறது.**

**சிறப்பு அம்சங்கள்**

- ஐந்தரை ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது.
- 18.18% சாதாரண வட்டி.
- பத்திரங்கள் ரூ.100/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- மதிப்புகளில் கிடைக்கின்றன.
- அவசரத் தேவைக்கு 2½ ஆண்டுகளில் வட்டியுடன் பணம் திரும்பப்பெற வசதி.

**ரூ.1000/- முதலீட்டிற்கு கிடைக்கும் தொகை**

| ஆண்டுகள் | தொகை |
|---|---|
| 2½ ஆண்டுகளில் | ரூ.1,310/- |
| 3 ஆண்டுகளில் | ரூ.1,420/- |
| 3½ ஆண்டுகளில் | ரூ.1,500/- |
| 4 ஆண்டுகளில் | ரூ.1,620/- |
| 4½ ஆண்டுகளில் | ரூ.1,730/- |
| 5 ஆண்டுகளில் | ரூ.1,860/- |
| 5½ ஆண்டுகளில் | ரூ.2000/- |

1.4.1994 முதல் தமிழ்நாட்டில் செய்யப்படும் முதலீட்டிற்கு

**2%**

சிறப்பு ஊக்கத்தொகை.

தமிழ்நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு இலவச பரிசுக் கூப்பன் பெற்று, கவர்ச்சிகரமான மாருதி ஆம்னிவேன் அல்லது டிராக்டர் (இயந்திரக் கலப்பையுடன்) உட்பட 619 பரிசுகளை வெல்ல வாய்ப்பு.

மேலும் விவரங்களுக்கு
**ஆணையர்,**
சென்னை மாநகராட்சி (சி.சே.பரிவு), சென்னை-3,
தொலைபேசி: 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2.,
தொலைபேசி: 849962

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

**இயக்குநர், சிறு சேமிப்புத் துறை**
சபர் மேன்ஷன், 621, அண்ணா சாலை,
சென்னை - 600 006.
தொலைபேசி: 8251784/8251685.

DIPR/519/DIS/94

சிறு குடும்பம் செல்வக் குடும்பம்

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு



ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927





தமிழரசு
சேலம் மாவட்டத்தில்...
Licence No.TN/MS(C)/PP-23

பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்



DIPR/273

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108




## இந்த இதழில்...


காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழகத்தின் உரிமைகாக்க மாண்புமிகு முதல்வர் உண்ணாவிரதம் ... 2

உரிமை காக்கும் முதல்வர் வாழ்க! (கவிதை) ... 22

ஏழை எளியோர்க்கு மாண்புமிகு முதல்வர் உதவி ... 24

ஒரு லெட்சத்து 33 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை ... 27

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு கிராமப்புற விளையாட்டு மையம்! —மாண்புமிகு முதல்வர் உரை ... 29

தனி மனிதர்கள் நலத்தைவிட அமைப்பின் நலம் - தொழிலின் நலம் - பொது நலம் இவைகளே முக்கியம்! —மாண்புமிகு முதல்வர் உரை ... 33

காரைக்குடியில் கவியரசருக்குத் திருவிழா ... 37

கண் மருத்துவம் ... 41

நூல் நயம் ... 48



28 ஆக 1993
சென்னை - 600 008.



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

ஆடித் திங்கள் - 17

மலர்: 24 இதழ்: 3

1-8-1993

விலை: ரூ.3

# காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழகத்தின் உரிமை காக்க

# மாண்புமிகு முதல்வர் உண்ணாவிரதம்



காவிரி நீர்ச் சிக்கலில், நடுவர் மன்றம் வழங்கிய இடைக்காலத் தீர்ப்பைக் கர்நாடக அரசு உடனடியாக நடைமுறைப்படுத்த மத்திய அரசு ஆணை இடக்கோரி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள் காலவரையரையற்ற உண்ணாவிரதத்தை *18.7.93* அன்று மேற்கொண்டார்.

யாரும் எதிர்பாராத நிலையில் *18.7.'93* அன்று காலை *9.30* மணியளவில் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் அருகே வந்தமர்ந்த அவர், உண்ணாவிரத அறிவிப்பை வெளியிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் உண்ணாவிரதம் பற்றிக் கேள்விப்பட்டு, அமைச்சர் பெருமக்கள், முன்னாள் அமைச்சர் பெருமக்கள், வாரியத்தலைவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அதிகாரிகள் ஆகியோர் அங்கே வந்து கூடினர். காவல்துறையினர் கண்காணிப்புப் பணியில் கவனமாக ஈடுபட்டார்கள்.

சென்னை நகர் முழுவதும் வேகமாக இச்செய்தி பரவவே ஏராளமான ஆண்களும், பெண்களுமாக மாண்புமிகு முதல்வர் அவர்களைக் காண வெயிலையும் பொருட்படுத்தாது சாரிசாரியாக வந்து திரண்டனர்.

## செய்தியாளர் சந்திப்பு

தம்மைக் காணவந்த செய்தியாளர்களையெல்லாம் சந்தித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், தம்முடைய உண்ணாவிரதத்திற்கான காரணங்களை விளக்கிப் பின்வருமாறு தெரிவித்தார்:

"இன்று காலை *9.15* மணிக்கு இங்கே (எம்.ஜி.ஆர். நினைவிடம்) வந்தேன். தலைவர் சமாதிக்குப் போய் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினேன்; அதன் பிறகே இந்த உண்ணாவிரதத்தைத் தொடங்கியிருக்கிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினையில், நடுவர்மன்றம் வழங்கிய இடைக் காலத் தீர்ப்பைச் செயல்படுத்த வேண்டும் என்று கர்நாடக அரசுக்கு மத்திய அரசு உத்தரவிடவேண்டும் என்று நான் பலதடவை கோரிக்கை வைத்தேன். ஆனால், அதனால் எவ்விதப் பயனும் இல்லை.

இப்போது கடுமையான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. மேட்டூர் அணையில் *20* நாள் முதல் *25* நாள் வரை திறந்துவிடப் போதுமான தண்ணீர்தான் இருக்கிறது. ஆகவே, மத்திய அரசும் பிரதமரும் இவ்விஷயத்தில் தலையிட்டு உடனே காவிரி நதியில் தண்ணீர் திறந்துவிடக் கர்நாடக அரசுக்குத் தகுந்த அறிவுரை வழங்கவேண்டும்.

காவிரியில் தண்ணீர் திறந்துவிடும் வரை, நான் காலவரையற்ற தொடர் உண்ணாவிரதம் இருப்பேன். நடுவர் மன்றம் *205* டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று இடைக்காலத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

அதில், ஒவ்வொரு மாதமும் எவ்வளவு தண்ணீரைக் கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும் என்று பட்டியலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

*1991*-ஆம் ஆண்டு ஜூன் மாதம் *24*-ஆம் தேதி நாங்கள் பதவியேற்றோம்; அடுத்த நாள் *25*-ஆம் தேதி நடுவர் மன்றத் தீர்ப்புக் கிடைத்தது. இரண்டாண்டுக் காலம் ஆகியும், இன்னமும் நடுவர் மன்றத் தீர்ப்பைக் கர்நாடக அரசு அமல்படுத்தவில்லை.

நடுவர்மன்றத் தீர்ப்பின்படி, கடந்த ஜூன் மாதம் *10.16* டி.எம்.சி. தண்ணீரைக் கர்நாடக அரசு காவிரி நதியில் திறந்துவிட்டிருக்க வேண்டும். ஆனால், *4.82* டி.எம்.சி. தண்ணீர்தான் வந்தது.



இந்த மாதம் (ஜூலை) *42.96* டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட்டிருக்க வேண்டும். ஆனால், இதுவரை வந்தது *7.40* டி.எம்.சி. தண்ணீர்தான். இந்தத் தண்ணீரையும் கர்நாடக அரசு திறந்துவிடவில்லை; இது, மேட்டூர் அணைக்கட்டுப் பகுதியில் பெய்த மழையின் காரணமாக வந்த தண்ணீராகும்.

தண்ணீர் பெறுவதற்கு எல்லா வழிமுறைகளையும் நான் கடைப்பிடித்துவிட்டேன். நடுவர் மன்றத் தீர்ப்பைத் நிறைவேற்றக்கோரி மத்திய அரசுக்குத் தீர்மானம் போட்டு அனுப்பினோம்.

சட்டமன்றத்திலும் தீர்மானம் போட்டுப் பிரதமருக்கு அனுப்பி வைத்தோம். இதுதவிர, அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் குழுவை நானே தலைமை தாங்கி டெல்லிக்கு அழைத்துச் சென்று பிரதமரிடம் மனுக்கொடுத்தேன்.

எல்லா வாதங்களையும் எடுத்துரைத்து ஆகிவிட்டது; நான் தனியாகவும் பிரதமரைப் பலமுறை சந்தித்து இது தொடர்பாக வற்புறுத்திப் பேசியிருக்கிறேன். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

*30.3.'93* அன்று, மத்திய அமைச்சர் சுக்லாவுக்கு இது தொடர்பாக நான் கடிதம் எழுதினேன். இதுவரை எந்தப் பதிலும் வரவில்லை.

*11.6.'93* அன்று பிரதமருக்கு நானே மீண்டும் இன்னொரு கடிதம்



எழுதினேன்; காவிரி நதியில் தண்ணீர் இல்லையென்றும், இதனால் குறுவை, சம்பா பயிர்கள் பாதிக்கப்படும் என்றும் அதில் குறிப்பிட்டிருந்தேன்; அந்த கடிதத்திற்கும் பதில் இல்லை.

கடந்த 3.7.'93 அன்று, நமது பொதுப்பணித்துறை அமைச்சர் கண்ணப்பனும் மத்திய அமைச்சர் சுக்லாவுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். ஏதோ அதிர்ஷ்டவசமாக 91-92-ஆம் ஆண்டில், அதிக அளவு மழை பெய்த காரணமாகப் பிரச்னை இல்லாதிருந்தது.

குறுவைப் பயிரைக் காப்பாற்ற 30,000 கனஅடி தண்ணீர் திறந்து விட வேண்டும்; ஆனால், இப்போது 15,000 கனஅடி தண்ணீர் தான் திறந்து விடுகிறோம்.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் எனது கடைசி முயற்சியாகும்; இதைத் தவிர வேறு வழி எனக்குத் தெரியவில்லை''.

## வினாக்கள் - விளக்கங்கள்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவ்வாறு அறிவித்ததைத் தொடர்ந்து, செய்தியாளர்கள் தொடுத்த வினாக்களும் அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த விளக்கங்களும் வருமாறு:

**வினா:** இரவு பகலாக உண்ணா விரதம் இருப்பீர்களா?

**விளக்கம்:** கோரிக்கை நிறைவேறும் வரை, காலவரையற்ற வகையில் இரவு பகலாக உண்ணாவிரதம் இருப்பேன்.

**வினா:** மத்திய அரசு உத்தர விட்டால், தண்ணீர் திறந்துவிடக் கர்நாடக அணையில் தண்ணீர் இருக்கிறதா?

**விளக்கம்:** கர்நாடக அணையில் போதுமான அளவு தண்ணீர் இருக்கிறது.

**வினா:** உங்களுடன் அமைச்சர்களும் உண்ணாவிரதம் இருப்பார்களா?

**விளக்கம்:** நான்தான் உண்ணாவிரதம் இருக்கிறேன். ஆனால், அமைச்சர்களும் என்னோடு உண்ணாவிரதம் இருக்கப் பிரியப்படுகிறார்கள். எல்லோரும் உண்ணாவிரதம் இருந்தால், நிர்வாக வேலைகள் நடக்கவேண்டும் அல்லவா? எனவே அமைச்சர்களை உண்ணாவிரதம் இருக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டேன்.

**வினா:** அனைத்துக்கட்சி எம்.பிக்களுடன் பிரதமரைச் சந்திக்கப் போவதாக அறிவிக்கப்பட்டு...

**விளக்கம்:** ஏற்கெனவே கட்சி எம்.பிக்களுடன் பிரதமரைச் சந்தித்து மனுக் கொடுத்தாகிவிட்டதே!

**வினா:** மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறீர்களா?

**விளக்கம்:** நல்லதே நடக்கும்; நியாயம் கிடைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறேன். வேறு வழியில்லாமல்தான் இந்தக் கடைசி முயற்சியை நான் மேற்கொண்டிருக்கிறேன்.

**வினா:** உங்கள் உண்ணாவிரதத்திற்கு மற்ற கட்சியினர் ஆதரவு தெரிவித்திருக்கிறார்களா?

**விளக்கம்:** இது அ.இ.அ.தி.மு.க. நடத்தும் உண்ணாவிரதம் அல்ல; தமிழக மக்களின் ஜீவாதாரப் பிரச்சினை என்ற ரீதியில் முதல்வர் என்ற முறையில், அரசின் சார்பாக நான் உண்ணாவிரதம் இருக்கிறேன். மேலும், காவிரி நீர்ப்பிரச்சினை விஷயத்தில் தமிழகத்தின் எல்லாக் கட்சிகளுக்கும் இரண்டாவது கருத்து இருப்பதாகத் தெரியவில்லை.

நோன்பிருந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள்- அவ்வப்போது ஆங்காங்கே நின்றிருந்த அரசு தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்டராமன், இ.ஆ.ப., போன்ற உயர் அதிகாரிகளை அருகழைத்து ஆலோசனை நடத்தினார்; அரசுக் கோப்புகளைப் பார்த்தார்.

தம் நோக்கம் வெற்றிபெற வாழ்த்தி எழுச்சி முழக்கமிட்ட எல்லோரையும் பார்த்து, முறுவல் முகத்தினராய்க் கையசைத்தார்; அந்த நிலையிலும் தம்மைக் காண வந்த மக்கள் கொடுத்த விண்ணப்பங்களைக் கனிவோடு பெற்றுக் கொண்டு, கவனிப்பதாக வாக்குறுதியளித்தார்.

## மீண்டும் செய்தியாளர் சந்திப்பு

மாலை 6.25 மணியளவில் மாண்புமிகு முதல்வர் அவர்களை மறுபடியும் செய்தியாளர்கள் சந்தித்தார்கள். அப்போது அவர்கள் கேட்ட வினாக்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதிலளித்தார்.

**வினா:** கர்நாடக முதலமைச்சர் வீரப்ப மொய்லி சென்னையில் உங்களைச் சந்தித்துப் பேசிய பிறகு, தமிழகத்துடன் சுமுகமான உறவு இருக்கும் என்று சொன்னாரே?

**விளக்கம்:** உண்மையில் தமிழகத்துடன் சுமுகமான உறவு இருக்குமானால் தமிழகத்திற்குத் தண்ணீர் திறந்து விட்டிருக்கலாம் அல்லவா?

**வினா:** நடுவர் மன்றத் தீர்ப்பை அமல்படுத்தாத கர்நாடக அரசை 'டிஸ்மிஸ்' செய்யச் சொல்லி மத்திய அரசை வற்புறுத்துவீர்களா?

**விளக்கம்:** அப்படி நான் வற்புறுத்தமாட்டேன்; இப்போதுள்ள பிரச்சினை நடுவர் மன்றத் தீர்ப்பின் படி காவிரியில் தண்ணீர் திறந்து விடவேண்டும் என்பதுதான்.

**வினா:** மத்திய அரசு செவி சாய்க்காமலிருந்தால், பாராளுமன்றத்தில் வரவிருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பீர்களா?

**விளக்கம்:** இப்போதுள்ள பிரச்சினை அதுவல்ல; அரசியல் சட்டப்படி நடுவர்மன்றத் தீர்ப்பை நிறைவேற்றும் கடமையைச் செய்ய மத்திய அரசு தவறிவிட்டது. எனக்குள்ள கடைசி 'பிரம்மாஸ்திரமாக' இப்போராட்டத்தைத் துவக்கியிருக்கிறேன்.

**வினா:** காங்கிரஸ் அல்லாத மாநிலம் தமிழகம் என்பதால் மத்திய அரசு கவனிக்காமல் பேசாதிருக்கிறதா?

**விளக்கம்:** அதற்கு நான் காரணம் கற்பிக்க விரும்பவில்லை; மத்திய அரசு கடமையாற்றத் தவறிவிட்டது.

**வினா:** இங்கே நீங்கள் உண்ணாவிரதம் இருப்பதால் பாதுகாப்புப் பிரச்சினை ஏற்பட்டதா?

**விளக்கம்:** போலீசார் இருக்கிறார்கள்; பார்த்துக் கொள்ளுவார்கள்.

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்கமளித்தார்.

## ஆளுநர் வருகை

புதுவையில் இருந்த மேதகு தமிழக ஆளுநர் திரு. சென்னா ரெட்டி அவர்கள், தமது நிகழ்ச்சிகளை ரத்து செய்துவிட்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உண்ணாவிரதமிருக்கும் செய்தியறிந்து உடனே சென்னை விரைந்தார்.

மாலை 7.30 மணியளவில் உண்ணாவிரத மேடைக்கு வந்து சேர்ந்தார் ஆளுநர். மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் ஒரு மணி நேரம் பேச்சு வார்த்தை நடத்தினார்.

''காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை அமல்படுத்தும்படி, அரசியல் சட்டத்தின் 256-வது விதியின்கீழ், கர்நாடக அரசுக்கு பிரதமர் நரசிம்ம ராவ் அவர்கள் உத்தரவிடவேண்டும்; அதுவரை நான் எனது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடமாட்டேன்''- என்று அப்போது மேதகு ஆளுநரிடம் மாண்புமிகு முதல்வர் தெரிவித்தார்.

முதல்வர் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு வந்த ஆளுநரைச் செய்தியாளர்கள் சந்தித்தார்கள். அப்போது அவர், ''இதுபற்றி நான் பிரதமரிடம் பேசினேன்; முதலமைச்சர் உண்ணாவிரதத்தைத்





தொடரவேண்டாம் என்று சொல்லச் சொன்னார். அதற்கு இவர் மறுத்துவிட்டார்; இரண்டாண்டுக் காலமாக இப்பிரச்சினையில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்று சொன்னார். இதுபற்றி மீண்டும் நான் பிரதமரிடம் பேசுவேன்; இந்தப் பிரச்சினையைச் சுமுகமாக முடிக்க என் முயற்சி தொடரும்'' என்றார்.

### பிரதமரின் நடவடிக்கை:

மாண்புமிகு முதல்வர் அவர்களின் உண்ணாவிரதம் பற்றிய செய்தியறிந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் சில வேகமான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

மத்திய நீர்க்கமிஷன் தலைவரை அழைத்து, உடனடியாகப் பெங்களூருக்கும் சென்னைக்கும் சென்று நிலைமையை நேரில் பார்த்து தம்மிடம் அறிக்கை அளிக்குமாறு உத்தரவிட்டார்.

### அலுவலகப் பணிகள்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உண்ணாவிரதமிருந்த போதும் தம் அலுவலகப் பணிகளைக் கவனிக்க அவர் தவறவில்லை.

### பொதுமக்கள் அமைதிகாக்க முதல்வர் வேண்டுகோள்

முதல்வரின் உண்ணா நோன்பைக் கேள்விப்பட்டு மக்கள் உணர்ச்சி வசப்பட்டதால், மாநிலத்தில் அன்றாட வாழ்க்கையும் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டதை அறிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொது மக்களுக்கு எவ்வித துயரும் ஏற்படக்கூடாது என்பதற்காக அமைதி காக்குமாறு வேண்டி ஓர் அறிக்கையை வெளியிட்டார்கள்.

'காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில், காவிரி நடுவர் நீதிமன்றத்தின் ஆணையை உடன் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, இன்று (18.7.1993) காலை 9.15 மணி முதல் நான் ஆரம்பித்துள்ள கால வரையற்ற உண்ணாவிரதத்தை அறிந்த பொதுமக்கள் அனைவரும் மகத்தான ஆதரவு நல்கியதற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

பொதுமக்கள் எனது உண்ணாவிரதத்தை ஆதரித்துச் சாலை மறியலில் ஈடுபடுவதாக எனக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. மக்களின் இயல்பான அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படக்கூடாது என்ற எண்ணத்தாலும்தான் என்னை நானே வருத்திக் கொண்டு இந்தக் கால வரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகிறேன்.

எத்தனைத் துன்பங்கள் எனக்கு ஏற்பட்டாலும் தாங்கிக் கொள்வேன். ஆனால், என் அன்பிற்குரிய தமிழக மக்களுக்கு ஏற்படும் சிறு துயரத்தைக்கூட என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது.

எனவே, என்மீது அளவுகடந்த அன்பைக் காட்டிவரும் எனது அன்பிற்குரிய தமிழக மக்கள் அனைவரும், இந்த உணர்ச்சிபூர்வமான நேரத்தில் அமைதிகாக்க வேண்டும் என்றும், இயல்பான வாழ்க்கைக்குக் குந்தகம் விளைவிக்கும் எந்தவிதமான செயல்களிலும் ஈடுபடவேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலத்தின் உயிர்நாடியான ஒரு பிரச்சினையை முன்வைத்து, முதலமைச்சர் என்ற முறையில் நான் தனியே தொடங்கி, நடத்தி வருகின்ற இந்த அறப்போராட்டம் வெற்றி பெறப் பொதுமக்கள் அனைவரும் தங்களுடைய பேராதரவைத் தரவேண்டும் என்றும் அமைதி காக்க வேண்டும் என்றும், மீண்டும் ஒருமுறை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

—இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.



### மருத்துவப் பரிசோதனை

காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு-முதல்நாள், மருத்துவர்கள் மருத்துவப் பரிசோதனை நடத்தினார்கள்.

## இரண்டாம் நாள் 19.7.1993

நேற்றுக் காலையிலிருந்து உண்ணாவிரதமிருந்த களைப்பு மிகுதியால், இரவு 12.30 மணிக்கு மேல்தான் சிறிது கண்ணயர்ந்தார் மாண்புமிகு முதல்வர்.

காவல்துறை உயர் அதிகாரிகளும், மருத்துவக் குழுவினரும் மட்டுமல்ல; காணவந்து அங்கே கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களும் கண் துஞ்சாது, பசிநோக்காது அங்கே இரவெல்லாம் காத்திருந்தார்கள்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற-நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடைய நிலைமையும்கூட அதுதான்.

இரண்டாவது நாளான இன்று-கதிரவன் எழுமுன் விழித்தெழுந்து மீண்டும் உண்ணாவிரத மேடையிலே அதிகாலை 6.45 மணிக்கு வந்தமர்ந்தார் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்.

அவருடைய முகம் பார்த்ததும் திரண்டிருந்த மக்களெல்லாம் எழுச்சிமயமாகப் ''புரட்சித்தலைவி வாழ்க'', ''உண்ணாவிரதம் வெல்க'', ''மத்திய அரசே - காவிரியில் தண்ணீர் திறந்துவிடு'' என்பனபோன்ற முழக்கங்களை எழுப்பினார்கள்.

முறுவல் முகத்தோடு அவர்களை நோக்கிக் கையசைத்தார் மாண்புமிகு முதல்வர் அவர்கள். அதன்பின் - அன்று காலை செய்தித் தாள்களைப் படித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், காவிரியில் தண்ணீர் விடக்கோரி மேற்கொண்ட உண்ணாவிரதம் பற்றிய விவரம் செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் மூலம் தமிழக மக்களுக்கெல்லாம் எட்டியது. அவர்களெல்லாம், கிடைத்த வண்டி வாகனங்கள் மூலமாகச் சென்னை நோக்கி அணிஅணியாக வரலாயினர்.

### மருத்துவ அறிக்கை

பிற்பகலில் - மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளர், செய்தியாளர்களிடம், மாண்புமிகு முதல்வர் அவர்களின் உடல் நிலை பற்றித் தெரிவித்ததாவது:-

''இன்று காலை 11 மணிக்கு மருத்துவக் குழுவினர் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உடல்நலம் பற்றிப் பரிசோதித்தார்கள். அவருக்கு இரத்த அழுத்தம் குறைவாக இருப்பதாகத் தெரிவித்தார்கள்; நாடித் துடிப்பு வழக்கத்தைவிட அதிகமாயிருக்கிறது; இரத்தத்தில, சர்க்கரையின் அளவு நேற்றைய தினத்தைவிடக் குறைந்து விட்டது; முதல்வர் அவர்கள் மேலும் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தால் அவரது உடல்நிலை கவலையளிக்கக்கூடும் என்று மருத்துவர்கள் தெரிவித்தார்கள்.''

### காணவந்தவர்கள் கணக்கற்றோர்

'பிரதமரிடமிருந்து திட்டவட்டமான அறிவிப்பு வருகிறவரை உண்ணாவிரதத்தைக் கைவிடப் போவதில்லை' என்ற குறிக்கோளில் மிகவும் உறுதியோடு காணப்பட்டார் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்.

ஏராளமாகக் கூடியிருந்த தாய்மார்கள் - கொளுத்தும் வெயிலையும் பாராமல், கொட்டும் வியர்





வையையும் பொருட்படுத்தாமல் உண்ணாவிரதத்துக்கு ஆதரவாக முழங்கிக் கொண்டே இருந்தார்கள்.

உண்ணாவிரதத்தின் இரண்டாவது நாளான இன்று - அரசியல் பிரமுகர்கள், திரைப்படத் தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், முன்னணி நட்சத்திரங்கள், திரைப்படக் கவிஞர்கள்; இசையமைப்பாளர்கள், பின்னணிப் பாடகர்கள் தொழில் நுட்பக் கலைஞர்கள், திரையரங்க அதிபர்கள் ஆகிய எண்ணற்றோர் மாண்புமிகு முதல்வர் அவர்களை நேரில் வந்து பார்த்து, உண்ணாவிரதத்தின் குறிக்கோள் வெற்றி பெற வாழ்த்தினார்கள்.

## முன்னாள் குடியரசுத் தலைவர்

உண்ணாவிரதத்தின் இரண்டாவது நாளான இன்று - முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன், முன்னாள் மகாராட்டிர ஆளுநர் திரு சி. சுப்பிரமணியம் ஆகியோர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த இடத்திற்கு வருகை தந்தார்கள்.

மிகுந்த களைப்பின் இடையிலும் - அவர்களோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிரமத்தோடு பேசிக்கொண்டிருந்தார்கள்.

மேலும் பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள், சமயப் பெரியோர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்கள், தொழிலதிபர்கள் மற்றும் பலதுறைப் பிரமுகர்கள் முதல்வரைக் கண்டு வாழ்த்துத் தெரிவித்தவண்ணம் இருந்தனர்.

காவிரியில் தண்ணீர் திறந்து விடக்கோரி உண்ணாவிரதமிருக்கும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு முழுமையான ஆதரவு தெரிவிக்கும் வகையில், தமிழ்நாடு திரையரங்க உரிமையாளர் சங்கத்தார் எடுத்தமுடிவின்படி ஒரு நாள் படக்காட்சிகள் முழுவதும் ரத்து செய்யப்பட்டன.

### மாணவருக்கு உதவி

இன்றையதினம் ஏராளமான மகளிர் அணியைச் சேர்ந்த பெண்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வரிசை வரிசையாகச் சென்று பொன்னாடை, கைத்தறியாடைகளை அணிவித்து ஆதரவு தெரிவித்தார்கள்.

அப்போது - சென்னை, புரசைவாக்கத்தைச், சேர்ந்த ஒரு பெண்மணி, தன் மகனுக்கு பி.எஸ்சி., படிக்க இடம் கிடைத்திருப்பதாகவும், ஆனால் கல்லூரியில் சேர்க்க முடியாத வறிய நிலை இருப்பதாகவும் தெரிவித்தார்.

"அதற்கு எவ்வளவு பணம் தேவைப்படும்?" என்று கேட்டறிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் - ரூ.1,700-ஐ தம் சொந்தப் பணத்திலிருந்து கொடுத்து உதவினார்.

### பெண்ணுக்கு உதவி

சென்னை-வண்ணாரப்பேட்டை பகுதியிலே திருமதி வசந்தா என்பவர், தமது வறிய வாழ்வு குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தெரிவித்து உதவி கோரினார்.

அவருக்குத் தம் சொந்தப் பணத்திலிருந்து ஆயிரம் ரூபாய் கொடுத்து ஆறுதல் கூறினார் மாண்புமிகு முதல்வர்.

'பொதுமக்களுக்குத் தினையளவு துன்பமும் ஏற்படக் கூடாது' முதல்வர் அவர்கள் வேண்டுகோள்

(19.3.93) மாலையில் இன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதன் முழுவிவரம் வருமாறு:

'என் உயிரினும் மேலான தமிழகப் பெருமக்களுக்கு வேண்டுகோள்.

காவிரி நதிநீர்ப் பங்கீடு பிரச்சினையில் இரண்டாண்டுக் காலத்திற்கு முன்பு நடுவர் மன்றத்தில் நாம் வாதாடிப் பெற்ற இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்தியப் பிரதமர் அவர்களிடம்நேரில் பலமுறை வற்புறுத்தியும், இதுவரை நடக்காத காரணத்தால் 18.7.1993 முதல் காலவரையற்ற உண்ணாவிரதத்தை நான் மேற்கொண்டுள்ளேன்.

இந்த இரண்டு நாட்களாக அரசியல் தலைவர்களும், கலையுலக உடன்பிறப்புகளும் முக்கியப் பிரமுகர்களும் நேரில் வந்த எனக்கு வாழ்த்துக் கூறி ஊக்கம் அளித்துள்ளார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக என்மீது அளவற்ற பாசம் வைத்துள்ள தமிழக மக்கள் நேரில்வந்து கண்கலங்க வாழ்த்துக் கூறியதோடு, இரவு பகலாக உண்ணாவிரதப் பந்தலில் அவர்கள் அமர்ந்திருப்பது என் நெஞ்சத்தை நெகிழ வைக்கிறது.

மேற்கண்ட அனைவருக்கும் என் இதயத்தின் அடித்தளத்திலிருந்து பொங்கிவரும் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.



பிரச்சினையைத் தீர்க்க எனக்கு மலையளவு துன்பம் வந்தாலும் தாங்கிக் கொள்ளத் தயாராக உள்ளேன். ஆனால், பொதுமக்களுக்கு இதனால் எள் அளவு இடையூறு ஏற்பட்டாலும் என்னால் தாங்கிக் கொள்ள இயலாது. பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாமல் அமைதி காக்க வேண்டும் என்று, நேற்று நான் அனைவருக்கும் வேண்டுகோள் விட்டிருந்தும், அடக்கமுடியாத உணர்ச்சியின் காரணமாக மறியல் போன்ற செயல்களில் பொதுமக்கள் ஈடுபட்டு உள்ளதாக எனக்குத் தகவல் வந்துள்ளது.

நீங்கள் என்மீது காட்டும் அன்பை இமயம் அளவு மதிக்கின்றேன். என்றாலும், அதனால் மற்றவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளை எண்ணித் தாங்கமுடியாத துயரம் அடைகிறேன்.

மற்றவர்களுக்கு இடையூறில்லாமல் நீங்கள் பார்த்துக்கொண்டால் உண்ணாவிரதத்தால் எனக்கு ஏற்பட்டுள்ள சோர்வும் ஓடோடிவிடும்.

மருத்துவர்கள், இதற்குமேல் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தால் என் உடல்நிலை மோசமாகப் போகும் என்று கூறினாலும், தமிழகத்தின் உரிமையைப் பெற வேண்டும் என்று நினைக்கும்போது என் உள்ளத்தில் அசைக்கமுடியாத உறுதியும் தெம்பும் ஏற்படுகிறது. இந்தப் பிரச்சினை தீர எத்தனை நாள் ஆனாலும், அதுவரை உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளுவேன்.

தமிழகத்தின் ஜீவாதார உரிமையைப் பெற என் உயிரையும் விலையாகக் கொடுக்கத் தயார். ஆனால் என் தமிழக மக்களுக்குத் தினையளவுத் துன்பமும் ஏற்படக் கூடாது என்பதில் திண்ணமாக உள்ளேன்.

எனவே, நீங்கள் என்மீது வைத்துள்ள அன்பின் அடையாளமாக அமைதி காத்திட வேண்டுகிறேன். இந்த நிமிடம் முதல் ஒரு சிறு சம்பவம்கூட ஏற்படாமல் அமைதி காக்க என் அன்பு வேண்டுகோளாக இதன்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள் அன்பு நிச்சயம் நமக்கு வெற்றியைத் தேடித்தரும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எனக்கு இருக்கிறது.'

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### மருத்துவ அறிக்கை

இன்று மாலை 5.30 மணியளவில் ஒரு மருத்துவ அறிக்கை மருத்துவக் குழுவினரால் வெளியிடப்பட்டது:

'மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வழக்கமான பரிசோதனையும், மற்ற மருத்துவப் பரிசோதனையும் செய்யப்பட்டது. தற்போது உண்ணாவிரதமிருக்கும் முதல் அமைச்சரின் உடல்கூறு அமைப்பு, மிகச் சிரமத்துடன் சமநிலையில் இருப்பதாக இந்தப் பரிசோதனைகளில் இருந்து தெரியவருகிறது.

முதலமைச்சர் அவர்கள் இப்போது மிகச் சோர்வாகவும் களைப்பாகவும் இருக்கிறார். உண்ணாவிரதம் நீடித்தால், முதல்வரின் உடல்நிலை மேலும் பாதிக்கப்படும் என்று டாக்டர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

- என்று அந்த மருத்துவ அறிக்கை அறிவித்தது.

அங்கே முகாமிட்டிருந்த மருத்துவக் குழுவில் - பல்வேறு துறைகளைச் சேர்ந்த டாக்டர்கள், செவிலியர்கள் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

### வரிசையுற வந்த மக்கள்

உண்ணாவிரதமிருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கண்டு வாழ்த்த வந்த மக்கள் கூட்டம், கட்டுப்படுத்த முடியாத அளவில் பெருங்கடலாயிற்று.

எனவே, காவல்துறையினர் அவர்களை வரிசையாகச் சென்று முதல்வர் அவர்களைக் காண வகை செய்தார்கள். எதிரே அமர்ந்திருந்த மக்கள் கூட்டம் தவிர - இந்த 'கியூ'வில் மட்டும் சுமார் ஒரு மைல் தூரத்திற்கு மக்கள் அணிவகுத்து, அமைதியாக வந்ததைக் காணமுடிந்தது. முதியவர்களும், இடுப்பில் குழந்தையோடு பல தாய்மார்களும் அக் கூட்டத்திலிருந்தனர்; பலர், விழிநீர் பெருக்கிய வண்ணம் வந்து கொண்டிருந்தார்கள்.

**மக்கள் மறியலும் முதல்வர் வேண்டுகோளும்**

தமிழகத்தின் நலத்திற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் தம்மையே வருத்திக் கொண்டு உண்ணாவிரதமிருந்ததால் - தமிழ் நாட்டு மக்கள் கொந்தளிப்படைந்தனர். இதன் காரணமாகப் பல இடங்களில் பஸ் மறியல் - இரயில் நிறுத்தம் - விமானதள மறியல் - கடையடைப்புப் போன்ற சம்பவங்கள் நிகழ்ந்தன.



இவ்வாறான நிகழ்ச்சிகளால், பொதுமக்களின் அவதிநிலையறிந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மிகுந்த மனவேதனையுற்றார். உண்ணாவிரதம் இருந்த நிலைமையிலும் - 'மக்கள் நலம் காக்கும் உத்தரவுகளை அவ்வப்போது பிறப்பித்தார்.

'தமிழகத்தில் உள்ள எல்லாப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் உடனடியாக ஓட்டப்பட வேண்டும்; இரயில் போக்குவரத்துகள் பாதிக்கப்படக்கூடாது; கடைகளை யாரும் மூடக்கூடாது; எந்த வகையிலும் மக்களின் மாமூல் வாழ்க்கை பாதிக்கப்படக்கூடாது; அவர்களின் அன்றாட வாழ்வில் எவ்வித இடையூறும் ஏற்படக் கூடாது; காவல்துறையினர் தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்; இந்த வகையில் எல்லாத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்' என்று அவர் மிக உருக்கமாக வேண்டுகோள் விடுத்தார்.

அதன்படி, இன்று (19.7.93) மாலை முதலே தமிழகமெங்கும் சகஜ வாழ்க்கை திரும்பியதுகேட்டு, அவர் மகிழ்ந்தார்.

**பிரதமருடன் எம்.பி.க்கள் சந்திப்பு**

புதுடெல்லியில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களை - அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்றக் குழுவினர் திரு ஜி. சுவாமிநாதன் தலைமையில் அன்று (19.7.93) சந்தித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உண்ணாவிரதம் பற்றிப் பிரதமரிடம் எடுத்துக்கூறிய அவர்கள் - முதல்வரின் கோரிக்கையை ஏற்றுக் காவிரியில் தண்ணீர் திறந்துவிட ஏற்பாடு செய்யுமாறு பிரதமரை வற்புறுத்தினார்கள்.

மத்திய நதிநீர்க் கமிஷன் தலைவர் திரு எம்.எஸ். ரெட்டி - காவிரிப் பிரச்சினை பற்றிய நிலைமையை நேரில் கண்டறியப் பெங்களூருக்கும், சென்னைக்கும் சென்றிருப்பதாகவும், அவர் திரும்பி வந்து அறிக்கை அளித்தபின் தக்க நடவடிக்கை உடனே எடுக்கப்படும் என்றும், பிரதமர், அவர்களிடம் தெரிவித்தார்.

காவிரிப் பிரச்சினை பற்றி உயர்நிலைக் குழுக்கூட்டம் கூட்டியிருப்பதாகவும், அப்போது அவர் தெரிவித்தார்.

ரெய்ப்பூர் சென்றுள்ள, மாண்புமிகு மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு வி.சி. சுக்லா, ஜப்பான் சென்றிருக்கும் நீர்வளத் துறைச் செயலாளர் திரு சி.டி.தத்தே ஆகியோரையும் உடனே டில்லிக்குத் திரும்புமாறு பிரதமர் அழைத்திருப்பதாகவும் டெல்லியில் மத்திய அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



**தீக்குளிப்பும் உதவியும்**

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதைப் பொறுத்திட இயலாமல் சேலம் மாவட்டத் தாய்மார்கள் இருவர் தீக்குளிக்க முயன்று படுகாயமுற்றதாகச் செய்தி வந்தது.

இது குறித்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்ட ஓர் அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததாவது:-

''மாநிலத்தின் உயிர்நாடியான ஒரு முக்கியமான பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற காரணத்தினால்தான், நான் தனியே இந்தக் காலவரையற்ற உண்ணாவிரத அறப்போராட்டத்தைத் தொடங்கிப் பல இன்னல்களுக்கும், இடர்பாடுகளுக்கும் இடையே தொடர்ந்து நடத்தி வருகின்றேன்.



தமிழக மக்கள் அனைவரையும் பாதித்துள்ள இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென என்னை நானே வருத்திக்கொண்டு இந்த அறப்போராட்டத்தை நடத்தி வருகிறேன். எனது அன்பிற்குரிய தமிழக மக்களுக்கு எந்தவிதச் சிறிய இடர்ப்பாடோ, துன்பமோ ஏற்படக் கூடாது என்பதோடு இந்த அறப் போராட்டத்தால் மற்ற எவரும் பாதிக்கப்படக் கூடாது என்பதும் தான் எனது அவா.

சேலம் மாவட்டம் அன்னதானப் பட்டியைச் சேர்ந்த வயலெட் மற்றும் பராசக்தி ஆகிய இரண்டு பெண் மணிகளும் என்மீது கொண்ட அளவுகடந்த பாசத்தினால், நான் மேற்கொண்டிருக்கும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தீக்குளித்துள்ளதாக எனக்குச் செய்தி கிடைத்துள்ளது.

என்மீது கொண்ட அன்பினால் இவர்கள் இருவரும் தங்களை வருத்திக் கொண்ட செய்தியை அறிந்து மிகுந்த வேதனையும் துயரமும் அடைந்தேன்.

காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு காண, ஒட்டு மொத்தமாகத் தமிழக மக்கள் அனைவரின் சார்பாக என்னை நானே வருத்திக்கொண்டிருக்கும்போது, தங்கள் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் எந்தவிதமான செயல்களிலும் எனது அன்பிற்குரிய சகோதர சகோதரிகள் ஈடுபடக் கூடாது என்று மிகுந்த பாசத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

தீக்குளித்த அந்த இரண்டு சகோதரிகளுக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், தலா 50,000 ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். மேலும் அந்தச் சகோதரிகளுக்கு வேண்டிய நல்ல மருத்துவச் சிகிச்சை அளிக்க ஏற்பாடுகள் செய்துள்ளேன். அந்த மருத்துவச் சிகிச்சைக்காகும் முழுச் செலவையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமே ஏற்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனதருமைத் தமிழக மக்களே! உங்களுக்காக எந்தத் துயரத்தையும் தாங்கிக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன்; நீங்கள் யாரும் உங்களை வருத்திக்கொள்ளும் எவ்விதச் செயலிலும் ஈடுபடவேண்டாம் என்று மிகுந்த பாசத்துடன் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.'

- அந்த அறிக்கை இவ்வாறு அமைந்திருந்தது.

**அதிகக் களைப்பு**

இரண்டாவது நாளாக உண்ணாவிரதம் இருந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மிகுந்த களைப்புற்றவராகக் காணப்பட்டார்.

## மூன்றாம் நாள் 20.7.93

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் உண்ணாவிரதம் மூன்றாவது நாளாகத் தொடர்ந்தது.

8.30 மணியளவில் மருத்துவக் குழுவினர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடல்நலத்தைப் பரிசோதித்தார்கள்.

**மருத்துவ அறிக்கை**

மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலாளர், மாண்புமிகு முதல்வர் அவர்களின் உடல்நிலை பற்றி இவ்வாறு தெரிவித்தார்:

''மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உடலில் நீர்ச்சத்து, சர்க்கரைச்சத்து வேகமாகக் குறைந்து வருகிறது. அவர் மேலும் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தால், உடல் நிலை சீர்கேடு அடையும்; அச்சம் ஊட்டும் வகையில் உடல்நிலை மோசமடையும் என்று அவர்களைப் பரிசோதித்த மருத்துவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள்- உண்ணாவிர்த மேடையில் இருந்தவாறே மற்ற அமைச்சர்களோடு சிறிது நேரம் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தினார். அவர் குரல் மிகவும் பலவீனமாகத் தொனித்தது.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிடவேண்டினர். அவரோ,

அதற்கு அடியோடு மறுத்துவிட்டார். அதன்பிறகு அவர் படுக்கையில் சாய்ந்தார்.

**ஆளுநர் சந்திப்பு**

மேதகு தமிழக ஆளுநர் திரு சென்னாரெட்டி அவர்கள், தம் துணைவி சாவித்திரியாருடன் இரண்டாவது முறையாக மாண்புமிகு முதல்வர் அவர்களை உண்ணாவிரத மேடைக்கே வந்து சந்தித்தார். மிகுந்த களைப்பால் சோர்ந்திருந்த முதல்வரிடம் சிறிதுநேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு வந்த அவரைச் செய்தியாளர்கள் சந்தித்தனர்; அப்போது, மேதகு ஆளுநர் அவர்கள் தெரிவித்ததாவது;

**கேள்வி:** முதலமைச்சரின் உடல் நிலை கவலையளிப்பதாக உள்ளது என்று டாக்டர்கள் கூறியிருக் கிறார்களே?

**பதில்:** உண்மையிலேயே அவருடைய உடல்நிலை கவலையளிப் பதாகத்தான் இருக்கிறது.

**பிரதமர் அனுப்பிய குழு**

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் காவிரி நீரைக் கர்நாடக அரசு திறந்துவிடவேண்டும் என்ற கோரிக்கையின் பேரில் உண்ணா விரதம் மேற்கொண்டு அன்றோடு (20.7.93) மூன்று நாட்களாகியது.

திரு வி. சுந்தரம், வேளாண்மைத் துறைத் தனிச் செயலாளர் - திரு ஆர்.சி. பாண்டா, வேளாண்மைத் துறை இயக்குநர் திரு என். கோவிந்தன், காவிரி தொழில் நுட்பக் குழுத் தலைவர் திரு ஏ. மோகன கிருஷ்ணன், காவிரி நீர் ஆலோசனைக் குழுத் தலைவர் திரு ஆர். திருமலை, பொதுப்பணித் துறை (நீர்ப்பாசனம்) தலைமைப் பொறியாளர் திரு கே. போண்டி, ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

அவர்களோடு - மத்திய நீர்வளக் கமிஷன் தலைவர் திரு எம்.எஸ். ரெட்டி 2 மணி நேரம் ஆலோசனை நடத்தினார்; பின்னர் - அரசு



''முதலமைச்சர் அவர்களின் உடல்நிலைபற்றி விசாரிக்கவே நான் வந்தேன்; அவரது உடல்நிலை எங்கள் எல்லோருக்கும் கவலை யளிப்பதாகவே இருக்கிறது. நான் முதலமைச்சரிடம் குறிப்பிட்ட ஒரு ஆலோசனை கூறியிருக்கிறேன். அது பற்றிய அவர் கருத்தை அறிந்து அதன்மீது மேல் நடவடிக்கை எடுப்பேன்''.

**கேள்வி:** எதுபோன்ற ஆலோசனை தெரிவித்தீர்கள்?

**பதில்:** நான் தெரிவித்தது... இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய ஆலோசனையாகும். உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு நான் விடுத்த வேண்டுகோள் அப்படியே இருக்கிறது.

இதுபற்றிப் பிரதமரிடம் அ.இ. அ.தி.மு.க. நாடாளுமன்றக் குழுவினர் சென்றுமுறையிட்டுக் கொண்டார்கள். அதன்பேரில், பிரதமர் அவர்களால், அனுப்பப்பட்ட மத்திய நீர்வளக் கமிஷன் தலைவர் திரு எம்.எஸ். ரெட்டி, பெங்களூர் சென்று பேச்சுவார்த்தை நடத்தி விட்டு, அன்று காலை 10.30 மணியளவில் சென்னை வந்து சேர்ந்தார்.

தமிழ்நாடு அரசு உயர் அதிகாரிகளுடன், தலைமைச் செயலக மாநாட்டு அரங்கில் அவர் பேச்சு வார்த்தை நடத்தினார்.

**ஆலோசனைக் கூட்டம் .**

அந்த ஆலோசனைக் கூட்டத்தில், தமிழ்நாடு அரசு சார்பில் - பொதுப்பணித்துறை செயலாளர் தலைமைச் செயளாலர் திரு டி.வி. வெங்கட்ராமனுடன் அவர் பேச்சு வார்த்தையைத் தொடர்ந்தார்; அப்போது அட்வகேட் ஜெனரல் திரு சுப்பிரமணியமும் உடனிருந்தார்.

இதே நேரத்தில் - காவிரி நதி நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பது பற்றிய வழிவகை காண்பதற்காகப் பிரதமர் அவர்கள் டெல்லியில் உயர்நிலைக் கூட்டத்தைக் கூட்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. திரு எம்.எஸ். ரெட்டி டெல்லி சென்று கர்நாடகம் - தமிழ்நாடு நிலவரம் பற்றிப் பிரதமரிடம் தெரிவிப்பார் என்றும், அதன்பிறகு இப் பிரச்சினை குறித்து மாண்புமிகு பிரதமர் தக்க நடவடிக்கை எடுப்பார் என்றும் கூறப்பட்டது.







**மருத்துவ அறிக்கை**

உண்ணாவிரதத்தின் 3-ஆம் நாளான இன்று முழுவதும், மாண்புமிகு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மிகவும் சோர்வாக இருந்தார்; உட்கார்ந்திருந்தே இருக்க இயலாததால் பெரிதும் படுத்தபடியே இருந்தார்.

டாக்டர்கள் இரண்டுமுறை அவரைப் பரிசோதித்தார்கள்; அவருடைய உடலில் குளுகோஸ் அளவு குறைந்து வருவதால் இரத்தத்தைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும் என்று டாக்டர்கள் கூறினார்கள். அதற்கு முதல்வர் அவர்கள் மறுத்து விட்டார்.

அதேபோல் - நரம்புமூலம் குளுகோஸ் ஏற்றவேண்டும் என்ற யோசனையும் அவரால் மறுக்கப் பட்டது.

நேற்றிரவு 10.30 மணிக்கு நடத் தப்பட்ட பரிசோதனையில் சிறுநீரில் 'அசிடோன்' இருப்பது மீண்டும் தெரிய வந்தது. இதனால் மாண்புமிகு முதல்வரின் உடல் உறுப்புகள் இயங்குவதில் சீரற்ற நிலை ஏற் பட்டது.

இனியும் குளுகோஸ் ஏற்றா விட்டால், அவரது உடல்நிலை சீர் செய்ய முடியாத அளவுக்கு மோசமாகும் என்று மருத்துவர்கள் எச் சரித்தார்கள்.

''குளுகோஸ் ஏற்றுவது குறித்து நாங்கள் தொடர்ந்து முதல்வர் அவர்களை வற்புறுத்தி வருகிறோம்'' என்று மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலர்ளர் கூறினார்.

**முதல்வர் அறிக்கை**

தம்முடைய உண்ணாவிரதத் திற்கு ஆதரவு தெரிவித்துத் தமிழகத் தின் பல்வேறு பகுதிகளிலும் சிலர் தீக்குளிக்க முயன்ற செய்தி கேள்வி யுற்று முதல்வர் அவர்கள் பெரிதும் மனவேதனையுற்றார்.

அதைக் கண்டித்து - மிகமிகக் களைப்புற்றிருந்த நிலைமையிலும் அவர் இன்று ஓர் அறிக்கை வெளியிட்டார்.

அந்த அறிக்கையின் முழுவிவரம் வருமாறு:

'தமிழக மக்களுக்கு எந்தவித மான சிறிய இடர்ப்பாடும் துன்பமும் இன்றிக் காவிரி நீர் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்கின்ற எண்ணத்தில் ஒட்டு மொத்தமாகத் தமிழக மக்களின் சார்பாக நான் மேற்கொண்டுள்ள இந்தக் காலவரையற்ற உண்ணா விரத அறப்போராட்டத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் என்னை நான் வருத்திக் கொள்வது போல் என் மீதுள்ள அளவு கடந்த அன்பு கொண்டுள்ள சகோதர சகோதரிகள் தீக்குளிக்க முயற்சி செய்வதாகப் பல இடங்களிலிருந்து எனக்குத்தகவல்கள் கிடைத்துள்ளன. கடந்த 19-ஆம் தேதி சேலம் மாவட்டம் அன்ன தானப்பட்டியைச் சேர்ந்த வயலெட் மற்றும் பராசக்தி என்ற இரண்டு பெண்மணிகள் தீக்குளித்தாகத் தகவல் கிடைத்தவுடன் அவர்கள் இருவருக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தலா 50,000 ரூபாய் நிவாரண நிதியாக வழங்க ஏற்பாடு செய்ததோடு, கழகத்தின் சார்பில் அந்தச் சகோதரிகளுக்குத் தேவையான தீவிரமருத்துவ ஏற்பாடு செய்தேன்; மேலும் இதுபோன்று தன்னைத் தானே வருத்திக் கொள்ள வேண்டாம் என்ற அன்பான வேண்டு கோளையும் விடுத்தேன். ஆனால், என்னுடைய துயரத்தையும் அதிகரிக் கும் வண்ணம், மேலும் சில இடங் களில் சிலர் தீக்குளிப்பு போன்ற செயல்களில் ஈடுபட்டதாக எனக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

பெரியார் மாவட்டம் அம்மாபேட்டை பவானிகிளைக் கழகச் செயலாளர் திரு என்.ஆர். கோவிந்தராஜ் மற்றும் 50 பேர் 19-ஆம் தேதி மாலை தீக்குளிக்க முயன்றபோதுகாவல்துறையினர் அவர்களைத் தடுத்து உள்ளனர் இதேபோல், சேலம் மாவட்டம் ராசிபுரம் கிளைக் கழகத் தலைவர் திரு மணி, செயலாளர் திரு பிரபாகரன் இருவரும் நேற்று

மாலை தங்கள் மீது மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு தீக்குளிக்க முயன்றபோது காவல்துறையினர் அவர்களைத் தடுத்துக் காப்பாற்றியுள்ளனர்.

கோவை மாவட்டம் துடியலூரைச் சேர்ந்த திரு ரங்கன் என்பவரின் மகள் சகுந்தலா என்பவர் தனது உயிரை மாய்த்துக் கொள்ள விஷத்தை அருந்தியதாகவும் எனக்குச் செய்தி கிடைத்துள்ளது.

மதுரை ஜெய்ஹிந்தபுரம் கழகச் செயலாளர் திரு. பால்ராஜ் மற்றும் 20 பேர் நேற்று சென்னைக்கு வந்து தீக்குளிக்க முயன்றபோது காவல் துறையினர் அவர்களைத் தடுத்துள்ளார்கள்; விஷயம் அறிந்தவுடன் கழகத்தின் சார்பில் 50,000/- ரூபாய் வழங்க ஏற்பாடு செய்துள்ளேன். அனைத்து ஏற்பாடுகளையும் கழகத்தின் சார்பில் செய்துள்ளேன். இந்த மருத்துவச் சிகிச்சைக்கான முழுச் செலவையும் கழகமே ஏற்கும். எத்தகைய சூழ்நிலையிலும் தமிழக மக்களின் ஒட்டுமொத்த சார்பில் துன்பங்களை நான் மட்டுமே தாங்கி கொள்ளத் தயாராக இருக்கிறேன். எனவே தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளும் நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டாம் என்று எனது அன்பிற்குரிய சகோதர சகோதரிகளை மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

—இவ்வாறு மாண்புமிகு முதல் அமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அந்த அறிக்கையில் கூறியிருந்தார்.



நானே நேரில் அழைத்து, தீக்குளித்தல் போன்ற செயல்களில் கண்டிப்பாக ஈடுபடக்கூடாது என்ற அன்புக் கட்டளையை நேரில் தெரிவித்தேன்.

இதுபோன்ற சம்பவங்கள் என் மனதை வெகுவாகப் பாதித்து உள்ளன. நான் பலமுறை வேண்டுகோள் விடுத்தும் இன்னும் பல சகோதர சகோதரிகள் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளும் செயல்களில் தொடர்ந்து ஈடுபடுவது உண்மையிலேயே என் நெஞ்சை மிகுந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது; கோயம்புத்தூர் மாவட்டம் பெரிய நாயக்கன்பாளையம் துடியலூரைச் சேர்ந்த சகுந்தலா என்பவருக்குக்

### காவிரி நீர்: அரசு அறிக்கை

காவிரியாற்றில் தண்ணீர் திறந்து விடுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூன்றாவது நாளாக உண்ணாவிரதமிருந்தது கண்டு, தமிழக அமைச்சர் பெருமக்களெல்லாம் பெரிதும் கவலையுற்றனர்.

ஆதரவாகக் காணவந்து திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களில் - தாய்மார்கள் பலரும் ''அம்மா, அம்மா!'' என்றும் ''எங்கள் காவிரித் தாயைக் காப்பாத்துங்கோ''.. என்றும் கதறி அழுததையும், அவர்களைச் சிலர் அமைதிப்படுத்த முயன்றதையும் காணமுடிந்தது.

கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் - கூட்டம் பெருகிக்கொண்டிருந்ததே தவிர மட்டுப்படுவதாக இல்லை; இதனாலேயே மூன்றாவது நாளாகக் கடற்கரைச் சாலைப் போக்குவரத்துக்கள் யாவும் வழிமாற்றி விடப்பட்டன.

இந்தியாவில் - தமிழகத்திற்குக் கர்நாடக அரசு கொடுத்த தண்ணீரின் அளவு குறித்து, அரசு ஓர் அறிக்கை வெளியிட்டது; அதன் விவரம் வருமாறு:

''கர்நாடக அரசு தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் திறந்துவிட்டது சம்பந்தமாகச் சில தவறான தகவல்களை வெயிட்டுள்ளது. பொருத்தமற்ற குழப்பமான அறிக்கைகளையும் கர்நாடக அரசு வெளியிட்டு இருக்கின்றது. அதில் நடப்பு நிதியாண்டில் ஜூன், ஜூலை, மாதங்களில் 17.77 டி.எம்.சி. தண்ணீர் விட்டதாகக்குறிப்பிடப்பட்டுள்ளது.அதோடு கடந்த ஆண்டைவிடக் கூடுதலாக 15 டி.ம்.சி. தண்ணீர் விட்டதாகவும் கூறியுள்ளது. எனவே இந்தத் தவறான தகவலுக்குப் பதில் அளிப்பதோடு, தமிழக அரசு சார்பில் சரியான தகவல்களைத் தெரிவிக்க வேண்டியது அவசியம் ஆகிறது.

நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி காவிரி ஆற்றில் கர்நாடக அரசு ஆண்டுக்கு 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டும்; இந்த உத்தரவுப்படி தண்ணீர் எவ்வளவு திறந்து விடப்படுகிறது என்பதைத் தமிழக அரசு கண்காணித்துவருகிறது இதன்படி ஜூன், ஜூலை, மாதங்களில் ஆயக்கட்டுப்பாசனத்துக்காக 10.16 டி.எம்.சி. மற்றும் 42.76 டி.எம்.சி. தண்ணீர் தமிழ்நாட்டுக்குத் திறந்து விடப்படவேண்டும். ஆனால், தமிழ்நாட்டுக்கு ஜூன் மாதம் 4.82 டி.எம்.சி. தண்ணீர்தான் திறந்து விட்டு இருக்கிறார்கள். ஜூலை மாதத்தில் 11.04 டி.எம்.சி. தண்ணீர் கிடைத்து இருக்கிறது; மொத்தம் 15.86 டி.எம்.சி. தண்ணீர் தான் வந்து இருக்கிறது. ஜூலை மாதத்துக்குள் இன்னும் 37.06 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும்; நடுவர் மன்ற உத்தரவின்படி கணக்கெடுப்ப



நடத்தப்பட்ட போதுதான் இந்தத் தகவல் கிடைத்து இருக்கிறது.

தமிழ்நாடு இந்த ஆண்டு மேட்டூர் அணையில் இருந்து சுமார் 15 டி.எம்.சி. தண்ணீர் வரை கூடுதலாகச் செலவிட்டுள்ளது என்றும், கர்நாடக அரசு கூறியுள்ளது. இது பொருத்தமற்ற பேச்சாகும். மேட்டூர் அணை தண்ணீரைப் பயன்படுத்துவது தமிழக அரசின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேச, கர்நாடக அரசுக்கு உரிமை கிடையாது.

'காவிரி நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ், தமிழக அரசு முன்பு இருந்ததைவிடக் கூடுதலாக 2.5 இலட்சம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்ய ஏற்பாடு செய்துள்ளது என்று கர்நாடக அரசு கூறியிருப்பது சரியல்ல. இது தவறான புள்ளி விவரம் ஆகும். சொல்லப்போனால் 1971-72-ஆம் ஆண்டில் 28.2 இலட்சம் ஏக்கர் நிலத்தில் பயிர் செய்யப்பட்டு வந்தது; தற்போது 18.31 இலட்சம் ஏக்கர் நிலத்தில்தான் சாகுபடி செய்யப்படுகிறது. ஆனால், அதே நேரம் கர்நாடக அரசு முன்பு 6.82 இலட்சம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்துவந்தது தற்போது 11.2 இலட்சம் ஏக்கர் அளவுக்கு உயர்த்தியுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக ஆயக்கட்டுப் பாசனம் மூலம் 5 இலட்சம் ஏக்கர் முழுவதும் பயிர் செய்யப்படுவது கிடையாது. 4.14 இலட்சம் ஏக்கர் நிலத்தில் மட்டுமே விவசாயம் நடந்திருக்கிறது.

இந்த ஆண்டில் இதுவரை 75 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மட்டுமே விவசாயம் செய்து வருகின்றனர் 2.58 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்யத் தயார்நிலையில் உள்ளன. இதற்காக நாற்றுகள் நடப்பட்டு இருக்கின்றன; ஆனால் தண்ணீர் போதுமா என்ற கேள்விக்குறி எழுந்துள்ளது. இதனால் நெற்பயிர் பிழைக்குமா என்று நம் தமிழக விவசாயிகள் சந்தேகத்தோடு காத்திருக்கும் நிலை உள்ளது.

—இவ்வாறு இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### முன்னாள் குடியரசுத்தலைவர் ஆர்.வி. உட்பட என்மர் அறிக்கை

காவிரி நீர் குறித்த நடுவர் மன்றத் தீர்ப்பை உடனே அமல் நடத்துமாறு மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கு- முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் உட்பட முக்கியஸ்தர்கள் என்மர் ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார்கள்.

முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதிகள் திரு. எஸ். நடராசன், திரு. கிருஷ்ணையர், வழக்கறிஞர்கள் ராம் ஜெத்மலானி எம்.பி., கே.கே. வேணுகோபால், சென்னை உயர்



நீதிமன்ற முன்னாள் நீதிபதிகள் திரு. எம்.எம். இஸ்மாயில், பி. வேணுகோபால், வழக்கறிஞர் அசோக் சென் ஆகியோர் அந்த அறிக்கையில் கையெழுத்திட்டிருந்தார்கள்.

### நான்காம் நாள் 21.7.93

நான்காம் நாளான இன்று முதல்வருடைய உடல்நிலை மிகவும் மோசமடைந்தது; உட்காரவோ, நடக்கவோ அவரால் இயலவில்லை. பேசவும் சக்தியற்ற நிலையில் இருந்தார்.

டாக்டர்கள் மிகத் தீவிரமாகக் கண்காணித்து வந்தார்கள்.

தம்மைக் காண வந்தோரைப் பார்த்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் இலேசாகப் புன்முறுவல் மட்டுமே பூத்தார்; பேச இயலவில்லை.

### பிரதமருக்குத் தந்தி

'தஞ்சை, திருச்சி விவசாயிகளைக் காப்பாற்றுவதற்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு உண்ணாவிரதம் இருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சரைக் காப்பாற்ற வேண்டும்; காவிரி நீர்ப் பிரச்சினையில் தலையிட்டு நல்ல முடிவெடுக்க வேண்டும்' என்றெல்லாம் இந்தியப் பிரதமருக்குக் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் இன்று அவசரத் தந்தி அனுப்பினார்கள்.

### மத்திய அமைச்சர் வி.சி. சுக்லா வருகை

நேற்றிரவு பெங்களூருக்குச் சென்று, மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு. வீரப்பமொய்லியைச் சந்தித்த மாண்புமிகு மத்திய நீர் வளத்துறை அமைச்சர் திரு. வி.சி சுக்லா அவர்கள் இன்று சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

நேரே, உண்ணாவிரத மேடைக்கு வந்து சேர்ந்த அவர், மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் இப் பிரச்சினை குறித்துத் தீர்வுகாண மத்திய அரசின் யோசனையை

எடுத்துக் கூறினார்.

அப்போது- மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. தங்கபாலு, மாண்புமிகு தமிழ்நாடு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன், நீர்வளக் கமிஷன் தலைவர் திரு. எம்.எஸ். ரெட்டி, தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், அட்வகேட் ஜெனரல் கே. சுப்பிரமணியம் ஆகியோர் உடனிருந்தார்கள்.

**செய்தியாளர் சந்திப்பு**

அந்தப் பேச்சுவார்த்தை முடிந்ததும், தம்மைச் சூழ்ந்து கொண்ட செய்தியாளர்களிடம் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. வி.சி. சுக்லா அவர்கள் தெரிவித்ததாவது:

''தமிழக முதலமைச்சரோடு நான் காவிரி நீர் பிரச்சினை தொடர்பாகப் பேசினேன். மாநில அரசு அதிகாரிகளுடனும், மத்திய அரசு அதிகாரிகளுடனும் இதுபற்றி மேலும் ஆலோசனை நடத்தவிருக்கிறேன். அதுமுடிந்து, மறுபடியும் நான் முதலமைச்சரைச் சந்திப்பேன்; அவரும் தன்னுடைய அமைச்சரவை சகாக்களுடன் ஆலோசனை நடத்துவதாகக் கூறியிருக்கிறார். பிரதமர் தெரிவித்த வாழ்த்தையும் முதலமைச்சருக்குத் தெரிவித்தேன். எல்லாம் நல்லபடியாக முடியும் என்று நம்புகிறேன்''

**முதல்வருக்குப் பூச்செண்டு**

மாண்புமிகு மத்திய ராஜாங்க அமைச்சரான திருமதி மார்கரெட் ஆல்வா, இன்று தனித் தூதுவர் ஒருவர் மூலம் பூச்செண்டு கொடுத்தனுப்பியிருந்தார்.

**அமைச்சர்களுடன் ஆலோசனை**

மத்திய அமைச்சர் சென்றபின், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மிகுந்த களைப்போடு உண்ணாவிரத மேடையில் இருந்தவாறே சக அமைச்சர்களோடு ஆலோசனை நடத்தினார்.

இவ்வாறு நடத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் காவிரிப் பிரச்சினை குறித்து ஒரு முடிவெடுக்கப்பட்டது; அதை எடுத்துக் கொண்டு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன், அரசு தலைமைச் செயலாளர் திரு.



டி.வி. வெங்கட்ராமன் ஆகியோர் ஆளுநர் மாளிகைக்குச் சென்றனர்.

அமைச்சரவை முடிவு, அங்கிருந்த மாண்புமிகு மத்திய அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர்- அதுகுறித்து, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவுடன், மாண்புமிகு மத்திய அமைச்சர் தொலைபேசியில் தொடர்புகொண்டு கலந்தாலோசித்தார்.

**மருத்துவ அறிக்கை**

நான்காவது நாளாக உண்ணாவிரதம் இருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உடல் நிலையை மருத்துவர் குழு பரிசீலித்தது; அன்று பிற்பகல் 2.20 மணியளவில் அதுபற்றி வெளியிடப்பட்ட மருத்துவ அறிக்கை பின்வருமாறு தெரிவித்தது:

'தமிழக முதல்வர் அவர்கள் இன்று காலையில் மிகவும் சோர்வாக இருந்தார்; எனினும் இயன்ற அளவில், தம்மைச் சந்தித்த முக்கியப் பிரமுகர்களுடன் பேசினார். மத்திய அமைச்சர் திரு. வி.சி. சுக்லாவைச் சந்தித்தார்; சக அமைச்சர்களுடனும் கலந்து பேசினார். 2.15 மணிக்கு மருத்துவர் குழு முதல்வரைப் பரிசோதித்தது. முதல்வர் மிகச் சோர்வாக இருக்கிறார். உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பின் விளைவுகள் ஏற்படாமலிருக்க இப்போதைய நிலை தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று டாக்டர்கள் கூறியுள்ளனர்.

**மத்திய அமைச்சர் மீண்டும் சந்திப்பு**

மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. வி.சி. சுக்லா அவர்கள், மேதகு தமிழக ஆளுநர் திரு. சென்னாரெட்டி, மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. தங்கபாலு ஆகியோர் இன்று (21.7.93) மாலை சரியாக 4.50 மணிக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உண்ணாவிரதமிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

திரண்டிருந்த மக்களிடையே மிகுந்த பரபரப்பும், எழுச்சிமயமான எதிர்பார்ப்பும் இருந்தன.

வருகைதந்த முக்கியப் பிரமுகர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதன் அறிகுறியாக- மாண்புமிகு முதல்வர் அவர்களின் முகமலர்ச்சியிலிருந்தே புரிந்து கொண்ட மக்கள்- ''காவிரித்தாய் வாழ்க''... ''புரட்சித்தலைவி வாழ்க''... ''தியாகத் தலைவி வாழ்க'' என்பன போன்ற வாழ்த்து முழக்கங்களை எழுப்பினார்கள்.



மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்- மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. வி.சி. சுக்லா அவர்கள் கொடுத்த பழச்சாற்றை வாங்கிச் சாப்பிட்டுத் தமது உண்ணா விரதத்தை முடித்துக் கொண்டார்.

**நாவலர் அறிவிப்பு**

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள், ஒலி பெருக்கியில்- ''காவிரி தந்த கலைச் செல்வி இப்போது காவிரிக்குத் தண்ணீரை மீட்டுக் கொண்டு வந்திருக்கிறார். இந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில், புரட்சித்



தலைவி அவர்கள் அண்ணாசமாதிக்கும், புரட்சித்தலைவர் சமாதிக்கும் சென்று விட்டு இல்லம் செல்லுவார்'' என்று அறிவித்தார்.

அதன்படி இரு நினைவிடங்களிலும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதன்பின்- 4 நாள் உண்ணாவிரதம் மேற்கொண்டு தியாக வேள்வி நடத்திய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தம் இல்லத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

**செய்தியாளர் சந்திப்பு**

இதற்கிடையில் தம்மைச் சந்தித்து வாழ்த்துக் கூறிய செய்தியாளர்களுக்கு மகிழ்ச்சி தெரிவித்தார் மாண்புமிகு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்.

அப்போது, காவிரிப் பிரச்சினையில் ஏற்பட்ட உடன்பாடு குறித்து அவரளித்த விளக்கம் வருமாறு:

''காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து அமைக்கப்பட்ட நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அமல்நடத்துவது தொடர்பான அடிப்படை அம்சங்களைக் கண்காணிக்க ஒரு கண்காணிப்புக்குழு அமைக்க மத்திய அரசு சம்மதித்துள்ளது.

மேலும், மத்திய அமைச்சரவைச் செயலாளர் மற்றும் காவிரியாறு ஓடும் மாநிலங்களின் தலைமைச் செயலாளர்களையும் கொண்டதோர் அமலாக்கக் கமிட்டியும் அமைக்கப்படும்.

கண்காணிப்புக் குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு, இடைக்காலத் தீர்ப்பை அமல் நடத்துவதை இந்தக் கமிட்டி உறுதிப்படுத்தும்.

இது நமக்கு மகத்தான வெற்றியாகும்''.

**வினாவும் விளக்கமும்**

இதைத் தொடர்ந்து செய்தியாளர்கள் தொடுத்த வினாக்களும்- மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த விளக்கங்களும் வருமாறு:

**வினா:** காவிரியில் உடனடியாகத் தண்ணீர் விடப்படுமா?

**விளக்கம்:** அது இன்றைய ஒப்பந்தத்தில் உள்ளடங்கியிருக்கிறது. காவிரியில் தண்ணீர் வரத் தொடங்கி விடும்.

**வினா:** இந்த உடன்பாடு உங்களுக்குத் திருப்தியளிக்கிறதா?

**விளக்கம்:** நமக்கு மகத்தான வெற்றி கிடைத்துள்ளது. நடுவர் மன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டு, இரண்டாண்டுகளுக்கு மேலாகியும் இதற்காக எந்த ஒரு அமைப்பும் நியமிக்கப்படவில்லை.

**வினா:** நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பைக் கர்நாடக அரசு ஏற்றுக் கொள்கிறதா?

**விளக்கம்:** அது நம்முடைய நோக்கமல்ல; மத்திய அரசு இதில் தலையிட வேண்டும்; நடுவர் மன்றத் தீர்ப்பு அமல்படுத்தப்பட வேண்டும் என்று கோரி வந்தோம். அதில் மகத்தான வெற்றி கிடைத்துள்ளது.

இந்த அறப்போரில் எனக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**நன்றி அறிக்கை**

*அன்றிரவே* 21.7.1993 மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால், நன்றி தெரிவிக்கும் அறிக்கையொன்று விரிவாக வெளியிடப்பட்டது.

அதன் முழு விவரம் வருமாறு:

''தமிழகத்தின் ஜீவனாகத் திகழும் காவிரி நதிக்கு, கடந்த பல ஆண்டுகளாகவே நியாயமாகவும், சட்டத்தின்படியும் கர்நாடகத்தில் இருந்து திறந்துவிட வேண்டிய தண்ணீரைத் திறந்துவிடாது தமிழகத்தின் காவிரி டெல்டா பகுதியை வறட்சிக்கு ஆளாக்கிய கொடுமையிலிருந்து விடுவிக்கும் தூய நோக்கத்தோடு காவிரி நதி நீர் தாவா பற்றி விசாரித்த நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பினை அமல் நடத்திட மத்திய அரசை வற்புறுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ளச் செய்வதற்காக, காந்தியடிகளின் அறவழிப் போராட்டமான உண்ணா நோன்பினை நான் மேற்கொண்டிருந்த போது, என்னுடைய போராட்டம் வெற்றியடைய வாழ்த்துக் கூறியும், என்னுடைய தூய நோக்கத்திற்கு வலுவூட்டியும், ஆக்கமும், ஊக்கமும் அளித்திட போராட்ட மேடைக்கே நேரில் வந்து என்னை நெக்குருகச் செய்திட்ட இலட்சோப லட்சம் வணக்கத்திற்குரிய பெரியோர்களுக்கும், என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களுக்கும், இதய தெய்வம் புரட்சித் தலைவரின் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான உடன் பிறப்புக்களுக்கும், என் இதயம் கனிந்த நன்றியினைக் காணிக்கை ஆக்கிக் கொள்கிறேன்.

உண்ணாநோன்பு தொடங்கிய செய்தி கேள்விப்பட்டவுடன் தனது சுற்றுப் பயணத்தையும் ரத்து செய்துவிட்டு உடனடியாகச் சென்னை திரும்பி வந்து, தனது அதிகார வரம்பின் மரபுகளை எல்லாம் பொருட்படுத்தாது, ஒன்றுக்கு இரண்டு முறை நேரில் உண்ணா விரதப் பந்தலுக்கு வந்திருந்து என் உடல் நிலை பற்றி வாஞ்சையுடன் கேட்டறிந்ததோடு, பிரச்சினையின் நியாயத்தை உணர்ந்து, ஆதரவளித்த மேதகு ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி அவர்களுக்கும், அவரது துணைவியார் அவர்களுக்கும் பெரிதும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியத் திருநாட்டின் உயர்ந்த அந்தஸ்துக்குரிய முன்னாள் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள், முன்னாள் மத்திய, மாநில அமைச்சரும், ஆளுநருமான திரு சி. சுப்பிரமணியம் அவர்கள், மற்றும் தமிழகத்தின் மூத்த முக்கிய பிரமுகர்கள், பல்வேறு அரசியல் கட்சிகளின் முன்னணித் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் என்னை நேரில் சந்தித்து ஊக்கமளித்ததோடு, தமிழகத்தின் ஒற்றுமை உணர்வினை உணர்த்தியமைக்காகவும் என் உடல் நலம் குறித்து அக்கறையுடன் விசாரித்து சென்ற பாங்குக்காகவும் நான் பெரிதும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

திரை உலக முன்னணி நடிக, நடிகையர்கள், தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், இசையமைப்பாளர்கள், பின்னணிப் பாடகர்கள், விநியோகஸ்தர்கள், எனப் பிரபலமானவர்கள் முதல் பல்வேறு டெக்னீசியன்கள் வரை மிகப் பெருமளவில் உண்ணா நோன்பிருந்த இடத்திற்கு நேரில் வந்து ஆதரவளித்த பாங்கிற்கு என்றென்றும் நன்றி கூறிடுவேன். என்னை வந்து சந்தித்த ஒவ்வொருவருக்கும் பெயர் குறிப்பிட்டுத் தனித் தனியே நன்றி கூறிடவே விரும்புகிறேன். ஆனால் பட்டியல் மிகப் பெரிதாக இருப்பதால், தனித் தனியே நான் நன்றி கூறியதாக ஏற்றுக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாயத்தின் பல்வேறு துறையினர், அரசின் உயர் அலுவலர்கள் முதல் ஊழியர்கள் வரையிலானோர் - தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த தொழில் அதிபர்கள், வணிகர்கள் மற்றும் சாமான்யர்கள் முதலானோர் மற்றும் பத்திரிகைத் துறையினர் என என்னை உண்ணா நோன்பிருந்த நான்கு நாட்களிலும் சந்தித்துச் சென்றோர், என்னை வாழ்த்தியது மட்டுமல்லாமல், நம் உயிரினும் மேலான தமிழகத்தின் ஜீவாதாரப் பிரச்சினையில் தமிழகம் ஓர் அணியில் உள்ளது என்ற கருத்திற்கு வலுவூட்டியமைக்காகவும் பெரிதும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அரசுத்துறை மற்றும் பிற மருத்துவமனைகளின் மருத்துவர்கள் என் உடல் நலத்தில் காட்டிய அக்கறைக்கு எனது மனமுவந்த நன்றி.

நான் உண்ணா நோன்பு தொடங்கியவுடன் அங்கேயே என்னைச் சூழ்ந்து நின்றதோடு, நான்கு நாட்களும், இரவு பகல் ஊண் உறக்கமின்றி என்னுடனேயே இருந்திட்ட சட்டப் பேரவைத் தலைவர் மற்றும் டாக்டர் நாவலர் முதலான நம் அமைச்சரவையினர், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர் மற்றும் உடன் பிறப்புகள் அனைவருக்கும் நன்றி.





இலட்சக் கணக்கில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தொண்டர்கள் உண்ணாவிரத மேடை முன்னர் குவிந்த வண்ணமாக ஒருபுறமிருக்க, இரவெல்லாம் பல்லாயிரக் கணக்கான தாய்மார்களும், பொது மக்களும் சாலைகளிலேயே படுத்திருந்ததையும், அவர்களில் பலர் எவ்வித அரசியல் கட்சியையும் சாராத பொதுவான எண்ணங் கொண்டவர்கள் என்பதையும் அறிகிறபோது அவர்களுக்கெல்லாம் என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கை ஆக்குவது பெரிதும் என் கடன் எனக் கருதுகிறேன்.

என் உயிரையும் பொருட்படுத்தாது கடைசி முயற்சி எனப் போராட்டம் தொடங்கியதை அடுத்து பிரச்சினைக்கு முடிவு ஏற்பட நடவடிக்கை மேற்கொள்ள முன்வந்த மத்திய நீர்ப் பாசன அமைச்சர் திரு வி.சி. சுக்லா அவர்களுக்கும், அவர் நேரில் வந்து சந்தித்து என் கோரிக்கைகளின் நியாயத்தைக் கேட்டறிந்தமைக்காகவும் பெரிதும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிரி நதி நீர்ப் பிரச்சினை என்பது தமிழகத்தின் ஜீவாதாரப் பிரச்சினையாகும். இதில் நமக்குக் கிடைத்திருக்கும் நியாயத்தையும், நீதியையும் நடைமுறையாக்கித் தர மத்திய அரசு சட்டப்படியும், தர்மப்படியும் கடமைப்பட்டுள்ளது என்பது உணர்த்திட தமிழகமே ஓரணியில் உள்ளது என்பதை உணர்த்திடவே, என்னையே வருத்திக் கொள்ளும் இப் போராட்டத்தினை மேற்கொண்டேன். ஆனால் என் மீது அன்பும், பாசமும், அளவுக்கதிகமாகக் கொண்டிருக்கும் உடன் பிறப்புகளில் சிலர் என்னை வருத்திக் கொள்வது பொறுக்காமல், தங்களையே வருத்திக் கொள்ளவும், தங்கள் உயிரையே மாய்த்துக் கொள்ளவும் முயன்றிருப்பது என்னை மேலும் வருத்தப்படுத்தினாலும், அவர்களது மெய்யான அத்தியாகத்திற்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, அத்தியாகிகளுக்கும், அவர் தம் குடும்பத்தினருக்கும் என் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் நான் அறப்போராட்டம் தொடங்கிய செய்தியைக் கேள்விப்பட்டவுடன் என் விருப்பத்திற்கு மாறாக உணர்ச்சி வசப்பட்டோர் சிலரது போராட்ட முஸ்தீபுகள் காரணமாக முதல் இரண்டு நாட்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்த பல்வேறு அசௌகரியங்களைத் தாங்கிக் கொண்ட பொது மக்களுக்கும் - பின்னர் அமைதி காக்க வேண்டுமென நான்விடுத்த அன்பு வேண்டுகோளை ஏற்று எவ்வித அசம்பாவிதமோ - சகஜ வாழ்க்கை பாதிப்போ ஏற்படாது பார்த்துக் கொண்ட அனைவர்க்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிரி நதியில் உரிய நீர் பெறுவது தமிழர்கள் ஒவ்வொருவரது பிறப்புரிமை என்பதை நாட்டுக்கு உணர்த்திட நான் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு உறுதுணை புரிந்த ஒவ்வொருவருக்கும் -என் மீது மெய் சிலிர்க்க அன்பு செலுத்திய அனைவர்க்கும் என் இதயம் நிறைந்த நன்றியறிதலை வார்த்தைகளால் மட்டும் அல்லாது என் உள்ளத்து உணர்வுகளாலும் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

கடந்த இருபதாண்டுகளில், காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் இந்த அறப் போராட்டம் காரணமாக இன்று வெற்றி கண்டுள்ளோம். தமிழக மக்கள் அனைவரும் இப் போராட்டத்தில் எனக்கு ஒருமுகமாகக் காட்டிய ஆதரவு காரணமாகவும், எனக்குப்பின் பலமாகக் குரல் கொடுத்ததின் காரணமாகவும் இவ்வெற்றியை ஈட்டியுள்ளோம். எனவே இம் மகத்தான வெற்றியை ஈட்டிட ஒத்துழைத்த தமிழகத்தின் அனைத்து தரப்பு மக்கள் ஒவ்வொருவருக்கும் என் நன்றி உரித்தாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

—இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நிகழ்ச்சித் தொகுப்பு: பி.எல்.ஆர்.

# பிரதமருக்கு முதல்வர் கடிதம்

காவிரி நதிநீர்ப் பிரச்சினை தொடர்பாக மேற்கொண்ட உண்ணா விரதத்தை - மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் முடித்து சில நாட்கள் கூட ஆக வில்லை; மாண்புமிகு கர்நாடக முதல்வர் விடுத்த அறிவிப்பொன் றின் காரணமாக நமது முதல்வர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதினார்.

**மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு பிரதமர் நரசிம்மராவ் அவர்களுக்கு எழுதிய அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டு இருந்ததாவது:**

'காவிரி நீர்ப்பிரச்சினையில் நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப் பின்படி, தமிழக மக்கள் தங்களுக்குச் சேர வேண்டிய தண்ணீ ரைப் பெறுவதற்காக நான் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண் டதைத் தாங்கள் அறிவீர்கள்.

காவிரியில், தமிழகத்திற்குச் சட்டப்படி கிடைக்க வேண்டிய தண்ணீரைத் திறந்துவிட ஏற்பாடு செய்யும்படி உங்களிடமும், கர்நாடக அரசிடமும் பலமுறை வற்புறுத்தி இருக்கிறேன். எனினும் என்னுடைய இந்த முயற்சி தோல்வி அடைந்தது. அரசு மேற்கொண்ட முயற்சி தோல்வி அடைந்ததால், இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஜனநாயக முறைப்படி மக்கள் கவனத்துக்குக் கொண்டு வருவதற் காக நான் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டேன்.

கடந்த 21-ஆம் தேதி, சென்னைக் கடற்கரையில் நான் உண்ணா விரதம் இருந்த இடத்தில் மத்திய நீர்ப்பாசன அமைச்சர் திரு. வி.சி. சுக்லா அவர்கள் என்னைச் சந்தித் துப் பேசினார். அப்போது அவ ரிடம் கீழ்க்கண்ட 3 கோரிக்கை களை வைத்தேன்.

அதன் விவரம் வருமாறு:

நடுவர்மன்ற இடைக்கால உத் தரவுப்படி தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் திறந்து விடவேண்டும் என்று மத்திய அரசு அரசியல் சட்டம் 256-வது பிரிவின்கீழ், கர்நாடக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

இடைக்கால உத்தரவுப்படி தண்ணீர் திறந்து விடப்படுகிறதா என்பதைச் சரி பார்க்கக் கண் காணிப்புக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும்.

மேட்டூர் அணையில் நீர்மட்டம குறைவாக இருப்பதால் தஞ்சை குறுவைப் பயிரைக் காப்பாற்ற உடனடியாகத் தண்ணீர் திறந்து விடும்படி கர்நாடக அரசுக்கு உத் தரவு பிறப்பிக்க வேண்டும்.

மத்திய அமைச்சர் திரு. வி.சி. சுக்லா அவர்கள் என்னிடம் பேசும் போது தண்ணீர் திறந்துவிட ஏற் பாடு செய்வதற்காக அமலாக்க கமிட்டி ஒன்றும், இதைக் கண் காணிப்பதற்காகக் கண்காணிப்புக் கமிட்டி ஒன்றும் அமைக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார். காவிரியில் தண்ணீர் திறந்துவிட நான் ஏற்பாடு செய்கிறேன் என்றும் அவர் உறுதி அளித்தார்.

கடைசியாக 2 கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதால், இது சம்பந்தமாக நான் சக அமைச்சர் களிடம் ஆலோசனை நடத்திய பின்னர், முதல் கோரிக்கையை வற் புறுத்தவில்லை. இதைத் தொடர்ந்து, மத்திய அமைச்சர் வி.சி. சுக்லா முன்னிலையில், பழரசம் அருந்தி உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டேன்.

அமைச்சர் திரு. வி.சி. சுக்லா அவர்கள் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்கூட, காவிரியில் இடைக்காலத் தீர்ப்பின்படி தண் ணீர் திறந்துவிடப்படுவதைக் கண் காணிக்கக் கண்காணிப்புக்குழு அமைக்கப்படும் என்று அறிவித்தார். காவிரி நீர் சம்பந்தப்பட்ட மாநிலங் களின் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மத்திய அரசுப் பிரதிநிதிகள் இதில் இருப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

அதோடு, அமலாக்கக் கமிட்டி ஒன்று அமைக்கப்படும் என்றும் மத்திய அமைச்சர் அவர்கள் கூறி இருந்தார். இந்தக் கமிட்டியில் அமைச்சரவைச் செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் இடம் பெற்று இருப்பார்கள். இந்தக் கமிட்டி, கண்காணிப்புக் கமிட்டி யின் சிபாரிசுகளின்படி தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யும்.

அமைச்சர் திரு. சுக்லாவின் பேட்டியும், அறிக்கையும் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிடப் பட்டிருந்தது.

நான் உண்ணாவிரதம் இருந்த போது, என்னிடம் மத்திய அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற மத்திய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று நான் இதுவரை நம்பிக் கொண்டு இருந்தேன்.

இதற்கிடையில், கர்நாடக முதல் அமைச்சர் திரு. வீரப்ப மொய்லி அவர்கள் கூறியதாக இன்று பத்திரி கைகளில் வெளியாகி உள்ள அவரது அறிக்கையில்- ''நீர்வளத் துறை அமைச்சர் திரு. வி.சி. சுக்லா அவர்கள் அறிவித்தபடி, நடுவர் மன்றத் தீர்ப்பை அமல்படுத்தப் படுவதைக் கண்கா்ணிக்கக் கண் காணிப்புக் குழு அமைக்கப்படாது'' என்று கடந்த 26-ஆம் தேதி உங்களைச் சந்தித்த கர்நாடகத் தூதுக் குழுவிடம் நீங்கள் (பிரதமர்) கூறியதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் நடுவர் மன்றத் தீர்ப்பை அமல்படுத்த கண்காணிப்புக் குழு அமைக்க மத்திய அரசு விரும்ப வில்லை என்றும் பத்திரிகைச் செய்திகளில் மேலும் கூறப்பட் டுள்ளது.

நீங்கள், கர்நாடக எம்.பி.க்கள் குழுவிடம் அப்படிச் சொல்லி இருக்க மாட்டீர்கள் என நான் நம்புகிறேன். ஜூலை 21-ஆம் தேதி திரு. வி.சி. சுக்லா அவர்கள் என்னைச் சந்தித்த போது, எனக்குக் கொ்டுத்த உறுதி மொழியை நீங்கள் காப்பாற்றுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். அவர் எங்களுக்கு ஒரு உறுதிமொழி யைக் கொடுக்கும் முன்பு, உங்களின் சம்மதத்தைப் பெற்று இருப்பார் என்று நான் நிச்சயமாகக் கருது கிறேன். சிக்கலான காவிரி நீர்ப் பிரச்சினையில் இது வேறுவிதமாக இருக்காது என நான் எதிர்பார்க் கிறேன்.

எப்படி இருந்தாலும்- கண் காணிப்புக்குழு, அமல்படுத்தப்படும் குழு ஆகியவை அமைக்கப்படும் என்று திரு. வி.சி. சுக்லா அவர்கள் பத்திரிகைகளுக்கு அறிவித்திருப்ப தால், அதற்கு மத்திய அரசின் சம்மதம் இருந்திருக்கும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

ஆனால், நிலைமை இப்போது வேறுவிதமாக இருந்தால், உண்மை யிலேயே அது மோசமானதாகும். வீரப்ப மொய்லியின் அறிக்கை உண்மையாக இருக்குமேயானால், தமிழக மக்களின் சார்பில் எனது கடுமையான எதிர்ப்பைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசு, தனது முடி வெடுக்க முடியாத நிலையால் இந்தப் பிரச்சினையைத் தன்னிப் போடக் கூடாது என்று எச்சரிக்கை விடுக்கிறேன்.

காவிரி பிரச்சினைக்காக நான் உண்ணாவிரதம் இருந்ததற்குத் தமிழக மக்கள் தங்கள் முழு ஆதரவை எனக்குத் தெரிவித்து இருக்கிறார்கள்.

திரு. வி.சி. சுக்லா அவர்கள் அறிவித்துள்ளதன் அடிப்படையில், மத்திய அரசு தனது அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று எதிர்பார்த்துக் காத்திருந் தோம்; ஆனால், திரு. சுக்லாவின் உறுதிமொழி நிறைவேற்றப்பட வில்லை.

காவிரி அணையில் நீர் வரத்து குறிப்பிடத்தக்க அளவில் குறைந்து இருக்கிறது. காவிரிப் படுகைப் பகுதிகள் கடுமையான தண்ணீர் தட்டுப்பாட்டை நோக்கி உள்ளன. காவிரியில் தண்ணீர் வரத்து கடந்த 23-ஆம் தேதி, 16,018 கன அடியாக இருந்தது. 27-ஆம் தேதி 4,224 கன அடியாகக் குறைந்துள்ளது.

திரு. வி.சி. சுக்லாவின் உறுதி மொழியை மத்திய அரசு அமல் படுத்தாவிட்டால், காவிரிப்படுகைப் பகுதி விவசாயிகள், தங்கள் கடும் கொந்தளிப்பை விரைவில் காட்டத் தொடங்கி விடுவார்கள் என நான் அஞ்சுகிறேன். இந்தப் பிரச்சி னையை நீங்கள் அரசியல் கோணத் தில் இருந்து பார்க்கவில்லை என நான் கருதுகிறேன்.

நான் உண்ணாவிரதம் இருந்த பிறகு, தமிழக மக்கள் உங்களிடம் எதிர்பார்ப்பதெல்லாம் குறுவைப் பயிரைக் காப்பாற்ற நடுவர் மன்ற உத்தரவுப்படி கர்நாடக அரசு காவிரியில் தண்ணீர் திறந்து விட கண்காணிப்புக் குழுவையும் அமல் படுத்தும் குழுவையும் நியமிக்க வேண்டும்' என்பதுதான். ஆனால் அவர்கள் எதிர்பார்ப்பு நிறைவேற வில்லை. அவர்களின் உணர்வுகளை நான் உங்களுக்கு இதன் மூலம் தெரியப்படுத்துகிறேன்.

நிலைமையைப் புரிந்துகொண்டு சட்டப்படி விரைவில் தீர்வு காண் பீர்கள் என நம்புகிறேன்.

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது கடிதத்தில் கூறி யுள்ளார்.

## தமிழ்நாட்டின் உயிர்நாடி காவிரி



தமிழ்நாட்டின் உயிர்நாடி காவிரியில் இருக்கிறது. தமிழ்நாட்டில் கால் வாய்ப் பாசனத்தைச் சார்ந்துள்ள நிலங்களில் 85 விழுக்காடு நிலங்கள் காவிரி நீரை நம்பியுள்ளன. காவிரி நீரை உபயோகிப்பதில் தமிழ்நாட்டுக்கு உள்ள உரிமை மிகவும் பழமை வாய்ந்தது. அவ்வுரிமை தமிழ்நாட்டிற்கும் கர்நாடகத்திற்கும் இடையே ஏற்பட்ட 1892-ஆம் ஆண்டு மற்றும் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளக் கடந்த இருபது ஆண்டுகட்கும் மேலாக மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்ற பின், சட்டப்பூர்வமாக இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மைய அரசால் நியமிக்கப்பட்ட உயர் நீதிபதிகளைக் கொண்ட நடுவர் மன்றம் அளித்துள்ள இடைக்காலத் தீர்ப்பை மதிக்கமாட்டோம் என்றும், அது தங்களைக் கட்டுப்படுத்தாது என்றும் கர்நாடக அரசு கூறுவது நியாயமற்றதும், மிகவும் வருந்தத்தக்கதும் ஆகும்.





# உரிமை காக்கும் முதல்வர் வாழ்க!





ஆடிமாத ஞாயிறொன்றில் சேதியொன்று வந்தது
அதையறிந்த எனதுதேசம் பதைபதைத்து நின்றது
ஈடிலாத முதல்வர்நோன்பு ஏற்றசெய்தி வந்தது
இதயம் யாவும் காவிரிக்கு உரிமைவேட்கை
கொண்டது!

வங்கமென்னும் கடலும்கூட வாழ்த்துநூறு தந்தது
வானம்கூட வாழ்த்திசைக்கக் கீழிறங்கி வந்தது
தங்கமங்கை முதல்வர்செய்யும் தவத்தைஞாலம் கண்டது
தர்மம் வாழ்க! ஒருபுரட்சித் தலைவிவாழ்க
என்றது!

வண்ணம் இன்னும் பூசிடாத ஓவியத்தைப் போலவும்
வாசமுள்ள தாமரைப்பூ வாடிநிற்றல் போலவும்
அன்னை கொண்ட நோன்புதன்னைத் திசைகள்
எட்டும் பார்த்தன
அற்புதத்தை எண்ணிஎண்ணிப் பூதமைந்தும்
வேர்த்தன.

நீரிலாடும் செயல்மறந்து நேசர்நெஞ்சம் நொந்தனர்
நீரிலாட மனமில்லாது நெருப்பிலாடி வெந்தனர்
வேரிலாத மரங்களாக மங்கைமார்கள் வீழ்ந்தனர்
வீதியெங்கும் சூளுரைத்து வீரர்கோடி சூழ்ந்தனர்

கட்சிபேதம் அற்றுமாந்தர் கைகுலுக்க வந்தனர்
காவிரிக்குக் குரல்கொடுக்கும் கடமைவாழ்க
என்றனர்

'பிச்சையன்று உரிமை' என்று உச்சரித்து நின்றனர்
'பேசுகின்ற நடுவர்தீர்ப்பைச் செயல்படுத்து'
என்றனர்.

பேச்சுவார்த்தை பேச்சுவார்த்தை என்றுகாலம்
போனது!

பெரியநீதி மன்றம்தந்த தீர்ப்பும் என்ன ஆனது?
மூச்சிருக்கும் நாள்வரைக்கும் பேச்சுவார்த்தை
என்பதா?

முடிவிலாத வறட்சிவந்து தஞ்சைநெஞ்சைத்
தின்பதா?

என்றுகேட்டு நோன்புநோற்றுத் தாய்மைவெற்றி
கண்டது

இதயதெய்வம் என்னும்போர்க்குச் செயல்விளக்கம்
தந்தது

நின்றுகேட்கும் தெய்வமல்ல, இன்றுகேட்கும்
தெய்வமே

நீதிகேட்கும் முதல்வர் என்று புவிஉணர்ந்து
கொண்டது!

உணவுநீத்து உடல்வருத்தி உரிமைகாத்த முதல்வரை
உரிமைகாக்க அனைவருக்கும் உணர்வுதந்த
முதல்வரை

புனிதமிக்க கடமையாற்றிப் புகழ்படைத்த முதல்வரை
பூக்கும்நன்றி மலர்கள்தூவி வாழ்கவென்று
வாழ்த்துவோம்!



கவிஞர் இளந்தேவன்



# ஏழை எளியோர்க்கு மாண்புமிகு முதல்வர் உதவி



• சிவகங்கை வட்டத்தில் உள்ள காளையார் கோவில் கிராமத்தைச் சேர்ந்த சிற்பியான திரு அருணாசலம் என்பவர் இலங்கையில் உள்ள அருள்மிகு ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோயில் ராஜகோபுரம் கட்டும் பணிக்காக 1989-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கை சென்றார். அங்கு சென்றபின், சிற்பி அருணாசலம் இறந்து போனார். இலங்கையில் காலமாகிப் போன திரு அருணாசலத்தின் மனைவி திருமதி காசியம்மாளின் மனுவினை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கருணையுடன் பரிசீலித்து, திருமதி காசியம்மாளின் வறுமை நிலையை அறிந்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.10,000 வழங்க ஆணையிட்டுள்ளார்.

• நாகப்பட்டினம் துறைமுகத்தில் கப்பலில் பளு தூக்கி இயந்திரத்தில் வேலை செய்யும்பொழுது திரு ஏ. நாகராஜன் என்ற கூலித் தொழிலாளி தவறி விழுந்து மரணம் அடைந்தார். அவர் தனியார் நிறுவனத்தில் பணியாற்றி இறந்து போனதால், அவருக்கு அரசு நிவாரணம் கிடைப்பதற்குச் சட்டத்தில் வகை இல்லாதபோதும், அன்னாரது மனைவியின் வறுமை நிலையை அறிந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள், அன்னாரின் மனைவிக்குச் சிறு பெட்டிக் கடை வைக்க முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.10,000 வழங்க ஆணையிட்டுள்ளார்.

• சென்னை நகரில் ஜரினா பேகம் என்ற மூன்று வயதுச் சிறுமி மீது மாட்டு வண்டி மோதி, அந்தச் சிறுமி இறந்து போனாள். மாட்டுவண்டி மோதி ஏற்படும் விபத்தில் உயிரிழந்தோரின் வாரிசுதாரர்களுக்கு நிவாரண உதவி பெறும் தகுதி இல்லை. இருப்பினும், மாண்புமிகு முதல்வர் அவர்கள், அந்தச் சிறுமியின் பெற்றோர்கள் அளித்த மனுவினைக் கருணையுடன் பரிசீலித்து முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1000 வழங்குவதற்கு உத்தரவிட்டுள்ளார்.

• சென்னை, கிழக்கு முகப்பேறு, ஜெயலலிதா நகரைச் சேர்ந்த சந்திரா - தங்கம் என்ற தம்பதியர் அவர்களுடைய நான்கு வயதுக் குழந்தை வெண்ணிலா மிகவும் ஊனமுற்ற நிலையில் இருப்பதாகவும், அந்தக் குழந்தையைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும், மருத்துவச் சிகிச்சை அளிக்கவும் ஏதாவது உதவி வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு மனுக் கொடுத்து இருந்தார்கள்.

சிறுமி வெண்ணிலாவின் நிலைமையைக் கேட்டறிந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அந்த ஊனமுற்ற சிறு குழந்தையின் எதிர்காலத்தைக் கருதி அக்குழந்தைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500-ஐ முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து அதன் ஆயுட்காலம் முழுவதும் வழங்க ஆணையிட்டார்.

• கன்னியாகுமரி மாவட்டம் குட்டக்குளி என்னும் இடத்தில் ஏற்பட்ட சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். அந்த 3 குடும்பத்தினரின் வறுமை நிலையை அறிந்து, ஒவ்வொரு குடும்பத்திற்கும் 'முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து' ரூபாய் பத்தாயிரம் வழங்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்.

• நீலகிரி மாவட்டம் மஞ்சூரில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இறந்துபோன மணி என்பவரின் குடும்பத்திற்கு அரசின் சார்பில் ரூ.15,000 ஏற்கெனவே வழங்கப்பட்டது. திரு மணி அவர்களின் தாயார் திருமதி கருப்பாயாள் தனது குடும்பத்தைச் சார்ந்த ஒருவருக்கு அரசாங்க வேலை வேண்டி, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கோரிக்கை மனு ஒன்றை அளித்திருந்தார். திருமதி கருப்பாயாள் அவர்களின் கோரிக்கை மனுவினைக் கருணையுடன் பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவரது குடும்பத்தைச் சார்ந்த தகுதியுள்ள ஒருவரை அரசுப் பணியில் உடனடியாக அமர்த்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

• சிதம்பரனார் மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், நடுநாலுமுலைக்கிணறு கிராமத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த கீழ்க்கண்ட 8 நபர்கள், வேலைக்குச் செல்ல இயலாததால் அவர்களின் குடும்பம் படும் துயரை நீக்க, மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைப்படி, அவர்களின் குடும்பம் ஒவ்வொன்றிற்கும் ரூ.5,000- மாண்புமிகு தமிழக முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

செல்வி முத்துக்கனி, செல்வி முத்துக்குமாரி, திரு சுப்பிரமணியன், திரு முத்துராஜ் சிவன், திரு வெள்ளத்துரை, திரு சுகுமார், திரு கணேசன், திரு அழகன்.

மேலும், அந்தத் துப்பாக்கிச் சூட்டில் காயம் அடைந்த 8 நபர்களும் அவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை போதவில்லை என்றும், மேலும் பொருள் உதவி வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மனு கொடுத்திருந்தனர். அந்த மனுவினைக் கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், காயமுற்ற அனைவரும் நிரந்தர வருமானம் இல்லாத ஆதிதிராவிட விவசாய ஏழைக்கூலிகள் என்பதனால் அக் குடும்பங்களின் துயரைக் களைய மேலும் அக்குடும்பத்தினர்களுக்குத் தலா ரூ.5,000-ஐ முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணையிட்டுள்ளார்.

• நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா அக்கரைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த கீழ்க்கண்ட 7 மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் மீண்டும் கரைக்குத் திரும்பவில்லை.

இராமச்சந்திரன், ஆனந்தவேல், குட்டியாண்டி, பாலையன், இராசக்கண்ணு, பழனியாண்டி, சுப்பிரமணி.

அம் மீனவர் குடும்பங்களின் அவல நிலையை அறிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், அம் மீனவர் குடும்பம் ஒவ்வொன்றிற்கும் தலா ரூ.5,000 முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க உத்தரவிட்டுள்ளார்.

• புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இறந்த செல்வி மதலைமேரியின் குடும்பத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே ரூ.10,000 நிதியுதவி வழங்க உத்தரவிட்டார்.

இறந்துபோன செல்வி மதலைமேரியின் தாயார் திருமதி எலிசபெத் அவர்கள், தான் எந்த வருமானமும் இல்லாமல் வறுமை நிலையில் மிகவும் கஷ்டப்படுவதால், மேலும் நிதி உதவி அளிக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கோரிக்கை மனு ஒன்றை அளித்திருந்தார். அவரது மனுவினைக் கருணையோடு பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேலும் ரூ.5,000-ஐ செல்வி மதலைமேரியின் தாயார் எலிசபெத்திற்கு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்குவதற்கு ஆணையிட்டுள்ளார்.

• கர்நாடக மாநிலத்தில் ஏற்பட்ட கலவரத்தில் தமிழர்கள் தங்கள் உடைமைகளை இழந்து உயிருக்குப் பயந்து அகதிகளாகப் பெரியார் மாவட்டத்தில் தஞ்சம் புகுந்தனர். சுமார் 683 கர்நாடகத் தமிழர்கள் இன்றும் அகதிகளாகப் பெரியார் மாவட்டத்தில் இருந்து வரும் நிலைமையைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களின் துயரைக் களைந்து மறுவாழ்வு அளிப்பதற்கு ரூ.34,66,000-ஐ கர்நாடகத் தமிழக மறுவாழ்வு நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளார்.




### படித்த வேலைவாய்ப்பற்ற

# ஒரு இலட்சத்து 33 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை!

### மாண்புமிகு முதல்வர் ஆணை

**மா**ண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பள்ளி சாராக் கல்வி மற்றும் குடியினால் விளையும் கேடுகளைப் பிரச்சாரம் செய்வது குறித்து ஒரு புதிய திட்டத்தைச் சட்டமன்றப் பேரவையில் அறிவித்து இருந்தார். இத்திட்டத்திற்கு ஒப்புதலளித்து 9.6.93 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த 'படித்தோர் தன்னார்வத் தொண்டு பணித் திட்டம்' தற்போது நடைமுறையில் உள்ள வேலை வாய்ப்பற்றோருக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்தியும், மேம்படுத்தியும் நடைமுறைப் படுத்தப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதால் தற்போதுள்ள வேலைவாய்ப்பற்றோருக்கு நிவாரணம் வழங்கும் திட்டம் நிறுத்தப்படும். இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன:-

1. அனைவர்க்கும் தொடக்கக் கல்வி எனும் இலக்கை அடைவது.
2. மதுவின் தீமைகள் குறித்து தொடர்ந்து பிரச்சாரம் செய்வது.
3. சமுதாயத் தொண்டாற்றும் ஏராளமான படித்த வேலையற்றோருக்குத்தற்காலிக உதவி வழங்குவது.

எஸ்.எஸ்.எல்.சி/பிளஸ்-2/பட்டப் படிப்பு முடித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 1.4.93 வரை 5 ஆண்டுகள் அல்லது அதற்குமேல் ஆகியுள்ளவர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் தன்னார்வத் தொண்டர்களாகப் பணியாற்றத் தகுதியுள்ளவர்களாவார்கள்.

இவர்களின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000-த்திற்கு மேற்படாமலும், வயது 1.4.93 வரை 35-க்கு குறைவாகவும் இருக்க வேண்டும். ஏற்கெனவே வேலை வாய்ப்பற்றோருக்கான நிவாரண உதவியினைத் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பெற்றவர்கள் இந்தத் திட்டத்தில் பணியாற்ற இயலாது.

இத்திட்டத்தில் சேரத் தகுதியுள்ளவர்கள் தங்களுடைய பெயர்களைத் தாங்கள் நிரந்தரமாக வசித்து வரும் எல்லைக்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளலாம். நகர்ப்புறப் பகுதியில் வசிப்பவர்கள். நகராட்சி/மாநகராட்சி ஆணையர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

ஊராட்சி/நகராட்சி/மாநகராட்சி ஆகியவற்றுக்கு இந்தத் தன்னார்வத் தொண்டர்கள் தேர்ந்தெடுக்கப் படுவர். 500 நபர்கள் கொண்ட ஒவ்வொரு பகுதிக்கும் ஒருவர் பயிற்றுவிப்போராகத் தேர்ந்தெடுக்கப் படுவர். மொத்த எண்ணிக்கை மக்கள் தொகைக்கு ஏற்ப அமையும். மக்கள் தொகை 500-க்குக் குறைவாகவும், 400-க்கு அதிகமாகவும் உள்ள பகுதிகளுக்கு ஒரு பயிற்றுவிப்போர் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொரு தன்னார்வப் பயிற்றுநரும் பள்ளிப் படிப்பை இடையிலேயே நிறுத்திய 10 முதல் 20 நபர்களுக்குப் பயிற்சி அளிப்பார்கள். இந்தத் தன்னார்வத் தொண்டர்களைத் தேர்வு செய்யும்போது சம்பந்தப்பட்ட பகுதிகளில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தன்னார்வத் தொண்டு புரியத் தேர்ந்தெடுக்கப்படுவோர்க்கு மதுவிலக்குப் பிரச்சாரம் மேற்கொள்வது குறித்து முதலில் பயிற்சி அளிக்கப்படும். இந்தப் பயிற்சி முறை மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையினரால் வரையறுக்கப்படும். பின்னர் இவர்களுக்குப் பள்ளி சாராக் கல்வி குறித்தும் பயிற்சி அளிக்கப்படும். இதற்கென ஒரு பணிக்குழு அமைக்கப்படும்.

ஒவ்வொரு தன்னார்வப் பயிற்றுநருக்கும் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை மதிப்பூதியம் வழங்கப்படும். இந்த ஊதியம் பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்தியவர்களின் எண்ணிக்கைக் கணக்கிற்கேற்ப வழங்கப் படும். எஸ்.எஸ்.எல்.சி.வரை படித்த பயிற்றுநர் பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்திய 10 பேர்களுக்கும், பிளஸ்-2 படித்த பயிற்றுநர் பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்திய 15 பேர்களுக்கும், பட்டப் படிப்புப் படித்த பயிற்றுநர்கள் பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்திய 20 பேர்களுக்கும் கல்வி பயிற்றுவிப்பார்கள். இருமாதங்களுக்கொரு முறைவழங்கப்படும் இந்த மதிப்பூதியம் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு ரூ.150 என்ற அளவிலும், பிளஸ்-2 படித்தவர்களுக்கு ரூ.225 என்ற அளவிலும், பட்டதாரிகளுக்கு ரூ.300 என்ற அளவிலும் வழங்கப் படும். தங்களிடம் படிப்பவர்களின் எண்ணிக்கையினை அவர்கள் தொடர்ந்து குறையாமல் அதே அளவில் இரண்டு மாத காலங்களுக்குப் பார்த்துக் கொள்வதற்கேற்ப இந்த மதிப்பூதியம் கணக்கிட்டு வழங்கப்படும்.

இந்தத் திட்டம் மூன்று ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு நல்லமுறையில் தேறி வெளிவரும் குழந்தைகள் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன்மூலம் 6 முதல் 14 வயது வரை உள்ள 15 இலட்சம் குழந்தைகளுக்குக் குறுகிய காலத்தில் படிப்பறிவு அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு ஏறத்தாழ 16 கோடி ரூபாய் செலவாகும். ஒரு இலட்சத்து 33 ஆயிரம் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள். இத்திட்டத்தினால் பயன் பெறுவர்.

TNSC BANK

## The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 1.3.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25 % w.e.f. 1.7.93 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 11.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 11.00% |
| | For 1 YEAR and above | 11.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE




# ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு கிராமப்புற விளையாட்டு மையம் ஏற்படுத்தப்படும்!

## விளையாட்டு வீரர்களுக்கு விருது வழங்கும் விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

அனைத்துத் துறைகளிலும் மேலோங்கி நிற்கும், தமிழகம் உருவாக்கிய தலைசிறந்த விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் பாராட்டி, அவர்களின் திறமைகளைப் போற்றி, அவர்களைப் பெருமைப்படுத்துவதற்காக நடைபெறுகின்ற, இந்த இனிய விழாவில் பங்கேற்று, உங்கள் அனைவரையும் சந்திப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த விழா, தமிழக விளையாட்டுத் துறையின் வரலாற்றில் ஒரு மைல் கல்; ஒரு திருப்பு முனை.



சாதனைகளை ஏற்படுத்தி, தமது சொந்த மாநிலத்திற்கும், தாய்நாட்டிற்கும், பெருமையினைத் தேடித் தந்துள்ள விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும், தமிழக மக்களின் சார்பாகப் பாராட்ட, அரசு நடத்தும் ஏற்றமிகு விழா இது. சாதனையாளர்களின் சாதனைகளைப் போற்றுவது, இந்த விழாவின் ஒரு முக்கிய குறிக்கோளாக இருப்பினும், அத்தகைய சாதனைகள் மென்மேலும் முறியடிக்கப்பட்டு, அகில இந்திய விளையாட்டு அரங்கிலும், சர்வதேச விளையாட்டு அரங்கிலும், புதிய சாதனைகளையும், சிறப்புக்களையும், தமிழகத்து விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் படைக்க வேண்டும் என்ற, நம் அனைவரின் எதிர்பார்ப்பையும், அவாவையும் வெளிப்படுத்தவும், வளர்ந்துவரும் இளைய சமுதாயத்தின் ஆற்றலை, நெறிப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திலும் தான், இத்தகைய விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

இளைய சமுதாயத்தின் எண்ணத்திலும், வாழ்விலும், மன எழுச்சியையும், மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தும் சக்தி, மற்றெந்தத் துறையையும்விட விளையாட்டுத் துறைக்குத் தான் உண்டு. மனித சக்தியின் மகத்தான, உடல் மற்றும் மன ஆற்றலை, வெளிப்படுத்தும் அற்புதமான கருவி, விளையாட்டுத் துறை என்பதை உணராதவர் மிகச் சிலரே. விளையாட்டில் ஈடுபாடு இல்லாத இளமைக் காலம், வளமான எதிர்கால வாழ்க்கைக்கு அடிகோலாது.

"There is something wrong with the young chap who doesn't play games"

என்று ஓர் அறிஞர் குறிப்பிடுகின்றார்.

எங்கே காட்டாறு போன்ற இளமையின் வேகம், விளையாட்டு மைதானம் என்ற ஆரோக்கியமான மேடையில், போட்டி என்ற பயிற்சியால், சீர்படுத்தப்படுகின்றதோ, நெறிமுறைப் படுத்தப்படுகின்றதோ, அங்கேதான், வெற்றி தோல்வியினைச் சமமாகக் கருதும் உயர்ந்த மன நிலையும், தொடர்ந்து பாடுபட்டு வெற்றி பெற வேண்டும் என்ற மனத் திடமும் உண்டாகும். சிறு வயதில் விளையாட்டு மைதானங்களில் ஏற்படும் பக்குவம் தான், நமது எதிர்கால வாழ்க்கையின்



பல்வேறு கட்டங்களில், எழும் முக்கியப் பிரச்சினைகளைத் தெளிவான சிந்தனையுடன் எதிர்கொள்ளும் ஆற்றலை நமக்குத் தருகின்றது என்பதை, யாரும் மறுக்க முடியாது.

என்னுடைய பள்ளிப் பருவத்திலே, நான் கல்வியில் மிகுந்த ஈடுபாட்டுடன் இருந்தபோதும், விளையாட்டுத் துறையை ஒதுக்கவில்லை. பல விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டு, பல பரிசுகளை வென்றிருக்கின்றேன். கல்வியிலும், விளையாட்டிலும் சமமான ஆர்வத்தைக் காட்டியதால் தான், ''பள்ளியின் சிறந்த ஆல்ரவுண்டர்'' என்ற விருதினை நான் பெற முடிந்தது. அந்த இனிய நினைவுகள் எனது மனதில் இன்றும் பசுமையாக உள்ளன.

விளையாட்டுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கும் கல்வி முறையே, சிறந்ததாக இருக்க முடியும் என்பதே, எனது ஆணித்தரமான கருத்து. விளையாட்டுக்கு ஒரு முக்கியமான இடத்தைக் கொடுக்கும் கல்வி முறை தான் முழுமையானதாக இருக்க முடியும். ஒரு குழந்தை, தான் பிறந்த நாள் முதல், 6 ஆண்டுக் காலம் வரை, மற்றெந்த சூழ்நிலைகளையும்விட, விளையாட்டுச் சூழ்நிலையில் தான், அதிகமான அளவில், தன்னைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி கற்றுக்கொள்கிறது என்று, உளவியல் அறிஞர்கள் கண்டறிந்துள்ளார்கள். இந்த முறையில், குழந்தைப் பருவத்தில் முக்கியத்துவம் பெறுகின்ற, விளையாட்டு என்கின்ற அம்சம், நமது வாழ்நாள் முழுவதும், விளையாட்டுப் போட்டிகள், உடற்பயிற்சி என்று பல வழிகளில் நமக்கு உடல் ஆரோக்கியத்தையும், மன எழுச்சியையும் அளிப்பதை நாம் காண்கிறோம்.

நல்ல நாகரீகத்தையும், பண்பாட்டையும், உலகத்திற்கு ஈந்த தமிழர்கள், விற்பயிற்சி, வாள் பயிற்சி, வேல்பயிற்சி மற்றும் மல்யுத்தம் போன்ற வீர விளையாட்டுகளிலும், குதிரையேற்றம், சதுரங்கம், பந்தெறிதல் போன்ற பல வகையான விளையாட்டுகளிலும், மிக்க ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதை, தமிழ்ப் பேரிலக்கியங்கள், குறிப்பாக ''சிலப்பதிகாரம்'', ''திருக்குற்றாலக் குறவஞ்சி'' போன்றவை, எடுத்து உரைக்கின்றன. அது மட்டுமல்ல, பெண்களும், விளையாட்டிலும் உடற்பயிற்சியிலும் கொண்டிருந்த ஆர்வத்தை, 'திருக்குற்றாலக் குறவஞ்சி' என்ற காவியத்தில் இருந்து, நாம் அறிந்துகொள்ள முடிகின்றது.

கிரேக்கர்கள் 'ஆரோக்கியமான உடலே, ஆரோக்கியமான மனதிற்கு வழி வகுக்கும்' - அதாவது, A sound mind in a sound body என்ற கொள்கையைத், தீவிரமாகக் கடைப்பிடித்தார்கள். உடலைப் பேணிக் காப்பதில் அவர்கள் காட்டிய ஆர்வம், இன்றும் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும் என்ற உண்மையை, நாமும் உணர்ந்தாக வேண்டும்.

விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் சாதனைகளைப் பாராட்டி, மகிழ்ச்சி அடையும் அதே நேரத்தில், இன்னும் சர்வதேச விளையாட்டு அரங்கில், நமக்கு உரிய இடத்தை நாம் பெறவில்லையே என்ற ஆதங்கமும், மனதில் ஏற்படுகிறது. பல விளையாட்டுகளில், இறுதிப் போட்டிக்குச் செல்லும் நிலையை அடையாமல், ஆரம்ப கட்டத்திலேயே நாம் தேங்கி விடுவதன் காரணத்தை, ஆராய்ந்து பார்க்கும்போது,

— சர்வதேச தரத்திற்கான பயிற்சி மிகக் குறைவாக இருப்பது

— சர்வதேச போட்டிகளில் அதிக அளவில் பங்கேற்காமை

— அடைந்தே தீருவோம் என்ற மனப்பான்மையில் குறைபாடு,

அதாவது killer instinct இல்லாத குறைபாடு ஆகிய மூன்று அம்சங்களில், நம்மவரிடையே தகுதிக் குறைவு இருப்பது, தெரிய வருகிறது.

இந்த மூன்று தேவைகளையும் பூர்த்தி செய்து, நமது விளையாட்டு வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் அந்தந்தத் துறைகளில் பயிற்சி அளித்தால், சர்வதேச விளையாட்டு அரங்கங்களில், நமக்கென ஒரு தனி இடத்தை நாம் பெறும் நாள், வெகு தூரத்தில் இல்லை என்பதை, நான் உறுதியோடு நம்புகிறேன்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, அத்தகைய குறிக்கோள்களோடு, தமிழக விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும், உன்னதமான நிலையை அடைவதற்கு, உகந்த சூழ்நிலைகளை உருவாக்க, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். அவற்றில் மிக முக்கியமானது, அண்மையில் Sports Development Authority of Tamil Nadu - தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் என்ற அமைப்பினை உருவாக்கியது ஆகும். இத்தகைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளால், பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக, இந்த அரசு செயலாற்றும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விளையாட்டுத் திறனை வளர்த்துக்கொள்ள, நகர்ப்புறங்களில் மட்டுமின்றி, கிராமப்புறங்களிலும் விளையாட்டு அரங்கம், உடற்பயிற்சி நிலையம், என்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்

## விளையாட்டு வீரர்களுக்கு விருது வழங்கும் விழா

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் விளையாட்டு வீரர்களுக்கு விருது வழங்கும் விழா 17.7.93 அன்று கலைவாணர் அரங்கில் சிறப்புற நடைபெற்றது. மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு, விளையாட்டு வீரர்களுக்கு விருதுகளையும், ரொக்கப் பரிசுகளையும் வழங்கினார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. பொன்னுசாமி அவர்கள் வரவேற்றுப் பேசுகையில், ''நேரு ஸ்டேடியம் அருகில் நீச்சல்குளம், சைக்கிள் போட்டி களம், உடற்பயிற்சி களம் ஆகியவை அடங்கிய விளையாட்டு வளாகத்தைப் புரட்சித்தலைவி பெயரில் உருவாக்க இருப்பது, அவர் விளையாட்டுத் துறையின் காவல் தெய்வம் என்று நிருபிக்கிறது. விளையாட்டுத் துறையின் கற்பக விருட்சமாகத் திகழும் முதல்வர் விளையாட்டுத் துறைக்கு உரிய முக்கியத்துவத்தைக் கொடுத்து, அந்தத் துறைக்கு உயிரூட்டிய மாமருந்தாவர்'' என்றார்.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில்,

கல்வியில் தமிழ், ஆங்கிலம் மற்றும் சில பாடங்கள் இருப்பதைப் போல, விளையாட்டையும் கட்டாயப் பாடமாக வைத்து, விளையாட்டுப் பாடத்திலும் தேர்ச்சி அடைந்தால்தான், அவர்கள் மேல் வகுப்புக்குச் செல்ல வேண்டும் என்ற நிலை- உருவாக வேண்டும்.

6 கோடி மக்கள் தொகை கொண்ட தமிழகத்தில் கிராம அளவில் 10 இலட்சம் பேராவது விளையாட்டில் ஈடுபட்டால்தான் உலக அளவில் 5 வீரர்களாவது தமிழகத்தின் சார்பில் பங்குபெறும் நிலை உருவாகும்'' என்றார்.

1990-இல் நடந்த 11-வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் கபடி அணியில் தங்கப்பதக்கம் பெற்ற எஸ். ராஜரத்தினத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒரு இலட்ச ரூபாயும், விருதும் விழாவில் வழங்கினார். கீழ்க்கண்ட விளையாட்டு வீரர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விருதுகளையும் ரொக்கப் பரிசுகளையும் வழங்கினார்.

திருமதி அனுராஜூ - (கேரம்), திரு மரிய இருதயம் - (கேரம்), திரு ஆரோக்கியராஜ் - (கேரம்) ஆகிய இம்மூவருக்கும் விருது மற்றும் ரூ.15 ஆயிரம் ரொக்கம் வழங்கப்பட்டது.

திரு எஸ்.ஏ. மது - (கைப்பந்து), திரு ஏனஸ்டு அமீர்பாபு - (கைப்பந்து), திரு டி.சி. ஜோதிஷ் - (கைப்பந்து), திரு எ. சிவராமன் - (கைப்பந்து), திரு செந்தூரீஸ்வரன் - (கூடைப்பந்து), திரு ஜெய்சங்கர் மேனன் - (கூடைப்பந்து), திரு கே. பாதர் - (பளுதூக்குதல்), திரு பொ. ரங்கசாமி - (பளுதூக்குதல்), திரு என். சம்பத் - (பளுதூக்குதல்), திரு எஸ். பிச்சையா - (பளுதூக்குதல்), திரு சபாஸ்டியன் சேவியர் - (நீச்சல்), திரு சனல்குமார் - (நீச்சல்), திரு சுரேஷ்குமார் - (நீச்சல்) இவர்களுக்கு விருது மற்றும் ரூ.10 ஆயிரம் வழங்கப்பட்டது.

திரு. விஸ்வநாதன் ஆனந்த் (சதுரங்கம்), வியாண்டர் பயஸ் (டென்னிஸ்), திரு. ஆர். சந்திரசேகர் (பளுதூக்குதல்), திரு. ரமணராவ் (கைப்பந்து) ஆகியோரும் இந்த விருது பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் அடங்குவர்.

விளையாட்டுத்துறை காலண்டரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர் சிவந்தி ஆதித்தன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

முன்னதாக, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர் திரு. சிவந்தி ஆதித்தன் அவர்கள் வாழ்த்திப் பேசினார். இறுதியில் கல்வித்துறைச் செயலர் திரு. சங்கரசுப்பையன், இ.ஆ.ப. அவர்கள் நன்றி நவின்றார்.

—நிகழ்ச்சித்தொகுப்பு:
கரு. சண்முகசுந்தரம்



தவும், விளையாட்டுத் திறன் படைத்த இளைஞர்களை இனங்கண்டு, அவர்களைத் தெரிந்தெடுத்து, குறிப்பிட்ட துறைகளில் தனிப் பயிற்சி அளிக்கவும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு கிராமப்புற விளையாட்டு மையம், ஒரு Rural Sports Centre ஏற்படுத்தப்படும்.

ஏழை மாணவ மாணவ மாணவிகளுக்கு, இலவச விடுதி வசதியும், கல்வி உதவித் தொகையும், வழங்கப்பட்டு வருவதைப் போல, விளையாட்டில் ஆர்வம் காட்டி, திறமைகளை வெளிப்படுத்தும் மாணவ-மாணவிகளுக்கெனத் தனியே, ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடத்திலும், ஒரு விளையாட்டு விடுதி, ஒரு Sports Hostel ஏற்படுத்த, இந்த அரசு தீர்மானித்துள்ளது. இந்த விடுதிகளில் தங்கிப் பயில்பவர்களுக்கு, சத்தான உணவு, விளையாட்டுகளில் தனிப்பயிற்சி, சிறப்பு மருத்துவ வசதி போன்றவை வழங்கப்படும்.

வயதான நிலையில், வறுமையில் வாடும் விளையாட்டு வீரர்களுக்கு, இதுவரை மாதாந்திர உதவித் தொகை, 75 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. முதிர்ந்த விளையாட்டு வீரர்கள் பெறும் **இந்தத் தொகை, 75 ரூபாயிலிருந்து, 500 ரூபாயாக** உயர்த்தி வழங்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பாராட்டும் பரிசும், கலைத்துறை, கல்வித் துறைக்கு மட்டுமல்லாமல், விளையாட்டுத் துறைக்கும் உரித்தானது. ஒவ்வொரு ஆண்டும் சிறந்த விளையாட்டு வீரர்களில், ஆண்கள் இருவருக்கும், பெண்கள் இருவருக்கும், விருதுகளுடன் தலா ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கும் திட்டத்தையும் செயல்படுத்த, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முதல் கூட்டத்திலேயே முடிவெடுக்கப்பட்டுள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி, இந்த அரசு பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற நேரத்தில், அரசினுடைய முயற்சிகளோடு, தனியார் துறையினரும், பெரிய தொழில் நிறுவனங்களும், இந்த ஆணையத்துடன் தங்களை இணைத்துக் கொண்டு, விளையாட்டு வளர்ச்சிக்குப் பாடுபட, முன்வர வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன். அத்தகைய நிறுவனங்கள், தங்களுக்குப் பிடித்தமான விளையாட்டுப் பிரிவுகளைத் தேர்ந்தெடுத்து, விளையாட்டு வீரர்கள் - வீராங்கனைகளுக்குச் சர்வதேச அளவிலான பயிற்சி அளித்து, போட்டிகளுக்கு அனுப்பி வைத்து, ஊக்குவிக்க வேண்டும். இத்தகைய கூட்டு முயற்சிகளில், நாம் இணைந்து ஈடுபடுவோமானால், Asian Games, Olympics போன்ற போட்டிகளில், தமிழகம் பல பதக்கங்களை வெல்லும் நாள், வெகு தூரத்தில் இல்லை என்பதை, இங்கே உறுதியோடு கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

என் அன்பிற்குரிய தமிழகத்து மாணவ மாணவியரே, இளைய தலைமுறையின் இளவல்களே! உங்கள் அனைவருக்கும் ஒரு செய்தியை நான் இந்தத் தருணத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். நீங்கள் அனைவரும், நீங்கள் பயின்று வரும் விளையாட்டுப் பிரிவுகளில், உங்கள் சாதனைகளை, இன்று விருதுகளைப் பெறும் வீரர் விராங்களைகளைப் போன்று, தேசிய, சர்வதேசத் தரத்திற்கு உயர்த்திக்கொள்ள, முன்வர வேண்டும். அதற்கான முயற்சிகளில் நீங்கள் ஈடுபாட்டோடும், உண்மையோடும், தமிழகத்திற்கும் நாட்டிற்கும் புகழை ஈட்டித் தரும் வண்ணமும், செயல்பட முன்வருவீர்களேயானால், அரசு சமீபத்தில் ஏற்படுத்தி உள்ள 'தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு'க் கடிதம் எழுதுங்கள். நிச்சயமாக, தகுதியும் ஆர்வமும் இருப்பவர்களை, Olympics தரத்திற்கு உயர்த்தி, தமிழகத்திற்குப் பெருமை சேர்க்க, இந்த அரசு பாடுபடும் என்ற உறுதியை, உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில், நான் மிக்க மனநிறைவு அடைகின்றேன்.

இன்று விருதுகளையும் பதக்கங்களையும் பெறும், நமது தமிழகத்து விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும், நமது தமிழகத்திற்கும் தாய் நாட்டிற்கும் சிறப்பும் சேர்க்கும் பணியில், அயராது பாடுபட்டதால் தான், நம் அனைவரின் பாராட்டுக்களையும் பெற்று, புகழோடு திகழ்கின்றனர். இவர்கள் அனைவரும், இதுவரைப் படைத்தவை சாதனைகளாகவும், இனிமேல் படைக்கப்போவது, 'சரித்திரங்களாகவும் மலர வேண்டுமென வாழ்த்துவதில், மகிழ்ச்சியும், மனநிறைவும் அடைகின்றேன். இந்தச் சாதனை வீரர் வீராங்கனைகளின், முயற்சிகளும் சாதனைகளும், இளைய தலைமுறையினருக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் என்று நம்புகின்றேன்.

விருது பெறும் சாதனையாளர்கள் அனைவருக்கும், தமிழக மக்கள் சார்பாகவும், எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.



# 'தனி மனிதர்கள் நலத்தைவிட, அமைப்பின் நலம், தொழிலின் நலம், பொது நலம் இவைதாம் முக்கியம்!'

## —மாண்புமிகு முதல்வர் உரை

**திரைப்படத் தொழிலில்
தயாரிப்பாளர்களுக்கும்,
நடிகர்களுக்கும்,
விநியோகஸ்தர்களுக்கும் ஏற்பட்ட
கருத்து வேறுபாடுகளைக் குறித்து,
முதலமைச்சர் அவர்கள் 21.6.1993
பேச்சுவார்த்தை நடத்தித் தகராறைத்
தீர்த்து வைத்து ஆற்றிய உரை:**

சமீப காலமாகத், திரைப்படத் தொழிலில் விநியோகஸ்தர்களுக்கும், ஏனைய சாராருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக, புதிய படங்கள் எடுப்பதும், விநியோகிப்பதும், வெகுவாகக் குறைந்து, திரைப்படத் தொழிலே ஒரு தேக்க நிலைக்கு வந்து ஸ்தம்பித்து விட்டது. இதனால் பல்வேறு தீய விளைவுகள் நிகழ்ந்து விட்டன என்றெல்லாம் இங்கே கூறினீர்கள். அது உண்மை தான்.

இத்தொழிலை நம்பி வாழும், பல்லாயிரக்கணக்கான தொழிலாளப் பெருமக்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள் வேலையின்றித் தவித்து, பிழைப்பின்றிப் பேதலித்ததை, நான் ஏற்கெனவே நன்கறிவேன். இத்தொழிலை நம்பியவர்களுக்கு, பெருத்த நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதும் உண்மையே. அரசுக்கு இந்த வகையில் கிடைக்க வேண்டிய வருவாய், வெகுவாக்க் குறைந்திருக்கிறது. இன்னொரு கோணத்தில் பார்த்தால், திரைப்பட ரசிகர்கள், போதிய படங்கள் இன்றி ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இந்தப் பிரச்சினை, இன்னும் பூதாகரமாக உருவெடுக்குமுன் அரசே தலையிட்டுத் தீர்த்து வைக்க முன் வந்துள்ளது. அந்த வகையில் தான், முத்தரப்பினரையும், கலைஞர்களையும், நடிகர்களையும் கூட்டி, இப்படி ஒரு சமரசப் பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்யச் சொன்னேன். பொதுவாக, உங்களின் பிரச்சினையை, நீங்களே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே என் ஆசை. அது முடியாத போது தான், நீங்களும் அரசை அணுக வேண்டும்; அரசும் தலையிட்டு உதவ வேண்டும்.

இந்த அரசைப் பொறுத்த வரையில், நான் முதலமைச்சராய் பொறுப்பேற்ற உடன், உங்கள் அனைவரையும், 20.8.1991 அன்று இதே இடத்தில் அழைத்து, உங்களுக்கு உள்ள பிரச்சினைகளை எல்லாம் கேட்டு, பின்னர் அவற்றில் பலவற்றிற்கு, 25.7.1992-இல் நடந்த பாராட்டு விழாவில் தீர்வு கொடுத்தேன். பல்வேறு சலுகைகளையும், உரிமைகளையும் வழங்கினேன். குறைந்த முதலீட்டில் எடுக்கும் படத்திற்கான மானியம் உயர்த்தப்பட்டது. அவ்வாறு மானியம் வழங்கப்படும் படங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டது. சிறந்த படத்தைத் தேர்ந்தெடுக்கும் குழுவில், பெடரேஷனுக்குப் பிரதிநித்துவம் கொடுக்கப்பட்டது. ஸ்லைடுகளுக்கு உள்ள வரி நீக்கப்பட்டது. திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள 24 Craft தொழிலாளர்கள், விபத்திற்குள்ளானால், விபத்து நிவாரண உதவித் தொகை வழங்க உத்தரவிடப்பட்டது. மண்டலத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவில், பெடரேஷனுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது.

திரையரங்குக் கட்டணம் உயர்த்தப்பட்டது. திரையரங்குகளுக்குப் பராமரிப்புக்கென, டிக்கெட் கட்டணத்தில் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டது.

இதை அடுத்து டிசம்பர் 1992-இல் விநியோகஸ்தர்களுக்கும், திரையரங்கு உரிமையாளர்களுக்கும் ஏற்பட்ட பிரச்சினையில், ஒரு சில நாட்கள் திரையரங்குகள் மூடப்பட்ட நிலையில், என்னுடைய ஆலோசனையின் பேரில், உள்துறைச் செயலாளர், பேச்சு வார்த்தை நடத்தி 11.1.1993-இல் சுமூகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

இப்போது விநியோகஸ்தர்கள் ஒரு புறமாகவும், மற்ற அனைவரும் ஒரு புறமாகவும் திரண்டு, இந்தத் தகராறில் நின்று கொண்டிருக்கிறீர்கள். பிரபல நடிகர்களும், இயக்குநர்களும் வந்திருக்கிறார்கள். அவர்களும் பிரச்சினையில் சம்பந்தப்பட்டுவிட்டார்கள். இரு தரப்பிலிருந்தும் பலபேர் பேசினீர்கள். அவரவர் கருத்தைத் தெளிவாக எடுத்துச் சொல்லி, தத்தம் பக்கம் உள்ள நியாயத்தை, நன்கு வலியுறுத்தியிருக்கிறீர்கள். இந்தத் துறையில், எனக்கும் நீண்ட நெடிய தொடர்பு

உள்ள காரணத்தால், பிரச்சினை களின் கூறுகளை, நுணுக்கங்களை, அதில் உள்ள நியாய அநியாயங் களை, என்னால் எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது. இந்த சமரசப் பேச்சுக்கு, நான் அழைத்த உடன் வருகை தந்து, கலந்துகொண்டு, இது வரை ஒத்துழைப்பு தந்து, இனியும் ஒத்துப்போக ஒப்புதல் அளித்த உங்கள் அனைவரையும் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

எந்த ஒரு சிக்கலுக்கும், ஏதாவது ஒரு மட்டத்தில், ஏதாவது ஒரு காலக்கட்டத்தில், தீர்வு ஏற்பட்டே ஆக வேண்டும். அப்படிப்பட்ட நிலை தான், இன்றைக்கு வந்திருக் கிறது என்று கருதுகிறேன்.

திரைப்பட்த் துறையைப் பொறுத்த வரையில், தயாரிப்பாளர்கள், விநி யோகஸ்தர்கள், திரையிடுவோர் ஆகிய மூன்று சாராரும், அத் தொழிலின் முக்கிய முதுகெலும் புகள். இவர்களில் யார் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேச்சுக்கே இட மில்லை. மூவரும், அவரவருக்குரிய எல்லைக் கோட்டைத் தாண்டாமல், அடுத்தவர் எல்லையில், உரசாமல் செயல்படும் சூழ்நிலை தான், ஆரோக்கியமான, அருமையான சூழ்நிலையாக இருக்க முடியும். இதைத் தான் இந்த அரசு எதிர் பார்க்கிறது; விரும்புகிறது. யாரும், யார் மீதும் ஆதிக்கம் செலுத்தி அழுத்துவதை; சுமூக சூழ்நிலையை, நல்லுறவைப் பாதிப்பதை, இந்த அரசு விரும்பவில்லை.

தனி மனிதர்கள் நலத்தைவிட, அமைப்பின் நலம், தொழிலின் நலம், பொது நலம், இவை தாம் முக்கியம். Conflict of interest-ஐ விடுத்து, Commonality of interest பார்க்கப்பட வேண்டும். எனவே, சுருங்கச் சொன்னால், உங்களுக்குள் உள்ள வேறுபாடுகள், மாறுபாடுகள் மறைந்து, உறவு தழைத்து, அது நல்லுறவாக மலர வேண்டும். ஒவ் வொருவரும் தத்தம் வாதத்தை வலி யுறுத்தும் போது, அடுத்தப் பக்க முள்ள நியாயத்தையும் பார்க்க வேண்டும். கவுரவப் பிரச்சினை களைப் பெரிதுபடுத்தி, அதனால் நடக்க இருக்கும் நல்ல காரியங் களை, கெடுத்துவிடாது பார்த்துக் கொள்ள வேண்டும். உங்களில் ஒருவர் என்ற முறையில், உரிமை எடுத்து உங்களுக்கு இதைச் சொல்லு வதை, பரந்த மனதோடு ஏற்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

நீங்கள் கூறிய கருத்துக்களை எல்லாம் உன்னிப்பாகக் கேட்டேன். இதற்கு முன், உள்துறைச் செய லாளரிடம், நீங்கள் முறையிட்ட வற்றையும் கேட்டறிந்தேன். பிரச் சினைகள் என்ன என்று, என்னால் இனம் காண முடிந்தது. அவற்றில் முக்கியமானவை எவை எவை என்று, என்னால் பகுக்கவும் தொகுக்கவும் முடிந்தது. அந்த வகையில், அவற்றிற்கான தீர்வு, இவை இவை எனத் தீர்மானித்து, அறிவிக்க முன் வந்துள்ளேன். அதற்குக் காரணம், இங்கே குழுமி யுள்ள இரு தரப்பினரும்; எனக்கு அந்த ஒரு சைகையினை நேரடியாக வும், மறைமுகமாகவும் தந்திருக் கிறீர்கள். எனவே, உங்கள் ஒப்பு தலோடு, பிரச்சினை தீர்வதற்கு, பின்வருமாறு தீர்வுகளை அறிவிக் கிறேன். சம்பந்தப்பட்ட அனை வரும், ஏற்றுக்கொண்டதாகக் கொண்டு, அவை நிறைவேற்றப்படும்.

# திரையுலகில் நிலவி வந்த நெருக்கடி தீர்ந்தது!

## விநியோகஸ்தர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள் மத்தியில் மாண்புமிகு முதல்வர் நடத்திய பேச்சில் உடன்பாடு ஏற்பட்டது!

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் நடைபெற்ற திரைப்படத் தொழில் சம்பந்தப்பட்டவர்களின் கூட்டுக் கூட்டத்தில் ஏற்பட்ட உடன் பாட்டின் அம்சங்கள்:**

திரைப்படத் தொழிலில் சமீப காலமாக நிலவி வந்த தொழில் முறையிலான கருத்து வேறுபாடுகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு, தீர்த்து வைத் ததன் அடிப்படையில் ஏற்பட்ட உடன்பாட்டின் அம்சங்கள்-

1. கடந்த சில மாதங்களாக, தமிழ்த் திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருந்த விநியோகஸ்தர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள், மற்ற வர்கள் மத்தியில், நிலவி வந்த தகராறு தீர்க்கப்பட்டு, தொழிலில் இருந்த தேக்க நிலை, ஸ்தம்பித்த நிலை, இன்று முதல் நீக்கப்பட்டு, இனி முதல் முன்னையும் காலங் களைப் போல, படத் தயாரிப்புகள் தொடங்கப்படும்.

2. இன்றிலிருந்து வெளியிடப் படும் திரைப்படங்களுக்கு, எந்த விதத் தடையும், இடைஞ்சலும் ஏற் படாவண்ணம், பார்த்துக்கொள்ளப் படும். குறிப்பாக, 24.6.1993-இல் வெளியிடப்படும் படத்திற்கும், இது பொருந்தும்.

3. திரைப்படங்களைத் தயாரிக் கும் தயாரிப்பாளர்கள், தம் விருப்பம் போல் படங்களைத் தயாரித்து, வெளியிடும் வர்த்தகச் சுதந்திரத்தை, Freedom of trade பெற்றவர்களா வார்கள். எந்த விநியோகஸ்தருக்கு,



என்ன விநியோக முறையில், என்ன விலையில் கொடுப்பது என்று தீர் மானிக்கும் உரிமை, தயாரிப்பாள ருக்கு வெகுவாகவே உண்டு. அதே நேரம், விநியோகஸ்தர் ஒப்புக் கொள்ளாவிடில், வியாபாரம் நடக் காது என்பதும் உண்மையே. எனவே, மார்க்கெட் நிலவரத்தை அனுசரித்து, இரு தரப்பினரும் பேசி முடிவு செய்யும் வர்த்தகச் சுதந்திரம், இரு சாராருக்கும் உண்டு.

விநியோக முறையில், தற்சமயம் நடைமுறையில் இருந்து வரும் எதார்த்த முறை, Plain distribution குறைந்த பட்ச உத்தரவாத முறை Minimum guarantee distribution ஒட்டு மொத்த விலை, Outright distribution ஒரு குறிப்பிட்ட காலம் வரை ஓடவிட்டு வாங்கும் முறை, Time space distribution படத்தை போட்டுக் காட்டி விற்கும் முறை, போன்ற பல்வேறு முறைகளில், இரு சாராரும் பேசி, எந்த முறையையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். இரு சாராருக்கும் உள்ள, இந்த வர்த்தகச் சுதந்திரத்திற்கு, நேரடியாகவோ, மறைமுகமாகவோ, ஊறு விளை விக்கும் எந்தச் செயலும், கண்டிப் பாகக் கைவிடப்பட வேண்டும்.

4. தயாரிப்பாளர்கள், நடிகர்கள், திரையரங்கு உரிமையாளர்கள், விநியோகஸ்தர்கள், மத்தியில் ஏற் படும் தகராறுகளுக்கு, விநியோகஸ் தர்கள், பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில், சிவப்புச் சுற்றறிக்கை, Red Circular - என்ற ஒரு முறை யைக் கடைப்பிடித்தது, மற்ற சாராரை வெகுவாகப் பாதிப்பதாக, அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதில் பிரச்சி னையும் தீர வேண்டும்; அதற்கெனச் சரியான முறையும் கடைப்பிடிக்கப் பட வேண்டும், என அரசு கருது கிறது. இந்தச் சிவப்புச் சுற்றறிக்கை முறையை இனிமுதல் கைவிடும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதற்குப் பதிலாக, இன்று முதல், இத்தொழி லில் ஏற்படும் தகராறுகளை, அந் தந்த மாவட்ட மட்டத்தில் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்றும், அதற் கென மாவட்ட அளவில், ஒரு உயர் மட்டக் குழுவை நியமிப்பது என் றும், அதற்கு அந்த மாவட்டத்தின் ஆட்சித் தலைவர், Collector அல்லது அவரால் நியமிக்கப்பட்ட உயர் அதிகாரி ஒருவர், தலைவராக இருப் பார் என்றும், அதில் தயாரிப் பாளர் பிரதிநிதிகள், விநியோகஸ்தர் பிரதிநிதிகள், திரையரங்கு உரிமை யாளர் பிரதிநிதிகள் என, முறையே தலைக்கு இருவரை நியமிப்பது என் றும், அந்த உயர்மட்டக் குழு, பிரச் சினையை 2 மாதத்திற்குள் முடிவு செய்யவேண்டும் என்றும், அந்த முடிவின் மீது மேல் முறையீடு செய்ய வேண்டியிருப்பின், மாநில மட்டத்தில் ஒரு உயர்மட்டக் குழுவை, செய்தித் துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு நியமித்து, முத்தரப்பினர் பிரதிநிதிகள், முறையே இருவரை அக்குழுவில் இடம் பெறச் செய்து, பிரச்சினைக்கு முடிவு கட்டலாம் என்றும், அரசு கருதுகிறது. மேல் முறையீட்டை, இக் குழுவும் 2 மாதத்தில் முடிவு செய்ய வேண்டும். மாநில மட்டக் குழுவின் முடிவே இறுதியானதாக இருக்கும். இந்த ஏற்பாட்டைச் சம்பந்தப்பட்ட வர்கள் ஏற்க வேண்டும்.

5. விநியோகஸ்தர்களுக்கும், திரையரங்கு உரிமையாளர்களுக்கும் இடையே, 1992-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஏற்பட்ட தக ராறை ஒட்டி, 11.1.1993-இல் முதலமைச்சரின் அறிவுரையின் பேரில், உள்துறைச் செயலாளர் முன்னிலையில், ஒரு செட்டில் மெண்டு ஏற்பட்டது. குறிப்பாக, திரையிடப்படும் படத்தில் கிடைக் கும் வசூலை, இரு சாராரும் சத விகித அடிப்படையில், பிரித்துக் கொள்வதற்கான ஒப்பந்தம் தான் அது. அது பரவலாக அமலாக்கப் படுவதாக அறிந்தாலும், அது முழுக்க முழுக்கச் செயல்படவில்லை என்று, அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறத. இன்று முதல், அந்த ஒப்பந்தம் முழுவதுமாக அமல் செய்யப்பட வேண்டும் என வலி யுறுத்தப்படுகிறது.

6. குறைந்த செலவில், அல்லது சிறு முதலீட்டில் தயாரிக்கும் படங்களுக் குச், சலுகை வழங்கி, உற்சாகப் படுத்த வேண்டும் என வலியுறுத்தப் பட்டுள்ளது.

இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின் தான், இப்படங்களுக்கான மானியத் தைப் படத்திற்கு 3 இலட்சம் ரூபாய் என உயர்த்தியது. சலுகை பெறும் படங்களின் எண்ணிக்கையும் 50 என உயர்த்தப்பட்டது. இருப்பினும், இப்போது கூறப்பட்ட கோரிக் கையை, தமிழக அரசு பரிவோடு பரிசீலிக்கும். வரிச் சலுகை, மானியம் வழங்கல் பற்றி, அரசு ஆய்ந்து ஒரு முடிவுக்கு வரும். இதற்கிடையில், இப்போது மானியம் பெறும் குறைந்த முதலீட்டுப் படங் களின் எண்ணிக்கை, 50 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை இன்று முதல், 75 ஆக உயர்த்தப்படும். அதாவது, இன்று முதல் ஆண்டு ஒன்றுக்கு 75 படங் களுக்கு மானியம் Subsidy வழங்கப் படும். இதற்காக ஆண்டுக்கு 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும். சிறு முதலீட்டுப் படங்களுக்காக எடுக்கப்படும் பிரதி களின் குறைந்தபட்ச எண்ணிக்கை இனிமுதல் 12-லிருந்து 6-ஆகக் குறைக்கப்படும்.

7. வேறு மாநிலத்தில் தமிழ்ப் படம் DUB செய்யப்படும்போதும்/ வெளிப்புறக் காட்சிகள் எடுக்கப் படும் போதும், அதிக வரி - கட் டணம் கட்டவேண்டியிருக்கிறது. வேறு மொழிப்படங்களை இங்கே தமிழில் DUB செய்யப்படும் போது, அதிக வரி இங்கே விதிப்பதில்லை. இதனால் இங்கே தமிழில் DUB செய்யப்படும் படம் குறைந்த செலவில் தயாராகி, அதிகம் வெளி வருகிறது. இது குறைந்த முதலீட்டில் தயாரிக்கப்பட்ட தமிழ்ப் படங் களுக்கு, பெரும் போட்டியாக அமை கிறது. எனவே, இன்று முதல், மற்ற மாநிலங்களில் தமிழ்ப் படம் DUB செய்யும்போது வெளிப்புறக் காட்சிகள் எடுக்கும்போது, நிர்ண யிக்கும் அதே அல்லது அதற்கு அதிக



இலக்கியம் என்றால், அது நாகரிகத்தைப் புகட்ட வேண்டும்; மக்களிடம் உயரிய குணங் களைப் புகுத்த வேண்டும்.

- தந்தை பெரியார்

மான வரி - கட்டணம் தமிழ்நாட்டி லும் விதிக்கப்படும் என முடிவு செய்யப்படுகிறது.

8. தமிழ்த் திரைப்படங்களின் வீடியோ, தொலைக்காட்சி உரிமை, இதரத் தொலைத் தொடர்பு விண்வெளி உரிமைகள் போன்றவை, இப்போது பழக்கத்தில் இருக்கும், அதாவது விநியோகஸ்தரிடம் ஒப்படைக்கும், Surrender செய்யும் முறை, தொடர்ந்து நீடிக்கும்.

9. தமிழகத்தில் கணிசமான திரையரங்குகளில், நிர்ணயித்த கட்டணத்திற்கு மேலாக, பல மடங்கு உயர்த்தி, எல்லா டிக்கெட்டுக்கும் ஒரே கட்டணமாக, அதாவது flat rate ஆக, புதுப் படங்களுக்கு அனுமதிப்பதாகவும், அதே நேரம் படம் பார்ப்போரை, நிர்ணயித்த எண்ணிக்கையைவிட, இரண்டு அல்லது மூன்று மடங்கு Over-ஆக அனுமதிப்பதாகவும், அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இது ஒரு மிகப் பெரிய முறைகேடு என்பதோடு, அரசை ஏமாற்றும், அரசுக்கு வர வேண்டிய வருவாயை இழக்கச் செய்யும் குற்றமும் ஆகும். இதை லேசாக விடுவதற்கில்லை. இன்று முதல், இதற்குக் காரணமான திரையரங்குகள், விநியோகஸ்தர்கள், சம்பந்தப்பட்ட அனைவர் மீதும், நடவடிக்கை எடுப்பதோடு, குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும். இந்த முறைகேடு தடுக்கப்படும்; ஒடுக்கப்படும்.

10. தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் ஆகியோருக்கு, ஒரு ஒழுங்கு நெறி, Code of conduct கொண்டு வரவும், ஒரு Licensing system- உரிமம் வழங்கும் திட்டத்தின்கீழ் கொண்டு வருவது குறித்தும் ஆராயப்படும்.

11. தமிழ்த் திரைப் படங்களில் நடக்கும் வீடியோ, கேபிள் டி.வி. திருட்டு செயல்களை, தீவிரமாகத் தடுத்து நிறுத்த, இதற்கென ஒரு தனிக் காவல் படை, Separate cell உருவாக்கப்பட்டு, Video piracy கேபிள் டி.வி. திருட்டுகள், தடுக்கப்படும்.

12. 5 ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்ட பழைய படங்களுக்கு, எப்படிப்பட்ட வரிச் சலுகை, எத்தகைய உதவி அளிக்கப்பட வேண்டும் என்பது பற்றி, அரசு தனியாகப் பரிசீலித்து முடிவெடுக்கும்.

13. வெளிப்புறப் படப்பிடிப்பிற்கு அனுமதி ஒரே இடத்தில் Single Window Clearance-ஆக வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை, ஏற்கெனவே கொள்கை ரீதியில் ஏற்கப்பட்டுள்ளது- விரைவில் இதற்கான ஆணை பிறப்பிக்கப்படும்.

14. தமிழக அரசு நடத்தும் திரைப்படக் கல்லூரியில் திரைப்படத் தொழிலாளர்கள், கலைஞர்கள், நுணுக்கர்கள் ஆகியோரின் குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகித இட ஒதுக்கீடு செய்வது குறித்தும், சலுகைக் கட்டணம் விதிப்பது குறித்தும், அரசு ஆய்ந்து விரைவில் முடிவு எடுக்கும்.

இப்போது அறிவிக்கப்பட்ட 14 அம்சங்களில், திரைப்படத்துறைக்குப் பெருவாரியாக சலுகைகளும், நன்மைகளும் அடங்கியுள்ளன. அதோடு எனது சிறு சிறு வேண்டுகோள்களும் இணைந்து இருக்கின்றன. இவற்றை அனைத்துத் தரப்பினரும் முழுமனதோடு ஏற்றுக்கொண்டு, நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரைப்படத்துறையில் எப்போது, எத்தகைய பிரச்சினைகள் எழுந்தாலும், தேவைப்படும்போதெல்லாம் பரிவுடன் கவனித்து அவற்றைச் சுமூகமாகத் தீர்த்து வைக்கும் அரசு இந்த அரசு - உங்களது அரசு என்பதை உங்களுக்கு மீண்டும் நினைவூட்டி, நாளை முதல் திரைப்படத்துறை முன்னைய காலத்தைப்போல் இயங்கத் தொடங்கும், மென்மேலும் வளரும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுக்கு நினைவு மண்டபம் - புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை



மறைந்த மாபெரும் கவிஞரும், தமிழ் இலக்கிய உலகிலும், தமிழகத் திரைப்பட உலகிலும் தனக்கென ஒரு தனிப் பாணியை வகுத்துக்கொண்டு, தமிழக மக்களிடம் எழுச்சியை எற்படுத்தியவருமான பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் அவர்களின் நினைவாக "நினைவு மண்டபம்" ஒன்றினைப் பட்டுக்கோட்டையில் கட்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

தமிழ் வளர்ச்சிக்கும், தமிழர்களின் முன்னேற்றத்திற்கும், உழைக்கும் தொழிலாளர்களுக்காகவும், குரல் கொடுத்தது மட்டுமன்றி, சமுதாய வளர்ச்சிக்காகப் பாடல்கள் பல எழுதியவரும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் படங்களில் பிரபலமான பாடல்கள் பல எழுதியவருமான பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் அவர்களின் புகழ் நிலைத்து நிற்கவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்துடன், பலரது வேண்டுகோளுக்கு இணங்க, இந்த நினைவு மண்டபத்தை அமைக்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.





# காரைக்குடியில் கவியரசருக்குத் திருவிழா!

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் 'கவியரசர் கண்ணதாசன்' அவர்களுக்குத் தமிழக அரசு சார்பில் அவரது 66-வது பிறந்த நாள் விழா காரைக்குடியில் உள்ள கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபத்தில் காலை முதல் இரவு வரை நடைபெற்றது. இது ஒரு விழாவாக இல்லாமல் காரைக்குடி மக்கள் கவியரசருக்கு எடுத்த திருவிழா போல் நடந்தது.

27.6.93 அன்று காலையில் கண்ணதாசன் மணிமண்டபத்தில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த கவியரசரின் அரிய புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் திறந்துவைத்தார்.

மணிமண்டபம் முழுவதும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்ற இந்த விழாவின் தொடக்க நிகழ்ச்சியாகப் பட்டிமன்றம் நடந்தது. செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் இணை இயக்குநர் திரு பா. செயப்பிரகாசம் வரவேற்புரையாற்றினார். காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு கே. நாகப்பன் முன்னிலை வகித்துச் சிறப்புரையாற்றினார்.

கவியரசரின் புதல்வர் திரு கண்மணிசுப்பு அவர்கள் 'எங்கள் நெஞ்சில் கவியரசர்' என்ற தலைப்பில் பேசினார். பின்னர் பேராசிரியை டாக்டர் சரஸ்வதி இராமநாதன் தலைமையில் பட்டிமன்றம் நடந்தது. 'கவியரசர் கண்ணதாசனின் விஞ்சிய புகழுக்குக் காரணம் அவரது அற்புதக் கற்பனையே! அனுபவ முத்திரையே! என்ற தலைப்பில் நடந்த பட்டிமன்றத்தில், 'அற்புதக் கற்பனையே' என்ற தலைப்பில் திரு எல்.கே. சுபாஷ்சந்திரபோஸ், திருமதி உமையாள் முத்து, திரு அரங்கநெடுமாறன், திருமதி என். சரசுவதி அவர்களும், அனுபவ முத்திரையே' என்ற தலைப்பில் டாக்டர் சின்னப்பா, திருமதி விசாலாட்சி, டாக்டர் பழ.முத்தப்பன், திருமதி புனிதாஏகாம்பரம் அவர்களும் வாதிட்டார்கள்.

முடிவில் பேராசிரியை டாக்டர் சரஸ்வதி இராமநாதன் அவர்கள் 'கவியரசர் கண்ணதாசனின் விஞ்சிய புகழுக்குக் காரணம் அவரது அனுபவ முத்திரையே' என்று தீர்ப்பு அளித்தார்.

மாலை நிகழ்ச்சியாக, கல்லூரி, பள்ளி மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாலை 5 மணியளவில் 'காலங்களில் நீ வசந்தம்' என்ற தலைப்பின் கீழ் கவியரங்கம் தொடங்கியது. கவியரங்கத்திற்கு, கவிஞர் இளந்தேவன் தலைமை தாங்கினார். கவிஞர்கள் திரு சொ.சொ.மீ. சுந்தரம், திரு சவகர்லால், திரு நா.மீனவன், திரு கரு.நாகராசன்,

திரு இராசகோபாலன், செல்வி விசாலி கண்ணதாசன் ஆகியோர் கவிதை பாடினார்கள்.

பின்னர் மாலை 7 மணியளவில் தொடங்கிய சிறப்புக் கூட்டத்திற்கு மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமை தாங்கினார். பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு மா.தங்கவேலு, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள். கவியரசர் கண்ணதாசன் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் விழாப் பேருரையாற்றினார்கள். விழாத்தலைமை வகித்த மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் பேசியதாவது:

'தமிழக முதல்வரின் கட்டளைக் கிணங்க காரை மாநகரில் அரசு சார்பில் உணர்ச்சிமயமாக, கண்ணதாசன் பிறந்தநாள்விழா நடக்கிறது. இந்தவிழா பெருமையைத் தருகிறது என்று மட்டும் கூறவில்லை. இதை நடத்த எங்களுக்கும் தகுதி இருக்கிறது என்று கூறிக்கொள்கிறேன்.

''கடந்த 2 ஆண்டில் எந்த தலைவருக்கும் ஒருநாள் விழா நடந்ததில்லை. மாலை நிகழ்ச்சிகள் நடப்பதோடுசரி. ஆனால், கவியரசரைப் பெருமைப்படுத்த வேண்டும். அவர் அந்தப் பெருமைக்குரியவர், பெருமைப்படுத்தப்படவேண்டியவர் என்ற முதல்வரின் விருப்பத்திற்கிணங்கக் கவியரங்கமும், பட்டிமன்றமுமாக இந்த நிகழ்ச்சி அமைந்திருந்தது. கண்ணதாசன் மணிமன்டபம் முன்பாகச் சிலை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது. கண்ணதாசனுக்குச் சிலை அமைக்கும் நிலையில்தான் நாங்களும் இருக்கிறோம். பட்டுக்கோட்டையில் பிறந்து பாட்டுக்கோட்டை அமைத்த கல்யாண சுந்தரத்திற்கு நினைவாலயம், பாரதியார் நினைவு இல்லம் முன்பாக திருவுருவச் சிலை அமைக்க உத்தரவிட்டுக் கவிஞர்களைப் பெருமைப்படுத்தும் முதல்வர் இந்தக் கோரிக்கையையும் ஏற்றுக்கொள்வார். அடுத்த ஆண்டு பிறந்தநாள் விழா நடக்கும்போது சிலை இல்லையே என்ற நிலை இருக்காது.

''கம்பன் , இளங்கோ போன்ற கவிஞர்களுக்குக் கிடைக்காத பெருமை கண்ணதாசனுக்குக் கிடைத்தது என்றால் அவர் பாமரனும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் எளிய நடையில் கவிதைகளை எடுத்துக் கூறியவர். கண்ணதாசன் தன்னம்பிக்கைமிக்க, துணிச்சல் மிக்க கவிஞர். அவரைப்போலவே மொழி வெறி, இன வெறி, ஆதிக்க வெறி போன்றவற்றை துணிச்சலோடு எதிர்க்கிற ஆற்றல் கண்ணதாசனுக்கு விழா எடுத்துள்ள தமிழக முதல்வருக்கும் உண்டு.

20-ஆம் நூற்றாண்டில் தமிழ் வளர்த்த பெருமை கண்ணதாசனுக்கும் உண்டு. இனப்பற்று, மொழிப் பற்றுடன் ஒரு காலத்தில் கண்ணதாசன் பகுத்தறிவுக் கருத்துக்களை பாடினாலும், இன்றளவில் அவரது இறைவனைப் பற்றிய பாடல்களும் மக்கள் மத்தியில் நிலைத்திருக்கின்றன.

அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கி மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு கு.ப.கிருஷ்ணன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்:

''திருச்சியில் உள்ள கலைக்காவேரி என்ற அமைப்பின் மூலம் கண்ணதாசன் எழுதிய 'ஏசு காவியம்' வெளியில் வந்தது என்ற உண்மையைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அ.தி.மு.க. பிரசவ வேதனையில் இருந்தபோது மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். புதிய வரலாறு படைக்க அதிமுகவை ஆரம்பித்தபோது பலர் ஏளனம் செய்தனர். எள்ளிநகையாடினார்கள். நடக்குமா, நடக்காதா என்று புருவம் நெறித்தனர். ஆனால் எம்.ஜி.ஆரிடம் இருந்து சற்று விலகியே இருந்த கவியரசர் அ.தி.மு.க. மாபெரும் கட்சியாக உருமாறும் என்று கூறினார். அந்தச் சாகாவரம்பெற்ற தெய்வீகக் கவிஞர் கூறியதைப் போலவே இன்று எம்.ஜி.ஆர். அடையாளம் காட்டிய முதல்வர் ஜெயலலிதா அவர்களின் சிறப்பான ஆட்சியில் மக்கள்நலவாழ்வு பெறுகிறார்கள் என்றால் கண்ணதாசனின் கணிப்பு நூற்றுக்கு நூறு சரியானதே.

கண்ணதாசன் அண்ணாவைப் பற்றிப் பாடியவர் காமராசரைப் பற்றிப் பாடியவர். அரசியல் வாழ்வில் ஒரே இடத்தில்தான் நிலையாக இல்லாதது பற்றிக் கூறும்போது ''ஒரு நிலத்தை உழுது அது அறுவடைக்குத் தயாராக இருக்கும்போது, அதை விட்டுவிட்டுப் புதுக்கரம்பை நிலத்தைப் பயிரிடும் காரியம் எனக்குப்புதிதல்ல'' என்று கூறி இருக்கிறார். காட்டுராஜா சிங்கம் பாட்டு ராஜா கண்ணதாசன் என்று காமராசரையே கவிபாட வைத்த பெருமை கண்ணதாசனுக்கு உண்டு என்று கூறினார்.







சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி கற்பகம் இளங்கோ, திரு மா.சா.மா. இராமச்சந்திரன், திரு கரு. முருகானந்தம் மற்றும் கவிஞர் அரு.நாகப்பன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். விழா முடிவில் உதவி இயக்குநர் திரு டி.பி.எஸ். சுந்தரநாதன் அவர்கள் நன்றி கூறினார்.

மாண்புமிகு புரட்சித்தலைவியின் ஆட்சியில் நடந்துள்ள சாதனைகளின் பட்டியல்களில் கவியரசர் கண்ணதாசன் அவர்களுக்கு எடுத்த விழா சாதனைக் கிரீடத்தில் பொறிக்கப்பட்ட ஒரு வைரக்கல் என்றால் அது மிகையல்ல...

ரெ. இராவணன்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம்.

# AAVIN
## NELLAI

## THE TIRUNELVELI DISTRICT CO-OPERATIVE MILK PRODUCERS' UNION LTD.
TIRUNELVELI-7.

Integrated Dairy Development Project under
National Co-operative Development Corporation Scheme

| | |
|---|---|
| Project Cost | Rs.7.05 crores |
| No. of Societies to be covered under Milk Procurement | 651 |
| No. of farmers to be covered under co-operative ambit | 8,09,000 |
| No. of Milch animals to be covered | 1,05,000 |
| Quantity of Milk to be Procured (Litres per day) | 73,600 |
| Quantity of milk to be supplied to the Consumers (Litres per day) | 60,000 |
| No. of Societies to be covered under Artificial Insemination | 520 |
| No. of Societies to be covered under Animal Health | 651 |

**Dr. R. Solomon**
Managing Director

**R. Velu, I.A.S.,**
District Collector/Chairman






# கண் மருத்துவம்

பதில்கள்:
டாக்டர் வி.எம். லோகநாதன்
இயக்குநர்
அரசு பொது கண் மருத்துவமனை
சென்னை



சு. சுப்பிரமணியன்
சென்னை-21.

★ மூன்றரை வயதுள்ள என் மகள் கண்களில் அடிக்கடி கண்ணீர் கசிகிறது; வெய்யிலால் கண் கூசுகிறது என்கிறாள்; ஏன் இப்படி? என்ன செய்யலாம் டாக்டர்?

''கண்ணீர்ப் பையில் அல்லது கண்ணுக்கு வரும் நாளத்தில் அடைப்பு ஏற்பட்டிருந்தால் இவ்வாறான குறைநேரக்கூடும்; அறுவைச் சிகிச்சை மூலம் அதைக் குணமாக்கி விடலாம். பயப்படத் தேவையில்லை.''

வி.எம். ஸ்ரீதர்
அருப்புக்கோட்டை

★ கண் நோய் என்பது தொத்து நோயா?

''எல்லாமே தொத்தக்கூடிய நோய்கள் அல்ல; கண்வலி, 'மெட்ராஸ் ஐ' ஆகியவை தொத்தும் தன்மை உள்ளவை; 'காட்ராக்ட்' போன்றவை அவ்வாறல்ல.''

ப. தென்னரசு
அறச்சலூர்

★ பஸ், ரயில் பயணங்களின்போது படிப்பதால் கண்ணுக்கு ஆபத்து வருமா?

''அப்படியொன்றுமில்லை; படிக்க முடிகிறதென்றால் தாராளமாகப் படிக்கலாம். பார்வைக்கோ, கண்ணுக்கோ அதனால் கெடுதல் இல்லை.''

பெ. மாணிக்கம்
சேலம்

★ கண்ணில் ஏராளமாகத் தூசுகள் விழக்கூடிய சூழ்நிலையில் நான் வேலை செய்கிறேன். கண்ணைப் பாதுகாக்கவும் சுத்தமாக வைத்திருக்கவும் வழி சொல்லுங்கள் டாக்டர்?

''உங்கள் வசதிப்படி 'பவர்' இல்லாத கண்ணாடியொன்று அணிந்துகொள்ளுங்கள் முதலில்; அதன்பிறகு ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று தடவை நன்றாக முகத்தைக் கழுவுங்கள் - போதும்.''

பி.டி. அரசு
வெள்ளங்கிரிபுதூர்

★ சிரசாசனம் செய்வது கண்ணுக்கு நல்லதா, கெடுதலா?

''இரண்டுமே இல்லை. அது ஒரு நல்ல உடற்பயிற்சிதான். ஆனால் அப்படிச் செய்யத் தொடங்கு முன்பாக, உங்கள் உடலில் வேறு ஏதும் நோய் இல்லாதிருக்கிறதா என்று டாக்டரிடம் பரிசோதித்துக் கொள்வது நல்லது. ஏனென்றால், ஏதாவது நோய்க்கு நீங்கள் ஆளாகியிருக்கும் பட்சத்தில் சிரசாசனம் செய்தால் அந்நோய் அதிகரிக்கவும் வாய்ப்புண்டு.''

★ கண்ணையும், படிப்பையும் ஒப்பிட்டுத் திருவள்ளுவர் கூறியிருப்பது பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் டாக்டர்?

★ ''உலகப் பொதுமறை எழுதிய அவர் குறளில் ஒரு குறையும் இல்லை. உடலில் மிகவும் சிறிய பாகமாகக் கண் இருந்தாலும் அது மிகமிக முக்கிய உறுப்பாகக் கருதப்படுகிறது. கண்ணில்லாவிட்டால் உலகமே இருண்டு போகிறதல்லவா? கல்வியும் அப்படி முக்கியம் என்று கூறியிருக்கிறார் வள்ளுவர். இதனால் தான் - படிக்காதவர் கண்களைப் புண் என்று அவர் இழித்துரைக்கிறார். இதில் ஒருதவறும் இல்லையே!

எம். சுந்தர்ராஜன்
ஜோலார்பேட்டை

★ எந்தக் குறையால் ஒருவருக்கு மாலைக் கண் வியாதி ஏற்படுகிறது?

" இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதல் காரணம் - குழந்தைகளைப் பொறுத்தவரை 'ஏ' சத்து உடலில் குறைவாக இருந்தால் இது வரும்; அந்தச் சத்துள்ள உணவுப் பொருட்களை உண்டு வந்தாலே இதற்குப் போதுமானது. இரண்டாவது காரணம் - குழந்தையானாலும், பெரியவரானாலும், வயிற்றுப்போக்கு ஆகிறபோது 'ஏ' சத்தானது குடலிலிருந்து உறிஞ்சப் படுவதில்லை. இதனால் - கருவிழியும், விழித்திரையும் பாதிக்கப்பட்டு மாலைக் கண்நோய் வரும்."

**வி. சுலோசனா**
**கண்டக்காம்பாளையம்**

**★ கண்ணில் 'காண்டாக்ட் லென்ஸ்' பொருத்திக் கொள்ளுவது நல்லதா?**

"நல்லதுதான். ஆனால், அதற்கான காரணங்கள் சரியாக இருக்க வேண்டும். ஒரு கண்ணில் நல்ல பார்வை இருந்து மறு கண்ணில் பார்வைக் குறைவு ஏற்பட்டிருந்தால்-குறையுள்ள கண்ணில் மட்டுமே பொருத்திக் கொள்ளலாம். இரு விழிகளிலும் பிளஸ் பவரோ, மைனஸ் பவரோ அதிகமாயிருந்தாலும் கூட 'காண்டாக்ட் லென்ஸ்' பொருத்திக் கொள்ளலாம்; தவறில்லை. வெளிநாடுகளிலெல்லாம் உடைக்கேற்ற நிறத்தில் காண்டாக்ட் லென்ஸ் போட ஆரம்பித்து விட்டார்கள்; நல்லவேலையாக இன்னும் அந்தப் பழக்கம் நம் நாட்டுக்கு வரவில்லை!"

**ஆர். மூர்த்தி**
**மண்டபம்**

**★ புத்தகத்தையோ, தொலைக் காட்சியையோ நீண்டநேரம் பார்த்துக் கொண்டிருந்த பிறகு, உடனே மற்றவற்றைப் பார்த்தால் எனக்குத் தெளிவாகத் தெரிவதில்லை; இது ஏன் டாக்டர்?**

"உங்களுக்கு மட்டுமல்ல, எல்லோருடைய பார்வையுமே அது போன்ற நிலையில் அப்படித்தான் இருக்கும். இதற்கு After Image என்று பெயர். நீண்டநேரம் தெளிவான பொருளையே பார்த்தோமானால் கண் பாப்பாவானது சற்றே விரிவடைந்திருக்கும். பிறகு. உடனடியாக நாம் பார்க்கும் அடுத்த பொருள் சிறிது நேரத்திற்குத் தெளிவாகத் தெரியாதுதான். இது இயற்கை. இது கெடுதலின் அறிகுறி இல்லை".

**எல். மாணிக்கவாசகம்**
**சங்கரன்கோயில்**

**★ கிட்டப் பார்வை - தூரப் பார்வை என்றால் என்ன டாக்டர்?**

"இரண்டுமே கண்ணாடி போட வேண்டிய நிலைதான். இந்தக் கட்டுரையில் உள்ள வரைபடத்தைக் கவனமாகப் பாருங்கள்; உங்களுக்குத் தெளிவான விடை கிடைக்கும்".

**தி. முருகேசன்**
**ஆணைக்குப்பம்**

**★ வெளியில் சென்றால் நிறம் மாறும் கண்ணாடி போட்டுக் கொள்ளுவதால் கண்ணுக்குத் கெடுதலா?**

"நன்மையும் இல்லை. தீமையும் இல்லை. நன்றாகப் பரிசோதித்துப் போட்டுக் கொள்ள வேண்டும் - அவ்வளவு தான்".

**எஸ். அப்துல் ரஃபிக்**
**சின்னசேலம்**

**★ கண்ணீர் உப்புக் கரிக்கிறது ஏன் டாக்டர்?**

"கண்ணீர் மட்டுமல்ல; நம்முடைய இரத்தத்திலிருந்து பிரியும் எந்த நீருமே கரிப்பாகத்தான் இருக்கும். வியர்வை, சிறுநீர் ஆகியவை இதற்கு உதாரணம்.

**இரா. சிவகுகன்**
**பட்டுக்கோட்டை**

**★ பகல்-இரவு எப்போதும் சிலர் கூலிங் கிளாஸ் அணிவது பார்வைக்குக் கெடுதல் இல்லையோ?**

"பழக்கம்தான் அதற்குக் காரணம்; அதனால் கெடுதலோ நன்மையோ எதுவும் கிடையாது."

**க. அருணாசலம்**
**பழநி**

**★ எனக்கு வயது 33. கண்களின் முன்னால் எப்போதாவது கொசுக்கள் கூட்டமாகப் பறப்பதுபோல் தெரிகிறது. இது ஏன்?**

"மருத்துவத் துறையில் இந்தத் தன்மையானது Muscal என்று குறிப்பிடப்படும். எதற்கும் கண் டாக்டரிடம் தீவிரப் பரிசோதனை செய்து கொள் ளுங்கள். இதற்கு நோய் காரணமாகவும் இருக்கலாம் - அப்படி இல்லாமலும் இருக்கலாம்; பரிசோதிக்காமல் பதில் சொல்ல இயலாது.

**எம்.எஸ். ராஜன்**
**ஜோலார்ப்பேட்டை**

**★ எனக்குக் கண்ணிமைகளில் அடிக்கடி கட்டி வருகிறதே, ஏன்?**

"சிறியவர்களுக்குக் கண்ணாடி போடவேண்டிய நிலைமை இருந்து, போடாமலிருப்பதால் அப்படி வரக் கூடும். இது Eystain எனப்படும். பெரியவர்களுக்கு அதுபோல் வர, சர்க்கரைநோயும் காரணமாக இருக்கக் கூடும்."

**★ மார்க்கெட்டில் விதம் விதமான கூலிங்கிளாஸ்கள் மலிவாக விற்கப் படுகின்றன; அதில் நல்லதைத் தேர்ந்தெடுப்பது எப்படி?**

"விலை மலிவாக இருக்கிறது என்று பார்ப்பீர்களானால் விலை மதிப்பற்ற உங்கள் பார்வைக்கு ஆபத்து வந்து விடும்; கண் டாக்டர் பரிசோதித்த பின், அவர் குறிப்பிடுகிறபடி போட்டுக்கொள்ளுவதே நல்லது.".

**ஆர். கனகராஜ்**
**அந்தியூர்**

**★ நான், ஆறு மாதங்களுக்கு முன்பு வலது கண்ணில் ஏற்பட்ட பார்வைக் குறைவு காரணமாக 'காண்டாக்ட் லென்ஸ்' போட்டுக் கொண்டேன். ஆனாலும், இடது கண் அளவிற்குப் பார்வைத் தெளிவில்லை. இது ஏன்?**

"அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட உங்கள் வலது கண்ணில் - விழித்திரையில் பார்வை படும் இடத்தில் ஏதாவது கோளாறு இருக்கக்கூடும். திறமையான கண் டாக்டரை அணுகிப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்".

**- தொகுப்பு: பி.எல்.ஆர்.**






படம்-1

சாதாரண நிலையில், தூரப்பார்வையின்போது, விழித்திரையில் பார்வை சரியாக விழுவதைக் காட்டும் படம்.



படம்-2

புத்தகம் படிக்க அருகே பார்க்கையில் அல்லது எழுதுகையில் லென்சானது விரிந்து, தனது ஒளித்திறனைக் (Power) கூட்டி, பார்வையை விழித்திரையில் விழச் செய்கிறது.



படம்-3

40 வயது முதல், லென்ஸ் தனது கிட்டப் பார்வையின் போது ஒளியை அதிகரிக்கும் தன்மையை இழப்பதால், பார்வையானது விழித்திரையின் பின்னால் விழ, உருவங்கள் சரியாகத் தெரியாது.



படம்-4

இவ்வாறான குறையை (40 வயதிற்கு மேல்) கண்ணாடி அணிவதன் மூலம் நிவர்த்தி செய்து விடலாம்.

எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்



இங்ஙனம்
அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம்
சிதம்பரம்

"Sow the seeds of Khadi & Village Industries:
Grow with Co-operative Movement towards Healthy & Wealthy Nation!"



For the best Quality and Prompt supply of all
Wooden and steel articles please contact:

Kallakurichi Carpentary, Blacksmithy,
Slate and Allied Educational Products
Producers Industrial Co-operative Society Limited

( Unit of Khadi & Village Industries Board)
26-A, Gandhi Road, Kallakurichi 606 202




# முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி

நலிவுற்ற திருக்கோயில்களில் ஒரு காலப் பூசையாவது நடக்க வேண்டும் என மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டு அதைச் செயல்முறைப் படுத்தத் திட்டங்களை வகுத்து வருகின்றார். அதன் அடிப்படையில், அப்பகுதிகளிலுள்ள ஊர்ப் பொதுமக்களும், உபயதாரர்களும் தாமாக முன் வந்து ரூ.25,000 நன்கொடையாக செலுத்தினால், அத்தொகையை வைத்து ஒரு வைப்பு நிதி ஏற்படுத்தி அதனிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு ஒரு காலப் பூசை நடத்தப் பயன்படுத்தப் படும். இவ்வாறு ரூ.25,000 நன்கொடை கொடுக்க முடியாத சூழ்நிலையில் ரூ.12,500 நன்கொடையாகச் செலுத்தினால் அரசின் பங்காக முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.12,500 வழங்கி ஆக மொத்தம் ரூ.25,000 வைப்பு நிதியாக ஏற்படுத்தி அதனிலிருந்து கிடைக்கும் வட்டியை ஒரு காலப் பூசை தொடர்ந்து நடைபெற பயன்படுத்த ஆணையிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கீழ்க்கண்ட 10 திருக்கோயில்கள் ஒவ்வொன்றிற்கும் தலா ரூ.12,500 வீதம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திருக்கோயில், திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.1,25,000 வழங்க உத்தரவிட்டுள்ளார்.

1. அருள்மிகு சீனிவாசப் பெருமாள் மற்றும் காசி விஸ்வநாதர் திருக்கோயில், கல்யாணபுரம், திருவையாறு வட்டம்.
2. அருள்மிகு சீனிவாசப்பெருமாள் மற்றும் விநாயகர் திருக்கோயில், புதூர், பாபநாசம் வட்டம்.
3. அருள்மிகு கோதண்டராமசாமி திருக்கோயில், முடிகொண்டான், நன்னிலம் வட்டம்.
4. அருள்மிகு வரதராஜப்பெருமாள்திருக்கோயில், இடையாத்தான்குடி, நன்னிலம் வட்டம்.
5. அருள்மிகு சாமுண்டீஸ்வரி திருக்கோயில், இடையாத்தான்குடி, நன்னிலம் வட்டம்.
6. அருள்மிகு காசிவிஸ்வநாதர் பாலதண்டாயுதபாணி திருக்கோயில், ஆப்பக்கூடல் பவானி வட்டம்.
7. அருள்மிகு ஆதிநாராயணப்பெருமாள் திருக்கோயில், ஆதியர், பெருந்துறை வட்டம்.
8. அருள்மிகு ஆதீஸ்வரர் திருக்கோயில், ஆதிநூர், பெருந்துறை வட்டம்.
9. அருள்மிகு பிள்ளையார் அம்மசார் தர்மராஜர் வகையறா திருக்கோயில், மேல்கரிப்பூர், செங்கம் வட்டம்.
10. அருள்மிகு மாணிக்க விநாயகர் திருக்கோயில், வடமாத்தூர், செங்கம் வட்டம்.

மேற்கண்ட திருக்கோயில்களும் அதனுடைய பங்காக ரூ.12,500 நன்கொடையாக அளித்துள்ளன. ஆக மொத்தம் ரூ.25,000 கொண்டு மேற்கொண்ட ஒவ்வொரு திருக்கோயில்களும் ஒரு காலப் பூசையினைச் சிறப்பாக நடத்தும்.

# 16 தேர்வுநிலைப் பேரூராட்சிகள் சிறப்புநிலைப் பேரூராட்சிகளாக உயர்வு

சுற்றுலா, தொழில்கள், வர்த்தகம் முதலிய துறைகளில் மிகச் சிறந்த வாய்ப்புகள் உள்ள 16 தேர்வு நிலைப் பேரூராட்சிகளைச் சிறப்பு நிலைப் பேரூராட்சிகளாக உயர்த்தி, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

அவை பின்வருமாறு: பூவிருந்தவல்லி, பம்மல், தேர்வுநிலை நகரியம் திருவேற்காடு (செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்), [illegible] குறிச்சி (தென்னார்க்காடு [illegible]) சத்துவாச்சாரி (வட [illegible] அம்பேத்கர் மாவட்டம்), [illegible] சத்திரம், கிழக்கு காசிப[illegible] (பெரியார் மாவட்டம்), கோ[illegible]கிரி (நீலகிரி மாவட்டம்), குறுச்சி, குனியமுத்தூர் (கோயமுபுத்தூர் மாவட்டம்), இனாம்கரூர், கே.அபிஷேகபுரம் (திருச்சி மாவட்டம்), திருப்பரங்குன[illegible] (மதுரை மாவட்டம்), ஒட்டன்சத்திரம் (திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்), வடக்கு வள்ளியூர் (திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்), திருச்செந்தூர் (சிதம்பரனார் மாவட்டம்).

இந்தப் பேரூராட்சிகளின் ஆண்டு வருவாய் ரூ.20 இலட்சத்திற்கு அதிகமாகவும் மக்கள் தொகை 10,000-க்கு மேல் கொண்டதாகவும் உள்ளன.

## பயிற்சிக் கால உதவித் தொகை அதிகரிப்பு

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப் பட்டோர் வகுப்பினைச் சேர்ந்த சட்ட பட்ட தாரிகளுக்கு நீதித்துறை நிர்வாகத்தில் மூத்த மற்றும் பிரபல வழக்கறிஞர்களுடன் மூன்று ஆண்டுகள் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுத் தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெறும் சட்டம் பயின்ற பட்டதாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500 பயிற்சிக் கால உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. தற்போது பயிற்சி பெறும் மாணவர்கள் இந்த பயிற்சிக் கால உதவித் தொகையை உயர்த்த வேண்டுமென்று பலமுறை கோரிக்கை மனுக்களைக் கொடுத்து வந்துள்ளார்கள்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அவர்களது வேண்டுகோளை கனிவுடன் பரிசீலித்து அவர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் பயிற்சி உதவித்தொகை ரூ.500- ஐ உயர்த்தி ரூ.750 ஆக வழங்க வேண்டும் என ஆணையிட்டுள்ளார்.

## அண்ணா விருது பெற்றவருக்கு அரசு வேலை!

ஒவ்வொரு ஆண்டும் தீரச் செயல் புரிந்தவர்களுக்கு 'அண்ணா விருது' குடியரசுத் தின விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் குடியரசுத் தின விழாவில் வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், திருப்பத்தூர் தாலுக்கா, காக்கன்கரை கிராமத்தைச் சேர்ந்த திரு கே.எஸ். குமார் என்பவருக்குத் தீரச் செயல்புரிந்தவர்களுக்கான 'அண்ணா விருது' மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் திருக்கரத்தால் 26.1.93 அன்று வழங்கப்பட்டது.

திரு கே.எஸ். குமார் ஒரு சாலை விபத்திலிருந்து சிறிய பெண்ணைக் காப்பாற்றியபொழுது அவருடைய கால் துண்டிக்கப்பட்டு அவர் ஊனமாக வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தத் தீரச்செயல்களுக்காக வீர விருது பெற்ற திரு கே.எஸ். குமார் அவர்கள் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் தனக்கு ஒரு நிரந்தர வேலை வேண்டும் என விண்ணப்பித்திருந்தார்.

திரு கே.எஸ். குமாரின் கோரிக்கையைக் கருணையுடன் பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவருக்குப் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தில் உதவியாளராகப் பணி நியமனம் செய்ய உத்தரவிட்டுள்ளார்.

## முன்னாள் அமைச்சரின் துணைவியாருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி

• தமிழ்நாட்டில் 1946 முதல் 1957 வரை தமிழகச் சட்டமன்ற உறுப்பினராகவும், தமிழக அமைச்சரவையில் பல்வேறு துறைகளில் அமைச்சராகவும், 1953 முதல் 1954 வரை சென்னை நகர மேயராகவும், 1956 முதல் 1962 வரை பாராளுமன்ற உறுப்பினர் ஆகவும் செயலாற்றி வந்த திரு பரமேஸ்வரன் அவர்கள் 1966-ஆம் ஆண்டில் காலமானார். திரு பரமேஸ்வரன் அவர்களின் துணைவியார் திருமதி சாரதா பரமேஸ்வரன் (70 வயது) அவர்கள் பூந்தமல்லியில் உள்ள ஒரு அனாதை இல்லத்தில் 8 ஆண்டுகள் மேலாளராகப் பணியாற்றி, தற்போது மேலும் பணியாற்ற இயலாத காரணத்தால் பணியிலிருந்து விலகிவிட்டார்.

வயது முதிர்ச்சியால், உடல்நிலை பாதிக்கப் பட்ட திருமதி சாரதா பரமேஸ்வரன் அவர்கள், மத்திய, மாநில அரசுகள் மூலம் எவ்வித உதவிப் பணமும் இதுவரை கிடைக்கப்பெறாத நிலையில், தனது வறுமை நிலையை விளக்கி, மருத்துவச் செலவிற்காக நிதி உதவி கோரி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் மனு ஒன்றினைச் சமர்ப்பித்திருந்தார்.

அவரது கோரிக்கை மனுவினைப் பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1,00,000-ஐ (ரூபாய் ஒரு இலட்சம்) உடனடியாக திருமதி சாரதா பரமேஸ்வரன் அவர்களுக்கு வழங்கிட ஆணையிட்டுள்ளார்.



TNPSC

விளம்பர எண். 27/93

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

அகில இந்திய பணிகள் மற்றும் மாநிலப் பணிகளைச் சேர்ந்த அலுவலர்களுக்கான அரையாண்டு மற்றும் மொழித் தேர்வுகள் - செப்டம்பர் 1993

அகில இந்தியப் பணிகள் (ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்.) மற்றும் தமிழ்நாடு மாநிலப் பணிகளைச் சார்ந்துள்ள சில வகைப் பிரிவு அலுவலர்களுக்கான (Certain Classes of Officers) அரையாண்டு மற்றும் மொழித் தேர்வு, இவ்வாணையத்தினால் 2.9.93 முதல் நடத்தப்படும். இத் தேர்வுக்கான விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி 11.8.93 ஆகும். விண்ணப்பப் படிவத்தையும் சம்பந்தப்பட்ட விவரங்களையும், தேர்வுக்கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002 அவர்களிடமிருந்து எழுத்து மூலம் விண்ணப் பித்துக் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்புகள்: 1. மேற்குறிப்பிட்டுள்ள பணிகளில் தற்போது பணியில் இருப்போருக்கு மட்டுமே இத்தேர்வுகள் உரியதாகும்.

2. இத்தேர்வுகளுடன் நடத்தப்பெறும் தமிழ்மொழி உயர்நிலைத் தேர்வே மற்ற மாநிலங்களைச் சார்ந்த அகில இந்தியப் பணிகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கான ரூ.1,000 ரொக்கப் பரிசளிப்புத் திட்டத்தின் கீழான 'தமிழ்ப்புலமைத் தேர்வும்' ஆகும். இத்தேர்வு எழுத விரும்பும் அலுவலர்கள் பத்தாண்டுப் பணிக்காலம் பூர்த்தி செய்யாதவர்களாயிருத்தல் வேண்டும். தேர்வு எழுத விரும்புவோர் அவர்களது விண்ணப்பம் 11.8.93-க்குள் தேர்வாணையத்திற்கு வந்து சேரும்படி தங்கள் மாநில அரசாங்கத்தின் தலைமைச் செயலர் வாயிலாக, தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர், சென்னை-600 009 அவர்களுக்கு விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும்.

DIPR/1204/MS/93

TNPSC

விளம்பர எண். 28/93

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தமிழ்ப்புலமைத் தேர்வு - செப்டம்பர் 1993

1993-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13-ஆம் தேதியன்று ஆறு ஆண்டுகள் பணிநிறைவு பெறாமலும், பள்ளி இறுதி வகுப்பிலோ, பட்டப் படிப்பிலோ தமிழை ஒரு பாடமாக எடுக்காமலும் அல்லது தமிழில் எந்தத் தேர்விலும் தேர்ச்சி பெறாமலும் உள்ள தமிழ்நாடு பிரிவைச் சார்ந்த தாய்மொழி தமிழ் அல்லாத அகில இந்தியப் பணிகள் (ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் ஐ.எப்.எஸ்.) அலுவலர்களுக்கான தமிழ்ப்புலமைத் தேர்வு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் அதன் அலுவலகத்தில் 1993-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 மற்றும் 14-ஆம் தேதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது. இத்தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் ரூ.1,000 ரொக்கப் பரிசாகப் பெறத்தகுதி பெற்றவர்களாவார்கள். இத் தேர்வுக்கான விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி 16.8.93 மாலை மணி 5.45 ஆகும். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் ஐ.எப்.எஸ் அலுவலர் அல்லாதவர்கள் இத்தேர்வு எழுதத் தகுதியற்றவர்கள் ஆவர். விண்ணப்பப் படிவம் தேர்வுக்கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002 அவர்களிடமிருந்து எழுத்து மூலம் விண்ணப்பித்துப் பெறலாம்.

DIPR/1205/MS/93

எங்கள் இனிய நல்வாழ்த்துக்கள்



M.K.M. ஜியாவுதீன்
தலைவர்: விழுப்புரம் வர்த்தகர் சங்கம்
விழுப்புரம்

S. கலைச் செல்வன்
செயலாளர்: விழுப்புரம் வர்த்தகர் சங்கம்
விழுப்புரம்

A.R. மாதவன், பி.எஸ்ஸி.,
பொருளாளர்: விழுப்புரம் வர்த்தகர் சங்கம்
விழுப்புரம்




### கீதை சாரம்

**ஆசிரியர்: மகாத்மா காந்தி**
**வெளியீடு:**
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை-625 020.

பக்கம்:51 விலை:ரூ.5/-

**வே**தவியாசர் அருளிய கீதை ஒரு அரிய நூல். 'கீதை என் தாய்' என்றார் அண்ணல் காந்தியடிகள்.

நம் நாட்டின் சிறந்த உபநிடதமான கீதை, எல்லோருமே படிக்க வேண்டிய ஒரு நூலாகும். இதனை எளிதில் படித்துத் தெரிந்து கொள்ளும் வகையிலே, இதன் சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பெரியவர்கள், இளைஞர்கள் எல்லோருமே படித்துப் பயன்பெற வேண்டிய நல்லுரைகள் நிறைந்த நூல்.

- பி.வி. கிரி.

### மாமன்னன் பூலித்தேவன்

**ஆசிரியர்: ந. இராசையா**
**வெளியீடு:**
ஞானமுருகன் எழுத்தகம்,
3-97, அயன் கொல்லங் கொண்டான்
காமராசர் மாவட்டம்-626 142.

பக்கம்:187 விலை:ரூ.45/-

"**மா**மன்னன் பூலித்தேவன் என்பான் நெற்கட்டான் செவ்வல் பாளையக்காரன். இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றை 1750-இல் இருந்தே தொடங்கியவன். 1755-இல் விடுதலை வித்தையும் ஊன்றியவன்..." என்கிற கருத்தைத் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவியிருக்கிறார் ஆசிரியர். 'வெள்ளையனே வெளியேறு' என்று முதல் முழக்கமிட்டவன் பூலித்தேவன் என்பதைத் தம் ஆழ்ந்த ஆராய்ச்சியின் மூலம் கோடிட்டுக் காட்டுகிறார் அவர்.

ஒரு விடுதலைப் போராட்ட வீரனின் வீரவரலாற்றைப் பகுத்தும் தொகுத்தும் தக்க சான்றுகளுடன் தருகிறார் ஆசிரியர். நூலாசிரியரின் உழைப்பும் உறுதியும் இந்நூலில் நன்கு வெளிப்படுகிறது. தகுந்த விளக்கப்படங்களும் உள்ளன. ஆராய்ச்சி நோக்குடைய இளைஞர்கள் இந்நூலைப் படிக்க வேண்டும்.

### சாலை விதிமுறையும் விபத்து தடுப்பும்

**ஆசிரியர்: சூரியநாத்**
**வெளியீடு:**
தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு)
தூளைமேடு, சென்னை-94..

பக்கம்:112 விலை:ரூ.15/-

**ஆ**ங்காங்கே சாலை விபத்துக்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இதற்கெல்லாம் காரணம், சாலை விதிமுறைகளைக் கடைப்பிடிக்காததேயாகும். இதை உணர்ந்து நாம் செயல்பட்டால், சாலை விபத்துக்களிலிருந்து நாம் விடுபடலாம் என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது இந்நூல்.

சாலைப் பாதுகாப்பு விதிமுறைகள், பாதசாரிகள், வாகனம் ஒட்டுநர்கள் ஆகியோர் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. சாலைப் போக்குவரத்துத் தொடர்பான ஏராளமான தகவல்களும், அதற்கான விளக்கப் படங்களும் உள்ளன.

-பி.வி.ஜி.

### கிறிஸ்தவத் தமிழ் நாடகங்கள்

**ஆசிரியர்: பெ. கோவிந்தசாமி**
**வெளியீடு:**
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
பார்க்டவுன்,
சென்னை-600 003.

பக்கம்:232 விலை:ரூ.50/-

**த**மிழ் நாடகக் கலை வரலாற்றில் கிறிஸ்தவர்களுக்கும் பெரும் பங்குண்டு என்பதைச் சித்திரிக்கிறது இந்நூல். இந்நூலாசிரியர், கிறிஸ்தவத் தமிழ் நாடகங்கள் குறித்து சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர்.

கிறிஸ்தவத் தமிழ் நாடகத்தின் தோற்றம்- வளர்ச்சி, கிறிஸ்தவத் தமிழ் நாடக- இனங்கள், கிறிஸ்தவத் தமிழ் நாடகங்களின் பாடு பொருள், அதன் அமைப்பு ஆகியவை குறித்து ஆய்வுகள் அழகுறத் தொகுக்கப் பெற்றுள்ளன. நூலாசிரியரின் உழைப்பும், நாடக ஆர்வமும் பளிச்செனத் தெரிகிறது.

**உங்களை நீங்கள் அறிந்துகொள்ள புத்தகம் மற்றவர்களை நீங்கள் புரிந்து கொள்ளும்படி செய்ய வல்லவை; அது போலவே, உங்களை நீங்களே அறிந்து கொள்ளவும் செய்யும்.**

**- எட்வர்ட் பிரேக்கர்**

### 'நமக்குள் எத்தனை நல்லவர்கள்?'

**ஆசிரியர்: சக்தி. விஜயலட்சுமி உத்ராபதி**
**வெளியீடு:**
செந்தில் பதிப்பகம்,
10, பொன்னுசாமி தெரு,
இராயப்பேட்டை, சென்னை-14.

பக்கம்:87 விலை:ரூ.12/-

**கா**ந்தியும், பாரதியும் தன்னை மிகவும் பாதித்து, தன் வாழ்க்கைப் பாதையை மாற்றியமைத்ததாக எழுதத் தொடங்கியதும், இது சுயசரிதையோ என ஐயப்பாடு எழுந்தது. இல்லை; சத்தியம், உழைப்பு, வெற்றிக்கு வழி, மனித தர்மம் என்று மிகவிரிவாகக் கூறி, இவற்றிற்கெல்லாம் உதாரணமாக நம்மிடையே வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கிற மாமனிதர்களையும், நல்லவர்களையும் அடையாளம் காட்டுகிறார் ஆசிரியர். நம் எண்ணங்கள், செயல்களுக்கு மெருகேற்றிக் கொள்ள உதவும் நூல், இது.

### வெண்மை போர்த்தியது

**ஆசிரியர்: காவேரி**
**வெளியீடு:**
காவ்யா
16,17 இ. கிராஸ்
இந்திரா நகர், பெங்களூர்-560 038.

பக்கம்:189 விலை:ரூ.25/-

**சி**றுகதைகளும் நெடுங்கதைகளும் அடங்கிய தொகுப்பு.

கதைகளுக்கு எடுத்துக் கொண்டிருக்கும், கரு, இடம், கதையில் வரும் மனிதர்கள், பெண்கள் எல்லாமே வித்தியாசமானவர்கள், விபரீதமானவர்கள்.

வித்தியாசமான நடையில் கதை சொல்லப்பட்டிருக்கிறது. இதை கதை என்பதைவிட, ஆசிரியரின் அனுபவம் என்றே சொல்லத் தோன்றுகிறது. நீளமாக விவரிப்பதைச் சுருக்கி இருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

—குமார்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.




22செப்1994
சென்னை-600 008
தமிழரசு
16.8.1994
ரூ.3



DIPR No.678/DIS/93/247

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108



## இதழ்தோறும் ஓர் இனிய குறள்

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார் (6)

ஐம்பொறி வாயிலாகப் பிறக்கும் வேட்கைகளை அவித்த இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றவர், நிலைபெற்ற நலவாழ்க்கை வாழ்வர்.

## இந்த இதழில்.....

சுதந்திர நாள் விழாவில் மாண்புமிகு முதலவர் உரை......2
ஒன்று கூடுவோம்! (கவிதை)......11
நீலகிரி மாவட்ட நலத் திட்ட விழாவில் மாண்புமிகு முதலவர் உரை......12
திருக்கோயில் திருப்பணிகள்......17
புதுக்கோட்டையில் ஒரு மெரினா......19
அடுக்குமாடிக் குடியிருப்பில் உள்ளவர்களுக்குக் குடிநீர் வசதி......21
நூல் நயம்......22
இளமையில் கல் (கவிதை)......23
வாழ்வாங்கு வாழ்தல்......24
கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை......27
குடும்ப நலம் பேணுவோம் (கவிதை)......43
தமிழ் வளர்ச்சி மன்றம்......45

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2025
ஆடித் திங்கள்: 31
மலர்: 25 இதழ்: 4

16.8.1994
விலை ரூபாய் மூன்று

# இட ஒதுக்கீட்டுச் சரித்திரத்தில் நமது சாதனைக்கு என்றென்றும் தனியிடம் உண்டு!

அட்டை சொல்லும் செய்தி

## சுதந்திர நாள் விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை



தாயகம் விடுதலை பெற்ற இந்தத் தங்கத் திருநாளைத் தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் கொண்டாடும் இந்த இனிய வேளையில், விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வணக்கத்திற்குரிய பெரியோர் களே! என்னை வாழ வைக்கும் தெய்வங் களாகிய தாய்மார்களே! இதய தெய்வம் புரட்சித் தலைவரின் ரத்தத்தின் ரத்தமான, என் உயிரினும் மேலான அருமை உடன் பிறப்புக்களே! உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கத்தை முதற்கண் தெரி வித்துக் கொள்கிறேன்.

நமது தாய்த்திரு நாடு விடுதலை பெற்று நாற்பத்தி ஏழு ஆண்டுகள் நிரம்பிய மகிழ்ச்சியில், விடுதலை நாள் விழா நாடெங்கிலும், எழுச்சியோடும், உணர்ச்சிப் பெருக்கோடும் கொண்டாடப்படுகின்ற இந்த நல்ல நாளில்-வரலாற்றுச் சிறப்புமிக்க சென்னை தலைமைச் செயலகக் கோட்டை முகப்பு வாயிலில், தன்னிகரற்ற பாரதத் தாயின் மணிக் கொடியை ஏற்றி வைத்து, திரளாகக் குழுமியிருக்கும், உங்கள் அனை வரையும் காண்பதிலும், விடுதலைத் திரு நாள் வாழ்த்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதிலும், நான் மகிழ்ச்சிப் பெருமிதம் அடைகின்றேன்.

ஒரு நாட்டின் உயிர் மூச்சு, அதன் சுதந்திரம் என்பது வரலாறு காட்டுகின்ற உண்மை ஆகும். பல நூற்றாண்டுகளாக அந்நியர் ஆதிக்கத்தின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்த நமது அருமைத் தாயகம், கத்தியின்றி, ரத்தமின்றி ஒரு அகிம்சைப் போராட்டத்தை அற வழியிலே நடத்தி, விடுதலை பெற்றதைப் போன்ற, வியக்கத் தக்க வரலாற்று விந்தை இந்த நூற்றாண்டின் ஈடு இணையற்ற சாதனை என்பது மட்டுமன்றி நமது உலகம் இதற்கு முன்னர் இத்தகைய ஒரு அதிசய யுத்தத்தை எப்போதும் கண்டதில்லை என்று அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். பல்லாயிரக்கணக்கான இந்திய மக்கள் நமது நாட்டின் அடிமைத் தளையை நீக்கி, இந்தியாவை ஒன்றுபட்ட நாடாக விளங்க வைக்கச் செய்திட்ட தியாகங்களும், சிந்திய குருதியும், ஏற்றுக்





கொண்ட சிறைவாசங்களும்தான், இன்று நாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வழி வகுத்துள்ளது என்பதை நாட்டுணர்வு உள்ள எவரும் மறந்துவிட முடியாது.

தன்னலமின்றி, தாம் பெறாத சுதந்திரத் தைத் தமது சந்ததியினர் அனுபவிக்க வேண்டும் என்று விடுதலைப் போராட்டத் தில் தங்கள் உடல், பொருள், ஆவி, அனைத்தையும் அர்ப்பணித்த எண்ணற்ற தியாக சீலர்களையும், மாமனிதர்களையும், அவர்கள் புரிந்த தியாக வேள்விகளையும் நினைவுகூர்ந்து - அவர்கள் அனைவருக்கும் நமது நன்றியைக் காணிக்கையாக்குகின்ற நல்ல நாள் இந்தச் சுதந்திர தின நாள். ஆண்டுகள் பல கடந்தாலும், அந்தத் தியாக சீலர்களின் தியாகங்கள் நமது நெஞ்சைத் தொட்டுக் கொண்டே இருக்கும். நீறு பூத்த நெருப்பாக இருக்கும் நமது நாட்டுப் பற்றும், சுதந்திர உணர்வும், இந்த நன்னாளில் வீறு கொண்டு எழுகின்றது. அவர்தம் தியாகங் களை நினைத்து நமது நெஞ்சங்கள் இன்றும் அமைதியாக மௌன அஞ்சலியை, மன திலே செலுத்திக் கொண்டிருக்கின்றன.

போராடிப் பெற்ற சுதந்திரத்தை, நாம் என்றென்றும் போற்றிப் பாதுகாப்போம் என்ற சூளுரையை, இந்நன்னாளில் இந்திய மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் தவறாமல் எடுத்துக் கொள்ள வேண்டும். இதனை நமக்கு நினைவூட்டும் பொன்னாள் இந்த வீர விடுதலை நாள் ஆகும்! ஆதிக்க சக்திகளும், பிரிவினைவாதச் சக்திகளும், பயங்கரவாத சக்திகளும் , நமது நாட்டின் ஒருமைப்பாட் டிற்கு உலை வைத்து, தேசத்தைச் சீர் குலைக்கச் செய்யும் முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில், பெற்ற சுதந் திரத்தை உயிரினும் மேலாய்ப் பேணிக் காப்போம் என்ற உணர்வு, நமது உயிரிலும், ஒவ்வொரு அணுவிலும் இரண்டறக் கலக்க வேண்டும் என்பதே எனது அவா.

விடுதலை அடைந்து, கடந்த நாற்பத்தி ஏழு ஆண்டுக் காலமாக மகத்தானதொரு மக்களாட்சியை ஏற்படுத்தி, நம்மை நாமே ஆண்டுவரும் இந்தச் சூழ்நிலையில், எந்தச் சீரிய இலட்சியங்களை அடைய வேண்டும் என்பதற்காக நாம் சுதந்திரத்தை அடைந் தோமோ, விடுதலையைப் பெற்றோமோ, அந்த இலட்சியங்களை அடைந் துள்ளோமா? நமது இலக்கை நோக்கி நாம் நேரான பாதையில் நடை போடுகிறோமா? என்ற வினாக்கள் நம் அனைவரின் மனங் களிலும் விஸ்வரூபம் எடுக்கின்றன. இல் லாமை, கல்லாமை, ஜாதிக் கொடுமை, வேலையின்மை போன்ற பல்வேறு சமு தாயப் பிணிகள் இன்றும் பல கோடிக் கணக்கான மக்களைப் பாதித்து வருவது நமது உள்ளங்களில் வேதனையை உண் டாக்குகின்றது. நாம் வகுத்துக் கொண்ட அரசியலமைப்புச் சட்டமும், அதனடிப் படையில் நாம் ஆற்றி வருகின்ற பல்வேறு சமுதாய, பொருளாதாரக் கடமைகளும், வளர்ச்சிப் பணிகளும், அந்த இலட்சியங் களை நோக்க நம்மை எந்த அளவிற்கு முன்னே கொண்டு சென்றிருக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்த்து, நமது குறைகளைக் களைந்து, முனைப்புடன் நமது இலட்சியப் பயணத்தைத் தொய்வின்றி மேற்கொள்ள நம்மை நாம் மீண்டும் அர்ப் பணித்துக் கொள்ளும் நாள்தான் இந்த விடுதலை நாளாகும்.

ஆறரைக் கோடி தமிழகத்து மக்களின் இல்லங்களில் மகிழ்ச்சியும், அன்பும் பொங்கவேண்டும் உடற்பிணியும், பசிப்பிணியும் நீங்கி, செறிவார்ந்த அறிவும்,

செழுமையான பண்பும் நிலவவேண்டும் இல்லாமையும், கல்லாமையும் இல்லாத ஒரு நாடாக விளங்கவேண்டும் என்ற புனித இலட்சியங்களுடன் அனைத்துத் தரப்பு மக்களின் அமோகமான பேராதரவுடன், ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டது உங்கள் அன்புச் சகோதரியின் நல்லரசு. எந்த இலட்சியங்களை அடையவேண்டி தியாக சீலர்களும், உத்தமத் தலைவர்களும், பாடு பாட்டார்களோ, அந்த மகத்தான இலட்சி யங்களையும், உயர்ந்த எண்ணங்களையும், நனவாக்கவே கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொய்வின்றி நாங்கள் பாடுபட்டு வரு கின்றோம் என்பதை இந்நன்னாளில் பெரு மிதத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்பு கின்றேன்.

சமூக நீதி ஏன் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதனை நமக்கு உணர்த்திய பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், அந்தச் சமூக நீதி எப்படிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை எடுத்துரைத்த பேரறிஞர் அண்ணா, சமூக நீதியைத் தமது பத்தாண்டுக் கால ஆட்சியில் நிதரிசனமாக நடைமுறைப் படுத்திக் காட்டிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகிய முப்பெரும் தலைவர் களின் அடியொற்றி அவர்களின் புனிதப் பாதையில் நடந்து, அவர்களின் இலட்சியங் களை நனவாக்கும் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடும்போது, எங்களது அரசு உண்மையிலேயே நமது தேசத் தந்தை அண்ணல் காந்தி அடிகளின் கனவுகளையே நனவாக்கி வருகின்றது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

நமது நாட்டின் இறையாண்மையும், பாதுகாப்பும் அந்நிய சக்தி ஒன்றினால் சிதைக்கப்படும் பேரபாயம் ஒன்று நமது நாட்டை, குறிப்பாகத் தமிழ்நாட்டை மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எதிர்நோக்கி இருந் ததை, நிச்சயமாக நாடு மறந்திருக்காது. உங்கள் அன்புச் சகோதரி தனது உயிரைப் பணயம் வைத்து, இரும்புக் கரம் கொண்டு, பயங்கரவாத சக்திகளை முறியடித்து, உறுதிமிக்க நடவடிக்கைகளால் தமிழகத் தைக் காப்பாற்றியதை வீர உணர்வு பொங்கும் இந்த இனிய நேரத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன். நாம் எடுத்த அதிரடி நடவடிக்கைகளால், தீய சக்திகளின் எண்ணக் கோட்டைகள் தகர்க் கப்பட்டன. தமிழகம் அமைதிப் பூங்காவாக மீண்டும் உருவெடுத்தது. தடைபட்ட வளர்ச்சிப் பணிகள், புத்துயிர் பெற்றன. சோதனைகளைச் சாதனைகளாக்க உங்கள் அன்புச் சகோதரிக்கு உங்கள் பேராதரவும், பேரன்பும் மட்டுமே துணையாக இருந்தது என்பதை மீண்டும் நினைவு கூர்வதில் பெருமிதம் அடைகின்றேன்.

சொல்லில் இருப்பதைவிட செயலில் எங்கள் வேகம் அதிகமாக இருந்ததால்தான், தமிழ்நாடு இன்று முன்னேற்றப் பாதையில் பீடு நடை போடுகிறது; தமிழகத்தில் அமைதி தேவதை ஆனந்தக் குடி கொண்டிருக்கிறாள்.

அமைதி கோலோச்சும் இடத்தில்தான். வளர்ச்சி அரங்கேறும். தமிழகத்தில் அமைதியை நிலைநாட்டியவுடன், எங்களது அரசு தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் விரைந்து நடத்திட உறுதி பூண்டது.



அதற்கேற்ப- தொழில் துறை, வேளாண்மை, கூட்டுறவு, வீட்டு வசதி மற்றும் ஆதிதிரா விடர் நலன் போன்ற அத்தியாவசியத் துறைகளைத் தேர்ந்தெடுத்து அவை எப் போதும் இல்லாத அளவுக்கு, வளர்ச்சி யிலும், சாதனையிலும் புதிய இலக்குகளை எய்திட, புதிய சரித்திரத்தைப் படைத்திட, எங்களது அரசு முழு ஆற்றலோடு முனைந்து செயல்பட்டதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

தமிழகத்தைத் தொழில் மயமாக்கிட, 1992-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எங்களது அரசு புதிய தொழிற் கொள்கையை அறிவித்தது. அதனடிப்படையில் புதிய தொழில்களைத் தொடங்குவதற்கும் தற் போதுள்ள தொழில்களை விரிவுபடுத்து வதற்கும், உரிய நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட்டதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். 2000 கோடி ரூபாய் மதிப்பில், 70,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய NAPCO தொழிற்சாலையைத் தொடங்க மத்திய அரசின் அனுமதி ஜெயங்கொண்ட சோழபுரத்தில், கூட்டுத் துறையில் 7,500 கோடி ரூபாய் மதிப்பில் நிறுவப்படவுள்ள நிலக்கரி சுரங்கப்பணி மற்றும் மின் உற்பத்தித் திட்டம் தொடங்க அனுமதி, சென்னைக்கு அருகிலுள்ள சோளிங்கநல்லூர் மற்றும் பள்ளிக்கரணை யில், 800 ஏக்கர் நிலப்பரப்பில் 407 கோடி ரூபாய் மதிப்பில், 'சென்னை தொழில் பூங்கா', 'தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 10,831 கோடி ரூபாய் மதிப் புள்ள 42 புதிய திட்டங்களுக்கு அனுமதி- இப்படி தொழில் துறையில், இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் தமிழகத்திற்கு ஒரு தனி இடத்தைப் பெற்றுத் தர உரிய முயற்சிகளை, உறுதியான எண்ணத்துடன் எங்களது அரசு, பதவியேற்ற நாள் முதலாக முனைப்போடு எடுத்துவருவதை, இந்நன்னா ளில் எடுத்துக் கூற விழைகிறேன்.

வேளாண் அரங்கைப் பொருத்த வரையில், நாங்கள் பதவி ஏற்கும் போது, 90.4 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த தமிழகத்தின் மொத்த உணவு தானிய உற்பத்தி, கடந்த மூன்றாண்டுகளில் படிப்படியாக உயர்ந்து தற்போது 103 இலட்சம் மெட்ரிக் டன்னாகப் பல்கிப் பெருகி, தமிழகத்தின் வேளாண் வளத்தை உயர்த்தி இருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் உங்கள் அனைவருடனும் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

"இயல்புளிக் கோலோச்சும், மன்னவ னாட்ட பெயலும், விளையுளுந் தொக்கு"

என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு. நன்னெறிக் கோட்பாடுகளுக்கேற்ப,



அறவழியில் ஆட்சி நடக்கும் நாட்டில், காலத்தோடு மழை பெய்து, பயிர் ஓங்கி வளரும் என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே, வள்ளுவரால் உரைக்கப் பட்டவாறு - நமது மாநிலத்தில் கடந்த மூன்றாண்டுகளாக மழை நன்முறையில் பெய்து, பயிர்கள் செழித்து உணவு தானிய உற்பத்தியில் புதிய சாதனையைப் படைக் கின்ற அளவுக்குத் தமிழகம் உயர்ந்து இருப்ப தற்காக, இந்தச் சுதந்திரத் திருநாள் அன்று, எனது அன்பிற்குரிய தமிழகத்துப் பெரு மக்களாகிய உங்கள் அனைவரின் சார்பிலும் இயற்கை அன்னைக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியறிதலை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

தமிழகத்தின் உரிமைகள் காக்கப்பட வேண்டும்; பல்துறைகளில் தமிழகம் விரைந்து முன்னேற வேண்டும் என்ற கொள்கைகளுக்கு ஏற்பட்ட இடையூறு களையும், குந்தகங்களையும், சவால்களாக எண்ணி எங்கள் அரசு, அவற்றைத் துணிவுடன் எதிர்கொண்டு சோதனை களைச் சாதனைகளாக்கியுள்ளது. குறிப்பாக, தமிழகத்தின் ஜீவாதார உரிமைப் பிரச்சினை யாகிய காவிரி நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினை

யில், தமிழகத்திற்குரிய தண்ணீர் கிடைக்க வேண்டும் எனப் பிறப்பிக்கப்பட்ட நடுவர் மன்றத்தின் தீர்ப்பினைக் கால தாமதமின்றி நடைமுறைப்படுத்தக்கோரி, தமிழகத்துப் பெருமக்கள் அனைவருடைய ஒட்டுமொத்த உணர்வுகளை ஒருமுகமாக வெளிப்படுத்தும் வண்ணம் அண்ணல் காந்தி காட்டிய அறவழியில், நான் உண்ணா நோன்பை மேற்கொண்டு தமிழகத்தின் உரிமைக்குரல் கொடுத்ததையும் மத்திய அரசு அதற்குச் செவி சாய்த்து, நமது உரிமைகளைக் காத்திட தொழில்நுட்பக் குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளதையும் இந்த நேரத்தில் நினைவு கூர்வது பொருத்தமுடையதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

நியாயத்தின் அடிப்படையிலும், தர்மத்தின் அடிப்படையிலும், நான் உண்ணாநோன்பை ஒரு புனித வேள்வியாக மேற்கொண்டதால் தான், இன்று இயற்கை அன்னை நம்மீது தனது அருளை வாரி இறைத்துக் கொண்டிருக்கிறாள். தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள ஏரிகளும், குளங்களும், நீர்நிலைகளும் நிரம்பி வழிகின்றன. உங்கள் அன்புச் சகோதரி ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர்தான், கடந்த 3 ஆண்டுகளாக, மேட்டூர் அணை நிரம்பி வழிவதோடு, இன்று உபரி நீரைக் கொள்ளிடத்தில் திறந்துவிடும் அளவிற்கு நீர் ஆதாரம் நமக்கெல்லாம் மன நிறைவைத் தரும் அளவிற்குப் பெருகியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நமக்கு நீர் விட மறுத்தவர்களே, வேறு வழியின்றி, நீரைத் திறந்துவிட வேண்டிய கட்டாயத்திற்கு இயற்கையால் இன்று தள்ளப்பட்டு இருக்கிறார்கள் என்றால், நமது எண்ணங்களில் தூய்மையும், செயல்களில் நியாயமும் இருக்கிறது என்றுதானே பொருள்?

தமிழகத்தின் உயிர்நாடிப் பிரச்சினையாகிய 69 சதவிகித இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையிலும், எங்களது அரசு, ஆத்மார்ந்த ஈடுபாட்டுடன் உறுதியோடு போராடி, சட்டம் ஒன்றை இயற்றி, அதற்குக் குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்தையும் பெற்று, இறுதியாக அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம் என்ற வெற்றி இலக்கை விரைந்து அடைய முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது.

இந்திய நாட்டின் தனித்தன்மையைக் காப்பாற்றுகின்ற அதே நேரத்தில், தமிழ்நாட்டின் அடிப்படை உரிமைகளைப் பெற்றுத் தருவதிலும் எங்கள் அரசு பின் வாங்கியதில்லை. தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதிலும், காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரை உள்ள இந்திய மக்கள் அனைவரும், எல்லா வளமும் நலமும் பெற வேண்டும் என்கின்ற தேசிய உணர்விலும், மற்றவர்களுக்கு நாம் வழிகாட்டியாக, முன்னோடியாக இருந்து வருகின்றோம். அதே நேரத்தில் நலிந்த பிரிவினைச் சார்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்கவும், நாங்கள் உறுதி பூண்டிருக்கிறோம் என்பதை, வெறும் பேச்சுக்களால் அல்ல; அர்த்தமற்ற வார்த்தைகளால் அல்ல; எங்கள் ஆக்கபூர்வமான செயல்களால், நாள்தோறும் நிரூபித்துக் கொண்டிருக்கிறோம்.





எந்தவொரு சமூக நீதியைக் காப்பதற்காகப் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் தங்களுடைய வாழ்நாள் முழுவதும் அயராது பாடுபட்டார்களோ, அந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு குந்தகம் ஏற்பட்டபோது தமிழகத்துடைய ஒட்டுமொத்த உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற வகையில், திராவிடப் பாரம்பரியத்தின் உயிர் மூச்சுக் கொள்கையை நிலைநாட்ட நாம் என்றென்றும் உறுதியாக இருப்போம் என்பதை உறுதிப்படுத்தும் வகையில், உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறை, தமிழ்நாட்டில் என்றென்றும் தொடர்ந்திட, அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டேன்.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும், இட ஒதுக்கீட்டிற்கு என ஒரு தனிச் சட்டம், இயற்றப்படாத சூழ்நிலையில், அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி அதில் ஒரு மனதாக ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றி அதன்படி தமிழகச் சட்ட மன்றத்தில் ஒரு சட்டத்தையும் நிறைவேற்றி, மேதகு குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தோம். பின்னர் ஒரு ஆத்மார்ந்த ஈடுபாட்டுடன் நாம் மேற்கொண்ட ஆக்கபூர்வமான முயற்சிகளின் காரணமாக, இன்று இந்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறை சட்டவடிவம் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் சமூக நீதி காப்பாற்றப்பட்டுள்ளது. நமது எண்ணங்களில் தூய்மை இருந்ததாலும், உணர்வுகளில் உண்மை இருந்ததாலும் தான், குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்தையும் பெற்றோம்; மத்திய அரசின் ஆதரவையும் பெற்றோம்.

இது ஒரு சரித்திரச் சாதனை என்பதை, அரசியல் மனமாச்சர்யங்களின் காரணமாகச் சிலர் ஏற்றுக் கொள்ள மறுத்தாலும், நாட்டு மக்களுடைய நலனை மட்டுமே கருத்திற்கொண்டு செயல்படுபவர்கள், நிச்சயமாக ஒப்புக்கொள்வார்கள். எங்களைப் பொறுத்த வரையில், சமூக நீதியைக் காப்பாற்றிட எந்தத் தியாகத்தையும் செய்திட, நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இட ஒதுக்கீட்டுச் சரித்திரத்தில் நமது சாதனைக்கு, என்றென்றும் ஒரு தனியிடம் உண்டு, என்பதில் ஐயமில்லை.

ஏதோ ஒரு சட்டம் இயற்றிவிட்டோம், என்று மகிழ்ச்சி அடைந்து, கடமைகளை மறந்துவிடுபவர்கள் அல்ல நாங்கள். இந்தச் சட்டத்திற்கு, அரசியல் அமைப்புச் சட்டத்தின் பாதுகாப்பு கிடைப்பதற்காக அரசியல் அமைப்புச் சட்டத்தின், 9-வது அட்டவணையில் இதனைச் சேர்க்க வேண்டும் என்று குரல் கொடுத்துவருகிறோம். அரசியல் சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்று அகில இந்திய அளவில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கடிதம் மூலம் தொடர்புகொண்டு ஒரு தேசிய ஒற்றுமைக் கருத்தை உருவாக்குவதில் பெரும் வெற்றியைக் கண்டுள்ளோம். இது தமிழகத்தின் உயிர்மூச்சுப் பிரச்சினை. இதில் அரசியல் மனமாச்சர்யத்திற்கும், கட்சிப் பேதங்களுக்கும், தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கும் இடமளிக்காமல், அனைவரும் ஒன்று கூடி, ஓரணியில் திரண்டு நின்று, நமக்கு வேண்டிய சட்டத் திருத்தத்தை, பொருட் சேதமின்றி, உயிர்ச் சேத மின்றி, அமைதியான வழியில் பெற வேண்டும் என்று மீண்டும் மீண்டும், அனைவரையும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

போராட்டங்களால் சாதிக்க முடியாதவற்றைப் புனிதமான எண்ணங்களால் சாதிக்க முடிந்துள்ளது என்பதும் சரித்திரம் காட்டும் பேருண்மை. இல்லாத பகைவரை இருப்பதாக நினைத்து நிழல்போர் நடத்துவதிலும், நமது பொதுச் சொத்துக்களை நாமே அழிக்க வழி வகுப்பதிலும் பயன் இல்லை என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வார்கள். பாராளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளின் ஆதரவைப் பெற்று, ஒட்டுமொத்த பொதுக் கருத்தை நமது சார்பில் உருவாக்கி, அதன் மூலம் மத்திய அரசின் துணையுடன் சட்டத் திருத்தத்தை கொண்டுவருவதுதான், அறிவுபூர்வமான செயல் என்பதை அரசியல் அறிந்தவர்கள் ஒப்புக் கொள்வார்கள். உணர்ச்சி வயப்படும் போது, உள்ளதை இழந்து நிற்கின்றோம். அறிவுபூர்வமாகச் சிந்திக்கும்போது, புதிய சிந்தனைக்கும், புதிய சரித்திரத்திற்கும் வழி வகுக்கின்றோம். தமிழ் மக்கள் இந்திய நாட்டிற்குப் பல விதங்களிலும் நல்ல வழிகாட்டிகள் என்ற உண்மையை மீண்டும் மெய்ப்பித்துக் காட்டுவோம். வீரமும், விவேகமும் சேரும் போது, எடுத்த வினைகள் யாவும் வெற்றியில்தான் முடியும். நாம் விவேகமான முறையில் இந்தப் பிரச்சினையைத் தொடர்ந்து கையாண்டால் வெற்றி நிச்சயம் நமக்குத்தான், என்பதைத்

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்'

—மகாகவி பாரதியார்

தெரிவிப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எனவே தமிழகத்து மக்களின் பொது நலன் பாதிக்கப்படும் போது, நாம் அனைவரும் ஒன்றுபட்டு, ஓரணியில் நின்று, அருமைத் தமிழகத்தின் உரிமைகளைக் காப்பதற்கு, உரிமைக் குரல் கொடுக்கவேண்டும் என்பதே எனது சுதந்திரதின வேண்டுகோள்.

தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வு களை மதிக்கின்ற வகையில் நடவடிக்கை களை எடுத்து வருகின்ற தமிழக அரசின் கரங்களை வலுப்படுத்திட அனைவரும் ஒன்று சேரவேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு செய்யும் போது இட ஒதுக்கீட்டுக் கொள்கை ஒரு புதிய எழுச்சியையும் புதிய பரிமாணத் தையும் பெறும், என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

ஒவ்வொரு மாநிலத்திலும் நிலவுகின்ற பல்வேறு சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, அந்தந்த மாநிலம் தங்களுக்குத் தேவையான இட ஒதுக்கீட்டு அளவை நிர்ணயம் செய்கின்ற அடிப்படை உரிமை யைப் பெற்றுத் தர வேண்டும் என்ற நமது உணர்வு, குறுகிய மாநில உணர்வுகளைக் கடந்து, தேசிய நீரோட்டத்தில் கலந்து, எல்லா மாநிலங்களின் சார்பிலும் எழுப்பப்படும் உரிமைக்குரல் ஆகும். நமது முயற்சிகளுக்கு ஒரு தீர்வு ஏற்படும்போது சரித்திரத்தில் தமிழக மக்களுக்கு என்று ஒரு தனி இடம் கிடைக்கும் என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு.

ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் நம் மீனவர்களை இலங்கை கப்பற்படையினரின் அட்டூழியங்களிலிருந்து காப்பாற்றுவதற்காக நாம் மேற்கொண்ட தொடர் நடவடிக் கைகளின் காரணமாக இன்று மத்திய அரசு இலங்கை அரசுடன் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்கிற நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. நம் கடலோர மீனவர்கள் அமைதியான முறையில் மீன்பிடி தொழிலை மேற்கொள்ளவும், இலங்கைக் கப்பற்படையினரை அடக்கி வைக்கவும் இந்த ஒப்பந்தம் வழி வகுக்கும். மீனவப் பெருமக்களின் சமூகப் பாதுகாப்புக்காக மீன் பிடிக்கச் செல்ல இயலாத, 4 மாத காலங்களுக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்கும் திட்டத்தையும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அவர்களது பொருளாதார சமூக மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் திட்டத்தையும் தமிழக அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவிற்கு, உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சிக் காலத்தில்தான் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின பெருமக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காகப் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்கள், வசிக்கும் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப் பட்ட குடிநீர், தெரு விளக்கு, இணைப்புச் சாலை, மயான வசதி, மயானத்திற்குச் செல்லும் சாலை, ஆகிய ஐந்து அடிப்படை வசதிகளை 125 கோடி ரூபாய் செலவில், அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள், செய்து தருவதற்கான திட்டமும் அந்தப் பணிகளை மேற்பார்வையிட, ஓர் உயர் மட்டக் கண்காணிப்புக் குழு, அமைக்கப் பட்டு இருப்பதும் அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு, வழிவகுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. தொழிலாளர்களாகவே இருக்க வேண்டிய, ஒரு சூழ்நிலையை மாற்றி ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களைத் தொழில் முனைவோர்களாகவும் மாற்றவேண்டும், என்பதற்காக அவர்களுக்கு என்று தனியே தொழிற்பேட்டைகளை ஏற்படுத்தி, தொழில் ஊக்குவிக்கும் திட்டங் களையும் எங்கள் அரசு முனைப்புடன் செயல் படுத்தி வருகின்றது.



**'பெண்களின் நிலை உயரும்போது, ஆண்களின் நிலையும் உயரும்; இவ் விருவரின் நிலையும் உயரும்போது, மனித சமுதாயத்தின் நிலையே உயர்ந்துவிடும்.'**

உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் தான் தமிழகம் கடந்த 3 ஆண்டுகளாக மின்வெட்டே இல்லாத மாநிலம் என்ற ஒரு தனிப்பெருமையைப் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். தொழில் வளர்ச்சிக்கு அடிப்படை யாக விளங்கும் மின் உற்பத்தியைப் பெருக்க எங்கள் அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை களை எடுத்துவருகின்றது.

பட்டி தொட்டிகளில் வசிக்கின்றவர்களும், பேருந்துகளில் பயணம் செய்கின்ற அளவிற்கு எல்லா குக்கிராமங்களுக்கும் சாலை வசதிகளையும், போக்குவரத்து வசதிகளையும் செய்து கொடுத்துள்ளோம்.

சமுதாயத்தில் சரி பாதியாக இருக்கும் மகளிரின் மேம்பாட்டிற்கும், குழந்தைகளின் நலனுக்கும் எண்ணற்ற சமூக நலத் திட்டங்களைத் தீட்டி ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் செயல்படுத்தி வருகின்றது எங்கள் அரசு. 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டம், தொட்டில் குழந்தைகள் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் போன்றவைகளும் இதுவரை என்னால் திறந்து வைக்கப்பட்ட 19 அனைத்து மகளிர் காவல் நிலையங்களும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் மேம்பாட்டில் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கிவருகிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

பாதுகாக்கப்பட்ட குடிநீரை எல்லாக் கிராமங்களுக்கும் வழங்க, பல கோடிக்கணக்கான ரூபாயைச் செலவிட்டு வரும் எங்கள் அரசு – உயிர் காக்கும் மருந்துகளும், நவீன மருத்துவ வசதிகளும் கிராமங்களில் வசிக்கின்ற ஏழை எளிய மக்களுக்கும், பாமர மக்களுக்கும் சென்றடையும் வண்ணம், பல்வேறு மருத்துவ நலத் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

இந்நாட்டின் எதிர்காலச் சொத்துக்களான மாணவ மாணவிகளின் நலனிலும் நாங்கள் செலுத்தும் அக்கறை தமிழகத்தில் மனித வள மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியவர் களின் இலட்சியங்களை நடைமுறைப்படுத்த உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு எல்லா வளர்ச்சிப் பணிகளிலும் ஒரு புதிய உத்வேகத்துடன் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் என்பதை உறுதியோடு தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.

இந்த நல்ல நாளில் தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் எல்லா நலங்களும், எல்லா வளங்களும் பெற்றுச் சீரோடும், சிறப்போடும் வாழ வேண்டும் என்ற எனது பேரவாவினைத் தெரிவித்துக் கொண்டு, விடை பெறுகிறேன்.

# அயராது உழைப்போம்!



இந்திய விடுதலைக்காகப் போராடியவர்களை நினைவுகூரும் இந்த நாளில், தமிழ்நாட்டு மக்களின் உரிமைக்காகவும், நியாயத்திற்காகவும் ஜனநாயக முறையில் நாங்கள் கடைசி வரை போராடுவோம், அதை அடையும்வரை ஓயமாட்டோம் என்று உறுதி கூறுகிறேன்.

மக்களின் நலன் காக்கவே இந்த அரசு பொறுப்பேற்றுள்ளது. சமுதாயத் தில் ஒதுக்கப்பட்ட - புறக்கணிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் உயர்வுக்கும், மாநிலத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கும் அடி கோலும் எங்கள் அரசு, தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளைக் காப்பதில், பாதுகாப்பு அரணாகத் திகழும் என்பதை, இந்த நேரத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தியத் திருநாட்டின் ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையினையும் பேணிக் காப்போம். இழந்த நம் உரிமைகள் அனைத்தையும் விரைந்து மீட்போம்.

'நாம் இருக்கும் நாடு இந்தியா
நாம் அனைவரும் இந்தியரே'
என்ற முழக்கம் திக்கெட்டும் புரவச் செய்வோம்.

**இருபத்து ஓராம் நூற்றாண்டை நோக்கி - தொலை நோக்குப் பார்வை யோடு இந்தியாவை வளமுள்ளதாகவும் - வலுவுள்ளதாகவும் உருவாக்கிட அயராது உழைப்போம்! வெல்வோம்!**

***'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-1-லிருந்து.***

## 48வது விடுதலை நாள் விழா

இந்தியாவின் 48வது விடுதலை நாள் விழா 15.8.94 அன்று நாடெங்கும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

தமிழக அரசின் சார்பில் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் விடுதலை நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விடுதலை நாள் விழாவில் கலந்து கொள்வதற்காக, மாண்புமிகு புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வருகை புரிந்த போது, அவரை சாலையின் இரு புறங்களிலும் குழுமியிருந்த வெள்ளைச் சீருடையணிந்த மாணவ, மாணவியர் தேசியக் கொடியை அசைத்து வரவேற்றனர். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோட்டை வாசலருகே வந்து காரிலிருந்து இறங்கியதும், அங்கு திரளாகக் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்களை, தலைமைச் செயலாளர் திரு. என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார். காவல்துறை இயக்குநர் திரு. ஸ்ரீபால், கூடுதல் இயக்குநர் திரு. தேவாரம், சென்னை நகரக் காவல்துறை ஆணையாளர் திரு. ராஜகோபாலன், சென்னை செரிப் டாக்டர் சொக்கலிங்கம் ஆகியோரையும் முப்படைத் தளபதிகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தலைமைச் செயலாளர் அறிமுகம் செய்துவைத்தார்.

அதைத் தொடர்ந்து கோட்டைக் கொத்தளத்தின் எதிரே சாலையோரம் போடப்பட்டிருந்த சிறிய மேடையிலிருந்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். பின்னர் காவல்துறையினரின் அணி வகுப்பைப் பார்வையிட்டார்.

பின்னர், சரியாக 9.02 மணிக்கு, புதிதாக அமைக்கப்பட்டிருந்த கொடிக் கம்பத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து வணக்கம் செலுத்தினார். அதுசமயம் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

பின்னர் கோட்டைக் கொத்தளத்தின் முகப்பில் நின்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் விடுதலை நாள் உரை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து, உடல் ஊனமுற்ற 100 குழந்தைகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இனிப்பு மற்றும் உணவுப் பொட்டலங்களை வழங்கினார்.

பின்னர், 1993-94ஆம் ஆண்டில், ஊன முற்றோர் நலனுக்காகச் சிறந்த சேவை புரிந்த நிறுவனத்திற்கான "மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா விருதை" இந்தியக் குழந்தைகள் நலச் சங்கம் தமிழ்நாடு சென்னை30க்கும், 1993-94ஆம் ஆண்டில் மகளிர் மற்றும் குழந்தைகள் நலனுக்காகச் சிறந்த சேவை புரிந்த நிறுவனத்திற்கான "மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் சிறப்பு விருதை" சென்னை விச்ராந்தி நிறுவனத்திற்கும், 1993ஆம் ஆண்டில் ஊனமுற்றோருக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு வழங்கிய சிறந்த தனியார், தொழில் நிறுவனத்திற்கான, "மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் , ஜெ. ஜெயலலிதா அவர்களின் சிறப்பு விருதை" ஓசூர் டைட்டன் இன்டஸ்ட்ரிஸ் லிமிட்டெட் நிறுவனத்திற்கும், ஊனமுற்றோர் மறுவாழ்வுக்காகச் சிறந்த மருத்துவ சேவை புரிந்த மருத்துவருக்கான "மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் சிறப்பு விருதை" டாக்டர் இ.செ. சண்முகம் தி.நகர், சென்னை-அவர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் புலவர் இந்திரகுமாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிகளை ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்குநரகம் ஏற்பாடு செய்திருந்தது.

இவ்வினிய விடுதலை நாள் விழாவில் சட்டப்பேரவைத் தலைவர், சட்டப் பேரவைத் துணைத் தலைவர், அனைத்து அமைச்சர் பெருமக்கள், சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. கே.ஏ. சுவாமி, பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உயர் அதிகாரிகள், விடுதலைப் போராட்ட வீரர்கள், வாரியத் தலைவர்கள் பத்திரிக்கையாளர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

—என். இளங்கோ





# ஒன்று கூடுவோம்!

-டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ்

நீடு வாழ்க எங்கள் நாடு
என்று பாடுவோம்!
நேய வாழ்வில் இன்பம் காண
ஒன்று கூடுவோம்!





நிறம் மொழிகள் பலவெனினும்
பண்பில் நாமெல்லாம்
ஒரு குடும்ப உதிரம் கொண்ட
உறவின் மாந்தராகலாம்!



பேதம் ஏதும் இன்றி வாழ்வில்
அன்பை நாடுவோம்
நீதி நேர்மை கொண்டு தீமை
வென்று வாழுவோம்!

இமய முதல் குமரி வரையில்
இங்கு யாவரும்
சரிநிகராய் சகோதரராய்
வாழ்ந்து காட்டுவோம்!



வாய்மை தூய்மை கொண்டு வாழ்வில்
வளமை காணுவோம்
தேய மேன்மை ஒன்றை நாடும்
நோன்பு பூணுவோம்!



இறையருள் அனுதினமும்
எண்ணி வேண்டுவோம்
பிறர் நலனை நினைந்தரிய
பணியில் மூழ்குவோம்!





# ரூ 4. கோடி செலவில் மலைவாழ் குழந்தைகள் வளர்ச்சித்திட்டம்

## நீலகிரி மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை

இயற்கை அன்னையின் ரம்மியமான வனப்பையும், எழிலார்ந்த மலை முகடுகளையும் தன்னகத்தே கொண்ட, 'மலைகளின் அரசி'யாம், நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தந்து, குன்னூரில் நடைபெறும் இந்த வண்ணமிகு, அரசு விழாவில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் சந்திப்பதில், நான் மட்டிலா மகிழ்ச்சியை அடைகின்றேன்.

நாள்தோறும் விஞ்ஞானத்தின் எல்லைகள், விரிவடைந்து கொண்டிருந்தாலும்; மனிதனால் சாதிக்க முடியாதது, ஒன்றுமில்லை என்ற நிலை ஏற்பட்டிருந்தாலும்; இயற்கையின் வரப்பிரசாதங்களைப் படைத்தவன் சிருஷ்டித்த அழகோடு, நிச்சயமாக நம்மால் மீண்டும் படைத்துவிட முடியாது.

இயற்கை அன்னையின் இனிமையான வெளிப்பாடுகளாம், இதுபோன்ற மலை வாசஸ்தலங்களை,மனித முயற்சிகளை மட்டும்கொண்டு, உருவாக்கிட முடியாது. தொழிலிலே புரட்சியைக் காணலாம்; விஞ்ஞானத்தில் விந்தைகளை உருவாக்கலாம்; ஆனால் பனி படர்ந்த மலைகளும்; விண்ணை முட்டும் மலை முகடுகளும்; நெடிதுயர்ந்த மரங்களும்; பூத்துக் குலுங்கும் மலர்களும்; பல்வேறு வண்ணங்களில் மனதைக் கவரும் செடி கொடிகளும்; இயற்கை அன்னை அருளிய வரப்பிரசாதங்கள். சாதாரண மனிதக் கரங்கள், அவற்றை நிர்மாணிக்க முடியாது. எனவே தான் இயற்கையின் எழிலார்ந்த வடிவங்கள், நம் மனதிற்கு என்றும் மகிழ்ச்சியைத் தருகின்றன.

தமிழகத்திற்கு மட்டுமின்றி, இந்தியத் திருநாட்டிற்கே பெருமை சேர்க்கின்ற, எழிலார்ந்த நீலகிரி மலைப் பகுதிக்கு, வந்து செல்லும் போதெல்லாம், என் மனதிற்கு ஒ தனி நிறைவு ஏற்படுவதை, நான் உணர்ந்திருக்கிறேன். இன்றும் அந்த உணர்வு, என் நெஞ்சில் நிழலாடுகின்றது.

சுற்றுலாப் பயணிகளையும், தாவரவியல் ஆராய்ச்சியாளர்களையும், உலகில் பல்வேறு பகுதிகளிலிருந்து, கவர்ந்து .ஈர்க்கக்கூடிய, இந்த மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக, உங்கள் சகோதரியாகிய நான், 297 கோடி ரூபாய் மதிப்புள்ள, அரசு நலத்திட்டங்களை, இன்று உங்களுக்கு வழங்குவதற்காக வந்துள்ளேன்.

248 கோடி ரூபாய் மதிப்புள்ள, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதிலும்; 36 கோடி ரூபாய் மதிப்பில் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களைத் துவக்கி வைத்ததிலும்; 30,000 க்கும் மேற்பட்ட





இம்மாவட்ட வாழ் மக்களுக்கு, 13 கோடி ரூபாய் மதிப்பில், அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதிலும், நான் அளவிலா ஆனந்தத்தினை அடைகின்றேன்.

1992 -ஆம் ஆண்டு, மலர்க் கண்காட்சியைத் துவக்கிவைத்து, அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வந்தபோது, இந்த மாவட்டத்து மக்கள், என் மீது பொழிந்த பாசத்தையும், வெளிப்படுத்திய அன்பையும், என்றும் என்னால் மறக்க முடியாது.

கடந்த ஆண்டு, இம்மாவட்டத்தில், நிலச் சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை, ஹெலிகாப்டர் விமானம் மூலம் பார்வையிட்டு, இம்மாவட்ட மக்களின் குறைகளை நீக்க, நிவாரணப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்ளச் செய்தேன். இம்மாவட்டத்து மக்களை, இயற்கைச் சீற்றத்தின் விளைவுகளில் இருந்து காப்பாற்றவேண்டும்; அவர்கள் வாழ்க்கைத் தரத்தை, மேலும் உயர்த்தவேண்டும் என்ற எண்ணம், பல காலமாக என் மனதில் தொடர்ந்து இருந்து வந்தது. அதன் வெளிப்பாடாகத்தான் இன்று, 297 கோடி ரூபாய்க்கான, அரசின் பல்வேறு திட்டங்கள், இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

எண்ணற்ற சாதனைகள் பலவற்றை, ஏராளமாய் நிகழ்த்திவரும், உங்கள் சகோதரியின் ஆட்சிக்குப், பாராட்டுத் தெரிவிப்பார்கள் எதிர்க்கட்சியினர் என, நான் நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை. நாட்டு மக்களுக்கு இன்றைக்கு, எளிதில் சென்று சேர்ந்து கொண்டிருக்கும், அரசின் நலத்திட்டங்களை நிறைவேற்றிட, உதவி கரமாகவாவது உள்ளார்களா என்றால், இல்லை. அதுகூட வேண்டாம்; உதவி கரமாகக்கூட இருக்க வேண்டாம்; உபத்திரவமாவது கொடுக்காமல் இருக்கலாம் அல்லவா?

"நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்"

என்ற முதுமொழிக்கு ஏற்ப...

நாட்டுக்கு நல்லது செய்யத்தான் இவர்களால் முடியாது; கெடுதல் செய்யாமலாவது இருக்கக்கூடாதா?

காலங்காலமாகத் தமிழகத்தில் காப்பாற்றப்பட்ட, சமூக நீதிக் கொள்கையை, தொடர்ந்து கடைப்பிடித்திட வேண்டும் என்பதற்காக, 69 சதவீத இட ஒதுக்கீட்டிற்கெனத் தமிழகச் சட்ட மன்றத்தில் சட்டம் நிறைவேற்றி; அதற்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற; உங்கள் சகோதரி முனைந்து செயல்பட்டதையும், அதிலே வெற்றி பெற்றதையும், இங்கே அனைவரும் குறிப்பிட்டனர்.

ஆனால் அந்தப் பிரச்சினையில், தமிழகத்தில் இருக்கிற எதிர்க்கட்சியினர், துளி அளவேனும், அரசின் முயற்சிகளுக்குத் துணை நின்றார்களா? அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து டெல்லி சென்று, பிரதமரை வற்புறுத்துவோம், வாருங்கள் என்றால்- உடன் வந்தார்களா? உடன் வர முடியாது என்றார்கள். பரவாயில்லை; தமிழகச் சட்டத்திற்குக் குடியரசுத் தலைவர் ஒப்புதலைத் தர வேண்டும், என்றாவது வற்புறுத்தினார்களா? வற்புறுத்த மனமில்லை என்றாலும், பேசாமலாவது இருந்தார்களா?

"இந்தச் சட்டமே செல்லாது; குடியரசுத் தலைவர் ஒப்புதல் தர மாட்டார்; அப்படியே ஒப்புதல் தந்தாலும் பயன் படாது; யாராவது கோர்ட்டுக்குப் போனால் அடிபட்டுவிடும்;" என்றெல்லாம் பேசிக் கொண்டிருந்தார்கள். பேசிக்கொண்டிருந்ததோடு மட்டுமல்லாமல்; இவர்களே கோர்ட்டுக்குச் செல்வதற்கு, ஆட்களையும்



தயார் செய்தார்கள்.

சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டோருக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் இந்த எதிர்க் கட்சியினர் செய்த "அளப்பரிய" தொண்டு, எப்பேர்ப்பட்டது என்பதைப் பார்த்தீர்களா?

எப்பேர்ப்பட்ட கெடு மதியினர், சூது எண்ணத்தினர் இவர்கள் என்பதை உணர்த்துவதற்காகவே, இந்த உண்மையைச் சொல்லவேண்டியுள்ளது.

இந்த லட்சணத்தில், சில நாட்களுக்கு முன்னர், இரண்டு மூன்று கட்சித் தலைவர்கள் மதுரையில் கூடி, "விரைவில் மிகப் பெரிய போராட்டம் நடத்தப் போகிறோம்" என்று வேறு, இப்போது அறிவித்திருக்கிறார்கள்.

கடந்த மூன்றாண்டுக் காலமாக, இவர்களது இந்தப் போராட்டங்களை எல்லாம், உங்கள் பேராதரவுடன் சந்தித்த வண்ணம்தான், உங்கள் சகோதரி, உங்களுக்காக ஓர் உன்னத ஆட்சியை உங்கள் ஆட்சியை நடத்திக் கொண்டு வருகிறேன்.

இவர்களது போராட்ட ஆயுதம்தான் மழுங்கியதே தவிர, உங்கள் சகோதரியின் ஆட்சிக்கு, எவ்வித பங்கமும் நேர்ந்தது இல்லை. தொடர்ந்து மக்களுக்காக, மக்களின் நன்மைக்காக, மக்களின் உயர்வுக்காக, மக்களின் மேன்மைக்காக நல்லபல திட்டங்களை, முனைப்புடன் செயல்படுத்திக் கொண்டே உள்ளோம்.

ஆனால் இவர்கள் "போராட்டம்; போராட்டம்", என ஆர்ப்பரிக்கும் ஒவ்வொரு நேரத்திலும், பொது அமைதிக்கும் பொதுச் சொத்துக்களுக்கும், இவர்களால் திட்டமிட்டுச் செய்யப்படும், சேதங்களைப் பற்றித்தான், ஒவ்வொரு முறையும் கவலைகொள்ள வேண்டியுள்ளது.

ஜனநாயக நாட்டில், எதிர்க்கட்சிகளின் போராட்டங்கள் என்பன, அங்கீகரிக்கப் பட்டவைதான் என்றாலும்; தமிழகத்தில் இவர்கள்... போராட்டம் என்ற போர்வையில் செய்கிற அட்டூழியங்களை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

பல ஆண்டுக்காலம் முதலமைச்சராக இருந்த ஒருவர் அறிவிக்கிற எந்தப் போராட்டமாக இருந்தாலும் ஊர்வலங்களாக இருந்தாலும் மாநாடுகளாக இருந்தாலும் அவை எதிலாவது வன்முறைச் சம்பவம் நிகழாமல் இருந்தது உண்டா? பொதுச் சொத்துக்கள் சேதம் அடையாமல் இருந்தது உண்டா? பஸ்கள் உடைக்கப் படாமல் இருந்தது உண்டா? தீக்கிரை ஆக்கப்படாமல் இருந்தது உண்டா?

அந்தத் தலைவர் தடையுத்தரவை மீற முற்பட்ட போது கைது செய்யப்பட்டு சென்னை நகரத்தின் காவல் நிலையம் ஒன்றில் சில மணி நேரம் காவலில் வைக்கப்பட்டார். அவர் காவலில் வைக்கப்பட்ட காவல் நிலையத்தின் முன்னர் போடப்பட்டிருந்த கீற்றுக் கொட்டகைகூடத் தீக்கிரையாக்கப்பட்டது; பேருந்துகள் பல சேதப் படுத்தப்பட்டன, அந்தத் தலைவர்; முன்னாள் முதல்வர், என்ன எழுதினார் தெரியுமா? "என்னைக் கைது செய்த காரணத்தால் ஏற்பட்ட எழுச்சியைப் பார்த்தீர்களா? ஆகா! எப்பேர்ப்பட்ட எழுச்சி" என மெய் சிலிர்த்துப் போனார்! மதுரையிலே இவர்கள் மாநாடு என்றால்... சாலைகளில் போடப்பட்ட இரும்புத் தடுப்புகள் அத்தனையும் சேதப்





படுத்தப்படுகின்றன.

ஒரு பொறுப்புள்ள தலைவர் என்றால்... பொறுப்புள்ள பதவியில் இருந்தவர் என்ற எண்ணம் துளியேனும் இருந்திருக்குமானால்; அவற்றை எல்லாம் கண்டித்திருக்க வேண்டாமா? ஆனால் இவைபற்றி எல்லாம் அந்தத் தலைவர் "என்னே எழுச்சி! என்னே உணர்ச்சி" என்றே குறிப்பிட்டுள்ளார் என்றால்; அவரைப்பற்றி நீங்களே ஒரு முடிவு செய்துகொள்ளுங்கள்.

ஆனால்; உங்கள் அன்புச் சகோதரியான என்னைப் பொறுத்த மட்டில் "போராட்டம்; ஆர்ப்பாட்டம்" என்கிற போது அவற்றில் பொது மக்களுக்குத் துளியும் பாதகம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் திட்டவட்டமான கொள்கையைக் கொண்டுள்ளேன். ஆகவேதான் அண்மையில் எங்கள் இயக்கத்தின் மாணவர் அணியினர் சென்னையில் நடத்திய பேரணி ஒன்றில், அசம்பாவிதம் நிகழ்ந்து சில பேருந்துகள் சேதப்படுத்தப்பட்டபோது; உடனடியாக அசம்பாவிதத்தைக் கண்டித்ததோடு, பொதுச் செத்துக்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு நான் தார்மீகப் பொறுப்பேற்று, சேதங்களுக்குச் சரியான மதிப்பீட்டுத் தொகையான ஒரு லட்சம் ரூபாயை எங்கள் கட்சியில் இருந்து போக்குவரத்துக் கழகங்களுக்குக் கட்டச் செய்தேன் என்பதை அனைவரும் அறிவீர்கள்.

பொதுவாக மாணவர்கள் போராட்டம் என்றாலே, சில பிரச்சினைகள் ஏற்படுவது உண்டு. இருந்தாலும் அதுவே ஓர் கட்சி அமைப்பின் சார்பில் செயல்படும் மாணவர் அணியினர் பெயரில் நிகழ்ந்துவிட்ட காரணத்தால், உடனடியாக அதற்கான நஷ்ட ஈட்டை எங்கள் கட்சி ஏற்றுக் கொண்டு, கட்டச் செய்திருக்கிறேன்.

இவ்வாறு கட்சி நிகழ்ச்சி ஒன்றில் ஏற்பட்ட அசம்பாவிதத்திற்காகப் - பொதுச் சொத்து சேதத்திற்காக அக்கட்சியே பொறுப்பேற்று நஷ்ட ஈடு வழங்கி இருக்கிறது என்பது இந்தியாவிலேயே இது தான் முதன் முறையாகும். அத்தகைய ஆரோக்கியமான அரசியல் சம்பிரதாயத்தைத் தொடங்கி வைத்துள்ளது உங்கள் சகோதரியின் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான், என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்வேன்.

அத்தகைய பெருந்தன்மை மதுரையிலே கூடி போராட்ட அறிவிப்புச் செய்துள்ள தலைவர்களுக்கு உண்டா? அவர்களுக்குப் பின்னணியில் திரை மறைவு ஆதரவு வேலைகளில் ஈடுபட்டுள்ள பெரிய மனிதர்களுக்கு உண்டா?

கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் ஒரு கட்சி நடத்திய போராட்டங்களாலும், வன்முறை நிகழ்ச்சிகளாலும் கோடிக்கணக்கில் பொதுச் சொத்துக்களைச் சேதமுறச் செய்து; பஸ்களை எரித்து, நொறுக்கி; சாலையோர மரங்கள் பலவற்றை வெட்டி வீழ்த்தியதோடு; உயிர்கள் பலவற்றையும் கூட பலி கொண்ட ஓர் கட்சியும் இவர்களோடு தற்போது போராட்டத்திற்குச் சேர்ந்து கொள்ளும்போது - வன்முறை எந்த அளவிற்குத் தலைவிரித்தாடும் என்பதை நீங்களே புரிந்துகொள்ளுங்கள்.

இருப்பினும், தமிழ் நாட்டின் பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படாமல் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு எனக்கு உள்ளது.




எங்களைப் பொருத்தவரையில் தமிழகத்தின் வளர்ச்சி ஒன்றையே முழு மூச்சாகக் கொண்டு தொடர்ந்து செயல்படுவோம்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காகப் பல்வேறு நலத்திட்டங்களை நாங்கள் முனைப்புடன் செயல்படுத்தி வருகிறோம். இம்மக்களின் நலனுக்காக, 10 அம்சத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வரலாறு காணாத வகையில், அடிப்படை வசதிகளை இம்மக்களுக்குப் பெற்றுத் தருவதிலும், புதிய பொருளாதார முயற்சிகளில் அவர்களை ஈடுபட வைப்பதிலும் தனிக்கவனம் செலுத்தி வருகின்றோம். ஜாதி, சமயம் மற்றும் பொருளாதார பேதமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் கண்ட இலட்சியக் கனவை, அவர்களின் அடியொற்றி புனிதப் பாதையில் நடந்து வரும் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு உண்மையாக்குவதில் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது.

சமீபத்தில் நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், தமிழ்நாட்டில் உள்ள ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடி மக்கள் வசிக்கும் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, தெரு விளக்குகள், இணைப்புச் சாலை வசதி, மயான வசதி மற்றும் மயானத்திற்குச் செல்லும் சாலை வசதி ஆகிய 5 அடிப்படை வசதிகளை, 1995-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் போர்க்கால அடிப்படையில் செய்து தரவேண்டும் என்று ஆணையிட்டுள்ளேன். எத்தகைய குடியிருப்புகளுக்கு எந்தெந்த வசதிகள் தேவைப்படுகின்றன என்ற ஒரு ஆய்வு எனது ஆணையின் பேரில் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டதால், அத்தனை விவரங்களும் அரசிடம் உள்ளன. தேவையான இடங்களில் நில எடுப்பு செய்வதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குடிநீர் வசதி செய்து தருவதற்கு 10 கோடியே 35 இலட்சம் ரூபாயும், மயானம் அமைப்பதற்கும், மயான சாலைகள் அமைப்பதற்கும், 33 கோடியே 73 இலட்சம் ரூபாயும், தெரு விளக்கு வசதி செய்துதர, 3 கோடியே 34 இலட்சம் ரூபாயும் செலவிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பணிகளை ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் முடிக்கவும் திட்டம் தீட்டியுள்ளோம்.

இப் பணிகள் நிறைவேறும் போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் வாழ்க்கையில் ஒரு புதிய எழுச்சி உண்டாகும் என்று நான் பரிபூரணமாக நம்புகிறேன். "எல்லோரும் ஓர் விலை; எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்" என்று, பாரதி கண்ட இலட்சிய சமுதாயத்தைப் படைப்பதே எங்கள் நோக்கமாகும்.

பழங்குடி மக்கள் மிக அதிக அளவில் வசிக்கின்ற இந்த நீலகிரி மாவட்டத்தில், இந்தத் திட்டங்களின் பலன்கள் மிக அதிக அளவில் போய்ச் சேரும் என்று உறுதியாக நம்புகின்றேன்.

மழைக் காலங்களில் மலைகளில், வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி, நிலத்தின் மேல்பகுதி மண் அரித்துச் செல்லப்படுவதால், இப்பகுதியின் சாலைகள் எளிதில் பாதிக்கப்பட்டுவிடுகின்றன. இதனால்

(தொடர்ச்சி.33 ஆம் பக்கம் பார்க்க)



# திருக்கோயில் திருப்பணிகள்

**மா**ண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழ் நாட்டிலுள்ளதிருக்கோயில்கள் சீரமைப்பிற்கும், திருப்பணிகளுக்காகவும், மற்றும் கோயில் திருத்தேர்களைப் புதுப்பிப்பதற்கும், பக்தர்களின் நலனுக்காக திருச்செந்தூர் மற்றும் சமயபுரம் போன்ற முக்கியத் திருத்தலங்களில் நவீன வசதிகளுடன் பேருந்து நிலையங்கள் அமைத்தல், அர்ச்சகர்கள் குடியிருப்புகள் கட்டுதல், குடிநீர் வசதி செய்தல், மின் வசதி செய்தல் மற்றும் மடங்களுக்கு வருவாய் பெருக்கும் வணிக வளாகங்கள் கட்டுதல் போன்ற பணிகள் தொடர்பாக 35 திட்டங்களுக்கு ரூ.320.52 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணை வழங்கியுள்ளார்.

இந்தத் திட்டங்களுக்குப் பல்வேறு தலைப்புகளின் அரசு மானியமாக ரூ.64.27 இலட்சமும், திருக்கோயில்களின் சொந்த நிதியிலிருந்து ரூ.182.87 இலட்சமும், தனியார் மற்றும் பொதுமக்கள் நன்கொடையாக ரூ.73.38 இலட்சமும் பெற்று செலவிடப்பட உள்ளது.

மேற்கண்ட திருப்பணிகள் மற்றும் இதர கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ள திருக்கோயில்கள் பின்வருமாறு:

அருள்மிகு பிரசன்ன விநாயகர் கோயில், உடுமலைப்பேட்டை, கோவை மாவட்டம்.

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், குழுமூர், லால்குடி வட்டம், திருச்சி மாவட்டம்.

அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில், உறையூர், திருச்சி மாவட்டம்.

அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை.

அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், ஆனந்தகிரி, கொடைக்கானல்.

அருள்மிகு வெள்ளீஸ்வரர் திருக்கோயில், வெள்ளியலூர், திருவள்ளூர் வட்டம், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்.

அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், திருச்சி மாவட்டம்.

அருள்மிகு பன்னாரி மாரியம்மன் திருக்கோயில், சத்தியமங்கலம் வட்டம், பெரியார் மாவட்டம்.

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.



அருள்மிகு மகிஷாசுரமர்த்தினி திருக்கோயில், மத்தூர், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்.

அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம்.

அருள்மிகு கருப்பட்டி முனியசாமி திருக்கோயில், கீழக்கரை, இராமநாதபுரம் மாவட்டம்.

அருள்மிகு இராஜகோபாலசாமி திருக்கோயில், மன்னார்குடி வட்டம், நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம்.

அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், நெடுங்குடி, புதுக்கோட்டை மாவட்டம்.

அருள்மிகு வீரட்டானேஸ்வரர் திருக்கோயில், திருவதிகை, பண்ருட்டி வட்டம், தென் ஆர்க்காடு வள்ளலார் மாவட்டம்.

அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் கோயில், விருத்தாசலம், தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம்.

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம், மதுரை.

செழிப்பான வாழ்விற்கு
இன்றே முதலீடு செய்வீர்

# கிசான் விகாஸ் பத்திரம்

உங்கள் முதலீடு 5½ ஆண்டுகளில் இருமடங்கு வளர்கிறது.

**சிறப்பு அம்சங்கள்**

- ஐந்தரை ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது.
- 18.18% சாதாரண வட்டி.
- பத்திரங்கள் ரூ.100/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- மதிப்புகளில் கிடைக்கின்றன.
- அவசரத் தேவைக்கு 2½ ஆண்டுகளில் வட்டியுடன் பணம் திரும்பப்பெற வசதி.

ரூ.1000/- முதலீட்டிற்கு கிடைக்கும் தொகை

| ஆண்டுகள் | தொகை |
|---|---|
| 2½ ஆண்டுகளில் | ரூ.1,310/- |
| 3 ஆண்டுகளில் | ரூ.1,420/- |
| 3½ ஆண்டுகளில் | ரூ.1,500/- |
| 4 ஆண்டுகளில் | ரூ.1,620/- |
| 4½ ஆண்டுகளில் | ரூ.1,730/- |
| 5 ஆண்டுகளில் | ரூ.1,860/- |
| 5½ ஆண்டுகளில் | ரூ.2000/- |

1.4.1994 முதல் தமிழ்நாட்டில் செய்யப்படும் முதலீட்டிற்கு
**2%**
சிறப்பு ஊக்கத்தொகை.




தமிழ்நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு இலவச பரிசுக் கூப்பன் பெற்று, கவர்ச்சிகரமான மாருதி ஆம்னிவேன் அல்லது டிராக்டர் (இயந்திரக் கலப்பையுடன்) உட்பட 619 பரிசுகளை வெல்ல வாய்ப்பு.

மேலும் விவரங்களுக்கு
ஆணையர்,
சென்னை மாநகராட்சி (சி.சே.பிரிவு), சென்னை-3,
தொலைபேசி: 584440.
மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2,
தொலைபேசி: 849962
மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.
இயக்குநர், சிறு சேமிப்புத் துறை
சபர் மேன்ஷன், 621, அண்ணா சாலை,
சென்னை - 600 006.
தொலைபேசி: 8251784/8251685.

சிறு குடும்பம் செல்வக் குடும்பம்




# புதுக்கோட்டையில் ஒரு 'மெரினா'

புதுக்கோட்டையில் அழகிய மெரினா ஒன்று உருவாகியுள்ளது.

கடல் இல்லாத புதுக்கோட்டை நகரில் அழகிய கடற்கரையா?

ஆச்சரியம்-ஆனால் உண்மை!

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தா. சந்திரசேகரன் மேற்கொண்ட முயற்சியின் விளைவாகப் பொது மக்கள் மாலை வேளையை மகிழ்ச்சியுடன் கழிக்கும் வகையில் புதுக்கோட்டை புதுக்குளம் பொலிவு பெற்றுள்ளது. புதிய அழகு பெற்றுள்ளது.

புதுக்குளம், புதுக்கோட்டை நகரின் மிகச் சிறந்த குளங்களில் ஒன்றாகும்.

நகரின் குடிநீர் விநியோகத்திற்குப் புதுக்குளம் ஒரு முக்கிய ஆதாரமாகவும் திகழ்கின்றது.

புதுக்கோட்டை சமஸ்தானத்தின் திவானாக இருந்த திரு. சேசையா சாஸ்திரி, புதுக்குளத்தைச் சீர் செய்ய 1889-இல் பெருந்திட்டத்தினைச் செயல்படுத்தியதாக மன்னர் காலத்து நிர்வாகம் குறித்த ஆவணங்கள் குறிப்பிடுகின்றன.

நான்காண்டுக் காலம் ஆயிரக் கணக்கான மக்கள் அல்லும் பகலும் உழைத்து புதுக்குளத்தினைச் சீர்செய்து அதன் நீர்க் கொள்ளளவுப் பரப்பினை விரிவுபடுத்தி வறட்சியின் கோரப் பிடியில் சிக்காதவாறு புதுக்கோட்டை நகரைப் பாதுகாக்கும் பெரும் நீர்த்தேக்கமாகத் திகழச் செய்ததாகவும் வரலாற்று ஏடுகள் எடுத்துரைக்கின்றன.

புதுக்குளத்தின் இயற்கை எழிலையும் நீண்ட நீர்ப்பரப்பையும் கண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தா. சந்திரசேகரன், அதன் கரைகளை அகலப்படுத்தி அழகு படுத்தவும், மாலை வேளையில் மக்கள் அமர்ந்து மனம் மகிழ்ந்திடும் வகையில் அடிப்படை வசதிகளை உருவாக்கிடவும் திட்டமிட்டு, நகராட்சி நிர்வாகத்திற்கு ஆணை பிறப்பித்தார்.

புதுக்கோட்டை நகராட்சிக்கு, சிறுசேமிப்பு ஊக்கத் தொகையாக ரூ.50 ஆயிரம் அனுமதித்து, அத்தொகையினைப் புதுக்குளத்தை அழகுபடுத்தும் பணிகளுக்காகச் செலவிடுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொண்டார். புதுக்குளத்தின் இரண்டு கரைகள் பலப்படுத்தப்பட்டு அழகிய பூங்கா அமைக்கப்பட்டு மக்கள் கூடி மகிழும் ஒரு கடற்கரை போன்று காட்சியளிக்கிறது.

குளத்தின் மற்ற கரைகளையும் அபிவிருத்தி செய்யும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

புதுப்பிக்கப்பட்ட குளத்தின் கரையில் பொதுமக்கள் அமர்ந்து மகிழ, இரண்டு நிழற்கொடைகள் சுமார் ரூ.75 ஆயிரம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளன.

இருளில் ஆழ்ந்து கிடந்த புதுக்குளத்தின் வடக்குக் கரையில் 28 விளக்குகளும், மேற்குக் கரையில் 16 விளக்குகளும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. இங்கே அமைக்கப்பட்டுள்ள 4 சோடியம் விளக்குகளும், 3 ஹாலோஜன் விளக்குகளும் இரவில் ஒளி வெள்ளம் பாய்ச்சி, புதுக்குளத்தின் தோற்றத்திற்கு மேலும் எழில் கூட்டுகின்றன.

புதுக்குளத்திற்குத் தண்ணீர் அனுப்பும் தேங்கு குளத்தில் சுமார் ரூ.1.5 இலட்சம் செலவில் தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது.

புதுக்குளத்திற்கு அருகாமையில் உள்ள பூங்கா, புகழ்மிக்க திரைப் பட நடிகர் திரு. பி.யு. சின்னப்பா பெயரில் அமைந்த ஒன்றாகும். செயலற்றுப்போய், பயனற்றுக் கிடந்த இந்தப் பூங்காவில், சிறுவர் விளையாட்டு அரங்கத்தை உருவாக்க மாவட்ட ஆட்சித்தலைவர் உத்தரவிட்டார். விளையாட்டுச் சாதனங்கள் அமைக்கப்பட்டு, நூற்றுக்கணக்கான சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் துள்ளி விளையாடும் மையமாக அது மாறி





யிருக்கிறது.

புதுக்குளத்தின் அழகுபடுத்தும் பணிகளையும், குளத்தின் கரையில் அமைக்கப்பட்டுள்ள நிழற்குடைகளையும், சின்னப்பா பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் விளையாட்டு அரங்கத்தையும், சித்திரை முழு நிலவு நாளன்று 25.4.94 மாவட்ட ஆட்சித்தலைவர் திறந்து வைத்தார்.

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்று வள்ளலார் குறிப்பிட்டதைப் போன்று "நாட்டின் இயற்கை எழில் மங்கிடும்போது மனம் துயருற வேண்டும்" என்று தெரிவித்த மாவட்ட ஆட்சித் தலைவர், "புதுக்கோட்டை நகரை அழகுபடுத்தும் பணிக்குத் தொண்டு நிறுவனங்கள் பொது மக்கள் துணை நிற்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

அழகுபடுத்தப்பட்ட புதுக் குளத்தை 8.5.94 அன்று பார்வையிட்ட மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு. எஸ். ரகுபதி அவர்கள், "தொண்டுள்ளம் கொண்டோரின் துணையோடு புதுக்குளத்தை மேலும் அழகு படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்தார்.

"புதுக்குளத்தை மேலும் அழகு படுத்த ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் ஒன்று தயாரித்துத் தருமாறு அதிகாரிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுக்குளம் அழகுபடுத்தும் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தா. சந்திர சேகரன் அவர்களிடம் கேட்ட போது, அவர் தெரிவித்ததாவது:

"புதுக்கோட்டை நகரம், திட்டமிட்டு அழகிய முறையில் உருவாக்கப்பட்ட நகரமாகும். இந்நகரில் உள்ள குளங்கள், பூங்காக்கள், நினைவுச் சின்னங்கள் போன்றவற்றைப் பராமரித்து அழகுபடுத்தவும், போற்றிப் பாது காக்கவும் பொதுமக்கள் ஒத் துழைப்பது அவசியமாகும்.

"தற்போது புதுக்குளத்தினை அழகுபடுத்தும் பணிக்காகச் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் செலவழிக் கப்பட்டுள்ளது.

"மேலும், தேவையான நிதி ஒதுக்கப்பட்டு, புதுக்குளத்தின் நான்கு கரைகளும் அழகுபடுத் தப்படும். மாலை வேளையில் கூடிடும் மக்களுக்காகத் தற்போது வானொலிப் பெட்டி ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

"செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் மூலம், நாள்தோறும் பயன்மிகு செய்திப் படங்கள் காண்பிக்கப்படுகின்றன. விரைவில் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று அமைக்குமாறு நகராட்சி நிர்வாகம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. புதுக்குளம் அழகுபடுத்தும் பணி நகர மக்களுக்கு மிகவும் நன்மை பயக்கும் பணியாகும்".

மேற்கண்ட இப்பணியைச் செயல்படுத்தி வரும் நகராட்சி ஆணையர் திரு. தி. மோகன், நகராட்சிப் பொறியாளர் திரு. பாலசுப்பிரமணியன் மற்றும் நகராட்சி அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பாராட்டு தெரிவித்தார்.

"தமிழ்நாடு சுற்றுலாப் பயணிகளின் சொர்க்க பூமி, சுற்றுலாவை வளர்ப்பதும் சுற்றுலாப் பயணிகளின் வசதிகளைப் பெருக்குவதும் அரசின் முக்கியக் குறிக்கோள்களாகும்" என்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் முழக்கத்திற்கேற்ப, ஆங்காங்கு மக்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்கள் சுற்றுலா மையங்களாக உருவாகி வருகின்றன.

மக்களைக் கவர்ந்திடும் வகையில் பொலிவுபெறும் புதுக்கோட்டைப் புதுக்குளம், மாவட்டத்தின் சுற்றுலா வரைபடத்தில் இடம் பெறும் காலம் வெகு தொலைவில் இல்லை!

-ஆர். மகாலிங்கம்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
புதுக்கோட்டை



# அடுக்குமாடிக் குடியிருப்பில் உள்ளவர்களுக்குக் குடிநீர்வசதி

சென்னை மாநகரத்தின் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ஆகியவற்றால், ஆரம்ப காலத்தில் கட்டப்பட்ட பல அடுக்கு மாடிக் குடியிருப்புக் கட்டடங்களுக்குக் குடிநீர்வசதி செய்து தராத காரணத்தாலும், மேலும் சமீபகாலமாகக் கட்டப்பட்ட பல அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடங்களுக்குக் குடிநீர்த் தேவை அதிகரித்துள்ள சூழ்நிலையாலும், அடுக்குமாடிக் கட்டடங்களில் வசிக்கும் பெண்களும், குடும்பத் தலைவர்களும், குடங்களிலும், பக்கெட்களிலும், படிக்கட்டுகள் வழியே சுமந்து கொண்டு தாங்கள் வசிக்கும் மேல்தளங்களுக்கு, மிகவும் சிரமப்பட்டு தண்ணீர் எடுத்து வருவதால், நாளடைவில் அவர்களது உடல்நலம் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது என்று மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளதைச் சில பத்திரிகைகளின் வாயிலாக அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இது குறித்து தனது ஆழ்ந்த கவலையையும், மகளிரின் உடல்நலம் பாதிக்கும் இந்த விஷயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற உணர்வினையும் வெளிப்படுத்தி இருக்கிறார்.

அடுக்குமாடிக் கட்டடங்களில் வசிக்கும் பெண்கள் இவ்வாறு நீரை மேலே சுமந்து கொண்டு செல்லும் காரணத்தால், அவர்கள் உடல் நலம் பாதிக்கப்படக்கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், எல்லா அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடங்களிலும் குடிநீர் வசதியை அந்தந்தக் குடியிருப்புகளிலேயே கிடைக்கும் வண்ணம் ஏற்பாடு செய்ய வேண்டும் என, சென்னை மாநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் (MMWSSE), தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மற்றும் சென்னை மாநகராட்சி ஆகிய அமைப்புகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர், டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இவ்வாறு தயாரிக்கும் திட்டத்தைப் போர்க்கால அடிப்படையில், செயல்படுத்த வேண்டும் எனவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சென்னையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புக் கட்டடங்களில் தற்போது குடிநீர் வழங்குவதற்குச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளை ஆராய்ந்து, ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரு குழாயாவது பொருத்தி, குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யும் வண்ணம், ஒவ்வொரு குடியிருப்புப் பகுதியிலும் ஒரு பொதுவான நீர்த்தேக்கத் தொட்டி (Sump) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் (Over Head Tank) ஆகியவற்றை அமைத்து, ஒவ்வொரு குடியிருப்புக்கும் நீர் வழங்குவதற்குக் குழாய்களைப் பதிக்கும் பணியும் மேற்கொள்ளப்படும்.

இந்தப் பணிக்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டையும் விரைவில் அளித்து இத் திட்டத்தைச் செயல்படுத்தி சென்னை மாநகரத்தின் அடுக்குமாடிக் கட்டடங்களில் வசிக்கும் மகளிர், குறிப்பாக, குடும்பத் தலைவிகள் இதனால் பாதிக்கப்படாமலும் அவர்களுடைய உடல்நலம் இதனால் சீர்கெடாமலும் பாதுகாக்க வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, குடிநீர் வழங்குவதற்கான அத்தியாவசியப் பணிகளை இன்னும் ஒரு மாதக் காலத்திற்குள் விவரமாக ஆய்வு ஒன்றை மேற்கொண்டு, பின்பு போர்க்கால அடிப்படையில் இந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு ஆணை வழங்கியுள்ளார்.

மேலும், தனியார் துறையில் குடியிருப்பு அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்டப்படும் போது, ஒவ்வொரு குடியிருப்புக்கும் தனித்தனியே குடிநீர் வசதி செய்து தரப்பட வேண்டும் என்றும் ஒரு முறை கட்டாயப் படுத்தப்படும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அவரது இந்த அறிவிப்பின்படி, தேவையான மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்துள்ளார்.

# நூல் நயம்

### பல்துறை அறிவியல் வரிசை5
### தாவரவியல்

ஆசிரியர்: டாக்டர் ஆனைவாரி
ஆனந்தன்

வெளியீடு: மணியம் பதிப்பகம்
39, இரத்தின முதலி தெரு

குறிஞ்சிப்பாடி,
தெ.ஆ. மாவட்டம்

பக்கம்324 விலை ரூ.40

**தா**வரவியல் பற்றித் தமிழில் எளிமையாகத் தேவையான அட்டவணைகள், விளக்கப்படங்களோடு எழுதப்பட்டிருக்கிறது.

தாவரங்களின் தாவரவியல் பெயர்கள் ஆங்கிலக் கலைச் சொற்களிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்ட பட்டியல் வேறு தனியாக வெளியிடப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட துறையைப் பயிலும் மாணவர்களுக்கு இது பெரிதும் உதவியாய் இருக்கும்.

மாணவர்களுக்கு பெரும்பயனாகவும் ஆசிரியர்களுக்கு உதவியாகவும் உள்ள நூல்.

குமாரசாமி

### கவி காளமேகம் பாடல்கள்

ஆசிரியர்: புலவர் ச. சீனிவாசன்
வித்துவான்
நா. பழனியப்பன்

வெளியீடு சாந்தா பப்ளிஷர்ஸ்
5, ஸ்ரீபுரம் 2வது தெரு
சென்னை 600 014

பக்கம் 201 விலை ரூ15

**'ஆ**சுகவியால் அகிலமெங்கும் வீசு புகழ்க் காளமேகம்' என்று இரட்டைப் புலவரால் போற்றிப் பாராட்டப் பெற்றவர் கவி காளமேகம்.

சொல் புதிது சுவை புதிது என்று சொல்லக்கூடிய வகையிலே, இவரது பாடல்களிலே பொருள் பொதிந்திருக்கும். இவர் எழுதிய அனைத்துமே எளிய இனிய பாடல்கள். படித்துப் படித்து இன்புறத்தக்கன.

நிந்தாத் துதிகள், வியப்பும் சிறப்பும், வசையும் வசைமீட்சியும், எடுப்பும் முடிப்பும், வினா விடை, இரட்டுற மொழிதல், சிலேடை இப்படிப் பல்சுவைப் பாடல்கள் இதிலே இடம்பெற்றுள்ளன. தெள்ளிய நீர் போன்ற தெளிவான உரை. உரையாசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

-மறைமலை

### சாலை விதிமுறையும் விபத்துத் தடுப்பும்

ஆசிரியர்: சூரியநாத்

வெளியீடு: தமிழ்மணி பதிப்பகம்
107ஏ, பெரியார் பாதை
மேற்கு,
சென்னை 600 094

பக்கம்:112 விலைரூ.15

**'வி**பத்துக்களுக்கு யார் காரணம்?' இந்த வினாவுக்கு விடையாகப் பல தலைப்புகளில் கட்டுரைகளில் விளக்கம் தரப்படுகின்றன. அதாவது, சாலைப் பாதுகாப்பு விதிமுறைகள், ஓட்டுநர்கள் கவனிக்க வேண்டியவை, வாகனப் போக்குவரத்துக் குற்றங்கள் முதலான தகவல்கள் இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளன. வாகனம் ஓட்டிகளிடம் இருக்கவேண்டிய ஒரு நல்ல கையேடு.

### பள்ளி மாணவர்களுக்குப் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

ஆசிரியர்: நீலவன்

வெளியீடு: நீலமணி பதிப்பகம்
11, கிருஷ்ணப்பிள்ளைத்
தெரு, சாயிநாதபுரம்,
வேலூர் 632 001

பக்கம்120 விலை ரூ.15

**த**மிழ்த் திரையுலகிலே கருத்தாழமிக்கப் பாடல்கள் எழுதிப் பெரும் புகழ் பெற்றவர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம். அவரது பாடல்கள் வெறும் வார்த்தை ஜாலங்களாக இல்லாமல், வாழ்க்கைக்கும் உதவுகிற வகையிலே அமைந்திருந்தன.

படித்து மகிழ்வதற்கும், பாடி ஆடுவதற்கும் ஏற்ற பாடல்கள் அவை. பெரியவர்களுக்கு மட்டுமல்லாமல், குழந்தைகளுக்கும் நீதி போதிக்கக் கூடிய கருத்துக்கள் அவற்றில் மிளிர்ந்திடக் காணலாம். அந்த அற்புதக் கவிஞரை, குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துகிறார் நூலாசிரியர். குழந்தைகள் படிக்கத் தூண்டும் வகையில் உரையாடல் வடிவில் உள்ள இந்நூல், இடையிடையே அவரது வாழ்க்கையையும் கூறி, வாழ்க்கைக்கு வழிகோலிய அவரது பாடல் வரிகளையும் எடுத்துக்காட்டுகிறது. நல்ல முயற்சி. எல்லோரும் படித்து மகிழலாம்.

-பி.வி. கிரி

### சுற்றுப்புறச் சூழலும் மனித மேம்பாடும்

ஆசிரியர்: அ.ஜெயக்குமார்

வெளியீடு: உமா பதிப்பகம்
58, ஐயப்ப செட்டித்
தெரு, மண்ணடி,
சென்னை 600 001

பக்கம்238 விலை ரூ.30

**வீ**டும் வெளியும் இரு கண்களாகக் கருதப்படுகின்றன. சுற்றுப்புறம் தூய்மையாக இருந்தால்தான், நோயற்ற வாழ்வு வாழ முடியும். மனிதன் தன்னையும், தன்னைச் சுற்றியுள்ள இயற்கையையும் பாதுகாத்துத் தானும் வாழ வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை மிக அழகாக, தெளிவாக எடுத்துக் கூறுகிறது இந் நூல்.

காடுகளும் மனித மேம்பாடும், நீர்த்தேக்கங்களும் சூழல் பாதிப்பும், மக்கள் தொகைப் பெருக்கமும், சுற்றுச் சூழல் சீர்கேடுகளும் முதலான 12 தலைப்புகளில் சுற்றுப்புறச் சூழல் குறித்த கருத்துக்கள், ஆய்வுகள், பாதுகாக்கும் முறைகள் தெளிவுறக் கூறப்பட்டுள்ளன. பொதுவாகப் பெரியவர்களும், குறிப்பாக பள்ளி மாணவர்களும் படிக்க வேண்டிய புத்தகம் இது.

-மறைமலை



# இளமையில் கல்!

## கவிஞர் மனசை. ப. கீரன்



அறிவில் சிறந்தார் மானுடரே
அழியாக் கல்வி ஆயுதமே!
நெறிகள் கண்ட சான்றோர்கள்
நேயம் வளர்த்தார்! வாழ்கின்றோம்!

அவ்வை குறளார் பாரதியார்
அவரின் தாசன் எல்லோரும்
எவ்வெந் நிலையில் பிறந்தாலும்,
இனிதே கற்கக் கவிபடைத்தார்!

மக்கள் தொகைக்கு நம்நாட்டில்
வயிற்றை நிரப்பும் பசும்புரட்சி!
மிக்க நலஞ்செய் அறிவியலே!
விரும்பிப் பயில்வீர், வாழ்வினிலே!

பஞ்ச பூதம் ஆள்பாரில்
பருத்தே ஆய்ந்த அறிவெல்லாம்
விஞ்ச நுணுகித் தொகுத்தளித்தல்
விளைக்கும் கணினி ஆள்வீரே!

என்ன என்ன அறிவுண்டோ
இன்றே இன்னே பயில்வோமே!
பொன்னாம் மனித வாழ்வினிலே
புவியை உயர்த்த முனைவோமே!

கல்வி அறிவின் சாலையடா!
கற்றல் வேண்டும், இளமையிலே!
பள்ளி திறந்தார்! சோராமல்
பயில்வீர்! உயர்வீர்! வாழ்விப்பீர்!



# வாழ்வாங்கு வாழ்தல்

## முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்

திருக்குறளில் ஒரு குறளில் வந்த ஒரு சொற்றொடர், 'வாழ்வாங்கு வாழ்தல்' என்பது. 'வாழ்வாங்கு வாழ்தல்' என்பதற்கு, 'வாழவேண்டிய முறைப்படி வாழ்தல்' என்பது பொருள். இது நன்றாகப் புரிகிறது. "வாழ வேண்டிய முறை" எது என்பதுதான் பலருக்குப் புரிவதில்லை.

மனிதன் மனிதனாகப் பிறந்தும் பறவையைப் போல ஆகாயத்தில் பறக்கக் கற்றுக் கொண்டிருக்கிறான். மனிதன் மனிதனாகப் பிறந்தும் மீனைப் போலத் தண்ணீரில் நீந்தக் கற்றுக் கொண்டிருக்கிறான். மனிதன் மனிதனாகப் பிறந்தும் மனிதனைப் போலத் தரையில் நடக்கக் கற்றுக்கொள்ளவில்லை. அப்படி நடக்கக் கற்றுக் கொள்வதுதான், 'வாழ வேண்டிய முறை'. அவை ஒன்றிரண்டல்ல; பல.

### வாழ்வாங்கு வாழ்தல் - 1.

தனக்கே உரிய செல்வத்தை இல்லாத ஏழைமக்களுக்கு வழங்கி, பெற்றுக்கொண்ட மக்களின் முகம் மலர்ச்சியடைவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிற இன்பம் ஒரு வகை. இதை "ஈத்துவக்கும் இன்பம்" என்று குறள் குறிப்பிடுகிறது. இந்த இன்பத்தைப் பெற்று வாழ்வதும், 'வாழ்வாங்கு வாழ்தல்' என்றாகும். இவ்வாழ்வுக்குத் தமிழ் மொழி 'ஈகை' எனக் குறிப்பிடுகிறது.

உலகத்திலுள்ள உயிரினங்கள் 'நான்கு இலட்சத்து முப்பத்



திரண்டாயிரம்' என உயிர்நூற் புலவர்கள் கூறுகிறார்கள்.

அது உண்மையோ பொய்யோ எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று தெரியும். அது, நான்கு இலட்சத்து முப்பத்திரண்டாயிரம் உயிரினங்களில் கையைப் படைத்த உயிரினம், 'மனித இனம்' ஒன்றுதான் என்பது. இதிலிருந்து மனித இனத்திற்குக் 'கைகள்' படைக்கப்பெற்றதே, பிறருக்கு வழங்கத்தான் என்று நம் தாய் மொழியாகிய தமிழ் 'ஈகை' என்ற இரண்டெழுத்துச் சொல்லால் காட்டுகிறது ஈ+கை = ஈகை. எப்படி நம் தமிழ் மொழி. இது மனிதன் வாழ்வாங்கு வாழ வேண்டிய முறைகளில் ஒன்று என்று தெரிகிறது.

**1995-ஆம் ஆண்டு, எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெறுவதையொட்டி, தமிழ்ச் சான்றோர்களின் கட்டுரை இதழ்தோறும் இடம் பெறுகின்றது. அந்த வகையில், முத்தமிழ்க் காவலர் திரு கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் எழுதிய திருவள்ளுவர் குறித்த கட்டுரை இந்த இதழில் இடம் பெறுகிறது.**

### வாழ்வாங்கு வாழ்தல் - 2

பைபிளில் பத்துக் கட்டளைகள் இருப்பதைப் போல, திருக்குறளிலும் பத்துக் கட்டளைகள் உள்ளன. அவற்றைச் சாட்டையடி அடிப்பது போல, பத்துக் கட்டளைகளையும் வெவ்வேறான பத்துச் சொற்களால் அடித்துக் காட்டுகிறது குறள். அவை

"பொய்யைச் சொல்லாதே;
புலாலை உண்ணாதே
கள்ளைக் குடியாதே;
களவை நினையாதே
காமம் கொள்ளாதே;
கொலையைச் செய்யாதே
சிற்றினம் சேராதே;
சூதை விரும்பாதே
புறங்கூறாதே;
பொறாமையடையாதே"

—என்பன. இவ்வாறு வாழ்வதுதான் வாழ வேண்டிய முறை எனவும் புலப்படுகிறது.

### வாழ்வாங்கு வாழ்தல் - 3

நாட்டிற்கு என்று சில உடைமைகள் உள்ளன. வீட்டிற்கு என்று சில உடைமைகள் உள்ளன போல, மனிதனுக்கு என்று சில உடைமைகள் உள்ளன. அவை ஆடை அணிகள் மட்டுமல்ல, அவை வெளி உடைமைகள். ஆனால், வள்ளுவம் கூறும் உடைமைகளோ உள் உடைமைகள். அவையும் ஒன்றிரண்டல்ல; பத்து உடைமைகள். அவை:

அன்புடைமை - எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல்.

அருளுடைமை - எளியோரிடம் இரக்கம் காட்டுதல்.

அறிவுடைமை - பகுத்து அறிந்து அறிதல்.

அடக்கமுடைமை - மனம், மொழி, மெய்களை அடக்கி வாழ்தல்.

ஆள்வினையுடைமை - செயல் திறம்படைத்தல்.

ஒழுக்கமுடைமை - ஒழுக்கத்துடன் செயல்படல்.

ஊக்கமுடைமை - ஊக்கம் கொண்டு வாழ்தல்.

நாணமுடைமை - தீச்செயல்களைச் செய்ய வெட்கப்படுதல்.

பொறையுடைமை - விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் சகிப்புத் தன்மையும்.

பண்புடைமை - உயர்வாழ்வு வாழ்தல்.

இவை பத்தும் வாழ்வாங்கு வாழ வேண்டிய முறைகளாகும். இவற்றில் 'பண்புடைமை'யை திருவள்ளுவர் திருக்குறளில் வைத்து இருக்கும் இடமே எண்ணி எண்ணி வியக்கக் கூடியதாகும். 97-ஆம் அதிகாரத்தில் 'மானத்தை'ப்பற்றிக் கூறி, 98-ஆம் அதிகாரத்தில் 'குடிப்பெருமை'யைப் பற்றிக் கூறி 100-ஆம் அதிகாரத்தில் 'பண்புடைமை'யை வைத்துக் கூறியிருக்கிறார். இதிலிருந்து முழு மனிதன் நூறாண்டு வாழ்வான் என்பது போல, முழு மனிதன் பண்போடு வாழ்வான் என்றும் அறிய முடிகிறது. இவை



பத்தும் வாழ்வாங்கு வாழ்தலுக்கு வழிவகைகளைக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

### வாழ்வாங்கு வாழ்தல் - 4

மக்களாகப் பிறந்தவர்களில் வாழ வேண்டிய முறைப்படி வாழ்கிறவன் வாழ்வாங்கு வாழ்பவனாவான், அவன் மனிதனாயிருப்பினும் தெய்வமாகக் கருதப்படுவான். அவனுடைய கால் இம்மண்ணுலகில் ஊன்றியிருப்பினும் விண்ணுலகில் ஊன்றியிருப்பதாகக் கருதப் பெறும் என ஒரு குறள் கூறுகிறது. அது,

"வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" (41)

இதிலிருந்து, 'மனிதன் தெய்வமாகலாம்' என்பது வள்ளுவரின் கருத்து என்பது தெரிகிறது.

### வாழ்வாங்கு வாழ்தல் - 5

'மனிதன் தெய்வமாகலாம்' என்று வள்ளுவர் இக்குறளில் மட்டும் கூறியிருக்கவில்லை. மற்றொரு குறளிலும் கூறியிருக்கிறார் அது,

அடக்கம்அமரருள் உய்க்கும்
அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும் (121)

அடக்கம் மூவகைப்படும். முதல் அடக்கம் மனம். மனம் ஒரு குரங்கு. அது மண்ணைக் கண்டால் தாவும். பொன்னைக் கண்டால் தாவும். பெண்ணைக் கண்டால் தாவும். அதை அடக்கி ஆள வேண்டும்.

இரண்டாவது அடக்கம். 'நாவடக்கம்' தீய சொற்களைச் சொல்லாமலும், தீய உணவை உண்ணாமலும், நாவை அடக்கி ஆள வேண்டும்.

மூன்றாவது அடக்கம் உடல் அடக்கம். பணிவு. பணிந்து நடப்பது எல்லோருக்கும் நல்லது. ஆனால், செல்வம் படைத்தவர்களுக்கு, அது மேலும் ஒரு செல்வத்தைப் போன்று காட்சியளிக்கும். இதிலிருந்து அடக்கமான வாழ்வும் 'வாழ்வாங்கு வாழ்தல்' எனப்படும் என்று தெரிகிறது.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் வாழவேண்டிய முறைகள் என்னென்ன? என்பதை ஒருவாறு அறியலாம். எடுங்கள் குறளை- படியுங்கள்- நன்றாகச் சிந்தியுங்கள் ஆழ்ந்து- உணருங்கள் உண்மையை. அந்த அளவோடு விட்டுவிடாதீர்கள் செயலிலும் செய்துகாட்டி வாழுங்கள்!

## செந்தமிழ்க் கல்விச் சோலையிலே!

கே.ஏ.அம்பாள்தாசன்

செந்தமிழ்க் கல்விச் சோலையிலே
சேர்ந்து படித்திட வாருங்களே!
முந்தையர் சிந்திய அறிவுரைகள்
முறையோடு கற்றிட வாருங்களே!
— செந்

அன்பால் உலகம் ஆண்டிடலாம்
அறிவால் வாய்மை கண்டிடலாம்
பண்பால் நல்வழி வகுத்திடலாம்
பரிவால் நட்பை வளர்த்திடலாம்!
— செந்

உழைப்பால் வறுமையைப் போக்கிடலாம்
உறுதியால் உயர்வு பெற்றிடலாம்
விழிப்பால் கல்வியில் உயர்ந்திடலாம்
விருதுகள் பெற்று மகிழ்ந்திடலாம்!
— செந்



## அறிவுச் சுடர்

ஆகஸ்ட் 15இல் விடுதலை பெற்ற மற்றொரு நாடு யாது?
தென் கொரியா

இந்திய நாட்டின் தேசிய மலர் என்ன?
தாமரை

கலிலியோ எதைக் கண்டு பிடித்தார்?
தொலைநோக்கி

டென்னீஸ் பந்து எந்த நிறத்தில் இருக்கப்பட வேண்டும்?
வெள்ளை அல்லது மஞ்சள்

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் திரைப்படம் எது?
ராஜா அரிச்சந்திரா

**நமது எண்ணம், சொல், செயல் ஆகியவற்றில் தூய்மையும், தியாகமும், வீரமும் நிறைந்து நிற்க வேண்டும்.**

**— விவேகானந்தர்**

சந்திரனில் முதலில் காலடி வைத்தவர் யார்?
நீல் ஆர்ம்ஸ்ட்ராங்

கோடி பாலைவனம் எங்குள்ளது?
மங்கோலியாவில்

முதன் முதலில் நோபல் பரிசு பெற்ற இந்தியர் யார்?
ரவீந்திரநாத் தாகூர்

'எக்ஸ்_ரே'யைக் கண்டுபிடித்தவர் யார்?
W.C. ரான்ட்ரஜன்

தேயிலை உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
இலங்கை

உலகிலேயே நீளமான நதி எது?
நைல் நதி

'லாக்டோ மீட்டர்' எதற்குப் பயன்படுகிறது?
பாலின் தூயதன்மையை அளக்கப் பயன்படுகிறது.

சால்வின் என்ற நதி எங்குள்ளது?
பர்மாவில்

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் எது?
கோயம்புத்தூர்

மகாத்மா காந்தி பற்றி முதன் முதலில் திரைப்படம் தயாரித்த தமிழர் யார்?
திரு ஏ.கே. செட்டியார்

நள்ளிரவு சூரியன் நாடு எது?
நார்வே

அதிகாலை அமைதி நாடு எது?
கொரியா

கடிகாரத்தை யார் கண்டு பிடித்தார்?
பால் கில்வெடர்

**எவ்வளவு கல்வியும் செல்வமும் இருந்தாலும் அடக்கம் இல்லாவிடின் பண்பாடென்பது இல்லை.**

**— இராஜாஜி**

தமிழ் வளர்த்த பெரியார்:

# கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை



'தோட்டத்தில் மேயுது
வெள்ளைப் பசு-அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக் குட்டி'

இந்தப் பாட்டைப் பாடாத குழந்தைகளே இல்லை எனலாம். அந்த அளவுக்குப் பிரபலமான இந்தப் பாடலை எழுதியவர் யார் தெரியுமா? கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் தான்!

மணிமணியான குழந்தைப் பாடல்கள் எழுதியவர். 'கவிமணி' என்று எல்லோராலும் போற்றப் படும் தேசிக விநாயகம் பிள்ளை, கன்னியாகுமரி மாவட்டம் தேரூரில், 1876-ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள் 28-ஆம் நாள் பிறந்தார். சுசீந்திரத்துக்கு ஒரு கல் தொலைவில் உள்ளது தேரூர் என்னும் சிற்றூர். இவரது பெற்றோர் சிவதாணுப் பிள்ளை, ஆதிலட்சுமி அம்மையார்.

கவிமணி முதலில் தேரூரில் உள்ள தொடக்கப் பள்ளியில் சேர்க்கப் பட்டார். அங்கு மலையாளமே தாய்மொழியாக இருந்தது. ஆகவே இவர் மலையாள மொழியைக் கற்றார். என்றாலும், தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் அவரது உள்ளத்திலே ஊறிக் கிடந்தது. அதன் விளைவாக, சாந்தலிங்கத் தம்பிரானிடம் இலக்கிய, இலக்கணங்களைக் கற்றார்.

தொடக்கப் பள்ளிக்குப் பிறகு, கோட்டாறு ஆங்கிலப் பள்ளியில் சேர்ந்தார். கவிமணிக்குப் பத்து வயதாகும் போது, அவரது தந்தையார் காலமானார். தாயார் அரவணைப்பில் கவிமணி வளர்ந்து வந்தார்.

பள்ளியில் படித்த காலத்திலேயே, இவர் தக்க புலவர்களிடம் தமிழ்ப் பாடம் கற்றுத் தெளிந்தார். அதன் விளைவாக, கவிபாடும் ஆற்றலும் கைவரப்பெற்றார். கவிமணி, தமது பத்தாம் வயதிலேயே கவிதைகள் இயற்றினார்.

தேரூரில் எழுந்தருளியுள்ள அழகம்மை குறித்து, 'அழகம்மை ஆசிரிய விருத்தம்' என்னும் அழகிய கவிதை ஒன்றைப் பாடினார். இதுவே இவரது முதல் நூலாக அமைந்தது.

கவிமணியின் கவிதைகளில் எளிமையும் இனிமையும் கைகோத்துச் சென்றன. எல்லாவற்றுக்கும் மேலாக அழகிய நடை, உள்ளந் தொடும் உவமை எல்லார் மனத்தையும் கவர்ந்தது.

கவிமணி எப்.ஏ., வரை கல்லூரியில் பயின்று, பிறகு திருவனந்தபுரத்தில் ஆசிரியர் பயிற்சி பெற்றார்.

1901-ஆம் ஆண்டில், இவருக்குத் திருமணம் நடந்தது. மனைவி பெயர் உமையம்மையார்.

கவிமணி முதன் முதலாக, கோட்டாற்றில் உள்ள தொடக்கப் பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றினார். பிறகு நாகர் கோவில் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியிலும் பணிபுரிந்தார். பிறகு திருவனந்தபுரம் அரசர் மகளிர் உயர்நிலைப் பள்ளியின் தமிழாசிரியராகவும், திருவனந்தபுரம் அரசர் மகளிர் கல்லூரியின் தமிழ் விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

கவிமணி, கவிதை இயற்றுவதிலே மட்டுமல்லாமல், கல்வெட்டு

ஆராய்ச்சியிலும் கவனம் செலுத்தினார்.

நாகர்கோவிலில் உள்ள ஓரிடத்தில் நடுகல் ஒன்று இருந்தது. அந்தப் பக்கம் போகும்போது, அந்தக் கல்லிலிருந்து துர்நாற்றம் வீசியது. என்றாலும், அந்தக் கல்லை மக்கள் தெய்வமாக மதித்து வழிபட்டனர். 'இசக்கி அம்மனே இந்தக் கல்' என்று அவர்கள் நம்பினர்.

கவிமணி, அக்கல்லைப் போய்ப் பார்த்தார். கல்லிலிருந்து வரும் துர்நாற்றத்தைக் கண்டுபிடித்தார். ஊர் மக்கள் ஊற்றும் எண்ணெயின் கசடுதான், துர்நாற்றத்திற்குக் காரணம் என்பதை அறிந்தார். பிறகு அந்தக் கல்லை நன்கு சுத்தப்படுத்தினார். அந்தச் சமயம், 'அதைத் தொடாதே!' என்று ஊர் மக்கள் ஓடிவந்து கவிமணியைப் பயமுறுத்தினார்கள். ஆனால், கவிமணியோ எதற்கும் அஞ்சாமல், துணிந்து அக்கல்லை நன்றாகக் கழுவிச் சுத்தப்படுத்தினார். பிறகு அதை உற்றுப் பார்த்தார். அப்போதுதான் தெரிந்தது, அது ஒரு புராதன கல்வெட்டு என்று! அந்தக் கல்வெட்டைப் படித்து, அதில் உள்ள செய்தியை ஊருக்குத் தெரிவித்தார்.

'எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

என்னும் வள்ளுவர் வாக்குப்படி உண்மையை அறிவதுதான் அறிவு என்பது அவரது கொள்கையாக இருந்தது. கவிமணி, மூடநம்பிக்கையை வெறுப்பவர் என்பதற்கும், கல்வெட்டாராய்ச்சியில் ஆர்வம் காட்டுபவர் என்பதற்கும் இந்த நிகழ்ச்சி தக்கச் சான்றாகும்.

கவிமணியின் கவிதையோடு, கல்வெட்டாராய்ச்சியும் ஆல்போல் வளர்ந்தது. கல்வெட்டுக்கள் குறித்து பல ஆராய்ச்சிகளைச் செய்தார். அவற்றையெல்லாம் தொகுத்து, 'காந்தளூர்ச் சாலை' என்னும் தலைப்பில் ஒரு ஆங்கில நூலை வெளியிட்டார். இந்த நூல் 1936 இல் வெளிவந்தது.

1926-இல் சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட தமிழ்ப் பேரகராதியின் சிறப்பு நடுவராகப் பணியாற்றிய கவிமணி, பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் பதிப்பித்த அரிய பல தமிழ் நூல்களுக்கெல்லாம், ஏட்டுப் பிரதிகளைத் தேடித் தந்து உதவினார்.

கவிமணி தமிழ்ப்பணிக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். அவரது கவித்திறம் கண்டு தமிழுலகம் போற்றிப் புகழ்ந்தது. அவரது அழகிய கவிதைகள் குழந்தைகளை மட்டுமல்ல, பெரியவர்களையும் வெகுவாகக் கவர்ந்தது.

கவிமணியின் பேரும் புகழும் எங்கும் பரவியது. அவரது இடையறாத் தமிழ்த் தொண்டைப் பாராட்டி, 1940-இல், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் நடந்த சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் ஏழாவது ஆண்டு விழாவில், அவருக்குக் 'கவிமணி' என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தார்கள்.



அந்தக் காலத்தில், 'மருமக்கள் தாய முறை' என்னும் வழக்கம் ஒன்று இருந்து வந்தது. ஒருவன் தான் இறக்கும்போது தன்னுடைய செல்வங்களைத் தன் மகனுக்கு அளித்தல் கூடாது என்றும், அவன் உடன் பிறந்தாளின் மகனுக்கே அளிக்க வேண்டும் என்றும் ஒரு வழக்கு இருந்து வந்தது. இந்தக் கொடிய முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தார் நம் கவிமணி. எப்படி?

இந்த வழக்கத்தை ஒழிக்க கவிமணிக்குக் கவிதையே கைவாளாக இருந்தது! ஆம். இந்த வழக்கத்தைக் கண்டித்துப் பாட்டாக எழுதி, பட்டிதொட்டிகளிலெல்லாம் பரவ விட்டால், மக்கள் இந்த நம்பிக்கையிலிருந்து விடுபடுவார்கள் என்பது கவிமணியின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருந்தது. நாளடைவில் அது அவருக்குக் கைகொடுக்கவும் செய்தது.

உடனே அவர், "நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்" என்னும் நூலை எழுதத் தொடங்கினார். முதலில் அதைப் பத்திரிகையில் எழுதி, பிறகு புத்தகமாக வெளியிட்டார்.

இந்த நூல் மக்கள் மத்தியிலே ஒரு புரட்சியையே உண்டாக்கிவிட்டது எனலாம். மக்கள் அதைப் படிக்கத் தொடங்கினார்கள். இருளில் ஒளிபோல அந்நூல் அவர்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது.

காலங்காலமாக இருந்துவந்த இந்த முறையை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று மக்கள் கொதித்தெழுந்தனர். அதன் விளைவாக, சீர்திருத்தச் சட்டம் ஒன்று உருவானது. 1921-இல், சட்டமன்றத்தில் அது கொண்டுவரப்பட்டது.

இந்தச் சட்டம் உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1922-இல் அது நடைமுறைக்கும் வந்தது. அன்று முதல் 'பெற்றோரின் உடைமைகள் பிள்ளைக்கும்' என்னும் நன்முறை வழக்கத்துக்கு வர ஆரம்பித்தது.



ஒரு கவிதை நூல், காலங்காலமாக இருந்து வந்த கொடிய முறையை ஒழித்து மக்கள் மனத்திலே நிலையான மகிழ்ச்சியை உண்டாக்கியது என்றால், கவிமணியின் கவித்திறன்தான் என்னே!

1943-ஆம் ஆண்டு கவிமணியின் கவிநயத்தில் திளைத்த செட்டி நாட்டுப் பெரியோர்கள் அவருக்குச் சிறப்புச் செய்யப் பெரிதும் விழைந்தார்கள். ரசிகமணி டி.கே.சி. மூலம் கவிமணியை வரவழைத்தார்கள். ஆத்தங்குடியில் பல்லாயிரவர் முன்னிலையில், கவிமணிக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள். இராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள், கவிமணியைத் தம் இல்லத்துக்கு அழைத்துச் சென்றுப் பாராட்டிப் பரிசுகள் வழங்கினார்.

கவிமணி குழந்தை உள்ளம் படைத்தவர். குழந்தைகளைக் கண்டால் எல்லாவற்றையும் மறந்துவிடுவார். அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் அவர் உள்ளத்தில் கவிதைகள் ஊற்றெடுக்கும். அத்தகைய கவிதைகள் தாம் 'குழந்தைச் செல்வ'மாக வெளிவந்தது (1954).

'குழந்தைச் செல்வம்' எனும் இந்த நூல் மழலை மொழி, இயற்கை இன்பம், காட்சி இன்பம், கதைப்பாட்டு, பஞ்சாமிர்தம் என ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

'கண்ணே! மணியே! முத்தந்தா
சுட்டிக் கரும்பே! முத்தந்தா
வண்ணக் கிளியே! முத்தந்தா
வாசக் கொழுந்தே! முத்தந்தா'

என்பது இந்நூலின் முதல் பாட்டு.

நாய் நமக்குத் தோழன் என்பதை,

'வீட்டு வாசல் காப்பவன்
வேட்டை யாட வல்லவன்
ஆட்டுக் கிடைப் பாண்டியன்
அன்பு மிக்க தோழன்
உண்ட சோற்றை எண்ணி
உயிரும் விடத் துணிபவன்
மண்ட லத்தில் நாய்போல்
வாய்த்த துணை உண்டோ?'

## உண்மை

உண்மையே சொல், அது உன் வார்த்தைகளைப் பாதுகாக்கும் கலந்து யோசனை செய், அது உன் சிந்தனையை வளமாக்கும்.

-வள்ளலார்.

என்று பாடிய கவிமணி, கிளியைப் பார்க்கிறார்.

'பச்சைக் கிளியே வாவா
பாலும் சோறும் உண்ண வா
கொச்சி மஞ்சள் பூச வா
கொஞ்சி விளை யாட வா'
என்று பாடிக்கொண்டே போய்,

'பவழக் காரத் தெருவிலே
பவழங் காண வில்லையாம்
எவர் எடுத்துச் சென்றனர்?
எனக் கறிந்து சொல்லையோ!'

என்று அவர், கிளியின் மூக்கைப் பவழத்துக்கு ஒப்பிடும் பாங்கே அழகு!

பசுவையும் கன்றையும் பார்த்த கவிஞர் நெஞ்சில் பாடல் ஒன்று பிறக்கிறது.

'தோட்டத்தில் மேயுது
வெள்ளைப் பசு - அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக் குட்டி

அம்மா என்குது
வெள்ளைப் பசு - உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக் குட்டி

நாவால் நக்குது
வெள்ளைப் பசு - பாலை
நன்றாய்க் குடிக்குது
கன்றுக் குட்டி

முத்தம் கொடுக்குது
வெள்ளைப் பசு - மடி
முட்டிக் குடிக்குது
கன்றுக் குட்டி'

கூண்டிலே உலவும் புலியின் கண்களை,

'பந்தம் எரியுதோடி - கண்களைப்
பார்க்க நடுங்குதடி
குந்தம், வாள் ஈட்டியெல்லாம்
கொண்டு திரியுதடி'

என்று கண்களைத் தீப்பந்தத்துக்கு ஒப்பிடுகின்றார்.

கடிகாரம் வாங்கித் தரும்படிக் கேட்கிறாள் மகள். அதற்கு அந்த ஏழைத் தாய், "மகளே! நேரத்தை அறிவதற்கு இயற்கையிலேயே அநேகக் காட்சிகள் இருக்க, நமக்கு வேறு கடிகாரமும் வேண்டுமா?" என்று கூறுகிறார்.

'சேவற் கோழியுண்டு
காக்முண்டு - வானம்
செக்கச் சிவந்து தெரிவதுண்டு
மேவு பொன்னே! அதிகாலை
தெரிந்திட
வேறு கடிகாரம் வேண்டுமோடி?'

இவ்வாறு காலை நேரக் கவின்மிகு இயற்கைக் காட்சிகளைச் சொல்லிக் கொண்டே போய், இந்தப் பொருளெல்லாம் உற்று நோக்கி அவை சுட்டும் மணி நேரம் கண்டறிவாய். பெற்ற முத்தே! இவையெல்லாம் இருக்கும்போது கடிகாரமும் வேண்டுமோ? என்று முடிக்கும் அழகு மகிழ்தற்குரியது.

கள்ள வழியில் செல்லக் கூடாதென ஒரு கவிதை நீதி போதிக்கிறது. அதுதான், 'நெற்பானையும் எலியும்' என்னும் கதைப் பாட்டு.

'பாட்டியின் வீட்டுப் பழம்பானை-
அந்தப்
பானை ஒருபுறம் ஓட்டையடா!'

என்று தொடங்குகிறது இந்தப் பாடல்.

இந்தக் கவிதைத் தொகுதியில், தாம் வாழ்ந்த சுசீந்திரம் ஊரைப் பற்றி அப்படியே படம் படித்துக் காட்டுகிறார். இதேபோல, நாஞ்சில் நாட்டு அழகைக் கவிதை ஓவியமாகத் தீட்டுகிறார் கவிமணி.

ஔவையார், திருவள்ளுவர், கம்பர், இளங்கோ, பாரதியார் குறித்தும் பாமாலை தொடுத்திருக்

கிறார் கவிமணி. அவையெல்லாம் படித்து இன்புறத்தக்கனவாகும்.

'உயிர்களிடத்தில் அன்பு வேணும்' என்றார் பாரதியார். எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்ட வேண்டும் என்றனர் பெரியவர்கள். பாவம்! ஒரு குதிரை தமக்கு இழைக்கப்பட்ட கொடுமையை எண்ணிக் கண்ணீர் வடிக்கிறது. தன்னைத் துன்புறுத்துவதை அது வாய்விட்டு அழுது சொல்கிறது:

"இரும்புக் கடிவாளம்
மாட்டுவதேன் - வாயை
ஈசன் படைத்த திதற்காமோ?
பெரும்புவி மீதினில்
உங்களுக்கும் - இந்தப்
பேதைகள் செய்த பிழைகள்
உண்டோ?"

என்று குதிரைகள் புலம்பும் போது, நம் கண்கள் குளமாகின்றன.

வாழ்க்கையின் தத்துவங்களை குழந்தைகளுக்குப் புரிய வைக்க முடியுமா? முடியும் என்கிறது கவிமணியின் 'வாழ்க்கைத் தத்துவங்கள்' என்னும் கவிதை.

"நெஞ்சில் கருணை
நிறைந்தவர்க்கு,
நேயம் கொண்ட நெறியோர்க்கு
விஞ்சும் பொறுமை
யுடையவர்க்கு,
வெல்லும் படைகள்
வேறுளவோ?"

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை பாடல்களில் இனிமை, இழைந்திருக்கும். சந்தம், சிந்து பாடும், கருத்துக்கள், மாலையாய் விழும்.

குழந்தைகள் மட்டுமல்லாமல், பெரியவர்களும் படித்து மகிழுவதற்கேற்ற வகையில், அவரது அற்புதமான படைப்புகள் அனைவராலும் பாராட்டப்படுகின்றன.

கவிமணியின் படைப்புகள் காலத்தால் அழியாதவை. மலரும் மாலையும், மருமக்கள் வழி மான்மியம், ஆசிய ஜோதி, உமர் கய்யாம் பாடல்கள், தே.வி.யின் கீர்த்தனங்கள், கவிமணியின் உரை மணிகள், குழந்தைச் செல்வம் ஆகியவை அவர் அன்னைத் தமிழுக்குச் சூட்டிய அழகிய அணிகலன்கள்.

புத்தரின் கொள்கைகளை விளக்கிடும் நூல்தான் ஆசிய ஜோதி. ஆங்கிலத்தில எட்வின் அர்னால்டு என்பவர் எழுதிய Light of Asia என்னும் நூலைத் தழுவி எழுதியதே இது.

பாரசீகக் கவிஞன் உமர்கய்யாம் பாடல்கள் உள்ளத்தைத் தொடுவன. உலக மொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டவை. இவரது பாடல்களைத் தமிழில் முதன் முதலில் வடித்துத் தந்தவர் நம் கவிமணியவர்களே ஆவார்.

'மலரும் மாலை' ஒரு கதம்பம் போன்றது. கவிமணியின் பல்வேறு கவிதைகளின் தொகுப்பாக இது விளங்குகின்றது. இந்நூல் பக்தி மஞ்சரி, இலக்கியம், சரித்திரக் கவிதை, மழலை மொழி, இயற்கை இன்பம், கதைப்பாட்டு, உள்ளமும் உணர்வும், வையமும் வாழ்வும், சமூகம், தேசியம், வாழ்த்து, சரம கவி, கதம்பம், முத்துக்குவியல் என்னும் பகுதிகளின் மொத்த வடிவமாய்த் திகழ்கின்றது.

'தே.வி. கீர்த்தனங்கள்' என்பது ஒரு இசைமாலையாகும். இதில் வழிபாட்டுப் பாடல்களும், சான்றோர்கள் குறித்த பாடல்களும் உள்ளன. இவையன்றி தேசியக் கொடி, பாரதி மண்டபம் முதலான கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

'உரை மணிகள்' என்னும் நூலில், கவிமணி ஆற்றிய சொற்பொழிவுகள், அவர் வரைந்த கட்டுரைகள், ஆய்ந்த கல்வெட்டு ஆராய்ச்சிகள் முதலானவை அணிவகுக்கின்றன.

கவிமணி, பெண்ணின் பெருமை பேசியவர். அவர்கள் உரிமை குறித்துப் பாடியவர்.

"மங்கையராகப் பிறப்பதற்கே-
நல்ல
மாதவஞ் செய்திட வேண்டும்,
அம்மா!
பங்கயக் கைநலம்
பார்த்தலவோ - இந்தப்
பாரில் அறங்கள் வளரும்,
அம்மா!"

என்று, பெண் சிசுக் கொலை புரியும் இந்நாட்டில் பெண்ணின் அருமை குறித்துப் பாடுகிறார் அவர்.

"அன்பினுக் காகவே வாழ்பவர்
ஆர்? - அன்பின்
ஆவியும் போக்கத் துணிபவர்
ஆர்?
இன்ப உரைகள் தருபவர்
ஆர்? - வீட்டை
இன்னகை யாலொளி
செய்பவர் ஆர்?"

என்று பெண்ணை அன்பின் வடிவமாகக் காணுகிறார் கவிமணி.

அல்லும் பகலும் உழைப்பவர், ஏழைகளைக் கண்டால், உள்ளம் உருகித் துடிப்பவர், சிந்திய கண்ணீரைத் துடைப்பவர், உள்ளம் தளர்வுறும் நேரத்தில், உயிர் ஊட்டும் உரைகள் உரைப்பவர் என்றெல்லாம் மகளிர் மாண்பைக் கூறும் கவிஞர்,

'மங்கையராகப் பிறந்ததனால் -
மனம்
வாடித் தளர்ந்து
வருந்துவதேன்?'
என்று நம்மைச் சிந்திக்கவும்
வைக்கிறார்.

இவ்வாறு காலமெல்லாம் கவிதை பாடி வாழ்ந்த கவிமணியைக் காலன் கவர்ந்து கொண்டது குறித்துத் தமிழுலகம் கண்ணீர் வடித்தது. ஆம். கவிமணி 26.9.54 அன்று நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்தார்.

"தேசிக விநாயகத்தின்
கவிப்பெருமை
தினமும் கேட்பதென்றன்
செவிப்பெருமை
. ஆசிய ஜோதியெனும்
புத்தபோதம்
அழகுத் தமிழில்சொன்னான்
அதுபோதும்"

என்று நாமக்கல் கவிஞரின் கவிதை மலர்கொண்டு கவிமணிக்கு அஞ்சலி செலுத்துவோம்!

- பி.வி. கிரி.



# 1800 ஆண்டுகட்கு முற்பட்ட பௌத்த சமயச் சிற்பத் தொகுப்பு கண்டுபிடிப்பு



தமிழ்நாடு அரசுத் தொல்பொருளாய்வுத்துறை அரிய பௌத்த சிற்பத் தொகுப்பு ஒன்றினை சென்னை, திருவல்லிக்கேணி எல்லையம்மன் கோயிலில் கண்டுபிடித்துள்ளது. இத்தொகுப்பிலுள்ள உருவங்களின் அமைப்பைக் கொண்டு பார்க்கையில், இதன் காலத்தினைக் கி.பி. 1 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதலாம்.

இத்தொகுப்பிலுள்ள உருவங்கள், புத்தருடைய புனித எலும்போ அல்லது பல்லோ அடங்கிய கலசத்தைச் சுமந்து ஊர்வலமாக மக்கள் வருகையில் அஞ்சலி செலுத்துவதாகக் காணப்படுகின்றன. இரண்டு வரிசைகளில் அமைந்துள்ள இச்சிற்பங்கள் அனைத்தும் ஆண் உருவங்களே. மேல் வரிசையில் மூவர் உள்ளனர். அவர்களது உருவங்களை நாம் இடுப்புப் பகுதிக்கு மேல் தான் பார்க்க முடிகிறது. கீழ் வரிசையில் உள்ள உருவங்களை முழுத் தோற்றத்தோடு காண முடிகிறது. வணங்கி நிற்கும் கோலத்தில் இவர்கள் அனைவரும் காட்டப்பட்டுள்ளனர். இடைக் கச்சையோடுகூடிய ஆடை, கைகளில் கடகம், காதுகளில் வட்டக் குழைகள் அணிந்து காணப்படும். இவர்கள் மேலாடையின்றித் தோற்றமளிக்கின்றனர்.

சென்னை மாநகரில், புத்தரோடு தொடர்புடைய இரண்டாம் சிற்பத் தொகுப்பாக இது கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இத்துறையால் இராயப்பேட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட முதற்தொகுப்பின் புத்தபகவானின் இரு உருவங்கள் அமர்ந்த நிலையிலும், இவர்களின் இரு புறமும் பணிமக்கள் இருவர் நின்ற நிலையிலும் காணப்படுகின்றனர். இவ்விரு சிற்பத் தொகுப்புகளுமே பால் நாடு கற்களால் வடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தொடர்ச்சியாக புத்த சிற்பங்கள் சென்னையின் அருகான பகுதிகளில் கிடைத்து வருவதால் அழகிய பௌத்த சமயம் சார்ந்த சிற்பங்கள் நிறைந்த பௌத்த ஸ்தூபம் ஒன்று இங்கு இருந்திருக்கலாமோ என்ற எண்ணத்தை வலுப்படுத்துகிறது.

இவ்வரிய சிற்பத் தொகுப்பினை இத்துறைக் கல்வெட்டாய்வாளர் திருமதி ஆர். வசந்தகல்யாணி திருவல்லிக்கேணி பகுதியின் கள ஆய்வு மேற்கொண்டபோது கண்டுபிடித்துள்ளார். எல்லையம்மன் கோயில் நிர்வாக அலுவலர் திரு முத்துக்குமார் அவர்கள் இச்சிற்பத் தொகுப்பினைத் தூய்மை செய்யவும், நிழற்படம் எடுக்கவும் அனுமதியளித்து உதவியுள்ளார்.

நடன. காசிநாதன்
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத் துறை
சென்னை

TNSC BANK

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 2.9.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE




16-ஆம் பக்கத் தொடர்ச்சி

இம்மாவட்ட வாழ் மக்களின் அன்றாட வாழ்க்கையில் பல அல்லல்கள் ஏற்படுகின்றன என்பதை உங்கள் சகோதரியாகிய நான் நன்கு அறிந்து வைத்திருக்கிறேன்.

சென்ற முறை குன்னூர் அருகே மரப் பாலம் என்ற இடத்தில் கிட்டத்தட்ட 1 கிலோ மீட்டர் மலைப் பாதை நிலச்சரிவின் காரணமாக முழுமையாக அழிக்கப்பட்டு; ஊட்டிக்கும், மேட்டுப்பாளையத்திற்கும் இடைப்பட்ட சாலைப் போக்குவரத்து தடைப்பட்டது, என் நினைவிற்கு வருகிறது. இது போன்ற நிலச்சரிவை எங்கள் வாழ்நாளில் நாங்கள் கண்டதில்லை என்றும், எங்கள் முன்னோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம் என்றும், சிலர் என்னிடம் தெரிவித்தார்கள். இந்த மலைப் பாதையைச் சீர் செய்யக் குறைந்தது ஓராண்டுக் காலம் தேவைப்படும் என்று சிலர் கருத்துத் தெரிவித்தார்கள். ஓராண்டுக் காலம் இந்த

முக்கியமான போக்குவரத்துச் சாலை பாதிக்கப்பட்டால் இம் மாவட்டவாழ் மக்களின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் குந்தகம் ஏற்பட்டுவிடும் என்பதை உணர்ந்திருந்ததால்தான், எத்தனைக் கோடிகள் செலவானாலும் பரவாயில்லை, இந்தச்சாலையை 60 நாட்களுக்குள் சீர் செய்ய வேண்டும் என்று ஆணையிட்டதோடு; அந்தப் பணியை விரைவில் செய்து முடிக்க இராணுவத்தின் ஒரு பிரிவான, Border Roads Organisation என்ற நிறுவனத்திடம் ஒப்படைத்தேன்.

மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்பார்கள்.

இம்மாவட்ட மக்களின் துயர் துடைக்க வேண்டும் என்கிற ஒரு வைராக்கியம் எங்களிடம் இருந்ததால் அந்தப் பாதை போர்க்கால அடிப்படையில் நாற்பத்தைந்தே நாட்களுக்குள் சீர் செய்யப்பட்டு இயல்பான போக்குவரத்து மீண்டும் தொடங்கியது, என்பதை நினைத்துப் பார்க்கும்போது, என் மனம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது. நிலச் சரிவு ஏற்படுவதைத் தடுக்கவும், நிலச் சரிவினால் ஏற்படுகின்ற சீர்கேடுகளைக் குறைக்கவும், அவ்வாறு நிலச் சரிவுகள் ஏற்பட்டவுடன் விரைவில் அவற்றைச் சீர்செய்யவும்; அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்துள்ளேன்.

சம தளத்திலேயே அமைக்கப்படுகின்ற சாலையைப் போல் இங்கே மலைப் பாதைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. வருடத்தில் மிக அதிகமான நாட்கள் மழை நாட்களாகவும், மேகமூட்டமுள்ள நாட்களா கவும் இருப்பதால், இங்கு போடப்பட்டுள்ள தார்ச்சாலைகள் மழையினால் பாதிக்கப் பட்டு, சீர்கெட்டுவிடுகின்றன. இந்தக் குறையைப் போக்குவதற்கு Camber என்கிற முறையில், இந்தச் சாலைகளில் மழை நீர் உடனடியாக வடிந்துவிடும் வண்ணம், சற்றுச் சாய்வாக அமைக்கப்பட வேண்டுமென்றும், சாலைகளின் இரு மருங்கிலும், மழை நீர் வடிகால்கள் அமைக்கப்பட வேண்டுமென்றும் நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்களுக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்..

இந்தப் புதிய முறையில் மலைப் பாதைகள் அமைக்கப்படும் போது, கூடுதல் செலவினம் ஏற்பட்டாலும், சாலைகள் எளிதில் பழுதடையாமல், நன்முறையில் பராமரிக்க முடியும் என்பதாலும், கிராமங்களுக்குக் கூடுதல் போக்குவரத்து வசதி செய்து தர இயலும் என்பதாலும், உங்கள் சகோதரியின் அரசு இந்த அதிக நிதிச் சுமையை ஏற்கத் தயாராக இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊட்டியின் எழிலார்ந்த ஏரி, சுற்றுலாப் பயணிகளின் கண்களையும், கருத்தையும் கவர்ந்த ஓர் இடம் என்பதால், நான் சென்ற முறை இம்மாவட்டத்திற்கு வந்தபோது ஊட்டி ஏரியின் பெரும்பகுதியைத் தனது அசுர வளர்ச்சியால் ஆக்கிரமித்திருந்த Water Hyacinth என்ற நீர் வாழ் தாவரத்தைக் கட்டுப்படுத்தி, முழுமையாக அகற்றுவதற்கு ஏற்பாடு செய்திருந்தேன். மேலும், ஏரியின் எழிலார்ந்த சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எனது ஆணையின் பேரில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. Kodappamund கால்வாய் வழியாக ஊட்டி ஏரிக்குச் செல்லும் நீர், சுத்தமற்றதாகவும், குப்பைக் கூளங்கள் உள்ளதாகவும் இருப்பதால், 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில், இந்த நீரைச் சுத்திகரிப்பு செய்வதற்கு ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

Kodappamund கால்வாய் வழியாகச் செல்லும் நீர் கசடுகள் நீக்கிச் சுத்தம் செய்யப்பட்ட பின்பு ஊட்டி ஏரிக்கு அனுப்பப்படும். மேலும், ஊட்டி ஏரியின் மணல் மேடிட்ட பகுதிகளைத் தூர் வாருவதற்கும், சுத்தம் செய்வதற்கும் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில், ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இந்த இரண்டு திட்டங்களைச் செயல்படுத்தும், அதே நேரத்தில் ஊட்டி ஏரியைச் சுற்றிப் பூங்காக்கள் அமைக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கியுள்ளேன். இவ்வாறு உலக அளவில் புகழ்பெற்ற ஊட்டி ஏரியின் அழகை என்றென்றும் பாதுகாக்க உங்கள் சகோதரியின் அரசு நடவடிக்கை எடுத்து



வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுப்புறச் சூழலையும், இயற்கையின் சீதோஷ்ண நிலையையும் பாதுகாக்கும் வண்ணம், வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே எனது கருத்து. இயற்கையிடத்துத் தங்கள் மனதைப் பறிகொடுப்பவர்கள் யாராக இருந்தாலும் இந்தக் கருத்தில் மாறுபாடு உடையவர்களாக இருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அந்த எண்ணத்தின் அடிப்படையில் தான், மலைப் பிரதேசங்களில் கட்டப்படுகின்ற கட்டடங்கள் சுற்றுப்புறச் சூழலோடு ஒன்றியிருக்கும் வண்ணம், அமைய வேண்டும் என்பதற்காக ஒரு புதிய சட்டம் அமலாக்கப்பட்டது. ஆனால் அந்தச் சட்டத்தைச் செயல்படுத்துவதில், சில பிரச்சினைகள் இருப்பதாக அறிந்ததால் அரசின் சில அதிகாரங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்க்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டு, இந்தச் சட்டம் எந்த . எண்ணத்திற்காகக் கொண்டு வரப்பட்டதோ அந்த இலட்சியம் நிறைவேறும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் சட்டத்திற்குப் புறம்பாக, சுற்றுப்புறச் சூழலை ஒன்றாத வகையில், அதற்குப் பாதகம் ஏற்படுத்தும் வண்ணம் பல கட்டடங்கள் எழுப்பப்பட்டு வருவதாக எனக்குத் தகவல்கள் வந்துள்ளன. மலைப் பகுதிகளின் எழிலார்ந்த சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கத் தமிழக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தின் மின் தேவையைக் கருத்தில் கொண்டு இம்மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக இரண்டு பெரிய திட்டங்களுக்கு, இன்று நான் அடிக்கல் நாட்டியதில் பெருமிதம் அடைகின்றேன். பைக்காரா இறுதி நிலை புனல் மின் திட்டத்தின்கீழ் 109 கோடி ரூபாய் மதிப்பில் மொத்தம் 150 மெகாவாட் திறன் கொண்ட 3 மின் உற்பத்திப் பிரிவுகள், அமைக்கப்படும். இந்தத் திட்டத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு உற்பத்தி செய்யப்படும், 3 கோடி யூனிட் மின்சாரம் நீலகிரி, கோவை, பெரியார் ஆகிய மாவட்டங்களின் மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், தடையற்ற மின்சாரத்தை வழங்குவதற்கும் வழி வகுக்கும்.

பைக்காராவில் 230 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம் இதற்காகப் பிரத்யேகமாக, 17 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட உள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமரால்டு அணை அருகே உள்ள பார்ஸன் பள்ளத்தாக்கில் 60 கோடி ரூபாய் செலவில் 30 மெகாவாட் திறன் கொண்ட 'புதிய பார்ஸன் பள்ளத்தாக்கு புனல் மின் திட்டம்' அமைப்பதற்கும் அடிக்கல் நாட்டியுள்ளேன். இத்திட்டம் நிறைவேற்றப்படும் போது 5 கோடியே 70 இலட்சம் யூனிட்டுகள் மின் உற்பத்தி செய்யப்படும்.

1996-ஆம் ஆண்டு இத்திட்டத்தின் பலன்கள் இம்மாவட்டத்திற்குக் கிடைக்கும் போது, இம்மாவட்டத்தின் மின்தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியும் என்பதையும், பல்வேறு புதிய தொழிற்சாலைகள் உருவாக வழி வகுக்கும் என்பதையும் எண்ணிப்பார்க்கும் போது, என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

ஊட்டி நகரத்தின் மின் தேவை மேம்பாட்டுக்கு, மஞ்சூரில் 3 கோடியே10 இலட்சம் ரூபாய் செலவில், ஒரு துணை மின் நிலையமும், ஊட்டி நகரில் 4 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் மற்றொரு துணை மின் நிலையமும் வெகுவிரைவில் உருவாக்கப்பட உள்ளன என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு - இம்மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கும் ஒட்டு மொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கும் எத்தனை ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது என்பதை 200 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட மின் திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டதில் இருந்து புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

40 இலட்சம் ரூபாய் செலவில், சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகக் குன்னூரில் அமைக்கப்பட்டுள்ள இளைஞர்களுக்கான தங்கும் விடுதி ஒன்றையும், Doddabetta -வில் அமைக்கப்பட்டுள்ள புதிய உணவகக் கட்டடத்தையும், இதர சுற்றுலா வசதிகளையும் துவக்கிவைத்ததில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ்நாடு அரசு TANTEA நிறுவனத்தின் சார்பில் கோத்தகிரி, சேரம்பாடி ஆகிய இடங்களில் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய மருத்துவ மனைகளையும்; கோத்தகிரியில் கட்டப்பட்டுள்ள Queen Shola Tea தொழிற்சாலையையும் திறந்து வைத்ததில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

உதகை அருகே பலா[illegible] என்ற இடத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள ' பழங்குடியினர் அருங்காட்சியக நுண்கலை அரங்கத்தைத் திறந்து வைத்ததில் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த 'நுண்கலையரங்கம்' பழங்குடியினரின் வாழ்வியல் முறைகளைப் பற்றியும், மானுடவியல் பற்றியும், ஆராய்ச்சி செய்வோருக்கும், வரலாற்றின் மீது பொதுவான ஆர்வத்தைக் கொண்டிருப்போருக்கும், மிகுந்த ஈடுபாட்டினை உண்டாக்கும் என்று நம்புகிறேன்.

மலைப்பாங்கான பிரதேசங்களில் நிலச் சரிவு மற்றும் மண் அரிப்பைத் தடுப்பதற்காக, 6 கோடியே 10இலட்சம் ரூபாய் செலவில் மண்அரிப்பு மற்றும் நிலச் சரிவு தடுப்புத் திட்டங்களை இம்மாவட்ட மக்களுக்கு அர்ப்பணித்ததில் நான் அக மகிழ்கிறேன்.

நகரத்தில் உள்ள அத்தனை மருத்துவ வசதிகளும் கிராமத்து மக்களுக்கும் சென்றடைய வேண்டும்; மருந்து வசதிகளும், மருந்துகளும் நலிந்த பிரிவினர்களுக்கு நாம் கொண்டு சேர்க்க வேண்டும் என்கிற எனது அசைக்க முடியாத ஈடுபாட்டின் காரணமாகப் பல்வேறு மருத்துவ முகாம்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளின் உடல் நலம் மற்றும் மன நலத்தைப் பேணிப் பாதுகாப்பதற்காகத், தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டம், இம்மாவட்டத்தில் வசிக்கும் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று நம்புகிறேன். பொருளாதார வசதியின்மையால் மருத்துவ வசதி கிடைக்கவில்லை; மருந்துகள் கிடைக்கவில்லை என்கிற சூழ்நிலையை மாற்றி; விலை உயர்ந்த உயிர் காக்கும் மருந்துகள் ஏழை எளிய மக்களின் இல்லத்திற்குச் சென்றடையச் செய்வதே எங்களது நோக்கம் ஆகும். நலிந்த பிரிவைச் சேர்ந்த குழந்தைகள் இருதய நோயால் பாதிக்கப்பட்டு இருந்தால்,



அந்தக் குழந்தைகளுக்கு இலவசமாக இருதய அறுவைச் சிகிச்சை செய்யும் திட்டத்தை நாங்கள் செயல்படுத்திவருகின்றோம். தமிழ் நாட்டில் எந்த ஒரு பெற்றோரும், பொருளாதார வசதியின்மையால் தனது குழந்தையின் இருதய நோயைத் தீர்த்துவைக்க முடியவில்லையே என்று மனதிற்குள் ஏங்கக் கூடாது என்ற எனது எண்ணத்தின் வெளிப்பாடுதான் இந்தத் திட்டம்.

அரசு மருத்துவ மனைகளில் குழந்தைகளின் பிரிவுகள் (Children Ward) தனியே அமைக்கப்பட்டு வருகின்றன. இம் மாவட்டத்தில் குன்னூர், கோத்தகிரி மற்றும் கூடலூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவ மனைகளில், 10 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவுகளைத் திறந்து வைத்ததில் நான் மன நிறைவு அடைகின்றேன்.

குன்னூர், கோத்தகிரி, கூடலூர் மற்றும் ஊட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் வசிக்கின்ற 3 இலட்சம் மக்கள் பயன்பெறும் வண்ணம் SIDA திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. நீலகிரி மாவட்டத்துக் குழந்தைகளின் நலத்திலும் வளர்ச்சியிலும் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்ற எனது ஆணையின் பேரில், இந்த மாவட்டத்துக் குழந்தைகளுக்கென ஒரு தனித் திட்டம், இந்த ஆண்டு முதல் தொடங்கி நான்கு ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும் என்பதையும், இதற்காக 4 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலைவாழ் குழந்தைகளுக்கான, இந்த வளர்ச்சித் திட்டம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முறையாக நீலகிரி மாவட்டத்தில்தான் செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதை மிக்க பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின் கீழ் Kinder Garden வகுப்புகள் பயிலும் குழந்தைகளுக்கு, இரண்டு செட் சீருடைகள், உல்லன் உடைகள், புத்தகங்கள், சிலேட்டுகள், Shoes, Socks போன்றவைகளும், மருந்துகளும் வழங்கப்பட உள்ளன என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

11 வயதில் இருந்து 18 வயதிற்குட்பட்ட 1700 பெண் குழந்தைகளுக்குக் கூடுதல் சத்துணவும், தொழிற் பயிற்சியும் அளிக்கப்படும்.

15 வயதில் இருந்து 45 வயதிற்குட்பட்ட 6900 பெண்களுக்குக் கல்விப் பயிற்சியும், தொழிற் பயிற்சியும் ஒருங்கே அளிக்கப்பட உள்ளன. இத்திட்டம் அமல்படுத்தப்படும் ஒன்றியங்களில் ஒரு கோடி ரூபாய் மதிப்பில், பல புதிய கட்டடங்கள் கட்டப்படும்; பழைய கட்டடங்கள் புதுப்பிக்கப்படும். குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்காக வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் பயன்படுத்தப்படும்.

நஞ்சநாடு, நெல்லக்கோட்டை, ஐயனகொல்லி, கொடமலை, சேரம்பாடி மற்றும் இத்தலாறு ஆகிய 6 இடங்களில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள கால்நடை மருத்துவமனைகளைத் திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இப்பகுதி வாழ் கால்நடைகளின், தர உயர்வுக்கும், மேம்பாட்டுக்கும் இந்தப் புதிய மருத்துவமனைகள் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் என்று நம்புகிறேன். Incoserve, கூட்டுறவு நிறுவனத்தின் சார்பில் Ebanadu, Bedarkadu ஆகிய இடங்களில் 4 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் இரண்டு தேயிலைத் தொழிற்சாலைகள் அமைக்கப்படும்.

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 40,000 சிறிய விவசாயிகள் தேயிலை பயிரிட்டு வருகிறார்கள் என்பது எனக்கு நன்கு தெரியும். சமீப காலமாக டீ விலையில் ஏற்பட்டுள்ள சரிவுக்கு, சர்வதேச அளவில் நிகழ்ந்து கொண்டிருக்கும் சில வியாபார மாறுதல்கள்தான் காரணம் என்றாலும், டீ பயிரிடுவோரின் நலனைக் காக்க எங்கள் அரசு ஆக்கபூர்வமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துவருகின்றது. சிறிய விவசாயிகளுக்குத் தங்களது டீ பயிருக்கு நல்ல விலையைப் பெற்றுத் தந்து அவர்களது பொருளாதார சமூக வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றிவரும் தமிழக அரசின் கூட்டுறவு நிறுவனமான Incoserve நிறுவனம், குறு, சிறு தேயிலை விவசாயிகளின் நலனைக் கருத்திற்கொண்டு சில்லரை டீ தூள் விற்பனையை வெகு விரைவில் துவங்கவுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த முயற்சியினால் இந்த மாவட்டத்தில் டீ பயிரிடும் சிறு, குறு விவசாயிகள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களும் பயன் பெறுவார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

நீலகிரி மாவட்டத்தின் இரண்டாவது பெரிய நகரமான குன்னூர் நகராட்சியின் 68 கிலோ மீட்டர் நீளம் உள்ள சாலை அவல நிலையில் இருப்பதைக் கண்டு, உதகை மற்றும் குன்னூர் நகராட்சியின் நிதி ஆதாரங்களை அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காகவும், சாலைகளை நன்முறையில் பராமரிக்க வேண்டும் என்பதற்காகவும், உங்கள் சகோதரியின் தலைமையிலான இந்த அரசு சாலை நுழைவு வரி வசூலிக்கும் திட்டத்தினைத் துவக்கி வைத்தது. இத்திட்டத்தினால் குன்னூர் நகராட்சிக்கு கிடைத்த 33 இலட்சம் ரூபாயில், 29 இலட்சம் ரூபாய் சாலைகள் பராமரிப்பிற்கும், தார் பாவுவதற்கும் செலவிடப்பட்டுள்ளது.

உலக வங்கித் திட்டத்தின் மூலம் குன்னூர் நகராட்சியின் குடிநீர் விநியோகத்திற்கும், வேறு பல வளர்ச்சிப் பணிகளுக்கும் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். குன்னூர் நகராட்சியின் Brooklands பகுதி, முக்கியமான மலைப்பகுதியான அட்டடி, கரடிபள்ளம், வெள்ளாளபுரம், பட்டுமேடு ஆகிய பகுதிகளில் வாழும் 4,500 மக்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நகராட்சியின் குப்பைகளை அகற்றுவதற்குப் புதிய வாகனங்கள் வாங்கி வழங்கப்படும்.

**1950-க்குப் பிறகு இப்போதுதான் முதல் தடவையாக இந்தப் பணிக்குப் புதிய வாகனங்கள் பெறப்படவுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

நலிந்த பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்திவரும் உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, மகளிர் மற்றும் குழந்தைகளின் நலத்திலும் அக்கறை செலுத்திவருகின்றது.

சமுதாயத்தில் பெண்கள் சரிநிகர் சமானமாக வாழவேண்டும் என்பதிலும், பொருளாதார ரீதியில் யாரையும் சாராமல் தனித்து நிற்க வேண்டும் என்பதிலும், அதே நேரத்தில் நமது பண்பாட்டின் அடிப்படையான குடும்ப உணர்வு சற்றும் பாதிக்கப்படாமலும், நமது கலாச்சாரத்திற்கு ஊறு செய்யாமலும், நல்லதோர் சமுதாயத்தை அமைக்கவேண்டும் என்பதே எனது பேரவா. வரதட்சணைக் கொடுமை, பொருளாதார அடிமைத்தனை, பாலியல் ரீதியான குற்றங்கள், போன்ற சமுதாயக் கொடுமைகளிலிருந்து பெண்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் மாவட்டந்தோறும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

நீலகிரி மாவட்டத்திற்கான அனைத்து மகளிர் காவல் நிலையத்தை இன்று காலை ஊட்டி நகராட்சியில் துவக்கிவைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இம்மாவட்டத்து மக்களின் சமுதாய மற்றும் சமூக வளர்ச்சிக்கு, இந்த அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒரு தூண்டுகோலாக, உத்விக்கரமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. எந்த ஒரு சமுதாயத்தில் பெண்களுக்குச் சம உரிமையும், சமூக அந்தஸ்தும் வழங்கப்படுகிறதோ, அந்தச் சமுதாயம் உலகத்திற்கே வழிகாட்டுகின்ற ஒரு உன்னதமான சமுதாயமாக அமையும். அத்தகையதொரு உன்னதமான சமுதாயத்தை அமைக்கும் பணியில் இந்த அனைத்து மகளிர் காவல் நிலையம் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொள்ளும் என்று நம்புகிறேன். இம்மாவட்டத்து மகளிர், இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்தை, நல்ல முறையில் பயன்படுத்திப் பயனடைய வேண்டும் என்று, அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும்போது, ஒட்டுமொத்த சமுதாய வளர்ச்சிக்கு வழி வகுக்கப்படுகின்றது. அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும்போது, அது தனி நபர் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்குத் தூண்டுகோலாகின்றது. எனவேதான், மாவட்டந்தோறும் இத்தகைய விழாக்களில் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் ஒரு மனநிறைவைக் காண்கிறேன். இன்று இம்மாவட்டத்தைச் சேர்ந்த 30,000க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு, 13 கோடி ரூபாய் மதிப்பில் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன.

பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் நானே எனது கையால் உதவிகளை வழங்க வேண்டும் என்று விரும்பினாலும், நேரத்தின் அருமையைக் கருதி ஒரு சிலருக்கு மட்டும் இந்த மேடையில் நான் வழங்கவுள்ளேன். மற்றவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசு அலுவலர்களும், பயனாளிகள் இருக்கின்ற இடத்திற்கே சென்று உதவிகளை வழங்குவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெறுபவர்கள், இந்த உதவியினை நானே உங்கள் வீடு தேடி வந்து கொடுத்ததாகக் கருதி உங்கள் வாழ்க்கையின் மேம்பாட்டுக்கு இதை ஒரு அடிப்படையாக வைத்து, உங்கள் உழைப்பை மூலதனமாகக் கொண்டு, ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை நீங்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும்; உங்கள் முயற்சிகளுக்குரிய அத்தனைப் பலன்களும் உங்களுக்குக் கிடைக்கவேண்டும் என்ற

## காவலர் தம்பிக்கு அரசு வேலை

**கடந்த 21.5.1991 அன்று, ஸ்ரீபெரும்புதூரில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இறந்துபோன முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் பணியினைப் புரிந்த தமிழ்நாடு காவல் படையைச் சேர்ந்த காவலர் திரு. ஆர். ரகு என்பவரும் உடன் இறந்ததை அடுத்து, அவரது தகப்பனார் திரு. இராமகிருஷ்ணன் என்பவர் தனது மகன் திரு. ரகுவின் மரணத்தினால் தனது குடும்பம் ஏழ்மை நிலையில் தக்க வருமானம் இன்றி வருந்துவதாகவும், தனது மற்றோர் மகனான திரு. ரவிக்கு அரசுப் பணி ஏதேனும் ஒன்று கருணை அடிப்படையில் வழங்கப்படவேண்டும் என்றும் கோரி, கருணை மனு ஒன்றினை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு அனுப்பியிருந்தார்.**

**திரு. இராமகிருஷ்ணன் அனுப்பிய கருணை மனுவினைக் கனிவோடு பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இதனைச் சிறப்பு இனமாகக் கருத வேண்டும் என்று குறிப்பிட்டு, துயரமான சூழ்நிலையில் இறந்து போன காவலர் திரு. ரகுவின் தம்பியான திரு. ரவி என்பவர், மேல் நிலைக் கல்வித் தகுதி பெற்றுள்ள காரணத்தால், அவருக்கு அரசுத் துறையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் உடன் வழங்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளார்.**

எனது பேரவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.ஆர். ராஜு அவர்கள் பேசும்போது சில கோரிக்கைகளை இம்மாவட்டத்து மக்கள் சார்பில் என் முன்பு வைத்தார்கள். இம்மாவட்டத்தில் சிறிய தேயிலை விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க; பச்சைத் தேயிலையின் அடிப்படை விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். சிறிய தேயிலை விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவும், பச்சைத் தேயிலைக்கு அடிப்படை விலையினை நிர்ணயிக்கவும், நாங்கள் விரைவில் நடவடிக்கை எடுப்போம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூடலூர் வட்டத்தையும், உதகமண்டலம் வட்டத்தையும் இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அந்தக் கோரிக்கையையும் விரைவில் பரிசீலனை செய்து இம்மாவட்டத்து மக்கள் மகிழும் வண்ணம் நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நலிந்த மக்களும், ஏழைஎளிய மக்களும் வீடு கட்டும்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை விரைவில் தீர்த்துவைக்க நடவடிக்கை எடுப்பேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாவட்டம் இதுவரை காணாத அளவில் சீரோடும் சிறப்போடும், இந்த விழாவை அமைப்பதற்காக, அனைத்து ஏற்பாடுகளையும் செய்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், இம்மாவட்டச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும், எனது நெஞ்சார்ந்த பாராட்டுதல்களையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மழையையும், குளிரையும் பொருட்படுத்தாமல் பல மணி நேரம் காத்திருந்து நான் சென்ற இடங்களில் எல்லாம் பாதையின் இரு ஓரங்களிலும் என்னைக் காண்பதற்காக ஆர்வத்தோடு கூடியிருந்தவர்களுக்கும், என்னைக் காண்பதற்காகவும், என் பேச்சைக் கேட்பதற்காகவும் பெருந்திரளாக இங்கே கூடியுள்ள இம்மாவட்ட வாழ் அனைத்து மக்களுக்கும் என் நெஞ்சத்து நல்வாழ்த்துக்களைக் காணிக்கையாக்கிக் கொண்டு, நீங்கள் வாழ்க்கையில் எல்லா நலன்களும் வளங்களும் பெற வேண்டும் என்ற என் பேரவாவினைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.



**உதகை மலையின் பேரழகைக் காணும் ஒவ்வொரு நொடியும், என் மனதில், 'இத்தகைய இயற்கையின் எழில் செருக்கை, இம்மலைக்குச் சேர்த்திட, எத்தனைத் துன்பங்களை இம்மலை வாழ் மக்கள் ஏற்றிருப்பார்கள்?' என்ற எண்ணம்தான் மேலோங்கி நிற்கிறது.**

**இதனைத் தான் எனக்கு அரசியல் பாலபாடம் சொல்லித் தந்த, நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உணர்த்திச் சென்றுள்ளார்.**

**'சித்திரைச் சோலைகளே! உம்மை நன்கு<br>திருத்த இப் பாரினிலே - முன்னர்<br>எத்தனைத் தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ,<br>உந்தன் வேரினிலே'**

**எனும் உணர்வினைத்தான், எங்களுக்குப் புரட்சித் தலைவர் அவர்கள் ஊட்டிச் சென்றுள்ளார்.**

**எனவேதான் உதகமண்டலத்திற்கோ, கொடைக்கானலுக்கோ, உல்லாசப் பயணிகளின் வசதிக்கெனத் திட்டம் தீட்டுகிற அதே நேரத்தில், இம்மலைவாழ் மக்களாக இங்கேயே தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் மக்களின் நன்மைக்கென திட்டமிடுவதையும், எங்கள் தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளோம்.**

**உல்லாசப் பயணிகளின் வசதிக்கென இங்கே செலவழிக்கப்படும் ஒவ்வொரு ரூபாயும், இங்கேயே வாழ்ந்து வரும் மக்களின் வாங்கும் சக்தியை, ஒவ்வொரு ரூபாய் அளவுக்குக் குறைத்திடும் என்பதை மனதிலே கொண்டு அந்த அளவுக்குப் பல திட்டங்கள், இப்பகுதி மக்களின் நன்மைக்காகவும், நிறைவேற்றி விட்டுத்தான், ஏனைய உல்லாசப் பயணத் திட்டங்களைத் தீட்டி வருகிறோம் என்னும் செய்தியை, மெத்த மன நிறைவோடு உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.**

**'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-1-லிருந்து.**



# நீலகிரி மாவட்ட அரசுத் திட்டப் பணிகள் தொடக்கம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

*நீலகிரி மாவட்ட அரசுத் திட்டப் பணிகள் தொடக்கம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, நீலகிரி மாவட்டம் குன்னூரில் 3.8.1994 அன்று நடைபெற்றது.*

*விழாவில் கலந்து கொள்வதற்காக, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 2.8.94 அன்று நண்பகல் ஒரு மணிக்குக் கோவையிலிருந்து ஹெலிகாப்டர் மூலம் உதகை வந்தடைந்தார். ஒரு மாதமாகப் பெய்துவந்த தென்மேற்குப் பருவமழை மாண்புமிகு முதல்வருக்காக அன்று ஓய்ந்திருந்தது. ஊட்டி தீட்டுக்கல் இறங்கு தளத்தில் வந்திறங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களை, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா, துணைத்தலைவர் திரு காந்திராஜன், அமைச்சர் பெருமக்கள், நீலகிரி மாவட்டச் சட்டமன்ற உறுப்பினர்கள், காவல்துறைத் தலைவர் திரு எஸ். ஸ்ரீபால், இ.கா.ப., காவல்துறைக் கூடுதல் தலைவர் திரு தேவாரம், இ.கா.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சசி சேகர், இ.ஆ.ப. ஆகியோர் வரவேற்றனர். பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'தமிழகம்' அரசினர் மாளிகைக்குப் புறப்பட்டுச் சென்றனர். வழிநெடுக பொதுமக்களும், பள்ளி மாணவ மாணவியரும் சாலையோரம் நின்று முதல்வர் அவர்களை வரவேற்றனர்.*

*3.8.1994 அன்று காலை 11.30 மணிக்கு உதகையில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்துவைத்து, குத்துவிளக்கேற்றி, பார்வையாளர் புத்தகத்தில் கையெழுத்திட்டார். பின்னர், நேராகக் குன்னூர் புறப்பட்டுச் சென்று அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்துகொண்டார். வழிநெடுகப் பொது மக்களும், பள்ளி மாணவ மாணவிகளும் ஏராளமாகக் கூடி நின்று முதல்வரை வரவேற்றனர். உதகையிலிருந்து குன்னூர் வரை வழி நெடுக ஏராளமான அலங்கார வளைவுகளும், தோரணங்களும், இன்னும் சில இடங்களில் மலர்களால் ஆன அலங்கார வளைவுகளும் முதல்வரின் வருகையையொட்டி போடப்பட்டிருந்தன. இவை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன.*

*நண்பகல் 12.30 மணிக்கு விழா தொடங்கியது. விழாவிற்கு வந்திருந்தவர்களை, குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எம். கருப்புசாமி வரவேற்றார். நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சசி சேகர், மாண்புமிகு முதல்வர், சட்டப்பேரவைத் தலைவர் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்குப் பொன்னாடை வழங்கினார்.*

*விழாவில் கலந்துகொண்டு மாநிலக் காவல்துறை இயக்குநர் திரு எஸ். ஸ்ரீபால், இ.கா.ப. அவர்கள் வாழ்த்துரை வழங்கிப் பேசுகையில், "ஊட்டியில் இன்று காலை திறந்து வைக்கப்பட்ட அனைத்து மகளிர் காவல் நிலையத்தையும் சேர்த்து இதுவரை மொத்தம் 19 மகளிர் காவல் நிலையங்கள் திறந்து*



வைக்கப்பட்டுள்ளன. காவல் துறையில் 21 ஆயிரம் பேர் பதவி உயர்வு பெறும் வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு திட்டம் தீட்டி அதை நிறைவேற்றி வைத்தார்" என்று கூறினார்.

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு பி. ஈஸ்வரமூர்த்தி, மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி, பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன், போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன், கூடலூர் சட்டமன்ற உறுப்பினரும் தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத் தலைவருமான திரு கே.ஆர். ராஜூ ஆகியோரும் வாழ்த்துரை வழங்கிப் பேசினார்கள்.

விழாவிற்குத் தலைமையேற்று மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் பேசுகையில், "தமிழகத்தை இதுவரை ஆண்ட 9 முதல்வர்களின் காலத்தில் இருந்துவந்த பிராந்திய ஏற்றத்தாழ்வு (Regional Imbalance) தற்போது இல்லை. மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆட்சியில்தான் தமிழ்நாடு முழுமைக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு இந்த ஏற்றத்தாழ்வு நீக்கப்பட்டுள்ளது என்று கூறினார். மேலும் இவர் பேசுகையில் நீலகிரி மாவட்டத்தில் 9 புதிய வழித்தடங்களைத் தொடங்கிவைத்து, மகாகவி பாரதியார் போக்குவரத்துக் கழகத்துக்கு 10 புதிய பேருந்துகளை முதல்வர் அவர்கள் இங்கு வழங்குவார்" எனத் தெரிவித்தார்.

பின்னர், நீலகிரி மாவட்டத்துக்கு ரூ.297 கோடி மதிப்புள்ள அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டப் பணிகளைத் தொடங்கி, திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழாப் பேருரை ஆற்றினார்.

விழாப்பேருரைக்குப் பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா, சலவைப்பெட்டி, பள்ளிச் சீருடை, தையல் இயந்திரம், முதியோர் உதவித்தொகை போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

விழா முடிவில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், மாண்புமிகு வேளாண் அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன், கூடலூர், குன்னூர் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கே.ஆர். ராஜூ, டாக்டர் எம். கருப்புசாமி ஆகியோர் நினைவுப் பரிசுகள் வழங்கினார்கள்.

முடிவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சசி சேகர், இ.ஆ.ப. அவர்கள் நன்றிகூற விழா இனிதே முடிந்தது.

**நிகழ்ச்சித் தொகுப்பு: ஜே. சந்திரன்.**



## சென்னை நகரில் ஒரு வார காலத் தீவிரத் துப்புரவுப் பணி

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆலோசனையின் பேரில், பருவ மழை தொடங்குமுன் சென்னை நகரில் தேங்கியுள்ள குப்பை, கழிவு மண்களை அகற்றுவதற்காக சென்னை நகரின் 10 மண்டலங்களிலும் ஒரு வார காலத் தீவிரத் துப்புரவுப் பணியை சென்னை மாநகராட்சி 4.7.94 அன்று முதல் தொடங்கியுள்ளது. 4.7.94-ஆம் நாளிலிருந்து 10.7.94 ஆம் நாள் வரையில் நடைபெற்ற, இந்தத் தீவிரத் துப்புரவுப் பணியின்கீழ் நகரின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தேங்கியுள்ள குப்பைகள், இடிக்கப்பட்ட கட்டடப் பொருட்கள் ஆகியவை அகற்றப்பட்டதுடன், சாலைகளின் ஓரத்தில் மழைநீர் வடிந்து செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள வடிதளத்தில் தேங்கியிருக்கும் மண் மற்றும் பேருந்துச் சாலை ஓரங்களிலுள்ள செடி கொடிகளும் அகற்றப்பட்டு வருகின்றன.

நாள்தோறும் காலையிலிருந்து தொடங்கி இரவு வரை இப்பணி நடைபெறுகிறது. இப்பணியில் 10,000 துப்புரவுப் பணியாளர்கள் பங்கு பெறுகின்றனர். 500 குப்பை அகற்றும் லாரிகள் பயன்படுத்தப்படுகின்றன. இப்பணிகள் நிறைவு பெறும்பொழுது நகரின் அனைத்துப் பகுதிகளிலும் குப்பை மற்றும் இடிமானப் பொருட்கள் முழுவதும் அகற்றப்படுவதுடன், மழைக்காலத்தில் மழைநீர் விரைவில் வழிந்தோடுவதற்கு ஏதுவாக வடிதளத்தில் தேங்கியுள்ள மண் மற்றும் வளர்ந்திருக்கும் செடிகளும் அகற்றப்பட்டு விடும். ஆனால், பொதுமக்கள் ஒத்துழைப்பு இருந்தால்தான் சாலைகளையும் தெருக்களையும் தொடர்ந்து துப்புரவாக வைத்துக்கொள்ள முடியும்.

எனவே, பழைய கட்டடங்கள் இடிக்கப்படும் பொழுது, இடிக்கப்பட்ட கட்டடப் பொருட்களை அப்புறப்படுத்த உரிய கட்டணத்தை மாநகராட்சி மண்டல அலுவலகங்களில் செலுத்தி அவற்றை அப்புறப்படுத்திக் கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், தங்கள் பகுதிகளில் குப்பை அல்லது கட்டட இடிபாடுகள் அப்புறப்படுத்தாமல் இருந்தால் அது குறித்து தங்களது பகுதியிலுள்ள மாநகராட்சி அலுவலகத்திற்குப் பொதுமக்கள் தெரிவித்தால் அவற்றை அகற்ற உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



**காரைக்குடியில் நடைபெற்ற கவியரசர் கண்ணதாசன் பிறந்த நாள் விழாவில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எஸ். கண்ணப்பன் அவர்கள். கவியரசர் கண்ணதாசன் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார். மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன், மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர்திரு.எஸ்.ரகுபதி ஆகியோர் உடனிருக்கிறார்கள் (24.7.94).**

**புதுக்கோட்டையில் நடைபெற்ற வெள்ளுடை வேந்தர் சர் பிட்டி தியாகராயரின் பிறந்த நாள் விழாவின்போது, சர் பிட்டி தியாகராயரின் திருவுருவப் படத்தை மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் திறந்து வைத்தார். (10.7.94).**



## படமும் செய்தியும்

# திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ரூ.50 லட்சம் செலவில் கால்வாய் சீரமைக்கும் பணிகள்

தமிழகத்தின் மையப் பகுதியாம் திருச்சிராப்பள்ளி மாவட்டம், தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக அதிக அளவில் விவசாய நிலப்பகுதிகளைக் கொண்ட மாவட்டமாகும். காவிரி ஆற்றின் பயனால் திருச்சிராப்பள்ளி வட்டத்தில் மட்டும் 27,000 எக்டேர் பாசன வசதி பெற்று வருகிறது. இந்நிலப் பகுதிகளுக்கு முக்கிய நீர்வரத்து ஆதாரமாக குடமுருட்டி, உய்யகொண்டான், கொடிங்கால் கால்வாய்கள் அமைந்துள்ளன. பல ஆண்டுக் காலமாக இந்தக் கால்வாய்களில் மராமத்துப் பணி மேற்கொள்ளப்படாததால், கால்வாய்களின் நடுவே மண் மூடியும், செடி கொடிகள் அடர்ந்தும் நீர்ப் போக்குவரத்தைத் தடுத்து சரியான அளவில் பாசன வசதி ஏற்படாமல் இருந்து வந்தது. இதனால் வெள்ளம் ஏற்படும் காலங்களில் சீரான நீர்ப்போக்குவரத்து இல்லாத காரணத்தால் பயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டு விவசாயிகளுக்குப் பெரும் துன்பத்தை விளைவித்து வந்தது.

உதாரணம் கூற வேண்டுமானால், கடந்த ஆண்டு மட்டும் பெரும் வெள்ளத்தின் பொழுது திருச்சிராப்பள்ளி வட்டத்தில் மட்டும் வாழை, நெல், கரும்பு போன்ற பயிர்களில் ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு ரூபாய் 7 கோடி ஆகும். இது மட்டுமில்லாமல், உய்யகொண்டான், குடமுருட்டி ஆறுகள் திருச்சி நகரின் நடுவே ஓடுவதால், சீர் செய்யப்படாத கரைகள் உடைபட்டு, வெள்ள நீர் நகருக்குள் புகுந்து திருச்சி நகர வாசிகளுக்கு மிகுந்த பொருட்சேதத்தை ஏற்படுத்தி வந்துள்ளது கடந்த ஆண்டு மட்டும் இந்த சேத மதிப்பீடு ரூபாய் 3 கோடி ஆகும்.

இந்தத் துயர நிலையைப் போக்கவும், விவசாயிகளுக்கு ஒரு சீரான வகையில் பாசன வசதி செய்து கொடுக்கவும், அரசு குடமுருட்டி, உய்யக்கொண்டான் கொடிங்கால் கால்வாய்களில் 28.4 கிலோ மீட்டர் தூரத்திற்குத் தூர் எடுத்து கரைகளை உயர்ததவும் ரூ 50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்காக 21 மண்வாரி எந்திரங்கள் மூலம் போர்கால அடிப்படையில் கால்வாய்களைச் சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இப்பணிகளைப் பார்வையிட்ட தமிழக அரசின் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.கு.ப.கிருஷ்ணன் அவர்கள் விவசாயிகள் குறிப்பிட்ட காலத்தில் வேளாண்மைத் தொழிலைத் தொடங்க இப்பணிகளை விரைவில் முடிக்க வேண்டுமென்று இப்பணியில் ஈடுபட்டுள்ள வேளாண் பொறியியல்துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

காலங்காலமாய் காவிரி ஆற்றின் வெள்ளம் கரைபுரண்டு ஓடும்பொழுது குடமுருட்டி, உய்யகொண்டான், கொடிங்கால் கால்வாய்களில் வெள்ளம் புகுந்து ஏற்படும் பயிர்ச்சேதத்தையும், பொருட்சேதத்தையும் இந்த மராமத்துப் பணிகள் முற்றிலும் நீக்கி விடும் என்று பணிகளைப் பார்வையிட்ட மாண்புமிகு வேளாண்துறை அமைச்சர் திரு. கு.ப.கிருஷ்ணன் அவர்கள் தெரிவித்தார்.

-கோ. பன்னீர்செல்வம்
செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.

உண்மையான பெரிய மனிதனுக்கு முதல் அடையாளம் பணிவாக இருத்தல் என்று நான் நம்புகிறேன்.
ரஸ்கின்

நாணயமாக இருப்பவனிடம் எப்போதும் குழந்தைத்தனம் காணப்படும்.
மார்ஷியஸ்

மனிதர்களுக்கு நல்லது செய்வது தான் நாம் கடவுளுக்குச் செய்யும் மிகச் சிறந்த நல்ல தொண்டாகும்.
பிராங்ளின்





# குடும்ப நலம் பேணுவோம்!

வெ. இறையன்பு இ.ஆ.ப.,
சிறப்பு அலுவலர்
8வது உலகத் தமிழ் மாநாடு

நாங்க இங்க புதுசா குடிவந்தப்ப
எங்க ஊடு ஒன்று தான் இருக்கும்

தூரமா ஒரே ஒரு குடிசையில
குப்பண்ணன் மட்டும்
மாட்டுவண்டியை
வச்சிக்கிட்டு இருந்தாரு.

ராவு நேரத்துல நாங்க
ஊருக்குப் போயட்ட முன்னா
அவரு தான் வந்து
ஊட்டுத் திண்ணையில
படுத்துக்குவாரு.

சாய்ந்தரமானா
எங்க ஊட்டு கொய்யா மரத்துல
கிளியும், புறாவும்,
மரங்கொத்தியும், மைனாவும்
வரிசையா வந்து
அழகழகா உக்காந்து கத்தறதப்
பாத்தா சந்தோஷமா இருக்கும்.

ஊட்டுக்குப் பக்கத்துல
பெரிசா மைதானமாயிருக்கும்.
அப்பால் இருக்கிற எங்க
பள்ளிக்கூடப் பசங்க
வந்தாங்கன்னா நாங்க எல்லாம்
அங்க
எல்லா விளையாட்டும்
விளையாடுவோம்.

ராத்திரி நேரத்துல எங்க ஊட்டுல
இருந்து
பாத்தா
குப்பண்ணா வீட்டு
சிம்மினி விளக்கு மட்டும் முனுக்
முனுக்குன்னு எரியறது
தெரியும்.
மற்றபடி ஒரே இருட்டாயிருக்கும்.

அப்பப்ப வீட்டுல பாம்பு வரும்.
அப்பா தான் அதை குச்செடுத்து
அடிப்பாரு
எனக்குச் சின்ன வயசுல இருந்தே
பாம்பைப் பாத்து பாத்து
பாம்புங்கற பயமே இல்லாம
போயிடுச்சி.

அப்பெல்லாம எங்க கொளததுல
தண்ணி மொண்டுக்கிற மாதிரி
இருக்கும.
மழை பெஞ்சா கிணறும், நிலமும்
சரிசமமா இருக்கும்.
நாங்க கிணத்துல கப்பல் எல்லாம்
வுட்டு வெளையாடுவோம்.

எங்க ஊட்டுக்குக் கொஞ்சம்
தள்ளி
ஒரு பெரிய ஏரி இருந்திச்சு
ரொம்ப அழகா இருக்கும்
தண்ணி வந்தால் அதுல இருக்கிற
மீன் சாப்பிட
கொக்கு எல்லாம் வரும்.

நாங்க கரையில் உக்காந்துகிட்டு
லீவு நாளில்
மீன் புடிக்க தூண்டில்
எல்லாம் போடுவோம்.
புடிச்சமீனை
அங்கயே சுட்டு திம்போம்.

ஒவ்வொரு வீடும் கட்டறபோது
நாங்க எல்லாம் குதிப்போம்
விளையாடறத்துக்கு இன்னொரு
ஆளு கிடைச்சுடுச்சின்னு.

இப்ப பாத்தா
எங்க ஊரு பெரிசாயிடுச்சி.

அதுக்கு என்னென்னமோ
நகர்னும், தெருவுன்னும்
பேரெல்லாம் வச்சிட்டாங்க.

இப்பெல்லாம் எங்க ஊட்டை
அடையாளம்
கண்டு புடிக்கிறது கஷ்டம் .
ஏன்னா
எங்க ஊட்டை சுத்தி
பெரிசு பெரிசா நெறய
வீடெல்லாம்
வந்துடுச்சி.

இப்பெல்லாம் நாங்க
வெளயாடறத்துக்கு எடமேயில்லை
மைதானமெல்லாம் வீடாயிருச்சி.

எங்க ஊரு
ஏரியைக்கூட ரொப்பிட்டாங்க
பிளாட் போட்டு
விக்கப் போறாங்களாம்.

வெள்ள வெள்ளயா கல்லு
நட்டிருக்காங்க.
நெல்லு வயலுல நிக்கற
கொக்கு மாதிரி

அந்தப் பக்கமாப் போனா
அழுகையா வருது.

இப்பெல்லாம் எப்பயாவது ஒரு
மைனா தான்
வந்து உக்காருது.
கிளியெல்லாம் வர்றதேயில்ல



ரண்டு வருஷத்துக்கு முன்னால்
பொறந்த
என் தம்பி
கிளியைப் பாத்ததேயில்ல

எங்க கிணறு இப்பெல்லாம்
மழைகாலத்துல மட்டுந்தான்
தண்ணியோட இருக்குது.
புதுசா வந்தவங்க எல்லாம்
போரு போட்டதனால் தண்ணி
ஆழமாப் போயிடுச்சின்னு அப்பா
சொன்னாரு.

வருஷா வருஷம் கிணத்தை
வெட்டி ஆழப்படுத்துகிறோம்.
ஆனாலும்
தண்ணி வத்திப் போகுது.
இப்படியே போனா
கிணறு வெட்டறவங்க
பூமிக்குக் கீழ்ப்பாகம் வழியாத்தான்
வெளியே வருவாங்க.

மொதே கொசுவெல்லாம்
இருக்காது.
குளிர்காலத்துல 'பேனு' இல்லாம
நாங்க
தூங்குவோம்.
ஆனா இப்ப எல்லா எடத்திலயும்
ஒரே சாக்கடை.
அதனால
எப்பப்பாத்தாலும் கொசுவா
இருக்குது.

சாய்ந்தரமானா பேனு போட்டு
ஏதோ 'மேட்'னு ஒன்று
வாங்கிக்கிட்டு வந்து வச்சாத்தான்
கொசு கொஞ்சமா கடிக்குது.

நாங்க டவுனுக்குப் போவனு
முன்னா
மொதெல்லாம்
அப்பாவோட ஸ்கூட்டருல பத்து
நிமிஷத்தில
போயிடலாம்.

ஆனால் இப்ப ஏகப்பட்ட
பஸ் காருன்னு ரோடு பூரா
அதனால் கொறஞ்சது
முப்பது நிமிஷமாவது ஆகுது.

அப்பெல்லாம்
பஸ்ஸில் இடம் நெறய இருக்கும்.
இப்ப நிக்கக்கூட
எடம் கெடக்கறது இல்லை.

எப்பயாவது டவுனுக்குப் போயி
படம் பார்க்கணுமுன்னா
ரொம்பக் கஷ்டம். அன்னைக்கு
ஒருத்தன்
என் கால்ல இருந்த
புண்ணை மிதிச்சி ஒரே ரத்தம்.

நானு இந்த ஊருக்கு வந்தப்ப
அப்பா எப்பவாவது



பத்து பைசா குடுப்பாரு.
பத்து பைசாவுக்கு பெரிய
கைமுறுக்கு
வாங்கித் திம்பேன்.

அதிலே கொஞ்சம் என் பக்கத்து
கிலாஸில்
குமாருக்கும்
குடுப்பேன்.
இப்ப எல்லாம் அதே முறுக்கு
ஒரு ரூபாய்னு அந்தக் கடைக்காரரு
விக்கறாரு.

அப்பா கிட்ட கேட்டேன்.

"அப்பா இப்படியே எல்லா
நிலமும் வீடு கட்டனா
அரிசிலாம்
எந்த நெலத்துலப்பா பயிரு
பண்ணுவாங்க?

அதுக்கு அப்பா சொன்னாரு

"இன்னும் நெறயா பயிர் செய்யாம
தரிசு நெலம் நம்ப நாட்டுல
நிறையா இருக்குது."

"அப்படீன்னா அதுவும் தீந்துட்டா
என்னப்பா ஆகுமுன்னு கேட்டேன்.

அதுக்குள்ள அம்மா வந்து
அப்பாவைச் சாப்புடக்
கூப்புட்டாங்க.
அதிகப்பிரசிங்கித்தனமா நான்
கேள்வி கேட்கறதா
அம்மா என்னைத் திட்டினாங்க.

வெய்ய காலத்துல இப்ப ரொம்ப
புழுக்கம்.
இருந்த மரத்த எல்லாம் வெட்டிப்
புட்டாங்க.
நானும் எங்க அண்ணனும் அந்த
ஊர்க்கோடியில் இருக்கிற
வேப்ப மரத்துல ஊஞ்சல் கட்டி
வெளயாடுவோம்.
ஆனா இப்ப அந்த எடத்துல
ஒரு பாய் டீக்கடை வச்சிருக்காரு.

கொஞ்ச நாளக்கி முன்னாடி
எங்க ஊட்டு முன்னா
ஒரு பைப்பு போட்டாங்க

அதில தண்ணி புடிக்க ஒரே
கூட்டம்.
எப்பப் பாத்தாலும்
சண்டையாயிருக்கும்

அம்மா கிட்டே கேட்டேன்
"ஏம்மா இவ்வளவு வூடு
எதுக்கும்மா வந்தது"ன்னு

அம்மா சொன்னாங்க.

"ஜனத்தொகை பெருகுது
அதனாலதான்"

"ஜனம் பெருகுனா வீடு
ஏன் கட்டறாங்க."

"நம்ப ஊட்டையே எடுத்துக்க
இப்ப நீங்க அண்ணன் தம்பி
மூணு பேரு
மூணு ஊடு வேணாமா?"

இப்பப் புரியுது ஏன் இப்படி
வீடுகளாக்
கட்டித் தொலைக்கறாங்கன்னு.

அன்னிக்கி அம்மா கிட்டே
சொன்னேன்.

"அம்மா பக்கத்து வீட்டு
ரகு தினமும்.
சாப்பாட்டோட முட்டை
கொண்டு வர்ராணும்மா "ன்னு

அதுக்கு அம்மா சொன்னாங்க.

"அவங்க வீட்டில் ஒரே பையன்.
அது தான் முட்டையெல்லாம்
கொடுக்க முடியுது"

"நம்ப வீட்ல மூணு
பசங்க இல்லயா!"
நானு திருப்பிக் கேட்டேன்.

"ஏம்மா நீயும் ஒரு கொழந்த
மட்டும்
பெத்துக்கலேன்னு"

அதுக்கு அம்மா அடிச்ச அடி
இப்ப நெனச்சாலும்
வலிக்குது!





# தமிழ் வளர்ச்சி மன்றம்

**டாக்டர் சி. செல்வராசு**
**இயக்குநர் : தமிழ் வளர்ச்சித் துறை**

தமிழின் பண்டை நலம் காப்பதிலும், புதுப்புலமை ஊக்குவதிலும் தணியாத ஆர்வம் கொண்டுள்ளது தமிழக அரசு. 'எங்கும் தமிழ்', 'எதிலும் தமிழ்', 'என்றும் தமிழ்' எனத் தமிழ்ப் பயன்பாடு மேம்பாடடைய மிகுந்த அக்கறையோடும், முழு வெற்றிகாணும் முனைப்போடும் செயலாற்றிவருகிறது.

மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்கள், தமிழ் கூறும் நல்லுலகம் மகிழும் வண்ணம், உலகத் தமிழினம் ஒருங்குகூடி தமிழின் மேன்மையை, தமிழரின் மேன்மையைச் சிந்திக்கவும், செயற்படவும் தஞ்சைத் தரணியில் எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டை ஏற்றமுடன் நடத்திட ஆணையிட்டார்கள். மாநாட்டுப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

'தமிழுண்டு, தமிழ் மக்களுண்டு-
இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம்
நல்ல தொண்டு'

-எனப் பாவேந்தர் கூறியதற்கேற்ப, தமிழும், தமிழரும் பெருமகிழ்ச்சிகொள்ளும் வகையில், பல்லாண்டுகளாகச் செயலிழந்திருந்த தமிழ் வளர்ச்சி மன்றத்தை மீண்டும் புதுப்பித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

1959-ஆம் ஆண்டில் 'தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்' தமிழக அரசால் அமைக்கப்பட்டது. இம்மன்றம் 1974, 1979-ஆம் ஆண்டுகளில் மீண்டும் புத்தாக்கம் செய்யப்பெற்றது. ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்களிடமிருந்து அரிய தமிழ்நலக் கருத்துகளைப் பெறவும், தமிழ்ப் பாதுகாப்பாக அமையவும் இம்மன்றம் தோற்றுவிக்கப்பெற்று மீண்டும் புத்தாக்கம் செய்யப் பெற்றது. எனினும், அரசுக்குக் கருத்துரைத்து அருந்தமிழ் வளர்க்கும் வகையில் 1974, 1979-ஆம் ஆண்டுகளில் புத்தாக்கம் செய்யப் பெற்ற மன்றமும் செயற்படாமல் போயிற்று.

## புதுவேகம்

தமிழ் வளர்ச்சியில் அரசு மட்டுமே முடிவெடுத்தல் என்ற நிலையை மாற்றி, அருந்தமிழ்ப் பணியாற்றும் தமிழ்ச் சான்றோர்களின் கருத்தையும் பெற்று அவற்றில் உகந்தவற்றை நடைமுறைப்படுத்தக் கருதிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ் வளர்ச்சி மன்றத்திற்குப் புதுவேகம் அளித்துள்ளார்கள். இவ்வாண்டில் தமிழ் வளர்ச்சி மன்றத்தைப் புத்தாக்கம் செய்துள்ளார்கள்.

தமிழ் வளர்ச்சி மன்றத்திற்கு மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைவராக இருப்பார். மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் இணைத் தலைவராக இருப்பார்.

இம்மன்றத்தில்- முத்தமிழ்க் காவலர் திரு கி.ஆ.பெ. விசுவநாதம், சிலம்புச் செல்வர் திரு ம.பொ.சி., தவத்திரு குன்றக்குடி அடிகளார், ஓய்வு பெற்ற நீதிபதி திரு மு.மு. இஸ்மாயில், முன்னாள் துணை வேந்தர் திரு. வி.அய். சுப்பிரமணியம், இந்நாள் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் ஔவை நடராசன், தமிழ் அறிஞர்கள் டாக்டர் [illegible] குழந்தைசாமி, டாக்டர் தமிழண்ணல், புலவர் இளங்குமரன், பேராசிரியர் திரு. அ.மு. பரமசிவானந்தம், ஆட்சித் தமிழறிஞர் திரு. கோ. முத்துப்பிள்ளை உள்ளிட்ட 33 தமிழ் அறிஞர்கள் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பெற்றுள்ளனர்.

## மன்றத்தின் பணிகள்

இம்மன்றத்தின் செயற்பாடுகள் புதுமையாகவும், செழுமையாகவும் அமையவேண்டி, கீழ்க்காணும் பணிகள் இதற்கென வரையறுக்கப் பெற்றுள்ளன.

1. தமிழ்மொழி மேம்பாட்டுக்கும், காப்புக்கும் தக்கதோர் உயர்நிலை அமைப்பாகச் செயற்படுதல்;

2. தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டுள்ள தமிழ் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கம் தொடர்பான ஆய்வுரை வழங்கவும், தொடர்புடைய பிற செயற்பாடுகளுடன் அவற்றை ஒருங்கிணைத்தும், தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணை புரிதல்;

3. தமிழ்ச் சொல்லாக்கப் பணியில் சீர்மைகண்டு ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை நிலைப்படுத்தி (Standardization) அவற்றைச் சீரான முறையில் அனைவரும் பயன்படுத்த வகை செய்தல்;

4. பன்னாட்டுச் சொற்கள், குறியீடுகள், சூத்திரங்கள் ஆகியவற்றைத் தமிழில் எடுத்தாள்வதற்கான அடிப்படை விதிகளை வகுத்தளித்தல்

5. தமிழ்ப் பெயர்கள், தமிழ்ச் சொற்கள் ஆகியவற்றை ரோமன் எழுத்தில் எழுதவேண்டிய நிலையில் நெடிலைக் குறிக்கவும், [illegible], ழ, ண, ன, ற போன்ற



219382

ஒலிகளை ரோமன் வரி வடிவத்தின்மூலம் குறிக்கவும் தற்போது வழக்கிலுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளை விடுத்து ஒருமைப்பாடு காண வகை செய்தல்

6. ஒலிபெயர்ப்பதா, மொழிபெயர்ப்பதா என்ற கேள்விக்கு ஒருமுறையினையும், தமிழ்மொழியில் இல்லாத ஓசையினைக் குறிப்பிட வழிவகையினையும் காண வகைசெய்தல்;

7. (இலங்கை)ஸ்ரீலங்கா, சிங்கப்பூர், மலேசியா போன்ற வெளிநாடுகளில் நடைபெறும் தமிழ்ச் சொல்லாக்கப் பணிகள் தொடர்பாகக் கருத்துப் பரிமாற்றம் காண வகைசெய்தல்;

8. நடைமுறையில் ஏற்கப்பெற்ற நிலைப்படுத்தப்பட்ட தமிழ்ச் சொற்கள் மக்கள் செய்தி வாயில்களாக (Mass media) வானொலி, தொலைக்காட்சி, நாளிதழ்கள் போன்றவற்றில் முழுமையாகவும், முறையாகவும் பயன்படுத்த வகைசெய்தல்;

9. பொதுமக்களுக்கும், பல்கலைக் கழக மாணவர்களுக்கும் பயன்படுத்தத் தக்க வகையில் இக்கால அறிவியல், தொழில் நுட்பவியல் தொடர்பான நூல்களைத் தமிழில் தயாரிக்க உறுதுணைபுரிதல்;

10. தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களின் உதவியுடன் அறிவியல், கலையியலுக்குத் தொடர்புடைய பல்வேறு பொருள்கள் குறித்த தொழில் நுட்பச் சொற்களைக்கொண்ட முழுமையான அகர முதலிகளைத் தயாரித்து வெளியிட வகை செய்தல்; சொற்கள் பழக்கமும், ஏற்பும் பெறுவதற்குட்பட்டு அவ்வகர முதலிகளைக் காலமுறைதோறும் திருத்தி அமைக்க வகை செய்தல்;

11. மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு பொதுமக்கள் பரவலாக விரும்பிப் படிப்பதற்குரிய வெளியீடுகளை வெளியிடும் அமைப்புகளின் பணிகளை ஒருங்கிணைத்தல், மேம்படுத்தல்; குறிப்பாகக் கிராமப் பகுதிகளில் நூலக அமைப்புப் பணிகளில் ஒருங்கிணைத்துச் செயற்பட வகை செய்தல்;

> எந்த வீட்டில் புத்தகசாலை இருக்கிறதோ, அந்த வீட்டில் ஆன்மா இருக்கிறது.
>
> -பிளாட்டோ

12. மக்கள் செய்தி வாயிலாக (Mass media) காணப்பெறும் தமிழ் வழக்கு களில் அமைந்த தவறுகளைத் திருத்தியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளல்;

13. தமிழில் இதுவரை மேற்கொள்ளப்பெற்ற எழுத்துச் சீரமைப்புக்குக் கூடுதலாகத் தமிழ்மொழி மேம்பாட்டுக்கு வேண்டப்பெறும் எழுத்துச் சீரமைப்புக் குறித்து கருதி முடிவு செய்தல்;

14. தமிழ்நாட்டில் உள்ள ஊர்களுக்குரிய தவறான பெயர் வழக்குகளை மாநிலப் பெயராணைக் குழுவுடன் (State place name authority) ஒருங்கிணைந்து திருத்தியமைக்க வகை செய்தல்;

15. தமிழ்நாட்டின் பண்டைச் சிறப்பை உலகுக்கு எடுத்துரைக்கத் தக்க வகையில் தொடர்புடைய அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை மேற்கொள்ளல்;

16. தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களிலும், பிற மாநிலங்களிலும், அயல்நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள தமிழியல் ஆய்வுகளை (Tamilology Research) தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் உதவியுடன் காலவாரியாகத் தலைப்பு, ஆய்வாளர் பெயர், முதலிய விவரங்களைத் தொகுத்துக் கையேடாக வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளல்;

17. தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிராதோர் எளியமுறையில், குறுகிய கால அளவில் தமிழ் மொழியைக் கற்றுத் தேர்ச்சி பெறப் [illegible] நூல்கள், ஒலி, ஒளிநாடாக்கள் போன்றவற்றைத் துறை வல்லார் துணைக்கொண்டு வடிவமைத்துத் தயாரித்து வெளியி[illegible] வகை செய்தல்;

• 18. ஆண்டுதோறும் தமிழில் வெளிவரும் நூல்களை விடுபாடின்றித் தக்கவாறு தொகுத்து அட்டவணைப்படுத்தி அப்போதைக்கப்போது காலமுறைதோறும் வெளியிட வகைசெய்தல்;

19. இதுவரை அச்சேறாத தொன்மைவாய்ந்த தமிழ் நூல்களை அச்சேற்ற வகைசெய்தல்;

## முதல் கூட்ட விவரம்

இம்மன்றம் தமிழுக்காக மாநில அளவிலான உயர்நிலை மன்றமாகச் செயற்படும். ஆண்டுக்கு இரண்டு அல்லது மூன்றுமுறை கூடி மேற்குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்ற இம்மன்றம் ஆவன செய்யும்.

துறைதோறும் துறைதோறும் தமிழ் வளர்க்க, கருத்துரைத்து வழிநடத்தும் பெருநோக்கில் அமைந்த இம்மன்றத்தின் முதற்கூட்டம் 9.5.94-இல் அரசு தலைமைச்செயலகத்தில் நாமக்கல் கவிஞர் மாளிகையின் மாநாட்டுக் கூடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர். இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை ஏற்றார். மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு. க. பொன்னுசாமி அவர்கள் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். தமிழறிஞர்கள் ஒவ்வொருவரும் தமிழை மேம்படுத்தத் தத்தம் கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

முத்தமிழ்க் காவலர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் "ஆங்கில வழியில் நடைபெறும் மழலையர் பள்ளிகளை உடனே மூட வேண்டும், குழந்தைகளும், மாணவர்களும், வயதானவர்களும், பட்டதாரிகளும் தமிழ் படிக்கும் வகையில் கல்வி முறையில் மாற்றம் செய்யப்பட வேண்டும். அண்டை மாநிலங்களுக்குச் சென்று ஆட்சி மொழித் தொடர்பில் ஆய்வு செய்து நாம் பின்பற்றவேண்டிய கருத்துக்கள் இருக்குமாயின் அவற்றைப் பின்பற்றி ஆட்சிமொழித் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும். பல்வேறு துறைகளும் தனித்தனியே அவரவர் விருப்பம்போல் கலைச்சொற்களை உருவாக்கிப் பயன்படுத்துவது வருந்தத்தக்கது. இத்தகைய முறையால் தமிழ் வளர்ச்சி தடைபடும். எனவே, இதற்கும் ஒரு மாற்றுவழி கண்டாக வேண்டும். கல்லூரிகளில் பட்டம் பெறுபவர்கள்கூட தமிழே படிக்காமல் பட்டம் பெறலாம் என்ற நிலையை நீக்கவேண்டும்" எனப் பல அரிய கருத்துக்களை இக்கூட்டத்தில் எடுத்துரைத்தார்.

சிலம்புச் செல்வர் திரு ம.பொ.சி. "இலங்கையில் சட்டக்கல்லூரி உட்பட அனைத்துக் கல்லூரிகளிலும் அவரவர் தாய்மொழிதான் பாடமொழியாக உள்ளது. பர்மிய உயர்நீதிமன்றம் பர்மிய மொழியில்தான் நடைபெறுகிறது. தமிழகத்தில் இந்நிலை வர வேண்டும். இதற்குரியவற்றை அரசு விரைவாகச் செய்ய வேண்டும், அரசின் ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ் வளர்ச்சிக்காகச் சில கோடி ரூபாய்களை ஒதுக்கீடு செய்தால் தமிழ் வளரும். எழுத்துச் சீர்திருத்தம் பற்றி முடிவு செய்ய இம்மன்ற உறுப்பினர்களைக் கொண்டே ஒரு குழுவை அமைக்கலாம். தமிழ் எழுத்தாளர்கள் தம் எழுத்தை மட்டுமே நம்பிக் குடும்பத்தை நடத்த முடியாத நிலை உள்ள எழுத்தாளர்களின் நூல்களை அதிக அளவில் வாங்குவதற்காக அரசு நூலகத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்" எனப் பல கருத்துக்களை இக்கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

முன்னாள் நீதிபதி திரு மு.மு. இஸ்மாயில் "தமிழால் எல்லாம் முடியும். மொழிபெயர்ப்பு மட்டுமே மொழியை வளர்த்து விடாது. வளர்ந்து வரும் அறிவியல் யுகத்திற்கேற்ப புதிய புதிய சொற்களை நாம் உருவாக்க வேண்டும். முன்பு கலைச் சொற்களை உருவாக்கப் பல குழுக்கள் இருந்தன. இப்போதும் அவை போன்றே பல குழுக்களை அமைத்துப் புதிய சொற்களை உருவாக்க வேண்டும். இவற்றைக் கண்காணித்து நெறிப்படுத்த மேற்குழு ஒன்றும் அமைக்கலாம்" எனத் தெரிவித்தார்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார், "இன்றைய கல்விமுறை சிந்தனையை வளர்ப்பதாக அமையவில்லை. தூய தாய்மொழியில் நல்ல கல்விமுறை அமைய வேண்டும். புதியன காணும் வேட்கை வளர்க்க வேண்டும். மொழியைப் பற்றிய நமது அணுகுமுறை மாற வேண்டும். தமிழ் நூல்கள் வாங்குவாரற்ற நிலையில் உள்ளன. இந்நிலை மாறவேண்டும். சொற்களை உருவாக்குவதில் அவை மக்கள் மன்றத்தில் காலங்கடந்து வாழத்தக்கனவாக அமையவேண்டும்" எனக் கருத்துரைத்தார்.

டாக்டர் வி.அய். சுப்பிரமணியம், "தமிழ், தமிழ்நாட்டுக்கு மட்டுமே உரியதெனக் கருதக்கூடாது. உலகத் தமிழர்களை ஒருங்கிணைத்துச் செயல் திட்டங்களை உருவாக்கி மொழிபெயர்ப்பு, எழுத்துச் சீர்திருத்தம் ஆகியவை பற்றி ஒருங்கிணைந்த கருத்துக்களைக் கண்டறிய வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

டாக்டர் வ.செ. குழந்தைசாமி, "தமிழ் வளர்ச்சி மன்றத்தின் கருத்தும், செயற்பாடுகளும் பிரெஞ்சு அகாதமியைப் போன்று அமைய வேண்டும். ஆளுங் கட்சியால் தோற்றுவிக்கப்பட்டது என்பதைவிட தமிழறிஞர்கள் தமிழுக்காகச் செயற்படும் குழு என்ற கருத்தே உருவாக வேண்டும். தமிழறிஞர்களின் அணுகுமுறையும் கட்சி வேறுபாடு இன்றித் தமிழ்நலம் மட்டுமே நாட்டம் கொண்டதாய் அமையவேண்டும்" எனத் தெரிவித்தார்.

> இருள் இருள் என்று
> சொல்லிக்கொண்டு சும்மா
> இருப்பதைவிட ஒரு சிறிய
> மெழுகுவர்த்தியைத் தேட
> முயற்சி செய்.
>
> கன்பூஷியஸ்

டாக்டர் ஔவை நடராசன் "தமிழ் வளர்ச்சிக்காக இதுவரை அரசு நற்பணிகளை ஆற்றியுள்ளது. அவற்றைக் கருத்தில் கொண்டு அவற்றிற்கு மேலாகச் செயல் திட்டங்களை இம்மன்றம் உருவாக்க வேண்டும்" என்றார்.

டாக்டர் முத்து கண்ணப்பர் "அயல்மொழி புகும் வழிகளைக் கவனிக்கவேண்டும்; மொழியின் வளர்ச்சிக்கேற்ப, புதிய இலக்கணம் படைக்க வேண்டும், மொழிபெயர்ப்புக்குழு, எழுத்துச் சீர்திருத்தக்குழு ஆகியவற்றை அமைக்கவேண்டும்" என்று சொன்னார். புலவர் இளங்குமரன் "விளம்பரப் பலகைகளில் தமிழ் இடம்பெற வழிகாண வேண்டும், மொழி வளர்ச்சியில் அரசு நாள்தோறும் நாடி முறை செய்தல் வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

டாக்டர் க.ப. அறவாணன் 'மொழியை நாம் படைப்புநிலை, படிப்புநிலை, பயன்பாட்டு நிலை, ஆராய்ச்சி நிலை எனும் நான்கு நிலைகளிலும் கண்காணித்து வேண்டுவன செய்து வளர்க்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் "தமிழில் வெளிவரும் அறிவியல் நூல்களுக்கு அதிக அளவில் பரிசுகள் வழங்க வேண்டும்" எனக் கருத்துரைத்தார்.

டாக்டர் இசரவேல், தமது உரையில்- "ஆட்சிமொழிச் செயலாக்கத்தின் போது தமிழ்மொழியின் மரபு கெடாத வகையில் குறிப்புகள், வரைவுகள் அமைகின்றனவா என்பதைக் கண்காணித்து நெறிப்படுத்தவேண்டும். பாடநூல்




நிறுவனம் வெளியிட்டுள்ள அறிவியல் நூல்களின் மொழி பெயர்ப்பு புரியும் வகையில் இல்லை, ஒலிமாற்றமும், சொல் லாக்கமும் மரபு கெடாத வகையில் அமையவேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

டாக்டர் அண்ணாமலை, "மொழியைப் பயன்படுத்தும் அளவிற்கே அதன் வளர்ச்சி அமைகிறது. தமிழில் மூன்று இலட்சம் சொற்கள் பயன் பாட்டிற்குத் தயாராக உள்ளன. இவற்றைப் பயன்படுத்தி மொழி மேம்பாடடையும் வழிவகைகளைக் காணவேண்டும்" எனத் தெரிவித்தார்.

தமிழ் வளர்ச்சி மன்றத்தில் தமிழறிஞர்கள் எடுத்துரைத்த கருத்துகளை மன்றத் தலைவர் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களும் ஆர்வத்துடன் செவிமடுத்தனர். "இம்மன்றத்தின் முதற் கூட்டமாக அமைந்ததால் உறுப்பினர்களின் பொதுவான கருத்துக்கள் வரவேற்கப்பெற்றன. தொடர்ந்து இம்மன்றத்தின் கூட்டம் மூன்று அல்லது இரு திங்களுக்கு ஒருமுறையேனும் கூடும்; என்றும் தமிழ்ச் சான்றோர்களின் கருத்துக்களை ஏற்றுத் தமிழ் வளர்ச்சிக்கு உரியனவற்றைத் தமிழக அரசு செய்யும்" என மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் இறுதியாகக் கருத்துரைத்தார்.

தமிழ் வளர்ச்சிக்குத் தக்க வற்றைத் தமிழ்ச் சான்றோர் களிடம் கேட்டறிந்து அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கருதிப் புத்தாக்கம் செய்யப் பெற்றுள்ள தமிழ் வளர்ச்சி மன்றம், தமது பணியை முதற் கூட்டத்திலேயே சீரும் சிறப்பு மாகத் தொடங்கியுள்ளது. அரசின் தமிழ வளர்ச்சிக் கொள்கைகள் நிறைவேற இம்மன்றத்தின் ஆற்றல் முழுமையாகப் பயன்படுத்தப் பெறும் எனக் கருதலாம். இம் மன்றம் தமிழ் வளர்ச்சிக்கு ஓர் உயர் மன்றமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.




தூய
பட்டு

தூய
சரிகை

ராஜகம்பீரமான ஊதா...
...ச்சூரப்பூபோல் சிகப்பு...
...ரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.






தமிழரசு
16.9.199




**தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்**
குறளகம், சென்னை - 600 108

## இந்த இதழில்.....

'டாக்டர் ஜெயலலிதா திரைப்பட நகரம்' முதலமைச்சர் உரை-நிகழ்ச்சிகள் ..... 2
பெரியார் மாவட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் ..... 9
செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் முதலமைச்சர் சுற்றுப்பயணம் ..... 16
காமராசர் மாவட்டத்தில் முதலமைச்சர் ..... 25
படமும் செய்தியும் ..... 33
தஞ்சையில் உலகத் தமிழ் மாநாடு ஏற்பாடுகள் ..... 36
சேதுசமுத்திரம் கால்வாய் திட்டம் ..... 41
ஒயில் ஆட்டம் ..... 44
வேளாண்மையில் உயர் கல்வி ..... 46
தாய்ப்பால் நல்ல குழந்தை உணவு ..... 50
மகளிருக்கு வாழ்வளிக்கும் மணிக்கற்கள் ..... 52
மரபுச் செல்வங்களைப் பாதுகாப்போம் ..... 54
ஏழாவது தெற்காசியப் போட்டிகள் மாண்புமிகு முதலமைச்சர் உரை ..... 57

**தமிழரசு**
*திருவள்ளுவர் ஆண்டு 2025*
*ஆவணித் திங்கள்: 16 - 31*
*மலர்: 25* *இதழ்: 5-6*

***1.9.1994 & 16.9.1994***
*விலை ரூபாய் ஆறு*



### இதழ்தோறும் ஓர் இனிய குறள்

**'தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது'**

■ *தனக்கு ஒப்பு உவமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு அல்லாமல், மற்றவர்க்கு மனக் கவலையை மாற்ற முடியாது.* (7)

**டாக்டர் ஜெ. ஜெயலலிதா தங்கக் கோப்பைக்கான சர்வதேச மகளிர் கால்பந்துப் போட்டி சென்னை-நேரு ஸ்டேடியத்தில் நடைபெற்றது. இறுதிப் போட்டியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நேரில் வருகை தந்து கண்டுகளித்தார். போட்டி முடிவில்-வெற்றிபெற்ற 'கானா' நாட்டு மகளிர் அணியினருக்கு 'டாக்டர் ஜெ. ஜெயலலிதா தங்கக் கோப்பையை'யும் ரூ. 2 இலட்சம் ரொக்கப் பரிசையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். தோல்வி கண்ட ரஷ்ய அணியினருக்கும் பரிசுகள் வழங்கப் பட்டன. போட்டியின் அமைப்புச் செயலாளர் திரு. சி.ஆர். விசுவநாதன் உடனிருக்கிறார் (9.9.1994).**





# ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகர்

## திரைப்பட நகர் தொடக்க விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் உரை

சென்னையில் திரைப்பட நகரின் தொடக்க விழாவில் பங்கு கொள்வதிலும், அகில இந்திய திரைப்படத் தொழிலின் பிரதிநிதிகளாக இங்கே கூடியிருக்கும் பிரபல திரைப்பட நட்சத்திரங்களிடையே உரையாற்றுவதிலும் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த வண்ணமிகு தொடக்க விழாவில் பங்கேற்க இங்கே வருகைதந்துள்ள நடிகர் நடிகைகளையும் தொழில்நுட்பக் கலைஞர்களையும் வரவேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தியத் திரைப்பட வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியை, திரைப்பட சாதனத்திற்கு வழங்கப்பட்ட ஒரு கவிதையை. கலைக்கும், கலைஞர்களுக்கும் வழங்கப்படும் காணிக்கையைக் குறித்துக் கொண்டாட,



நாம் இங்கே கூடியுள்ளோம்.

திரைப்படத் துறையின் மிகவும் தொன்மையான வரலாற்றைப் பெற்றுள்ள சென்னை மாநகரில், நாட்டிலேயே முதன்முதலாக, ஒரு முழுமையான திரைப்பட நகர் உருவாகி இருப்பது பொருத்தமேயாகும்.

அனைத்துத் தென்னிந்திய மொழிகளிலும் இந்தியிலும் ஏராளமான படங்கள் சென்னையில் தயாரிக்கப்பட்டிருப்பது நாம் அறிந்ததே ஆகும். ஸ்டுடியோ, லெபாரேட்டரி, பிரிவியூ தியேட்டர், திரையரங்கம் ஆகிய அடிப்படை வசதிகளுடன், திரைப்படங்களின் வளர்ச்சிக்குத் தகுந்த சுமூகமான சூழ்நிலை சென்னையில் அமைந்துள்ளது. சென்னை மாநகரம், நியாயமான பெருமையுடன், மேலை நாட்டு ஹாலிவுட் நகரத்துடன் ஒப்பிட்டுப் பேசப்படுகிறது. வளர்ந்துவரும் உலக அளவிலான பாங்கு, உறுதியாக வேரூன்றிவிட்ட நமது கலாச்சார அம்சங்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப, கலை உணர்வுடன் அழகாக உருவாக்கப்பட்டுள்ள இந்தத் திரைப்பட நகரம் திரைப்படத் தயாரிப்பில் புதிய சகாப்தத்தை உருவாக்கும் என நம்புகிறேன்.

இந்தப் புதிய பிரம்மாண்டமான திரைப்பட நகர் கட்டடக் கலையின் மைல்கல் ஆகும்; ஒரு தலைசிறந்த படைப்பாகும்; சுருக்கமாகச் சொன்னால் சென்னையின் கலாச்சார அற்புதத்திற்குச் சூட்டப்பட்ட கிரீடமாகும்.

இந்தியத் திரைப்படவுலகின் முன்னணி நட்சத்திரங்களை இங்கே காண்பதில் நான் பெருமிதம் அடைகிறேன். அவர்களிடம் திரைப்படத்தைப் பற்றிப் பேசுவது என்பது கொல்லன் தெருவில் ஊசி விற்பது போல் ஆகும். ஆனால் எனக்கு மிகவும் விருப்பமான இந்தத் துறையைப் பற்றி எனது கருத்துக்களை உங்களுடன் நான் பகிர்ந்துகொள்ளாவிட்டால் என்னுடைய உரை நிறைவு பெற்றதாகக் கருதமாட்டேன்.









மனிதனுடைய கற்பனைகளும் எண்ணங்களும், ஒலி, ஒளி, வண்ணம் ஆகியவற்றால் முழுமையாக வெளிப்படுத்தப்படுவதால் அனைத்து நுண்கலைகளிலும் திரைப்படமே முழுமையானது என்று கூறுகிறேன். இதில் கவிதை, இசை ஆகியவைகளின் உணர்ச்சிமயமான உருவகங்கள், ஓவியம் மற்றும் வண்ணங்களின் ஆழமான தனித்தன்மைகளுடன் உருவகத்துடன் வார்த்தைகளும், கற்பனையுடன் ஒளியும் நிழலும், இடத்துடன் நேரமும் கலந்துவிடுகின்றன.

திரைப்படத் துறையுடன் எனக்கு ஏற்பட்டிருந்த நீண்டகாலத் தொடர்பு காரணமாகத் திரைப்படத் துறையின் செயல்பாடுகள் குறித்துச் சில கருத்துக்களை நான் உருவாக்கிக் கொண்டுள்ளேன். மற்ற மக்கள் தொடர்புச்



சாதனங்களான தொலைக்காட்சி, கேபிள் டி.வி. போன்றவைகளின் அதிவேக வளர்ச்சிகளையும் மீறி, திரைப்படங்கள் கோடிக் கணக்கான மக்களின் பொழுதுபோக்குச் சாதனமாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. இத்தகைய சூழ்நிலையில் நாம் வாழ்ந்து வரும் காலத்துக்கு ஏற்றாற் போல் திரைப்படங்கள் உருவாக்கப்படவேண்டும். நல்ல தரத்துடன், மக்களின் விருப்பத்திற்கு இணங்க உருவாக்கப் பட வேண்டும். இந்தப் பணியை எந்த ஒரு தனி நபராலும் செய்ய இயலாது. பல நிறுவனங்களின் முயற்சியுடன் இணைந்து அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவதன் மூலம் அரசாங்கம் பெரும் பங்காற்ற முடியும். பெருமைமிகு இத்திரைப்பட நகரை சென்னையில் ஏற்படுத்த இந்த எண்ணமே காரணமாக இருந்தது. திரைப்படத் துறையில் தயாரிப்பாளர்களும் கலைஞர்களும் சாதனைகள் பல படைத்திட தகுந்த சூழ்நிலைகளை உருவாக்கித் தர இத் திரைப்பட நகர் முயற்சிக்கும்.

புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் நமது வாழ்க்கையில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்திவரும் இன்றைய உலகில், சூரிய ஒளியின் பிரகாசத்தையும், இருளில் பரவிக் கிடக்கும் அமைதியையும், மாட்டு வண்டி அசைவுகளின் சப்தத்தையும், வருங்கால 'இசட்' காரின் பாதிப்பையும், முடிவே இல்லாத மனிதக் கற்பனைகளின் எல்லைகளையும் படத் தயாரிப்பாளர்கள் உலகத்திற்குக் காண்பிக்க, ஏதுவான இடம் இத் திரைப்பட நகரமாகும்.

திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு, படத் தயாரிப்புக்குத் தேவையான முழுமையான சூழ்நிலையையும், அனைத்து அடிப்படை வசதிகளையும், தேவையான தொழில் நுட்பத்தையும், ஒரே கூரையின் கீழ் கொண்டுவர வேண்டுமென்பது என் நீண்ட நாள் கனவாகும். கற்பனை வளத்துடன் வடிவமைக்கப்பட்டு, 85 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மலமான சூழ்நிலையில் கடின உழைப்பால் உருவாக்கப்பட்ட இத் திரைப்பட நகரில் எண்பதுக்கும் மேற்பட்ட படப்பிடிப்புக்கு ஏற்ற இடங்கள் உள்ளன. மனதைக் கொள்ளை கொள்ளும் இத்தாலிய, மொகலாய, ஜப்பானியத் தோட்டங்களும் இங்கிலாந்து புல்வெளிகளும், குறிப்பிடப்பட வேண்டியவை.

ஒரு செயற்கை ஏரி, ஒரு இரயில் நிலையம் போன்ற மேலும் பல வசதிகளை விரைவில் உருவாக்க மேலும் 40 ஏக்கர் நிலம் இத்துடன் சேர்க்கப்படும். இங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள குழந்தைகள் அதிசய உலகத்தில், தண்ணீர் சறுக்கு விளையாட்டுப் போன்ற பல விளையாட்டுச் சாதனங்கள் விரைவில் சேர்க்கப்பட உள்ளன. இங்கே மிக நவீனமான, கம்ப்யூட்டரில் இயங்கும், கேமரா, எடிட்டிங், டப்பிங் வசதிகளுடன் கூடிய ஒலி-ஒளி சாதனங்கள் உள்ளன. முற்றிலும் குளுகுளு வசதி செய்யப்பட்டுள்ள படப்பிடிப்புத் தளங்கள், மேக்கப் அறைகள், அனைத்து வகையான படப்பிடிப்பு செட்கள், போன்றவை, படத் தயாரிப்பாளர்களின் கற்பனையில் உருவாகும் ஒவ்வொரு கதையம்சத்தையும் சிறந்த தரத்தில் குறைந்த செலவில் தயாரிக்க ஏதுவாக இருக்கும்.





பரந்து விரிந்துள்ள இந்த வளாகத்தில் உள்ள நெஞ்சத்தைக் கிள்ளும் காட்சி அமைப்புகளையும், அழகே உருவாக அமையப்பெற்ற தோட்டங்களையும், நம்மைக் கவர்ந்திழுக்கும் விளையாட்டரங்கத்தையும், கண்ணைக் கவரும் பசும்புல் படுக்கைகளையும், அயரவைக்கும் இயற்கைக் காட்சிகளையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள் என நம்புகிறேன். இவை ஆழமான கலைநுட்பத்துடனும், அதிகபட்ச பயன் தரத்தக்க அளவிலும் உருவாக்கப்பட்டுள்ளன.

தயாரிப்பாளர்கள் தெளிவான கண்ணோட்~~டத்துடன் அதிகபட்ச நவீன வசதிகளுடன்~~ படங்களைத் தயாரித்து சாதனைகள் பலவற்றைப் படைக்க, வேண்டுமெனும் தாகத்தை இத் திரைப்பட நகர் தீர்க்கும் எனக் கருதுகிறேன். தென்னிந்தியத் திரைப்படத் தொழிலின் பொற்கால ஆட்சிக்கும், அது எப்போதுமே நிலைநாட்ட விரும்பும் உயர்ந்த இலட்சியங்களுக்கும், இந்த மகத்தான திரைப்பட நகர் தகுந்த காணிக்கையாக இருக்கும் என நம்புகிறேன்.

பல்வேறு காரணங்களுக்காக இப்புதிய திரைப்பட நகரை, நாட்டிலேயே மிகவும் நவீனமயமானது எனக் கூறலாம். திரைப்படத் தயாரிப்பில் பல்வேறு நிலைகளுக்கு வழங்கபபட்டுள்ள தொழில்நுட்ப, நவீன சாதனங்கள், படப்பிடிப்புத் தளம், தயார் நிலையில் உள்ள செட்கள், வீடியோ தியேட்டர், பிரிவியூ தியேட்டர் ஆகியவைகளைத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் தவிர்க்கவே முடியாது. நீருக்கடியில் சென்று படம்பிடிக்கும் வசதி, அனைத்து ஒளிப்பதிவாளர்களுக்கும் மகிழ்ச்சியைத் தரும் என நம்புகிறேன். இத் திரைப்பட நகர் குறைந்த கட்டணத்தில் இந்த வசதிகளை ஏற்படுத்தித் தரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். திரைப்படத் துறையில் தனியார் துறைக்குத் திரைப்பட நகர் நல்ல போட்டியைத் தரும் எனக் கூற விரும்புகிறேன். இம்மகத்தான திட்டத்திற்கு ஏற்கெனவே ரூ.21 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. திரைப்பட நகரை உண்மையிலேயே அகில உலகத் தரத்திற்கு உயர்த்தத் தேவையான நிதியை ஒதுக்கப் பரிசீலனை செய்துவருகிறோம்.

இதுபோன்ற பெருமைமிகு திட்டம், ஒரு கலர் லெபோரெட்டரி இன்றி, சிறப்பாக செயல்பட முடியாது என்பதை நான் அறிவேன். இத் திரைப்பட நகரில் ரூ.5 கோடி செலவில் விரைவில் ஒரு கலர் லெபோரட்டரி அமைக்கப்படும் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

திரையுலகின் அனைத்துப் பிரிவினரின் நலனில் அரசு அக்கறை கொண்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக அரசு இது குறித்து எடுத்துள்ள பல்வேறு நலத்திட்டங்களில் ஒரு சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக - தரமான படங்களுக்கு உதவித் தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.3இலட்சமாக்கப்பட்டது; இந்த உதவி பெறத் தகுதியான படங்களின் எண்ணிக்கையை ஐம்பதிலிருந்து எழுபத்தைந்தாக உயர்த்தியது; மாநில அரசு திரைப்



பட விருதுகள் பெறும் அனைவருக்கும் ஐந்து பவுன் பதக்கங்கள்; ஆகியவை, தமிழகத்தில் திரையுலகை ஆதரிக்க நாங்கள் எடுத்துள்ள சில முக்கிய நடவடிக்கைகள் ஆகும். நான் அறிவித்த சமரசத் திட்டத்திற்குத் திரையுலகின் அனைத்துப் பிரிவினரும் ஒத்துழைப்புக் கொடுத்தமையால், கடந்த ஆண்டு திரையுலகிற்கு ஏற்பட்ட மிகப்பெரிய சவாலைத் தீர்ப்பதற்கு என் முயற்சிகள் பயனளித்ததை இங்கு நினைவுகூர விரும்புகிறேன். என் குருவும் தலைவருமான புரட்சித் தலைவர் அவர்கள், அனைவரது நலனுக்காக, - குறிப்பாக திரைப்படத் துறையினர் நலனுக்காக, கொண்ட கொள்கைகளையும், இலட்சியங்களையும் நான் பெற்றுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அந்த உணர்வு திரைப்படத்திற்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவைப் பற்றிப் பேச அழைக்கின்றது. அனைத்துக் கலைகளும் மக்களுடனும், பொதுவாக மனித வாழ்க்கையுடனுமே தொடர்பு கொண்டே இயங்குகின்றன என்பது என் ஆணித்தரமான கருத்தாகும். வாழ்க்கையின் உண்மையிலிருந்து விலகி எந்தவொரு கலையும் வெற்றிடத்தில் இயங்க முடியாது என் நான் நம்புகிறேன். பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆகிய பெருந்தலைவர்கள் திரைப்படங்களை உன்னதமான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை நினைத்துப் பார்க்கையில், தயாரிப்பாளர்களும் கலைஞர்களும், வியாபார நோக்கங்களைக் கடந்து இன்னும் அதிகமான - பொறுப்பான முறையில் இத்துறையைப் பயன்படுத்த வேண்டிய பெரிய பொறுப்பை உணர்த்துகிறது. எந்தவொரு வாணிபத்திற்கும் இலாபம் அவசியம் தான் என்றாலும், கொள்கைகளும் இலட்சியங்களும் மிகவும் முக்கியமானவையாகும். திரைப்படங்களை, கலைப் படங்கள் என்றும் வியாபாரப் படங்கள் என்றும் திடமாக முத்திரையிடுவதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை.

என்னைப் பொறுத்தமட்டில் ஒரு திரைப்படம் நன்றாக எடுக்கப்படுகிறது- அல்லது மோசமாக எடுக்கப்படுகிறது என்றே கருதுகிறேன். வளமான சிந்தனைகள் ஒன்று கூடி, தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு, சாதனைகள் படைக்க, பொதுவான வழியைப் பின்பற்றிட, திரைப்பட நகர் ஒரு தளமாக இருக்கும்.







நான் ஏற்கெனவே கூறியதைப் போல, திரைப்படங்கள் உருவாக்குவதில் சினிமா, வீடியோ, கம்ப்யூட்டர் ஆகியவற்றின் சிறப்பம்சங்களை கலந்து உபயோகிப்பவர்களுக்கே எதிர்காலம் காத்திருக்கிறது. இன்று திரைப்படம், தொலைக்காட்சி, நாடகம், இலக்கியம், இசை ஆகிய அனைத்தும், கதையை மக்களுக்குச் சொல்வதிலும், பொழுதுபோக்கு அம்சங்களை வழங்குவதிலும் ஒன்று சேர்ந்துள்ளன. ஒரு மக்கள் சாதனத்தின் அம்சங்கள், மற்றொன்றின் அம்சங்களுடன் பின்னிப் /பிணைந்து வருகிறது. அதனால் பெரிய கலாச்சார ஒருங்கிணைப்பு ஏற்பட்டு, மனிதனால் உருவாக்கப்பட்ட மாநிலம், நாடு, மதங்கள் ஆகியவற்றைப் பொருளற்றதாக்கி விடுகின்றன.

ஆனால் ஒரு வளமான சிந்தனை, அனைத்துத் தடைகளையும் தாண்டி, எல்லா அம்சங்களையும் ஈர்த்து, அவைகளை மொழி, இனம், காலம் கடந்து, என்றும் அழியாத கலைப் பொக்கிஷமாக மாற்றுகிறது. இந்தத் தருணத்தில், தங்களது வாழ்நாள் முழுவதும் மனித வாழ்க்கையைத் தங்களது உயரிய படைப்புகளில் பிரதிபலித்த, இந்தியத் திரைப்படத் தொழிலின் ஜாம்பவான்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரைப்படத் துறையின் வளர்ச்சியை மேலும் ஊக்குவிப்பதற்கென, தென்னிந்தியத் திரைப்பட சங்கத்தினர் சில கோரிக்கைகளை என் முன் வைத்துள்ளனர். இந்தத் தொழிலின் ஆரோக்கிய மான வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள நான், இந்தக் கோரிக்கைகளைக் கவனமாகப் பரிசீலித்து பின்வரும் சலுகைகளை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

1. கடைசி வகுப்புத் தவிர மற்ற வகுப்புகளுக்கு நுழைவுக் கட்டணத்தைத் தியேட்டர் உரிமையாளர்களே நிர்ணயித்துக் கொள்ளலாம்.

2. திரையரங்குகளைப் பராமரிக்க வசூலிக்கப்படும் கட்டணம் குளிர் சாதன வசதியுள்ள தியேட்டர்களுக்கு 25 பைசா என்றும் மற்ற தியேட்டர்களுக்கு 10 பைசா என்றும் இருப்பது. இனிமேல் முறையே 50 பைசா, 25 பைசா என உயர்த்தப்படும்.

3. படசுருள் விற்பனை வரி 5 சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதமாகக் குறைக்கப்படும்.

4. சாதாரண இடங்களில் வெளிப்புறப் படப்பிடிப்பு நடத்தக்கட்டணம்ரூ.5,000 லிருந்து ரூ.2,500 ஆகக் குறைக்கப்படும். வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் படப்பிடிப்பு நடத்த தொடர்ந்து ரூ.5000 வசூலிக்கப்படும்.

5. திரையரங்குகளுக்கு, சிறிய நகரங்களில் மின் கட்டணம் ரூ.1.90 லிருந்து ரூ.2.20 ஆக உயர்த்தப்பட்டதும், பெருநகரங்களில் ரூ.2 லிருந்து ரூ.2.30 ஆக உயர்த்தப்பட்டதும் 1.9.94 முதல் திரும்பப் பெறப்படுகிறது.

இந்தப் பிரம்மாண்டமான திரைப்பட நகரை உருவாக்குவதில் பங்கு கொண்டு, சிறப்பாகப் பணியாற்றிய அனைவரையும் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

உங்களிடமிருந்து விடைபெறுவதற்கு முன், முக்கிய அலுவல்களையெல்லாம் ஒதுக்கி வைத்து, இவ்விழாவில் கலந்துகொண்ட உங்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக இங்கு பழம்பெரும் நடிகர் சிவாஜி

கணேசன் வந்துள்ளார். அவருக்கு என் பாராட்டையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திரைப்பட நகர் திரைப்படத் தயாரிப்புக்கு ஒரு 'சூப்பர் செட்!' போன்று மட்டும் விளங்காமல், வளமான சிந்தனைகள் ஒருங்கிணையவும், சிந்தனையாளர்கள் ஒருவரையொருவர் சந்திக்கவும், கற்பனைகள் வார்த்தைகளுடன் போராடவும், இசை வண்ணங்களுடன் கலக்கவும், அதனால் இங்கு உருவாக்கப்படும் திரைப்படங்களில் மனித வாழ்க்கையின் அழகும் அற்புதங்களும் பிரதிபலிக்கவும், இத் திரைப்பட நகர் ஒரு சங்கமமாகத் திகழும் என எதிர்பார்க்கிறேன்.

கலையன்பர்கள் ஒன்றுகூடும் விந்தைமிகு கலை மையமாக இத்திரைப்பட நகர் மலரும்.. உலகெங்குமுள்ள படத் தயாரிப்பாளர்களைத் தன்பால் ஈர்த்து, தங்கள் கலைத்திறனின் சிகரங்களை எட்டிப் பிடிக்கும் வகையில் பல புதிய சாதனைகளை அவர்கள் படைத்திட உதவும். கலைத்துறையைச் சார்ந்த நீங்கள் ஒவ்வொருவரும் பேரும் புகழும், பொருள் வளமும், அமைதியும் பெற்றிட இந்நகர் உறுதுணை புரியும்.

பெரியோர்களே, தாய்மார்களே, உங்களுக்கு இத் திரைப்பட நகரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நன்றி!



## தமிழ்நாட்டினுடைய

# "சமூக நீதிப் போராட்ட வரலாற்றில் சாதனை படைத்து மகிழும் நேரம் இது!"

### 27.8.1994 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

தமிழகத்தின் தலைநகரான, சென்னை மாநகரின் புறநகர்ப் பகுதிகளைத் தன்னகத்தே கொண்டு, பழமையும், புதுமையும், சேர்ந்து சங்கமமாகும் பகுதி இந்த செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டம் ஆகும். 2500 ஆண்டுகளுக்கு முன்பே, சோழர்களின் தலைநகரமாகவும், பின்னர் கலை வளர்த்த பல்லவ மன்னர்களின் ஆட்சி பீடமாகவும், ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்தியப் போர்கள், நடைபெற்ற ஒரு தலமாகவும் விளங்கிய காஞ்சிபுரம் தென்னாட்டு வரலாற்றில், தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்று வந்திருக்கிறது. வடக்கே நாலந்தா பல்கலைக்கழகத்தைப் போன்று, காஞ்சியில் ஒரு பல்கலைக்கழகம் இயங்கி வந்ததைச் சரித்திர ஆசிரியர்கள் வாயிலாக அறியும்போது, காஞ்சிபுரத்தின் வரலாற்றுச் சிறப்பினை எண்ணி, மனம் வியப்படைகின்றது.

ஆன்மீக வளர்ச்சியின் தொட்டில்களாக விளங்கும், தொன்மையும், பாரம்பரியச் சிறப்பும் மிக்க, பல்வேறு புகழ் பெற்ற திருக்கோயில்களைத் தன்னகத்தே கொண்ட பூமி இது. நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற, மாமல்லபுரத்துச் சிற்பங்கள் போன்ற, நெஞ்சைக் கவரும், கவின்மிகு கலைக் கருவூலங்களைத் தன்னகத்தே கொண்ட பகுதி இது. தமிழகத்தின் தொழில் வளர்ச்சியை, உலகத்திற்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கும், நவீன தொழிற்சாலைகளைப் பெற்றுள்ள மாவட்டம் இது. எந்த வகையில் நோக்கினாலும், சிறப்புப் பெற்ற மாவட்டம் இந்த மாவட்டம்.

பழமையின் பெருமையும், புதுமையின் சிறப்பும், சங்கமமாகும். காஞ்சி மாநகரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும், இந்த இனிய அரசு விழாவில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் சந்திப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். திராவிட இயக்கத்தின் விடிவெள்ளி, சிந்தனைச் சிற்பி, தமிழகத்தின் தன்னிகரில்லாத் தலைவராம், காஞ்சி நகர் ஈந்த மனிதப் புனிதர், பேரறிஞர் பெருந்தகை அண்ணா வளர்ந்த பூமி இது. அண்ணா பிறந்த பூமி என்பதால், திராவிட இயக்கங்களின் வழித் தோன்றல்களுக்கு, இது ஒரு புண்ணிய பூமி. இந்த மண்ணில் காலடி வைத்தவர்களுக்கு எல்லாம், தமிழ் உணர்வு பொங்கும் அரசியல் ஞானம் பெருகும். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன், என்ற சமதர்மத் தத்துவத்தை, நமக்குப் போதித்த பேரறிஞர் அண்ணாவின், உயரிய கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, இன்று நமது உயிரிலும், உணர்விலும், தமிழ் மக்களின் நலன் ஒன்றைக் கட்டிக் காப்பதே, நமது தலையாய கடமை, என்ற உணர்வு மேலிடுகிறது. அண்ணாவின் போதனைகளை, நமக்கு ஊட்டி வளர்த்த வழிகாட்டி, அண்ணாவின் இதயக்கனி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆவார். அந்தப் பொன்மனச் செம்மலும், இந்த மாவட்டத்தில் ஒரு பகுதியில் வாழ்ந்தவர் என்ற உணர்வும், இந்த இடத்தின் புனிதத்தை அதிகரிக்கிறது; நம் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

பேரறிஞர் அண்ணாவின் வழித்தோன்றலாக, புரட்சித் தலைவரின் அரசியல் வாரிசாக, அவர்தம் கொள்கைகளுக்கும், இலட்சியங்களுக்கும், செயல் வடிவம் கொடுத்து, மக்கள் பணி ஆற்றிவருகின்ற, உங்கள் அன்புச் சகோதரியாகிய எனக்கு, நீங்கள் அளித்த வரவேற்பினை நினைத்து, என்மனம்பூரிப்பு அடைகின்றது.

இறைநெறிக் காவலராய் விளங்கி, தமது அருள் நெறிப் பார்வையால், இவ்வுலகையே ஆன்மீக வேள்வியில் திளைக்கச் செய்த, மகாஸ்வாமிகாஞ்சிப் பெரியவர், தனது ஆன்மீகப் பணியை மேற்கொண்டதால், புனிதத்தையும்; தமது உன்னதத் தமிழ் ஆற்றலாலும், உணர்ச்சிமிக்க எழுத்துக்களாலும், பேச்சாற்றலாலும், சாதுர்யமான அரசியல் ஞானத்தாலும், திராவிடப் பாரம்பரியத்தின் பெருமையையும், தமிழ்நாட்டின் தனித்தன்மையையும், உலகிற்கு உணர்த்திய, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களை, நமக்குக் கொடுத்து; தனக்குப் புகழையும், பெருமையையும் சேர்த்துக் கொண்டது, இந்த காஞ்சி மாநகரம்!

இயக்கங்கள் தோன்றுவதும், மறைவதும், சரித்திரத்தில் அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சிகளாக இருக்கலாம். ஆனால் தோன்றிய ஒரு இயக்கம், இளமை உணர்வுடனும் துடிப்பான செயலாற்றலுடனும், தொடர்ந்து இயங்கிக் கொண்டு இருப்பதுதான் அரிது. அதிலும் ஒரு தனி மனிதரின் பெயரை, இயக்கத்திலும், அவர்தம் திருவுருவத்தைக் கொடியிலும் தாங்கி, ஓர் இயக்கம் மாபெரும் இயக்கமாக மலர்ந்து, ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்து அரசோச்சிக் கொண்டிருப்பது, உலகிலேயே தமிழ்நாட்டில் மட்டும் தான், என்ற சரித்திரச் சிறப்பு நமக்கு என்றென்றைக்கும் உண்டு.

பழமையும், புதுமையும் ஒரு சேரப் பொலிவுடன் விளங்குகின்ற, இந்த மாவட்டத்தின் வளர்ச்சிக்கு, இன்று 306 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களுடன், உங்கள் அன்புச் சகோதரி, உங்களைக் காண வந்துள்ளேன். 100 கோடி மதிப்புள்ள, பல்வேறு திட்டங்களைத் துவக்கி வைத்ததிலும், 131 கோடி ரூபாய் மதிப்புள்ள, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதிலும், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 75 கோடி ரூபாய் மதிப்பில், 62,000க்கும் மேற்பட்ட, இம்மாவட்ட வாழ் மக்களுக்கு, அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதிலும், என் மனம் பூரிப்பு அடைகின்றது.



தமிழகத்தின் சமூக நீதிப் போராட்ட வரலாற்றில், ஒரு சாதனையைப் படைத்து, மகிழ்ச்சி காணும் நேரம் இது. தமிழகத்தின் 69 சதவிகித இட ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு, இந்திய அரசியலமைப்பின், முழுமையான பாதுகாப்புக் கிடைத்திட, அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை, நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையும், மக்களவையும் நிறைவேற்றிக் கொடுத்துள்ளன. ஒட்டுமொத்தத் தமிழகமும், குதூகலிக்ககக் கூடிய இந்த மகிழ்ச்சியை, சமூக நீதிக்கு வழிகாட்டி, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பிறந்த பூமியில் முதன் முதலாக உங்கள் அனைவருடனும், பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை, இயற்கையே ஏற்படுத்திக் கொடுத்திருப்பதை எண்ணி, என் மனம் பூரிப்படைகின்றது.

இதய சுத்தியுடன், நான் மேற்கொண்ட சத்திய வேள்வியின் பலனை, எனது அன்பிற்குரிய தமிழக மக்களுக்கு அர்ப்பணிப்பதில், மகிழ்ச்சி அடைகிறேன். எனது கோரிக்கையை ஏற்று, அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்திற்கு வழிவகுத்த மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கும், மத்திய அமைச்சரவைக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியை, மீண்

## காஞ்சி மாநகரில் மாண்புமிகு முதல்வர்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், 27.8.94 அன்று ஹெலிக்காப்டர் விமானம் மூலம் சென்னையிலிருந்து புறப்பட்டு, காஞ்சீபுரத்தில் பச்சைப்பன் ஆண்கள் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த விமான தளத்தில் வந்து இறங்கினார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வி.வரப்பிரசாதராவ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.கா.பி.பட்டாபிராமன் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், காவல் துறை இயக்குநர் திரு.எஸ்.ஸ்ரீபால், மற்றும் காவல் துறை அதிகாரிகள் ஆகியோர் வரவேற்றார்கள்.

விமானதளத்தைச் சுற்றியிருந்த பொது மக்களைப் பார்த்துக் கையசைத்துத் தனது அன்பைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பக்கத்திலிருந்த விழா மேடைக்குச் சென்றார். விழாவில் கலந்து கொண்டு, 306 கோடி ரூபாய்க்கான திட்டங்களைத் தொடங்கி வைத்தும், அடிக்கல் நாட்டியும், 62,000 க்கும் அதிகமானோருக்கு அரசின் பல்வேறு நல்த்திட்ட உதவிகளை வழங்கி 30 நிமிடம் விழாப் பேருரையாற்றினார்.

பின்னர் மாவட்டத்தைச் சேர்ந்த முக்கிய மானவர்களும், கட்சிப் பிரமுகர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பொன்னாடைகளையும், நினைவுப் பரிசுகளையும் வழங்கினார்கள்.

விழா மேடையிலிருந்து ·8 கி.மீ. தூரத்தில் அமைந்திருந்த அரசு விருந்தினர் மாளிகைக்குச் சென்று அடையும் வரை, சாலையின் இருமருங்கும் கூடியிருந்த பொதுமக்களைப் பார்த்துக் கையசைத்த வண்ணமும், அவர்களிடமிருந்த மனுக்களைப் பெற்று கொண்ட வண்ணமும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்று கொண்டிருந்தார். வழி நெடுகிலும் பலர் மனுக்களைக் கொடுத்ததோடு, பொன்னாடைகளையும் சில இடங்களில் திருக்கோயில் பிரசாதங்களையும் வழங்கினார்கள்.

3 மணி அளவில் அரசு விருந்தினர் மாளிகையை விட்டுக் கிளம்பி காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள 'அனைத்து மகளிர் காவல் நிலையத்தை ' வந்து அடைந்தார். அங்கு காவல் துறை இயக்குநர் திரு.எஸ்.ஸ்ரீபால், உட்பட பல்வேறு அலுவலர்கள் பூச்செண்டு கொடுத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வரவேற்றார்கள். பின்னர், காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்ட பிறகு, கல்வெட்டைத் திறந்து வைத்து, ரிப்பனை வெட்டி, 'அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத்' தொடங்கி வைத்தார். மேலும் குத்துவிளக்கை ஏற்றிய பின்பு, பார்வையாளர்கள் குறிப்பேட்டில் தனது கருத்துக்களைப் பதிவு செய்தார்கள். அக்காவல் நிலையத்தின் பெண் ஆய்வாளரை அழைத்து, தனது அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார். பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் காவல் துறையின் சார்பில் நினைவுப் பரிசு ஒன்று வழங்கப்பட்டது. அங்கு குழுமியிருந்த மக்களுக்குத் தனது வணக்கத்தைச் செலுத்தி விட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காஞ்சி காமகோடிப் பீடத்திற்குச் சென்றார்.

காஞ்சி காமகோடி பீடத்தில் பரமாச்சாரியார் காஞ்சி முனிவர் மஹாசுவாமி ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் சமாதிக்குச் சென்றார். அவ்வமயம் நடு பெரியவர் ஸ்ரீவிஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளும், திருமடத்தைச் சேர்ந்த பல பெரியவர்களும் அந்த இடத்தில் இருந்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முறைப்படி சமாதியில் மலர் அஞ்சலி செலுத்தி தனது மரியாதையைத் தெரிவித்துக் கொண்டார். பின்னர் அந்த இடத்தை வலம் வந்த பின்பு காஞ்சி பெரிய சாமி, பாலசாமி இருவரிடமும் பேசினார். மடத்தில் உள்ள பார்வையாளர்கள் புத்தகத்தில் கீழ்க்கண்டவாறு தனது குறிப்பை எழுதினார்.

**" I had the great good fortune of being able to pay my reverential homage at the Adhishtanam of the incomparable Mahaswami of Kanchi."**

பின்னர் மேலும் சமாதிக்கு அருகில் காஞ்சி பெரியவர் உபயோகித்த பொருட்கள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்த இடத்திற்குச் சென்று அவற்றையும் பார்வையிட்டார். மடத்தின் சார்பில் புத்தகங்களையும் பிரசாதங்களையும் ம்ாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வழங்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காஞ்சி மடத்தில் 30 நிமிடங்கள் இருந்தார். பின்னர் ஹெலிக்காப்டர் விமான தளத்திற்குச் சென்று ஹெலிக்காப்டர் மூலம் மாலை 5.00 மணி அளவில் சென்னை வந்தடைந்தார்.



டும் ஒருமுறை தமிழக மக்களின் சார்பில் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

கடந்த 22ஆம் தேதியன்று, சிவகாசியில் நடைபெற்ற அரசு விழாவில், நான் பேசும்போது, “அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கு, நான் எழுதிய கடிதத்தின் மூலம், அரசியல் சட்டத் திருத்தத்தை மேற்கொள்ளக் கூடிய சாதகமான சூழ்நிலை, நாடாளுமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் உருவாகி உள்ளது என்பதையும், இடர்ப்பாடுகள் எத்தனை ஏற்பட்டாலும், அவற்றை எதிர்கொண்டு, நாம் வெற்றி கண்டாக வேண்டும் என்பதையும் மிக உறுதியாகத் தெரிவித்திருந்தேன். அந்த உறுதியின் விளைவாக, நாம் அடைந்த வெற்றிக்குத் தமிழக மக்களின் பேராதரவும், பேரன்பும் மட்டுமே, உறுதுணையாக இருந்ததை எண்ணி, என் மனம் பூரிப்பு அடைகின்றது.

இந்த இமாலய வெற்றியால், நமது ஒற்றுமை உணர்வு, மேலும் வலுவடைந்துள்ளது. இந்தியத் துணைக் கண்டத்தில், மற்ற மாநிலங்களின் நடுவில், நமது மாநிலத்தின் மதிப்பு, உயர்ந்துள்ளது. நமது தேசிய ஒற்றுமை உணர்வும், ஒருமைப்பாட்டு உணர்வும், மேலும் வலுப்பெற்றுள்ளன. தமிழகம் மென்மேலும் வளர்ச்சியை அடைவதற்கும், பல சாதனைகளைப் புரிவதற்கும், இது ஒரு படிக்கல்லாக அமையும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்திய வரலாற்றில், ஒரு நிலையான இடத்தைப் பெற்று, தமிழக மக்கள் பெருமையை, என்றென்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கும், இந்தச் சரித்திரச் சாதனை, நாங்கள் மக்கள் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ள, ஒரு புதிய எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றால், அது மிகையாகாது.

சமூக நீதியைக் காப்பாற்ற, நாங்கள் முயற்சிகளை மேற்கொண்டபோது, ஏளனமும், ஏகடியமும், பேசிய சில ஆதிக்கச் சக்திகள், மக்களால் இன்று தனிமைப்படுத்தப்பட்டு உள்ளார்கள்.

அரசியல் இலாபம் ஒன்றை மட்டும் அடித்தளமாகக் கொண்டு, சுயநல எண்ணத்துடன் செயல்படுகின்ற ஆதிக்கச் சக்திகள், என்றைக்குமே தோல்வியடையும் என்பதையும் மக்கள் நலன் ஒன்றையே முன் வைத்து, புனித எண்ணத்துடன் செயல்படுபவர்கள், என்றைக்குமே வெற்றியைப் பெறுவார்கள் என்ற பேருண்மையையும் இந்த நிகழ்ச்சி உலகிற்கு உணர்த்தியுள்ளது.

காஞ்சிபுரம் நகரத்தின், பெருகி வரும் குடிநீர் தேவையைக் கருத்தில் கொண்டு, 18 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள, காஞ்சிபுரக் கூட்டுக் குடிநீர் திட்டத்தைத் துவக்கி வைத்ததில், நான் மன நிறைவு அடைகின்றேன். நாளொன்றுக்கு 22 மில்லியன் லிட்டர் குடிநீர், இந்த நகரத்திற்கு வழங்கப்படும். இன்று சராசரியாக நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு, 35 லிட்டர் வழங்கப்பட்டு வரும் நீரின் அளவு 90 லிட்டராக உயரும் என்பதையும், தற்போதுள்ள 13,000 வீட்டு இணைப்புகள், 28,000 வீட்டு இணைப்புகளாக உயர்த்தி வழங்கப்பட





உள்ளன என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆன்மீகத்திற்கும், கொள்கை அரசியலுக்கும், வழி காட்டிய காஞ்சி மாநகர், பன்னெடுங் காலமாக, ஒரு வளர்ச்சி அடைந்த கிராமமாக மட்டும், தொடர்ந்து காட்சி அளிப்பது என் மனதை உறுத்திய காரணத்தினால் தான், இந்நகருக்கு ஒரு புதிய வடிவத்தை ஏற்படுத்த, வளர்ச்சிப் பணிகளை, ஒரு ஒட்டுமொத்த அளவில் மேற்கொள்ளச் செய்தேன். ஒரு கோடி ரூபாய் செலவில், பேருந்து நிலையம் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில், சுகாதார வசதிகள், அங்காடிகள், சேவை நிலையங்கள், நகரின் அழகை மேம்படுத்த, 250 Sodium Vapour விளக்குகள், தார் சாலைகள், தானியங்கி போக்குவரத்து சிக்னல்கள், 50 இலட்சம் ரூபாய் செலவில், மருத்துவமனை மேம்பாட்டுப் பணிகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில், 32 குடியிருப்புக்கள் கட்டும் பணி ஆகியவை ஒட்டுமொத்தமாக, ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நூற்றாண்டின் இறுதியில், நோயற்ற வாழ்வு, இம்மாநிலத்தில் உள்ள அனைவருக்கும், வழங்கப்பட வேண்டும் என்பதற்காக, புதிய திட்டங்களை முனைப்புடன் தீட்டி, செயல்படுத்தி வருகின்ற, உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்த, உங்கள் அரசு இந்த மாவட்டத்தின் பின் தங்கிய பகுதிகளான, செய்யூர், பள்ளிப்பட்டு, உத்திரமேரூர், ஆகிய இடங்களில், புதிய மருத்துவமனைக் கட்டடங்களைக் கட்டித் தருவதற்கும் தற்போதுள்ள மருத்துவமனையை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நெரும்பூர், மற்றும் மேல்கொசவராஜபேட்டை ஆகிய இடங்களில், 40 இலட்சம் ரூபாய் செலவில், ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடங்களைத் திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இப்பகுதி வாழ்மக்களின், பிணி தீர்க்கும் பணியில், இந்த நிலையங்கள், தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளும் என்று, பரிபூரணமாக நம்புகிறேன்.

‘அனைவருக்கும் வீடு’, என்ற உறுதியான கொள்கையின் அடிப்படையில், செயல் திட்டங்களைத் தீட்டி வருகின்றது, எங்கள் அரசு. அதன் அடிப்படையில், திருவள்ளூர், காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் 6 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில், கட்டி முடிக்கப்பட்டுள்ள 655 குடியிருப்புகளைத் திறந்து வைத்ததிலும் மதுராந்தகத்தில், 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட உள்ள, 122 குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டியதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சென்னை மாநகரைச் சுற்றியுள்ள, பல்வேறு குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற, எனது அன்பிற்குரிய சகோதர சகோதரிகளுக்கு, அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்காக, உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம், 30 கோடி ரூபாய் செலவில், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த உள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, பள்ளிக்கரணையில், நடைபாதையில் வசிக்கும் 2141 குடும்பங்களுக்கு, தங்கும் இடங்களை ஏற்படுத்தித் தர, 8 கோடி ரூபாய் செலவில்,



மேற்கொள்ளப்பட உள்ள திட்டம், இதுவரை இந்தியத் துணைக் கண்டத்தில், எந்த அரசும் மேற்கொள்ளாத, ஒரு முன்னோடித் திட்டம் ஆகும்.

மாநிலத்தின் வளர்ச்சிக்கு, பெரிய தொழில்களுக்கு ஊக்கம் தருவதோடு, சிறு தொழில்கள் பல்கிப் பெருகவும், எங்கள் அரசு, மிகுந்த ஈடுபாட்டைக் காட்டி வருகின்றது. இம்மாவட்டத்தில் மட்டும், கடந்த 3 ஆண்டுகளில், 30 கோடி ரூபாய் செலவில், அனைத்து வசதிகளுடன், 160 தொழிற்கூடங்கள், தொழில் முனைவோர்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று, தோல் பொருட்களுக்கான தொழிற்பேட்டையை, ஸ்ரீபெரும்புதூரில் உள்ள, திருமுடிவாக்கத்திலும், பெட்ரோ கெமிக்கல் பொருட்கள் தயாரிப்பதற்கான தொழிற்பேட்டை, பொன்னேரியில் உள்ள விச்சூரிலும் தொழில் துறையில், மிகவும் பின் தங்கிய, பள்ளிப்பட்டுப் பகுதியில் உள்ள ஆர்.கே. பேட்டையில், நெசவாளர்களுக்காக ஒரு தொழிற்பேட்டையும் 38 கோடி ரூபாய் செலவில் அமைக்க, அடிக்கல் நாட்டியதில், நான் உண்மையில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்தத் திட்டங்களின் மூலம், கூடுதலாக, இம்மாவட்டத்திற்கு, 305 தொழிற்கூடங்கள் உண்டாக்கப்படும் 15,000க்கும் மேற்பட்டவர்களுக்கு, நேரடி வேலை வாய்ப்பும் ஒரு இலட்சம் பேருக்கும் அதிகமாக மறைமுக வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும், சோழவரம் ஏரிக்கு, நீர் வரத்தை அதிகப்படுத்த, கொசஸ்தலையார் ஆற்றின் மீது, தாமரைபாக்கத்தில், 3 கோடி ரூபாய் செலவில், அணைக்கட்டு கட்டுவதற்கு அடிக்கல் நாட்டியதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இத்திட்டத்தின் மூலம், இந்த ஆற்றில் வெள்ளமாகக் கரை புரண்டு ஓடி, வீணாகக் கடலில் கலக்கும் மழை நீர், இனி சோழவரம் ஏரிக்குத் திருப்பி விடப்படும்.

தமிழ்நாட்டில் குக்கிராமங்கள் வரை, எல்லாப் பகுதிகளுக்கும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குகின்ற புனிதப் பணியில், தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள, உங்கள் அன்பு சகோதரியின் அரசு, கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில், ஸ்ரீபெரும்புதூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தினால், 23 வழியோரக் கிராமங்களைச் சேர்ந்த, 15,000க்கும் மேற்பட்டவர்கள், பயன் பெறுவார்கள். அதேபோலச் செங்கல்பட்டு நகரம், காட்டுப்பாக்கம், புதூர், அச்சிறுப்பாக்கம், கூடுவாஞ்சேரி, மற்றும் 38 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காக, 6 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் விரைவில் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும்போது, இம்மாவட்டத்தின் குடிநீர்த் தேவை பூர்த்தி அடையும் என்று உறுதியாக நம்புகிறேன்.

ஆதிதிராவிடப் பெருமக்களின் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்கு, வழி வகுக்க அவர்கள் குடியிருக்கின்ற இடத்திற்கு வீட்டுமனைப் பட்டாக்களை உடனே வழங்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நான் ஆணையிட்டுள்ளேன்.





அதுமட்டுமல்றி, ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு, 5 அடிப்படை வசதிகளை, 125 கோடி ரூபாய் செலவில் அடுத்த ஆண்டு இறுதிக்குள் போர்க்கால அடிப்படையில் செய்து கொடுக்கும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாவட்டத்தைப் பொறுத்த வரையில், கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 27,377 ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்கு, 19 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித்தலைவர்களின் மாநாட்டிற்குப் பிறகு, எனது ஆணையின் பேரில், மேலும் 9500 பேருக்கு, வீட்டுமனைப் பட்டாக்கள், வழங்கப்பட்டுள்ளன என்பதையும், அடுத்த மார்ச் மாத இறுதிக்குள் எஞ்சிய மற்ற அனைவருக்கும் வழங்கப்பட்டு விடும் என்பதையும் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 3 ஆண்டுகளில் மட்டும், 9000 தொகுப்பு வீடுகள் 15 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில், 8 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் 4200 தொகுப்பு வீடுகள் கட்டப்பட உள்ளன என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான், அதுவும் இந்த மாவட்டத்தில் மட்டும்தான், முதன் முறையாக சுவீடன் நாட்டு உதவியுடன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் அதாவது, SIDA திட்டம் 26 கோடி ரூபாய் செலவில் கடந்த 4 ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டது என்பதை, அறியும் ஒவ்வொருவரும் மகிழ்ச்சி அடைவார்கள் என்று நம்புகிறேன். இத்திட்டத்தின் செயலாக்கத்தினால், 300 சத்துணவு மையங்கள் கட்டப்பட்டுள்ளன; 580 மையங்கள் பழுது பார்க்கப்பட்டுள்ளன; அங்கன்வாடி மையங்களுக்கு விளையாட்டுச் சாதனங்களும், உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன; குழந்தைகளுக்கு உணவும், எழுத்தறிவற்ற பெண்களுக்கு வாழ்க்கைக் கல்வி பயிற்சியும், இளம்பெண்களுக்கு வேலை வாய்ப்புப் பயிற்சியும், வருமானத்தைப் பெருக்குகின்ற பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் சீரிய முறையில் செயல்பட்டதால் SIDAவின் பாராட்டைப் பெற்றதோடு இரண்டாவது கட்டமாக, 26 கோடி ரூபாய் திட்டத்தைத் தமிழ்நாட்டிற்கே, அதுவும் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டத்திற்கே வழங்கி உள்ளது என்பதையும் இந்த நல்ல நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டம் புதுக்கோட்டை மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

கடற்கரை ஓர கிராமங்களில் வசிக்கும் மீனவர்களின் வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகளை நன்கு அறிந்திருந்த காரணத்தினால் தான், அவர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும், ஆழ்கடலில் இலங்கைக் கப்பற்படையினரின் தாக்குதல்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கும் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றேன். நமது மீனவர்கள், இலங்கை கப்பற்படையினரால் தாக்கப்பட்டபோதெல்லாம், மீனவப் பெருங்குடி மக்களின்

சார்பாக, உரிமைக் குரல் கொடுத்தேன். இதில் சம்பந்தப் பட்ட இலங்கை வேறு ஒரு நாடு என்பதால், ஒரு மாநிலம் என்ன செய்ய முடியும் என்று நாங்கள் கையைக் கட்டிக் கொண்டு வாளா இருக்கவில்லை. மரணம் அடைந்தவர்களின் குடும்பங் களுக்குப் புனர் வாழ்வு அளிக்க ஏற்பாடு செய்தோம்; கூட்டுற வுச் சங்கங்களை ஏற்படுத்தி மீனவர்களின் சமூகப் பாது காப்பிற்கு வழி வகுத்தோம். மீன்பிடிக்க இயலாத நான்கு மாதங்களுக்கு, உதவித் தொகை வழங்கும் திட்டத்தையும் செயல் படுத்தி உள்ளோம். வேறொரு புறம் மத்திய அரசுடன் தொடர்ந்து வாதிட்டதால், இன்று இலங்கை அரசுடன், ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்கின்ற சூழ்நிலை ஏற்பட் டுள்ளது. தமிழக மீனவர்கள் அமைதியாக மீன்பிடி தொழிலை மேற்கொள்ளத்தான், சேது சமுத்திரம் கால்வாய் திட் டத்தை உடனடியாகக் கால தாமதமின்றி, நிறைவேற்ற வேண்டும் என்று சில தினங் களுக்கு முன்பு நான் மத்திய அரசை மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டேன். விஞ் ஞானமும், தொழில் நுட்பமும் அசுர கதியில் வளர்ந்து வரு கின்ற சூழ்நிலையில், இந்தத் திட்டத்தைச் செயல்முறைப் படுத்த, 'தொழில் நுட்பம்' நம்மிடம் இல்லை என்ற கருத்தை நிச்சயமாக மறு ஆய்வு செய்ய வேண்டிய நேரமும் வந்துவிட்டது. மத்திய அரசு தயக்கமின்றி விரைவாக இத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து விரைவில் பணியை மேற் கொள்ள வேண்டும் எனத் தமிழக மக்கள் சார்பாக மீண் டும் மீண்டும் கேட்டுக் கொள் கிறேன்.

★ பகைவனால் ஏற்படும்
தீமையைவிட, அடக்கம்
இல்லாத மனமே
ஒருவனுக்குப் பெரிதும்
தீமை தரக்கூடியது ஆகும்.

· புத்தர்

மீனவர்களின் நலன் கருதி திருச்சினாங்குப்பம் கிராமத் தில், 2 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில், 492 குடியிருப் புகள் கட்டி, மீனவப் பெருங் குடி மக்களுக்கு இலவச மாக வழங்கப்படும் என்பதையும், 350 மீனவர்களுக்கு Out board Motor கள் வழங்கப்படும் என்பதை யும், பெருமகிழ்ச்சியுடன் தெரி வித்துக்கொள்கிறேன்.

திருவள்ளூர் அருகில் உள்ள காக்களூரில், 5 கோடி ரூபாய் செலவில் ஒரு துணை மின் நிலையமும், பெரியபாளை யத்தில் உள்ள துணை மின் நிலையத்தை, 3 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தவும், கும்மிடிப் பூண்டி சிப்காட் வளாகத்தில் இரண்டாவது துணை மின் நிலையத்தையும், காஞ்சிபுரம் நகரத்தில் ஒரு துணை மின் நிலையத்தையும் அமைப்பதற்கு, அடிக்கல் நாட்டியுள்ளேன். இத் திட்டங்களின் மூலம் மேம் பட்ட மின்சார வசதி கிடைப்ப தோடு, புதிய தொழில் இணைப்பு களும் வீட்டு இணைப்புகளும் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொசஸ்தலையார்- புத்தூர் சாலையில், 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில், பழைய பாலத்தை இடித்து, ஆரணி ஆற்றின் குறுக்கே புதிய பாலத்தைக் கட்டுவதற்கும் அடிக்கல் நாட்டியுள்ளேன். இந்தப் புதிய பாலம், பெரிய பாளையம் கிராம மக்களும், சுற்றுலாப் பயணிகளும், ஆரணி ஆற்றை எளிதில் கடக்க உதவியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

அதேபோல, 1993ஆம் ஆண்டு நவம்பர் மாத வெள்ளத்தால் காரனோடை அருகே சோழ வரம் ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்தின் 3 கண்கள் அடித்துச் செல்லப்பட்டதை சீர் செய்ய, உடனடியாக ஒன்றரைக் கோடி ரூபாய் செலவில் Bailey பாலம் ஒன்று மின்னல் வேகத்தில் கட்டி முடிக்கப்பட்டது. எனி னும், இப்பிரச்சினைக்கு நிரந் தரத் தீர்வு காண தற்போது உள்ள பாலத்தின் மேற்புறத்தில் ஒரு புதிய பாலத்தை, 9 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் கட்டுவதற்கான செயற் குறிப்பு மத்திய அரசின் ஒப்பு தலுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது என்பதையும், விரைவில் இப்பணி மேற் கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு நாடும் ஒரு சமுதாயமும் வளர்ச்சி அடையும்போது அதன் அங்கத்தினர்கள் ஒவ் வொருவருக்கும் அந்த வளர்ச்சி யின் பயன்கள் சென்றடைய வேண்டும் என்கின்ற ஒரு உந்து தலின் காரணமாகத்தான், ஒவ் வொரு மாவட்டத்திற்கும் நான் சென்று வரும் போது ஆயிரக் கணக்கானவர்களுக்கு அரசின் பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் தனிப்பட்ட உதவிகளை வழங்கி, அவர்களின் தனி வாழ்க்கை மேம்பாட்டிற்கு வழி வகுத்து வருகின்றேன். இந்தத் தனி நபர் வாழ்க்கை மேம் பாட்டு உதவிகள், இறுதியில், சமுதாயத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வழி வகுத்து வரு வதையும், கண்கூடாகக் கண்டு வருகிறேன்.

அந்த வகையில், பரந்து விரிந்த இம்மாவட்டத்து வாழ் மக்கள், 62,000க்கும் மேற்பட்ட வர்களுக்கு, அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் இன்று, இங்கே வழங்கப்பட உள்ளன. பயனாளிகள் ஒவ்வொருவருக் கும் இந்த உதவிகளை, நானே நேரிடையாக வழங்க வேண்டும் என்று விரும்பினாலும், நேரத் தின் அருமையைக் கருதி, பயனாளிகளில் ஒரு சிலருக்கு மட்டும் இந்த மேடையில் எனது கரங்களால் வழங்க உள்ளேன். மற்ற அனைவருக் கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசு அலுவலர் களும் பயனாளிகள் அமர்ந் திருக்கும் இடத்திற்குச் சென்று அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்குவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசின் உதவிகளை ஒரு ஆதாரமாகக் கொண்டு, இன்று உதவிகளைப் பெறுகின்ற பய னாளிகள் வாழ்க்கையில் முன் னேற்றம் அடைய வேண்டும் என்ற எனது பேரவாவினையும், வாழ்த்துக்களையும், ஒருங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

காலத்தின் தேவைகளும், பொதுமக்களின் எதிர்பார்ப்பு களும், தமிழகக் காவல் துறை யின் பணிச்சுமையையும், சவால்களையும், அதிகரித் துள்ள சூழ்நிலையில், அந்தக் காவல் துறையை நவீனமய மாக்கி, மக்கள் போற்றுகின்ற ஒரு இயக்கமாக மாற்றுவதில், உங்கள் அன்புச் சகோதரி யாகிய நான் காட்டி வருகின்ற ஈடுபாட்டை நீங்கள் நன்கு அறி வீர்கள். காவல் துறையினர் கடுமையான பணிகளை மேற் கொள்ள வேண்டிய சூழ்நிலை யில், தங்களது பணிகளில் மனச் சோர்வு அடையாமல் இருக் கவும், சமுதாயத்தில் தங்களுக் குரிய அந்தஸ்த்தை பெறுவதற் கும், பொதுமக்களும் ஒத்துழைப் புத் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள் கிறேன்.

நம்பிக்கை உண்டானால் வெற்றியும் உண்டு. அந்த நம்பிக்கையின் முக்கிய இலட்சியம் விடாமுயற்சி.

—மகாகவி பாரதியார்

சமுதாயத்தில் சரிபாதியாக விளங்கும் மகளிருக்கு எதிராக இழைக்கப்படும் பல்வேறு சமு தாயக் கொடுமைகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றுகின்ற மாபெரும் பொறுப்பும், கடமை யும் காவல் துறையினருக்கு இன்று மிக அதிகமாகவே உள்ளது. மாவட்டந்தோறும் அமைக்கப்பட்டு வரும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், மகளிருக்கு எதி ராக இழைக்கப்படும் வரதட் சணைக் கொடுமை, வன்முறை, பலாத்காரம், அடிப்படை உரிமைகள் பறிப்பு, போன்றவை களிலிருந்து காப்பாற்றி, தக்க நீதியினைப் பெற்றுத் தர ஒரு சமுதாய உணர்வோடு சேவை புரிந்து வருவதைப் போற்றி, பன்னாட்டுச் சர்வதேச நிறு வனங்கள் கூட தங்களது பாராட்டுதல்களைத் தெரிவித் துள்ளன என்பதை நினைத்துப் பார்க்கும்போது என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

தமிழ்ச் சமுதாயத்தில், பெண்கள் வாழ்க்கையில், ஒரு மறுமலர்ச் சியை ஏற்படுத்துவதற்கு, நான் எடுத்து வரும் பல்வேறு முயற்சி களில், ஒவ்வொன்றும் வெற்றி பெற்று வருகின்றது என்பதற்கு இதுவும் ஒரு சான்று. காவல் துறை மேற்கு மாவட்டத்தின் சார்பில், அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்றை, இன்று மதியம், காஞ்சிபுரத்தில் திறந்துவைக்க உள்ளேன் என்ப தையும், கிழக்கு மாவட்டத் திற்கு, ஆவடியில் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் விரைவில் செயல்படத் துவங் கும் என்பதையும், பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சீரோடும், சிறப்போடும் நடை பெற்றுக் கொண்டிருக்கும் இந்த விழாவிற்கு அனைத்து ஏற்பாடு களையும், செய்த மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், அன்புச் சகோதரர், திரு கா.ப. பட்டாபிராமன் அவர்களுக் கும், அவருக்கு உறுதுணையாக உதவிய மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர், அன்புச் சகோதரர், திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்களுக் கும், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர், அன் புச் சகோதரர், திரு எஸ். கண்ணப்பன் அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறை அலுவலர்களுக் கும் எனது பாராட்டுதல்களை யும், நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னைக் காண்பதற்காகவும், எனது உரையைக் கேட்பதற்கா கவும், இங்கே குழுமியுள்ள உங்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரி வித்து, இம்மாவட்டத்து மக்கள் அனைவரும், எல்லா நலன் களையும், வளங்களையும், பெற்று சீரோடும், சிறப்போடும் வாழ வேண்டும் என்ற எனது நெஞ்சத்து நல்வாழ்த்துக்களைத் உரித்தாக்கிக் கொள்கிறேன்.



# “நல்லவர்களுக்கு நண்பனாகவும் தீயவர்களுக்குச் சிம்ம சொப்பனமாகவும் தமிழகக் காவல்துறை விளங்கும்!”

## 2.9.1994 அன்று ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

சமூக நீதியைப் பாதுகாக்க, நான் மேற்கொண்ட சத்திய வேள்விக்குக் கிடைத்த, மாபெரும் வெற்றியின் மகிழ்ச்சியை, எனது அன்பிற்குரிய மக்களுடன் பகிர்ந்து கொள்கின்ற முதல் வாய்ப்பு, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் அவதரித்து புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். பெயர் தாங்கிய செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த காஞ்சி பூமியில் கிடைத்தது. அதைத் தொடர்ந்து, பகுத்தறிவுப் பகலவன், திராவிட இயக்கத்தின் விடிவெள்ளி, தந்தை பெரியார் அவர்கள் அவதரித்த, இந்தப் புண்ணிய பூமியில், அத்தகைய வாய்ப்பு, இரண்டாவது முறையாக, இயற்கை எனக்கு அளித்து இருப்பதை எண்ணி, நான் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

பெரியாரின் கொள்கைகளைக் கேடயமாகவும்; அண்ணாவின் இலட்சியங்களை அரணாகவும்; புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் துணிவினைப் போர்வாளாகவும் கொண்டு; நான் மக்கள் பணி ஆற்றி





வருகின்ற காரணத்தால்தான், அண்ணா பிறந்த இடத்தைத் தொடர்ந்து பெரியார் அவதரித்த மண்ணிலும், இந்த வெற்றிப் பெருமிதத்தைத் தமிழக மக்களோடு பகிர்ந்து கொள்கின்ற நல்வாய்ப்பை, இயற்கையே எனக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது என்று, நான் கருதுகிறேன். “மக்கள் பணியே மகேசன் பணி” என்ற உணர்வினை, நமது உணர்விலும், உணர்விலும், ஊட்டி வளர்த்த, திராவிட இயக்கத் தலைவர்களின் அருளும், ஆசியும், நமக்கு என்றென்றைக்கும் உண்டு என்பதையும், இந்த நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகின்றது என்றால், அது மிகையாகாது.

இந்தக் கொங்கு மண்டலம் வீரத்தின் விளைவிடம்; விவேகத்தின் இருப்பிடம். ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்தியத்தையும், அன்று அரசாண்டவர்களின் அடக்கு முறைகளையும், எதிர்த்துப் போராடிய தீரன் சின்னமலை வாழ்ந்து, மடிந்த பூமி இது. மூட நம்பிக்கைகளில் உழன்றுகொண்டிருந்த தமிழ்ச் சமுதாயத்தைத் தன் உரத்த குரலால் தட்டி எழுப்பி, ஒரு விழிப்புணர்ச்சிப் பாதையில் நடைபோட வைத்த, தந்தை பெரியாரை நமக்கு ஈந்த மண்.

18ஆம் நூற்றாண்டில் கொங்கு நாடு, மைசூர் சுல்தான்களின் கொடுங்கோல் ஆட்சியில், அல்லலுற்ற போது, அடிமை விலங்கை உடைத்தெறிய, தனது உயிரைப் பணயம் வைத்தவர், தீரன் சின்னமலை. ஆங்கிலேயரின் அதிகாரத்தை எதிர்த்து நின்று, கோட்டை ஒன்றைக் கட்டி, அதில் கொங்கு நாட்டு இளைஞர்களுக்குப் போர்ப் பயிற்சியையும் கொடுத்த மாவீரன், இந்தத் தீரன் சின்னமலை.

மனம் போன போக்கில் மைசூர் மன்னன், வரி வசூல் செய்ததைக் கண்டித்து, தண்டல்காரனின் கையில் இருந்த, வரி வசூல் பணத்தைப் பறித்துக் கொண்டவர் தீர்த்தகிரி என்ற இந்தத் தீரன் சின்னமலை. ஆட்சியாளர்களிடம் என்ன பதில் சொல்வது என்று, தண்டல்காரன் திகைத்தபோது, “சென்னிமலைக்கும், சிவன் மலைக்கும் இடையில், ஒரு சின்னமலை வாங்கிக்கொண்டான், என்று போய்ச் சொல்” என்று, வீரத்துடன் சின்னமலை, அவனை விரட்டியடித்த வரலாறு, என்றென்றும் அவர் புகழைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும். வீரத்தால் வெல்ல முடியாத அந்த மாவீரனை, சூழ்ச்சி செய்து, சிறை பிடித்து தூக்கி விட்டார்கள்.

அதே அஞ்சாநெஞ்சமும்; சமுதாயத்தின் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாக இருந்த, மூட நம்பிக்கைகளையும், பழக்க வழக்கங்களையும், தைரியமாகச் சுட்டிக் காட்டும் மன உறுதியும்; பெண்களின் முன்னேற்றத்தின் தடைக் கற்களைத் தகர்தெறிகின்ற துணிவும்; பெரியாருக்குத் தவிர, வேறு யாருக்கும் இருந்ததில்லை. இந்த 20 ஆம் நூற்றாண்டின், ஈடு இணையற்ற, சமூக சீர்திருத்தவாதி அவர் என்பதை, என்னால் ஆணித்தரமாகச் சொல்ல முடியும்.

அச்சம் என்ற சொல், பெரியாரின் அகராதியில் இருந்தது இல்லை. 1953 ஆம் ஆண்டு, ஒரு வழக்கிலே கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டபோது; பெரியார் சொன்ன வார்த்தைகள்- நம் நெஞ்சுக்கு இன்றும், உரம் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்றால், அது மிகையாகாது. பெரியார் அவர்களிடம், அவர் மீது சாட்டப்பட்ட குற்றச் சாட்டுகளுக்கு, விளக்கம் கேட்டார் அந்த நீதிபதி. அதற்குப் பெரியார், “எத்தகைய ஓர் உயர்ந்த பட்சத் தண்டனையை வழங்கினால், இங்கே இருக்கின்ற அரசு வழக்கறிஞர், மகிழ்ச்சி அடைவாரோ; எத்தகைய தண்டனையை வழங்கினால், அரசாங்கம் மகிழ்ச்சி அடையுமோ, அந்தத் தண்டனையை வழங்குங்கள். என்னைப் பொறுத்த வரையில், எனது மனம் சரி என்று ஏற்றுக் கொண்டதை, நான் துணி

வுடன் செய்துள்ளேன்", என்று கூறினார்.

அவர் பிறந்த இந்தப் பூமியில், நலிவடைந்த, பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கு, சமூக நீதியை, அவரது வழியிலேயே, நான் பெற்றுத் தருகின்ற வாய்ப்புக் கிடைத்ததை எண்ணிப் பார்க்கும்போது, எனது மகிழ்ச்சி இரட்டிப்பாகின்றது.

அந்தப் பெரியாரின் கனவுகளை நனவாக்கிக் கொண்டிருக்கும் உங்கள் அன்புச் சகோதரி, இம்மாவட்டத்திற்கு, 432 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களுடன், உங்களைக் காண வந்துள்ளேன். இன்று, 283 கோடி ரூபாய் செலவில், ஏற்கெனவே முடிவடைந்த திட்டங்களைத் திறந்து வைத்ததிலும்;117 கோடி ரூபாய் மதிப்பில், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதிலும்; நான் பெரு மகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன். 54,000 க்கும் மேற்பட்ட, என் அன்பிற்குரிய இம்மாவட்ட வாழ் மக்களுக்கு, 33 கோடி ரூபாய் செலவில், அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை, இதே விழா மேடையில் வழங்க உள்ளதையும் எண்ணி, நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பெரும்பான்மையாக, கிராமங்களைத் தன்னகத்தே கொண்ட இந்த மாவட்டத்தில், இன்றளவும், விவசாயத் தொழிலும், நெசவுத் தொழிலும், மிக அதிக அளவில் இருந்து வருகின்றன. இம்மாவட்டத்தின் நிலத்தடி நீர் ஆதாரத்தை மேம்படுத்துவதற்காகவும்; ஊரக விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும்; கடந்த மூன்றாண்டுகளில் மட்டும், 2 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில், 174 கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு, ஒரு கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் 86 கசிவுநீர்க் குட்டைகள், அமைக்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு ஆற்றுப் பாசனத் திட்டங்கள் அமைந்துள்ள இம்மாவட்டத்தில், உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு; உங்கள் அரசு; பரம்பிக்குளம் -ஆழியார் திட்டத்திகீழ், நான்காம் மண்டலத்தை ஏற்படுத்தி, 50,000 ஏக்கருக்கும் மேற்பட்ட, கூடுதல் நிலப்பரப்பிற்குப் பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்பதை, நீங்கள் நன்கு அறிவீர்கள்.



பரம்பிக்குளம் -ஆழியார் திட்டத்திகீழ், ஏற்படுத்தப்பட்ட, இந்த நான்காவது மண்டலத்திற்கென, ஒரு தனி வரலாறே இருப்பதை, இம்மாவட்டத்து மக்கள் நன்கு அறிவார்கள். இந்த நான்காவது மண்டலம் ஏற்படுத்தப்படவேண்டும் என்று, 1962ஆம் ஆண்டிலேயே, ஒரு போராட்டம் நடந்தது. ஆனால் இந்தத் திட்டத்திற்கான ஆயத்த நடவடிக்கைகள், நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆட்சியில்தான் மேற்கொள்ளப்பட்டன. கால்வாய்கள் வெட்டி முடிக்கப்பட்ட பின்பும் பாசன நீர் வழங்க இயலாத சூழ்நிலையில், இத்திட்டத்தின் பயன்கள் மக்களுக்குச் சென்றடையவில்லை.

உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சி, தமிழகத்தில் மலர்ந்த பின்புதான், 30 ஆண்டுகளுக்கு மேலாகப் பல போராட்டங்களைச் சந்தித்த இந்தத் திட்டம், இப்பகுதி வாழ் மக்களின் மனம் குளிரும் வண்ணம், நிறைவேற்றப்பட்டது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். எத்தனை இடர்ப்பாடுகள் வந்தாலும், அவற்றை எல்லாம் சமாளித்து, இதற்கென ஒரு தனிச் சட்டத்தையே கொண்டு வந்து நிறைவேற்றினோம்.

1962 ல் இப்பகுதி வாழ் மக்கள் கண்ட கனவை, 1994 ல் நனவாக்கி, இத்திட்டத்தை இங்கு வாழும் மக்களின், நல்வாழ்விற்காக அர்ப்பணித்ததில் நான் மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகின்றேன்.





**இவர்தான் பெரியார்**

**பெரியாருடன் இணைந்து பணியாற்றியவர் பற்பலர் ஆயினும், மற்ற பலரையும்விட, அவருடன் இடைவிடாது இருந்திருக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தவன் நான். அந்த நாட்கள் எனக்கு மிகவும் இனிமையான நாட்கள். இன்றும் அவைகளை நினைவிற் கொண்டுவரும் போது இனிமை பெறுகிறேன்.**

**-அறிஞர் அண்ணா**

*(செப்டம்பர் 17, தந்தை பெரியார் பிறந்த நாள்)*

கீழ்பவானி வர்ய்க்கால் திட்டத்தில், கரைகள் மற்றும் கட்டுமானங்கள், வலுவிழந்து உள்ளதால், அவற்றைச் சீரமைக்க வேண்டும் என்கின்ற கோரிக்கை அப்பகுதி வாழ் மக்களிடம் இருப்பதை, நான் நன்கு அறிவேன். இந்த வாய்க்கால் திட்டங்களைச் சீரமைக்கும் பணிக்காக. 35 கோடி ரூபாய் செலவில், திட்டம் ஒன்று தீட்டப்பட்டு, உலக வங்கியின் ஒப்புதலுக்கு, அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒப்புதலும், நிதி ஒதுக்கீடும் கிடைத்த பின்னர், கீழ் பவானி வாய்க்கால் திட்டத்தில் உள்ள, பிரதான கால்வாய்களையும், இதர கால்வாய்களையும்; புதுப்பிக்கும் பணி, மிக விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருந்துறையில், 3,000 ஏக்கர் நிலப்பரப்பில், 250 கோடி ரூபாய் செலவில், ஒரு மிகப் பெரிய தொழிற்பேட்டையை நிறுவுவதற்கு, இன்று நான் அடிக்கல் நாட்டியதில், பெரு மகிழ்ச்சி அடைகிறேன். ஆசிய கண்டத்திலேயே மிகப் பெரிய தொழிற்பேட்டையாக அமைய உள்ள, இந்தத் தொழிற்பேட்டை; இம்மாவட்டத்து வளர்ச்சிக்குப் பல வகையிலும் உறுதுணையாக விளங்கும் என்பதில், எனக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. முதல் கட்டமாக 500 ஏக்கர் நிலப்பரப்பில் 100 கோடி ரூபாய் செலவில், ஜவுளி வளாகம் 'Multi-purpose Textile Complex' ஒன்று திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதி சங்கத்தால், அமைக்கப்பட உள்ளது. அதன் ஒருபகுதியாக, 13 கோடி ரூபாய் செலவில், ஒரு குடிநீர்த் திட்டத்திற்கும், இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். இந்த வளாகத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கும், தொழிலாளர்களுக்கும், 20 கோடி ரூபாய் செலவில், குடியிருப்புகள் கட்டித் தரப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈரோடு வட்டம், நஞ்சை ஊத்துக்குளியில், 5 கோடி ரூபாய் செலவில், ஒரு தொழிற்பேட்டையையும்; காங்கேயம் அருகில், ராசாத்தாவலசில், 17 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில், ஒரு தொழிற் பேட்டையையும் அமைப்பதற்கு, அடிக்கல் நாட்டியதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மாவட்டத்தில் தற்போது, 5 இலட்சம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும், உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில், 56,000 மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாவட்டத்தின் மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும்; சீரான மின்சார விநியோகத்திற்கும், 16 கோடி ரூபாய் செலவில், 3 துணை மின் நிலையங்கள் இன்று முதல் செயல்படத் துவங்கும் என்பதையும், மேலும் 5 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாவட்டத்தைப் பொருத்த வரையில், இந்த நிதி ஆண்டிற்குள், எல்லா ஆதி திராவிட குடியிருப்புகளுக்கும், மின்

இணைப்பு வழங்கப்பட்டாக வேண்டும் என்று, ஆணையிட்டுள்ளேன். எனவே, 3,337 குடியிருப்புகளுக்கும், வெகு விரையில், மின் இணைப்பு வழங்கப்பட்டு விடும் என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊரகப் பொருளாதார வளர்ச்சிக்கு, உறுதுணையாக விளங்கும் சாலை மேம்பாட்டிற்கு, எங்கள் அரசு தனி முக்கியத்துவத்தைக் கொடுத்துவருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில், இம்மாவட்டத்தில் பல்வேறு சாலை மேம்பாட்டுப் பணிகள், 5 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில், மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 70 கிலோ மீட்டர் சாலைகளை மேம்படுத்துவதற்கு, 2 கோடியே 81 இலட்சம் ரூபாய், செலவிடப்படும் என்பதைத் தெரிவிப்பதில், மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஊரக சாலைகள் அமைக்கப்பட்டவுடன், குக்கிராமங்களுக்கும் போக்குவரத்து வசதிகளை, ஏற்படுத்திக் கொடுப்பதில், கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டு வருகிறது, உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் இயங்கும் உங்கள் அரசு.

எனவே தான், போக்குவரத்துத் துறையில் மாபெரும் சாதனைகளை, அகில இந்திய அளவில் நிகழ்த்திக் கொண்டு வருகின்றோம் என்று சொன்னால், அது மிகையாகாது. இந்த மாவட்டத்தில் அமைந்துள்ள ஜீவா போக்குவரத்துக் கழகம், கடந்த 3 ஆண்டுகளில், 84 புதிய வழித் தடங்களை இயக்கி உள்ளது 224 பழைய பேருந்துகளை மாற்றி, புதிய பேருந்துகளைப் பெற்றுள்ளது. இன்று, மேலும் 25 புதிய வழித் தடங்களைத் துவக்கி வைத்ததிலும்; பழைய பேருந்துகளுக்குப் பதிலாக, 120 புதிய பேருந்துகளை வாங்கி வழங்கியதிலும்; நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இப்போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு, 3 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில், 262 குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டுள்ளன என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாவட்டத்தின், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், தற்போது 10 டன் பால் பவுடர் செய்யும் தொழிற்சாலையை மட்டுமே, இயக்கி வருகின்றது. இந்த ஒன்றியத்திலிருந்து கிடைக்கின்ற பாலின் அளவு, நாளுக்கு நாள் பெருகி வருவதைக் கருத்தில் கொண்டு, 30 டன் பால் பவுடர், உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை, 8 கோடி ரூபாய் செலவில் இன்று நான் துவக்கிவைத்துள்ளேன் என்பதை, மிக்க மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் பேரன்புடனும், பேராதரவுடனும், நான் ஆட்சிக் கட்டிலில் அமர்வதற்கு முன்பு, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பயணம் செய்தபோது, எனது அன்பிற்குரிய தாய்மார்களும், சகோதரிகளும், ஒரு குடம் குடிநீருக்காகப் பல மைல் தூரம் நடந்து செல்வதைக் கண்டபோது, என் நெஞ்சம் கனமானது. என் அன்பிற்குரிய சகோதரிகளின் கண்ணீரைத் துடைக்க, பாதுகாக்கப்பட்ட குடிநீரை, அனைத்துக் கிராமங்களுக்கும் வழங்கச் செய்வதே, எனது தலையாய கடமை என்று, ஒரு சபதத்தை ஏற்கெனவே மேற்கொண்டேன். அதன் வெளிப்பாடாக, கடந்த 3 ஆண்டுகளில், மாநிலம் முழுவதும், பல்வேறு குடிநீர் திட்டங்களைப் பல கோடி ரூபாய் செலவில், செயல்படுத்தி உள்ளோம். இம்மாவட்டத்தைப் பொருத்த வரையிலும், கடந்த 3 ஆண்டுகளில் மட்டும், 21 கோடி ரூபாய் செலவில், 856 பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள், செயல்படுத்தப்பட்டு உள்ளன. இன்று, 7 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில், 59 குடிநீர்த்திட்டங்களைத் துவக்கி வைத்துள்ளேன். மேலும், 12 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில், 32 புதிய குடிநீர்த் திட்டங்களுக்கு, அடிக்கல் நாட்டியுள்ளேன்.

சென்னிமலை பேரூராட்சிக்கு, பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்கு, 5 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில், ஒரு திட்டம் திட்டப்பட்டு, அது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதையும்; வெகு விரைவில் இந்த ஆய்வு முடிந்து, இத்திட்டம் மேற்கொள்ளப்படும் என்பதையும்; மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிசைப் பகுதி மாற்று வாரியம், மற்றும் வீட்டு வசதி வாரியம் மூலம், 8 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில், கட்டி முடிக்கப்பட்டுள்ள,915 குடியிருப்புகளைத் திறந்து வைத்ததிலும், 4 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில், 537 குடியிருப்புகளை அமைப்பதற்கு, அடிக்கல் நாட்டியதிலும்; நான் பெருமகிழ்ச்சி. அடைகின்றேன்.

சென்னிமலை முருகன் திருக்கோயில் திருக்குளம், 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில், ஏற்கெனவே சீரமைக்கப்பட்டுள்ளது. பக்தி நெறி கொண்ட மக்களின், மனம் குளிரும் வண்ணம், வெகு நாட்களாக அவர்கள், எதிர் பார்த்துக் கொண்டிருந்த திட்டத்தைச் செயல்படுத்தியது, உங்கள் சகோதரியின் அரசு தான்.

தென்னகத்தின் திரிவேணி சங்கமமாம், பவானி கூடுதுறையில் எழுந்தருளியுள்ள, சங்கமேஸ்வரரின், தொன்மையும், கலை நயமும் கொண்ட, புனிதத் திருத்தலத்தை, அழகுபடுத்தும் திட்டம், 3 கோடி ரூபாய் செலவில், விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு சிறப்புகளையும், வரலாற்றுப் பாரம்பரியமும் மிக்க, இத்திருக்கோயிலின் புனரமைப்புப் பணி, விரைவில் மேற்கொள்ளப்பட்டு, அப்பகுதி வாழ் மக்களின் எண்ணம், நிறைவேற்றப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெள்ளக்கோயில் பகுதி வாழ் மக்களின், 10 ஆண்டுக்கால கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம், இன்று, வெள்ளக்கோயிலில் ஒரு தீயணைப்பு நிலையத்தையும், சார் பதிவாளர் அலவலகத்தையும், துவக்கிவைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒட்டுமொத்த சமுதாய வளர்ச்சிக்கு நிகராக, அதன் அங்கத்தினர்களாகிய ஒவ்வொரு தனி மனிதரும், பொருளாதார மற்றும் சமூக







## இவர்தான் அண்ணா!

**அண்ணா அவர்கள் நமது நாட்டுக்கு ஒரு நிதி என்றுதான் சொல்ல வேண்டும், பகுத்தறிவாளர் அவர், மூடநம்பிக்கையை ஒழிக்க என்னோடு இருந்து தொண்டாற்றியவர் ஆவார். பகுத்தறிவுக் கொள்கைப் படி, துணிந்து, இமயமலை அளவு எதிர்ப்பு இருந்தாலும் கவலையேதும் கொள்ளமாட்டார்!**

**–தந்தை பெரியார்**

*(செப்டம்பர் 15, அறிஞர் அண்ணா பிறந்த நாள்)*

வளர்ச்சியை அடையவேண்டும், என்கின்ற ஒரு உயர்ந்த எண்ணத்தில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நான் செல்லும்போது, பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு, அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை, வழங்கிவருகிறேன்.

அந்த வகையில், இம்மாவட்டத்தைச் சேர்ந்த 54,000க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு, இன்று 33 கோடி ரூபாய் செலவில், அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன.

பயனாளிகள் ஒவ்வொருவருக்கும், நானே நேரில் உதவிகளை வழங்கவேண்டும் என்று விரும்பினாலும், நேரத்தின் அருமையைக் கருதி, ஒரு சிலருக்கு மட்டும், இந்த மேடையில் வழங்க உள்ளேன். மற்ற அனைவருக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசு அதிகாரிகளும் பயனாளிகள் இருக்கின்ற இடத்திற்குச் சென்று, உதவிகளை வழங்குவார்கள் என்பதையும், தெரிவித்துக்கொள்கிறேன்.

நல்லவர்களுக்கு நண்பர்களாகவும், தீயவர்களுக்குச் சிம்ம சொப்பனமாகவும், காவல் படை விள்ங்க வேண்டும் என்ற எண்ணத்தினால்தான், மனித நேயம் மிக்க ஒரு இயக்கமாக, அதை மாற்றவும்; அதே நேரத்தில், நவீன ஆயுதங்களையும், போக்குவரத்து வசதிகளையும், தொலைத் தொடர்பு சாதனங்களையும் கொண்ட எழுச்சி மிக்க ஒரு படையாகவும் மாற்றுவதற்கு; நான் தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறேன். வளர்ந்து வரும் சமுதாயத்தின் தேவைகளை உணர்ந்து, குறிப்பாக, மகளிருக்கு எதிராக நிகழும், பல்வேறு சமுதாயக் கொ்டுமைகளில்' இருந்து, அவர்களைக் காப்பாற்றி; தக்க நீதிமன்றப் பாதுகாப்பைப் பெற்றுத் தருகின்ற, மாபெரும் பொறுப்பும், கடமையும், இன்று காவல் துறையினருக்கு, மிக அதிகமாகவே உள்ளன. சமுதாயத்தில், எண்ணிக்கையில் மட்டுமின்றி, உரிமையிலும், பொறுப்பிலும், மகளிருக்குச் சம பங்கு பெற்றுத் தர வேண்டும் என்கிற, ஒரு உள்ளார்ந்த உணர்வுதான், மாவட்டந்தோறும், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைப்பதற்கு, எனக்குத் தூண்டுகோலாக இருந்தது. எனவே தான் ஒரு ஆத்மார்ந்த ஈடுபாட்டுடன், ஒவ்வொரு அனைத்து மகளிர் காவல் நிலையத்தையும், நானே நேரில் சென்று திறந்துவைத்து, பெண் காவலர்களுக்கு அறிவுரையையும் வழங்கி வருகின்றேன். இக்காவ்ல் நிலையங்களில் பணிபுரியும், பெண் ஆய்வாளர்களும், பெண் காவலர்களும், உதவி நாடி வருபவர்களைச் சாதாரண மனுதாரர்கள் என்று கருதாமல், தங்களுடைய உடன் பிறவாச் சகோதரிகளாக, ஈன்றெடுத்த தாயாகக் கருதி, சேவை மனப்பான்மையுடன் செயல்பட வேண்டும், என்று விரும்புகின்றேன். எனது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப, இக் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருவதால், இன்று பல சர்வதேச நிறுவனங்கள், இவற்றின் பணியினைப் பாராட்டி வருகின்றன. இந்தியத் துணைக் கண்டத்தில், மற்ற மாநிலங்களும், ஏன், ஒரு சில அண்டை நாடுகளும், நம்மை முன்னோடியாகக் கொண்டு, அனைத்து

மகளிர் காவல் நிலையங்களைத் துவக்கி வருவதைக் காணும் போது, நமது தொலை நோக்குத் தன்மை, தெளிவாக நிருபிக்கப் பட்டுள்ளது, என்ற பெருமிதமும், மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது. இம்மாவட்டத்திற்கான அனைத்து மகளிர் காவல் நிலையத்தை, ஈரோடு நகரத்தில், இன்று பிற்பகல் துவக்கி வைக்க உள்ளேன் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாவட்டத்து மகளிரின் வளர்ச்சிக்கு, இந்த அனைத்து மகளிர் காவல் நிலையம், தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளும் என்று, நான் பரிபூரணமாக நம்புகிறேன்.

பகுத்தறிவுப் பகலவனின் பெயரில் அமைந்துள்ள, இந்த மாவட்டமே எழுச்சி பெறும் வகையில், இந்த விழாவை, ஒரு பிரம்மாண்டமான மாநாடு போல ஏற்பாடு செய்த, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், அன்புச் சகோதரர் திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்களுக்கும், அவருடன் சேர்ந்து பணியாற்றிய, இம் மாவட்டத்து மற்ற அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல்துறை அலுவலர்களுக்கும், எனது பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று, புதிய திட்டங்களைத் துவக்கி வைத்து, அம்மாவட்ட மக்களைச் சந்தித்த, அவர்களுடைய தேவைகளை அறிந்து, அவர்களுக்கு உதவி செய்யும்போது, எனக்கு ஏற்படுகின்ற மன நிறைவையும், நிம்மதியையும், நிச்சயமாக ஈடு செய்ய முடியாது.

என்னைக் காண்பதற்காகவும், எனது உரையைக் கேட்பதற்காகவும், இங்கே குழுமியிருக்கின்ற உங்கள் அனைவருக்கும், எனது நல்வாழ்த்துக்களையும், நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். எடுக்கின்ற பணிகள் அனைத்திலும், நாங்கள் வெற்றி பெறுவதற்காக, பேராதரவைத் தந்து, பேரன்பைக் காட்டிவருகின்ற இம் மாவட்டத்து மக்கள் அனைவரும், எல்லா வளங்களும், நலன்களும் பெற்று, பல்லாண்டு வாழவேண்டும்.



காமராஜர் மாவட்ட அரசு விழா - 22.8.1994

# "இந்த ஆட்சியில்தான் இட ஒதுக்கீடு சட்ட வடிவம் பெற்றிருக்கிறது!"

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உரை



புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்,தமிழகத்தின் முதலமைச்சராக ஆட்சி நடத்திய போது தான், நிர்வாக நலன் கருதிஇராமநாதபுரம்மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து, கர்ம வீரர் காமராஜர் பிறந்த, புண்ணிய பூமியான இந்த மாவட்டத்திற்கு, 'காமராஜர் மாவட்டம்' என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார். பல தரப்பட்ட மக்கள், பல்வேறு தொழில்களை மேற்கொண்டு, அமைதியுடன் வாழ்ந்து வருகின்ற, பெருமை மிக்க பூமி இது. இந்த மாவட்டத்திற்கு வருகை தந்து, அச்சுத் தொழிலுக்கும் தீப்பெட்டித் தொழிலுக்கும், பெருமை பெற்ற சிவகாசி நகரில், உங்களை எல்லாம் சந்திப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆன்மீக உலகில், தனக்கென்று தனியிடம் படைத்த, ரமண மகரிஷி அவர்கள் அவதரித்த இடம், இம்மாவட்டத்தில் உள்ள திருச்சுழி ஆகும். கர்ம வீரர் காமராஜரை, நமக்கு தந்தது விருதுநகர். வீரத்தின் மறு பெயராய் விளங்கிய, மருது சகோதரர்களை, நமக்கு ஈந்த பகுதி நரிக்குடி. சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாள், ஸ்ரீஆண்டாள், ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்து, இந்த உலகம் உய்ய அருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள். இம்மாவட்டம், ஆன்மீகத்திற்கு வழி காட்டியுள்ளது. வீரத்திற்கு தனி இடம் கொடுத்துள்ளது. அரசியல் சாதுர்யத்திற்கும் பாதை காட்டியுள்ளது.

தமிழகத்தில், வேறு எங்கும் காண முடியாத அளவிற்கு, இம் மாவட்டத்தில் தான், 3500 தீப்பெட்டித் தொழிற்சாலைகளும், 264 பட்டாசுத் தொழிற்சாலைகளும், நூற்றுக்கணக்கான அச்சகங்களும், பஞ்சாலைகளும், வளர்ந்தோங்கி இருப்பதிலிருந்து, இப்பகுதி வாழ் மக்கள், எத்தகையதொரு கடுமையான உழைப்பாளிகள், நல்ல சிந்தனையாளர்கள் என்பதை, நாம் புரிந்துகொள்ள முடியும்.

நான் பொது வாழ்க்கையில் ஈடுபட்ட பின்பு, தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளாத பகுதியே இல்லை. எந்தப் பகுதிக்குச் சென்றாலும், அந்தப் பகுதி வாழ் மக்களின், நீண்ட காலப் பிரச்சினைகளை எல்லாம் கேட்டு அறிந்து, அவற்றை எப்படியேனும் தீர்த்து வைக்க வேண்டும், என்று எண்ணினேன். உங்கள் பேராதரவுடன், ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த பின்பு, அந்தப் பழைய அனுபவங்கள்,மாவட்டங்களின் வளர்ச்சிப் பணிக்கு, அடிப்படையாக அமைந்துவிட்டன என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்டங்களின் தனித் தன்மையைக் கருத்தில் கொண்டு, பல சிறப்புத் திட்டங்களைத் தீட்டி, மாவட்டங்களின் விரைந்த

வளர்ச்சிக்காக, முனைப்புடன் செயலாற்றி வருகின்றது, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு. 'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்பார்கள். எங்களைப் பொருத்த வரையில், மக்களின் மகிழ்ச்சியே எங்கள் மகிழ்ச்சி. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்ட, பேரறிஞர் பெருந்தகை அண்ணா, ஏழை மக்களின் பாதுகாவலராக விளங்கிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் வழி நடக்கும், உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், மக்களின் மகிழ்ச்சியிலே, மன நிறைவு அடைந்துகொண்டிருக்கிறேன்.

அந்த வகையில் இன்று, இம் மாவட்டத்தின் வளர்ச்சிக்காக, உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், 153 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களுடன், உங்களைக் காண வந்துள்ளேன். 46 கோடி ரூபாய் மதிப்புள்ள பல திட்டங்களைத் துவக்கி வைத்தும், 82 கோடி ரூபாய் மதிப்புள்ள, பல வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், 40,000-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு, 25 கோடி ரூபாய் மதிப்பில், அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை, வழங்கவும் வந்துள்ளேன் என்பதை நினைக்கும் போது, என் மனம் மகிழ்ச்சியில் பூரிப்பு அடைகின்றது.

ஆண்டாண்டுக் காலமாக, சமூக நீதியைக் காப்பாற்றுவதற்குத் தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த, இட ஒதுக்கீட்டு முறை, முதன் முறையாக, உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த, இந்த ஆட்சியில் தான், உங்கள் ஆட்சியில் தான், சட்ட வடிவம் பெற்றுள்ளது. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும், இட ஒதுக்கீட்டு முறை, சட்ட வடிவம் பெறாத சூழ்நிலையில், தமிழ்நாடு ஒரு முன்னோடியாக நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழகத்தின் 69 சதவிகித, இட ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பாதுகாப்பை அளிக்க, அதனை 9வது அட்டவணையில் சேர்ப்பதற்கு, அரசியல் சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்று, தமிழக மக்களின் சார்பில் கோரிக்கை விடுத்தோம். பல்வேறு அரசியல் காரணங்களைக் கருத்தில்

## சிவகாசியில் மாண்புமிகு முதல்வர் நி[illegible]

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் **22.8.94** அன்று சிவகாசி நகருக்கு வருகை தந்து, **153** கோடி ரூபாய் பெருமானமுள்ள திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், தொடங்கி வைத்தும், **40,000** க்கும் மேற்பட்டவர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கிச் சிறப்புரை ஆற்றினார்.*

*பின்னர், விழா மேடையிலிருந்து கிளம்பி, சாலையில் இருமருங்கிலும் கூடியிருந்த மக்களைப் பார்த்துக் கை அசைத்த வண்ணம், பலரிடமிருந்து மனுக்களைப் பெற்றுக் கொண்டு சிவகாசி அரசினர் விருந்தினர் மாளிகைக்குச் சென்றடைந்தார். அங்கு காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.*

*மதியம் **3** மணிக்கு சிவகாசி நகரை விட்டு, ஹெலிக்காப்டரில் கிளம்பி, விருதுநகர் வந்து அடைந்தார். விருதுநகர் ஹெலிக்காப்டர் விமானதளத்தில் தனது வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்த மக்களை, அவர்கள் நின்றிருந்த இடத்திற்கு அருகில் சென்று, அவர்களது வரவேற்பை ஏற்றுக்கொண்டார்.*

*பின்னர், சாலையின் இருமருங்கிலும் கூடியிருந்த மக்களைப் பார்த்து கை அசைத்த வண்ணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு வந்து அடைந்தார். காவல் துறை இயக்குநர் திரு.எஸ்.ஸ்ரீபால், கூடுதல் இயக்குநர் திரு. வால்டர் தேவாரம், இராமநாதபுரம் சரகக் காவல் துறை துணைத் தலைவர் திரு.கே.ஆர்.ஷ்யாம்சுந்தர், மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு.எம்.என்.ஜாபர் செய்ட், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே.என்.வெங்கட்ரமணன், ஆகியோர் மலர்ச் செண்டு கொடுத்து வரவேற்றார்கள்.*

*பெண் காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்ட பின்னர், ரிப்பனை வெட்டி, காவல் நிலையத்தைத் திறந்து வைத்தார். அங்கு பதித்து வைக்கப்பட்டிருந்த கல்வெட்டையும் திறந்து வைத்தார். குத்து விளக்கை ஏற்றி வைத்த பின்பு, பார்வையாளர் பதிவேட்டில் தனது கருத்துரைகளையும், அறிவுரைகளையும் பதிவு செய்தார். அந்தக் காவல் நிலையத்தில் பெண் ஆய்வாளருக்கு எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.*

*வெளியில் அமைக்கப்பட்ட மேடையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்குக் காவல் துறையின் சார்பில் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. அங்கு கூடியிருந்த ஆயிரக் கணக்கானோர், மாண்புமிகு தமிழக முதலமைச்சரைக் கண்டதும், வாழ்த்தொலி எழுப்பி, கரகோஷம் செய்து, தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவர்களைப் பார்த்துக் கை அசைத்து, தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.*

*பின்னர் ஹெலிக்காப்டரில் பயணம் செய்து மதுரை வந்தடைந்து, தனி விமானம் மூலம் மாலை **6** மணிக்குச் சென்னை வந்தடைந்தார்.*





கொண்டு, மத்திய அரசுக்கு எந்த விதமான பிரச்சினையும் இன்றி, இந்த அரசியல் சட்டத் திருத்தத்தை எளிதாக்க வேண்டும் என்பதற்காக, டெல்லியிலுள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும், நான் கடிதம் எழுதினேன். எனது கடிதத்தில், தமிழகத்தின் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையின், வரலாற்றுப் பின்னணியையும், இட ஒதுக்கீட்டு முறை கடைப்பிடிக்கப்பட்டு, சமூக நீதி காப்பாற்றப்பட வேண்டிய அவசியம் குறித்தும், தெளிவாக விளக்கி இருந்தேன்.

எனது சார்பில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாரதப் பிரதமர் முதல், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை, பலதரப்பு மக்களைச் சந்தித்து, நமது கோரிக்கைக்கு ஆதரவைச் சேர்த்தார்கள். அதன் விளைவாக, நாடாளுமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும், அரசியல் சட்டத் திருத்தத்திற்கு, ஒரு உகந்த சூழ்நிலையையும், சாதகமான பொதுக் கருத்தையும் உருவாக்கினோம்.

பாராளுமன்றத்தில், வேறு ஒரு பிரச்சினை மீது, தங்களது எதிர்ப்பைத் தெரிவித்து, எதிர்க் கட்சியினர், பாராளுமன்றக் கூட்டத் தொடரைப் புறக்கணித்த போது கூட, இந்த அரசியல் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டால், அதற்கு ஒப்புதல் அளிக்க, தயாராக இருப்பதாகத் தெரிவித்து, தங்களது ஆதரவை நமக்கு நல்கினார்கள். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், மத்திய உள்துறை அமைச்சர் திரு எஸ்.பி. சவான் அவர்களும், இந்தச் சட்டத் திருத்தத்திற்குத் தங்கள் ஆதரவை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்கள்.

ஆனால், செய்தித் தாள்களில் சில தினங்களாக, இந்தப் பாராளுமன்றக் கூட்டத் தொடரில், நாம் ஆவலோடு எதிர்நோக்கி இருக்கும், அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்தை, மேற்கொள்ள இயலாத சூழ்நிலை இருப்பதாக, வெளிவந்துள்ள செய்தி, தமிழக மக்களிடையே, ஒரு தேவையற்ற மன உளைச்சலையும், வருத்தத்தையும், கவலையையும் உண்டாக்கி உள்ளது. எனது தலைமையில் அமைந்த தமிழக அரசு, ஆக்கபூர்வமான முறையில் செயல்பட்டு வருவதால், மத்திய அரசின் ஆதரவுடனும், அனைத்து அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்புடனும், இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்பட்டு விடும், என்ற நம்பிக்கையின் அடிப்படையில், ஒரு அமைதியான சூழ்நிலை, தமிழகத்தில் நிலவிக் கொண்டிருக்கிறது. தங்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, தமிழக அரசு முனைப்புடன் செயல்பட்டு இருப்பதால், மக்கள் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். எனவேதான், போராட்டங்களும், பொருட்சேதங்களும், இதுவரை தவிர்க்கப்பட்டுள்ளன. மக்கள் மனதில் சஞ்சலமும், கொந்தளிப்பும் ஏற்படாமல், நாம் தவிர்த்து வந்துள்ளோம்.

தங்களது உணர்வுகளுக்கு, மத்திய அரசு மதிப்பு அளித்து, சட்டத் திருத்தத்தை மேற்கொள்ளும் என்று, இப்போதும் தமிழக மக்கள் நம்புகிறார்கள். எனவே தான், அவர்களின் ஒட்டுமொத்த சார்பில், இந்தச் சட்டத் திருத்தத்தை, உடனே கொண்டு வந்தே ஆக வேண்டும் என்று பாரதப் பிரதமர் அவர்களை, நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத் திருத்தத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற, எந்தத் தடையும் இல்லாத சூழ்நிலையில், இந்தச் சட்டத்

திருத்தத்தை, மத்திய அரசு மேற்கொண்டே ஆக வேண்டும். தமிழகத்தில், இந்த இட ஒதுக்கீட்டு முறையை, அனைவரும் ஏற்றுக்கொண்டு, எல்லா அரசியல் கட்சிகளும், ஒத்துழைப்புத் தர முன் வரும்போது, சட்டத் திருத்தத்தை, மேற்கொள்ள இயலாத சூழ்நிலை ஒன்று. நிச்சயமாக ஏற்பட வழியில்லை, அப்படி ஏற்படும் இடர்ப்பாடுகளை, நாம் எப்படியேனும் எதிர்கொண்டு, வெற்றி கண்டாக வேண்டும் என்பதில், நானும், தமிழக அரசும, உறுதியாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரை என்றும் இல்லாத அளவிற்குப் பெண்களின் நலனிலும், குழந்தைகளின் நலனிலும், தனிக் கவனம் செலுத்தி வருகின்ற எங்கள் அரசு, 'குழந்தைகள் 15 அம்ச நலத் திட்டத்தை'த் தீட்டும்போது, இம்மாவட்டத்தில், தீப்பெட்டித் தொழிற்சாலைகளில், பணிபுரிந்து வரும் 15,000 குழந்தைத் தொழிலாளர்களின், எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, குழந்தைத் தொழிலாளர்களின் குறைகளைக் களைவதை, ஒரு அம்சமாக அறிவித்துள்ளோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குழந்தைத் தொழிலாளர்களைப் படிப்படியாக நீக்கவும், அதே நேரத்தில், அத்தகைய குடும்பங்கள், பொருளாதாரச் சுமையினால், நலிவடையா வண்ணம், சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்தவும், எங்கள் திட்டத்தில் ஏற்பாடு செய்துள்ளோம்.

இம்மாவட்டத்தில், 2,150 முன்னாள் குழந்தைத் தொழிலாளர்களுக்கு, உபகாரச் சம்பளத்துடன், சிறப்புப் பள்ளிகளில், கல்வி பயிற்றுவிக்கப்படுகின்றது. இந்த ஆண்டு, மேலும் 1000 குழந்தைத் தொழிலாளர்களைத் தேர்ந்



***எவ்வளவு இடையூறு எவ்வளவு பெரிய அளவில் வந்தாலும், கலங்காமல் உறுதியுடன் எடுத்த காரியத்தைச் செய்து முடிப்பவனே சிறந்த மனிதன்.***

*(செப்டம்பர் 11, மகாகவி பாரதி நினைவு நாள்)*

தெடுத்து, பள்ளிக்கு அனுப்பி, கல்வி அறிவைப் புகட்டவும், அவர்களின் பெற்றோர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்க, ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், வருவாயைப் பெருக்கும் கடனுதவிகளை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த, பெண் குழந்தைகளின் கல்வியில், ஒரு புதிய எழுச்சியை ஏற்படுத்த, 3 ஆம் வகுப்பு முதல், 5 ஆம் வகுப்பு வரை பயிலும் பெண் குழந்தைகளுக்கு, ஆண்டொன்றுக்கு 500 ரூபாய் உதவித் தொகை வழங்கும் திட்டம், தற்போது நான்கு மாவட்டங்களில் மட்டும், செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தின் தன்மையைக் கருத்தில் கொண்டு, இந்தத் திட்டம் இன்று முதல், இம்மாவட்டத்திலும் செயல்படுத்தப்படும் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டம், பெண் குழந்தைத் தொழிலாளர்களின், எண்ணிக்கையைக் குறைக்கவும், அவர்களின் கல்விக் கண்ணைத் திறந்து வைத்து, அவர்களின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்கவும், துணை புரியும் என்றும் ஒரு புதிய கலாச்சார புரட்சி ஏற்பட, வழி வகுக்கும் என்றும் நான் பரிபூரணமாக நம்புகிறேன்.

இம்மாவட்டத்தின் தலைமையிடமான விருதுநகரில், 4 இடங்களில் இருப்புப் பாதை, நகரின் குறுக்கே செல்லுகின்ற காரணத்தினால், போக்குவரத்து வெகுவாகத் தடைப்படுவதால், வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்படுகின்றன என்பதை, நான் நன்கு அறிவேன். இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க, அருப்புக்கோட்டை விருதுநகர் சாலையிலுள்ள, இருப்புப் பாதையின் மீது ஒரு ரயில்வே மேம்பாலம் கட்டப்பட வேண்டும் என்ற நியாயமான கோரிக்கை, கடந்த 30 ஆண்டுகளாக, அப்பகுதி வாழ் மக்களால் கொடுக்கப்பட்டு வருவதையும், நான் அறிவேன். மக்களின் துயர் துடைப்படையே, தலையாய கடமையாக, தாரக மந்திரமாகக் கொண்டிருக்கும், உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில், அமைந்துள்ள இந்த அரசு, விருதுநகரில் ரயில்வே மேம்பாலத்தை, கட்டுவதற்குரிய சாத்தியக் கூறுகளை, விரைவில் ஆராய்ந்து பாலம் கட்டுவதற்கான, அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதை, மிக்க மிகழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்குத் தொடர்ச்சி மலையில், நகரியார் நதிக்குக் குறுக்கே, சாஸ்தா கோவில் அணைக்கட்டு கட்ட வேண்டுமென்ற ஆதங்கம், ராஜபாளையம் பகுதியைச் சேர்ந்த மக்களின் மனதில் இருப்பதையும், நான் அறிவேன். எனவே இந்த அணைக்கட்டு கட்டுவதற்குரிய, சாத்தியக் கூறுகளை ஆராய்ந்த பின்னர், இத்திட்டத்தைத் தமிழக அரசு மேற்கொள்ளும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

"கோதை பிறந்த ஊர் கோவிந்தன் வாழும் ஊர்" என்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற, ஸ்ரீவில்லிபுத்தூரில் அமைந்துள்ள ஸ்ரீ ஆண்டாள் கோயில் கோபுரத்தின், இரண்டாம் கட்டப் பணிகளுக்காக, தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியம், 60 இலட்சம் ரூபாயை, ஒதுக்கீடு செய்துள்ளது என்பதையும், இதற்கான பணி விரைவில் தொடங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கோயில் கோபுரம் தான், நமது அரசின் சின்னத்தில் பெருமையுடன் விளங்கிக் கொண்டிருக்கிறது.

இம்மாவட்டத்தின் கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர்கள், தாங்கள் தயாரிக்கும் ஜனதா சேலைகளை, மதுரையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்குக் கொண்டு சென்று கொடுக்க வேண்டிய சூழ்நிலையினால் ஏற்பட்ட சிரமத்தை அறிந்தவுடன் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு நான் தக்க ஆணைகளை வழங்கியுள்ளேன். அதன்படி, இனி கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், கூட்டுறவுக் கைத்தறிச் சங்கங்கள் இருக்கும் இடங்களுக்கே சென்று, சேலைகளைக் கொள்முதல் செய்யும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலைகள், அதாவது மொத்தம் 15 இலட்சம் சேலைகள், கூட்டுறவு நெசவாளர் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் நெசவாளப் பெருமக்களுக்கான, குடியிருப்புகளைக் கட்டித் தரும் பணியை, ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் செயல்படுத்தி வருகின்றோம். அந்த வகையில் இந்த மாவட்டத்தில் அருப்புக் கோட்டை, பொட்டுலுப்பட்டி, மற்றும் புளியம்பட்டி ஆகிய கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த நெசவாளப்பெருமக்களின் உபயோகத்திற்காகக் கட்டி முடிக்கப்பட்டுள்ள 118 குடியிருப்புகளைத் திறந்து வைத்ததில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். தமிழக நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை கிடைத்திட, அவர்கள் தயாரிக்கும் புடவைகளையும், வேட்டிகளையும் வாங்கி, நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு பொங்கல் திருவிழாவின்போதும் இலவசமாக வழங்கி வருகின்றோம். ஒவ்வொரு ஆண்டும் 60 இலட்சம் சேலைகளையும், 60 இலட்சம் வேட்டிகளையும், 50 கோடி ரூபாய் செலவில் வாங்கி வருவதால், நெசவாள சமுதாய பெருமக்களின் பிரச்சினையைப் பெருமளவு தீர்த்து வைத்திருக்கிறோம் என்பதை, இந்த நல்ல நேரத்தில், மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

போக்குவரத்து வசதி ஏற்படுத்தவும், பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்கவும், அனைத்து மாவட்டங்களிலும் உள்ள, கிராம இணைப்புச் சாலைகளை, நன்முறையில் பராமரிக்க வேண்டும் என்பதில், எங்களது அரசு, மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இந்த மாவட்டத்திலுள்ள மொத்தம் 19 இடங்களில், கிராம இணைப்புச் சாலைகளை இரண்டரைக் கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தி, பராமரிப்புப் பணிகளை இன்று, இவ்விழாவில் துவக்கி வைத்ததில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பொதுவாக, நன்முறையில் பராமரிக்கப்படும் இணைப்புச் சாலைகள், ஊரகப் பொருளாதாரத்தின் விரைவான வளர்ச்சிக்கு, நிச்சயம் வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே தான், கிராமப் புற இணைப்புச் சாலைகளின் மேம்பாட்டிற்காக, அதிக நிதி ஒதுக்கீடு செய்து, தனி ஈடுபாட்டைக் காட்டி வருகிறது, உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த, உங்கள் அரசு.

'அனைவருக்கும் வீடு' என்ற கொள்கையில், ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ள எங்களது அரசு, வீட்டு வசதி நிறுவனங்களின் மூலம், பெரு நகரம்

இம்மாவட்டத்தில், 8,000 தறிகளில் ஜனதா சேலை உற்பத்தி செய்யப்பட்டு வருவதால், இலவசப் புடவை வேட்டி வழங்கும் திட்டத்தின் கீழ், 12 இலட்சம் சேலைகள் இந்த மாவட்டத்தில் இருந்து கொள்முதல் செய்ய ஏற்கெனவே ஆணையிடப்பட்டிருந்தது. இம்மாவட்டத்து நெசவாளர்களின் வேண்டுகோளை ஏற்று, இந்த வருடம் மேலும் கூடுதலாக, 3 இலட்சம்





> உங்கள் உதடுகள் மூடிக் கொள்ளட்டும்,
> உங்கள் மனம் திறந்து கொள்ளட்டும்.
>
> -சுவாமி விவேகானந்தர்

முதற்கொண்டு, சிறிய ஊர்கள் வரை வாழ்கின்ற மக்களுக்கு, எங்கள் கொள்கையின் பலன்கள் சென்றடைய, பல்வேறு புதிய வீட்டு வசதித் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றது.

15 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் சிவகாசி, விருதுநகர், ராஜபாளையம், சாத்தூர், ஆகிய இடங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ள, 1730 புதிய குடியிருப்புகளைத் திறந்து வைத்ததிலும், விருதுநகர் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில், 9 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில், 629 குடியிருப்புகளைக் கட்டுவதற்கு, அடிக்கல் நாட்டியதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மாவட்டத்தின் நீர்ப்பாசனப் பெருக்கத்திற்கும், வேளாண் வளர்ச்சிக்கும், பல்வேறு திட்டங்களை இன்று துவக்கி வைத்ததில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 87 இலட்சம் ரூபாய் செலவில், ஆனைப்பாறை அருகே, அர்ஜுனா நதியின் குறுக்கே, கட்டப்பட்ட அணைக்கட்டை, இன்று திறந்து வைத்துள்ளேன். புதிதாக வெட்டப்பட்ட 8.2 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய் மூலம், 54 மில்லியன் கன அடி நீர், திருத்தங்கல் பெரியகுளத்திற்குக் கொண்டு செல்லப்படும். இப்பகுதியின் வேளாண் வளர்ச்சிக்கு, இந்த அணைக்கட்டு பெரிதும் உதவும் என்று நம்புகிறேன்.

மழைக் காலங்களில், இருக்கன்குடிப் பகுதியைச் சுற்றிலும் வெள்ளம் ஏற்படுவதைத் தடுக்கவும், அந்த மழை நீரைத் தேக்கி, பாசனத்திற்குப் பயன்படுத்தவும், 29 கோடி ரூபாய் செலவில், 500 மில்லியன் கன அடி நீர், கொள்ளளவு கொண்ட, இருக்கன்குடி நீர்த்தேக்கம் கட்ட அடிக்கல் நாட்டியதிலும், அதன் பயனாய் 10,000 டன்னுக்கு மேல், உணவு உற்பத்தியைப் பெருக்க, வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவிப்பதிலும், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த அணைக்கட்டு கட்டி முடிக்கப்பட்ட பின்பு, இந்த அணையில் இருந்து குழாய் வழியாகச் சாத்தூர் நகராட்சிக்குக் கொண்டு சென்று, நாள் ஒன்றுக்கு 33 இலட்சம் லிட்டர் நீர் வழங்குகின்ற திட்டத்தை, நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில், இந்தத் திட்டத்தை செயல்படுத்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இருஞ்சிறை, உலக்குடி, மற்றும் ஆறு கண்மாய்களுக்கு நீர்ப் பங்கீடு செய்ய, அத்திக்குளம் கிராமத்திற்கு அருகே, கிருதுமால் நதியின் குறுக்கே, ஒரு கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில், கட்டப்பட்டு வரும் அணைக்கட்டு, வைகை ஆற்றில் வெள்ளம் புரண்டோடி கடலில் கலந்து வீணாகும் நீரை, இப்பகுதியின் பாசனத்திற்குப் பயன்படுத்த, இத்திட்டம் உதவி புரிவதோடு, வேளாண் உற்பத்திப் பெருக்கத்திற்கும் வழி வகுக்கும்.

இம்மாவட்டத்தின் பிரதான நதியாகிய, அர்ஜுனா நதியில் வீணாக ஓடி, கடலில் கலக்கும் நீரைத் தேக்கி, பாசனத்திற்குப் பயன்படுத்த, 9 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள, கோல்வார்பட்டி நீர்த்தேக்கத்தை, இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்கு இன்று அர்ப்பணித்ததில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட, எம். மீனாட்சிபுர மக்களின், மனம் மகிழும் வண்ணம், 15 இலட்சம் ரூபாய் செலவில், 4 மில்லியன் கன அடி நீர் கொள்ளளவு கொண்ட, கண்மாயைத் திறந்து வைத்ததில், மகிழ்ச்சி அடைகின்றேன்.

வாழவந்தான், பிறக்குடி, மருத்தூர், செட்டிக்குறிச்சி, உட்பட பல இடங்களில், European Economic Community நிறுவனத்தின் நிதி உதவியுடன், ஒரு கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பில், நீராதார மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள அடிக்கல் நாட்டியுள்ளேன். இம்மாவட்டத்தின் வேளாண் வளர்ச்சிக்கும், உற்பத்திப் பெருக்கத்திற்கும், இத்திட்டங்கள் உறுதுணையாக விளங்கும் என்று, உறுதியாக நம்புகிறேன்.

விருதுநகர் அரசு மருத்துவமனையில், கட்டி முடிக்கப்பட்டுள்ள, விபத்து, மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவு, தானியங்கி நீராவிச் சலவையகம், மற்றும் பல்வேறு துறைகளின் தேவைகளுக்காக, அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களைத் திறந்து வைத்ததில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்கின்ற மக்களின், குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இன்று 6 கோடி ரூபாய் செலவில் பல்வேறு புதிய குடிநீர்த் திட்டங்களைத் துவக்கி வைத்துள்ளேன்.



சிவகாசி நகரக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், சிவகாசி நகருக்கு, நாளொன்றுக்கு, 34 இலட்சம் லிட்டர் குடிநீர் கூடுதலாக வழங்கப்படும். புதிதாக 7,000 வீட்டுக் குழாய் இணைப்புகளும், வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின் உற்பத்தியைப் பொறுத்தவரை, நமது மாநிலம், கடந்த 3 ஆண்டுகளில் கண்டுள்ள வளர்ச்சி, முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு, மிகச் சீரிய முறையில் அமைந்துள்ளதை, அனைவரும் பாராட்டி வருகிறார்கள். குறிப்பாக, மாவட்ட அளவில் எழுகின்ற மின் தேவைகளை, நிறைவு செய்யும் வகையில், பல்வேறு இடங்களில், புதிய துணை மின் நிலையங்களை அமைப்பதில், எங்களது அரசு தீவிரம் காட்டி, கடந்த மூன்று ஆண்டுக் காலத்தில், ஒரு புதிய சாதனையைப் படைத்துள்ளது. காமராஜர் மாவட்டத்தில், பெருகி வரும் மின் தேவையைக் கருத்தில் கொண்டு, பரளச்சி, முடங்கியார் மற்றும் சிவகாசி நகர் ஆகிய மூன்று இடங்களில், 15 கோடி ரூபாய் செலவில், புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மூன்று துணை மின் நிலையங்களும், 2 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில், ஆலங்குளத்தையும் ராஜபாளையத்தையும் இணைக்கும், 110 கிலோ வாட் திறனுள்ள, மின் இணைப்புப் பணியும் முடிவுறும் போது, இம்மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கு, புதிய எழுச்சியை அளிக்கும் என்று, பரிபூரணமாக நம்புகிறேன்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட உள்ள, புதிய பால் பதன ஆலை முழுமை பெற்று



> எப்பொழுதும் உண்மையே பேசுங்கள்.
> உண்மைதான் பக்திக்கு வழிகாட்டுகிறது.
> சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்கிறது.
>
> -நபிகள் நாயகம்

இயங்கத் தொடங்கும்போது, இப்பகுதி வாழ் விவசாயப் பெருங்குடி மக்களின் பொருளாதாரத்தை நிலைப்படுத்தவும், உயர்த்தவும் வழி வகுக்கும் என்று, நான் உறுதியாக நம்புகிறேன்.

தமிழகத்தின் உன்னதமான எதிர்காலத்தை, கருத்தில் கொண்டுதான், எங்கள் அரசு, விரைந்த தொழில் வளர்ச்சிக்கு, வித்திட்டு வருகின்றது. முற்போக்கான கொள்கைகளுடன், முன்னேற்றப் பாதையில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம். ஒருபுறம் பல்லாயிரம் கோடி மதிப்புள்ள பெரிய தொழில்கள், தொழில் துறையிலும், மின் உற்பத்தித் துறையிலும் தொடங்கி, ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வழி வகுக்கும் அதே நேரத்தில் மாவட்ட அளவிலும், சிற்றூர்களிலும், தொழில் முனைவோர், புதிய தொழில்களைத் தொடங்க உதவியாக, அவர்களுக்கு அடிப்படை வசதிகளை, ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றோம். இந்த வகையில் ராஜபாளையத்தில், புதிய தொழிற்பேட்டை 3 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு சிறு தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் அமைக்க, இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன். இந்தத் தொழில் திட்டமானது, முழுமை பெற்று, இந்த மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலுள்ள, இளைய தலைமுறையினரும், புதிதாகத் தொழில் தொடங்க, உரிய உற்சாகத்தையும், உத்வேகத்தையும் பெறுவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் திரு சஞ்சய்ராமசாமி அவர்கள் உரையாற்றும்போது சில கோரிக்கைகளை என்முன் வைத்தார்கள். விருதுநகரில் ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அவர் கேட்பதற்கு முன்பே முடிவு செய்து அறிவித்துள்ளேன். விருதுநகர் தொகுதியைச் சார்ந்த சதானந்தபுரம், கன்னிசேரி புதூர், சங்கரலிங்கபுரம் ஆகிய கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்குத் தக்க நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

'டி' கிளாஸ் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் திரு சஞ்சய்ராமசாமி அவர்கள் என்முன் வைத்துள்ளார்கள். இந்தக் கோரிக்கையும் அவர் என்னிடம் எடுத்துரைத்த வேறு சில கோரிக்கையும் கனிவுடன் பரிசீலனை செய்து விரைவில் முடிவுகள் அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண்களின் மேம்பாட்டிற்கும், குழந்தைகளின் நலத்திற்கும் எங்கள் அரசு, பல்வேறு நலத் திட்டங்களை முனைப்புடன் தீட்டி, ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் செயல்படுத்தி வருகின்ற சூழ்நிலையில் மகளிர் தங்களுக்குரிய சட்டப் பாதுகாப்பைப் பெறுவதற்கும், தங்களது பிரச்சினைகளுக்குச் சட்டப்பூர்வமான தீர்வைக் காண்பதற்கும் மனம் திறந்து பேசுவதற்கும் மகளிருக்கு ஒரு அமைப்பை, ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற,

எனது எண்ணத்தின் வெளிப்பாடு தான், மாவட்டம் தோறும் அமைக்கப்பட்டு வரும், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள். இம்மாவட்டத்திற்கான அனைத்து மகளிர் காவல் நிலையத்தினை, விருது நகரில் இன்று மாலை, நான் திறந்து வைக்க உள்ளேன் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரதட்சணைக் கொடுமை, பொருளாதார அடிமைத்தனை, பாலியல் ரீதியான குற்றங்கள் போன்ற சமுதாயக் கொடுமைகளிலிருந்து, இம்மாவட்ட மகளிரைக் காப்பாற்றுகின்ற அரிய பணியில், இந்த அனைத்து மகளிர் காவல் நிலையம், தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ளும் என்று நம்புகிறேன். இந்தக் காவல் நிலையத்தில் பணிபுரிய உள்ள, பெண் ஆய்வாளரும், பெண் காவலர்களும், தங்களை நாடி வருகின்ற மகளிரை, ஒரு சாதாரண மனுதாரராகக் கருதாமல், ஒரு சகோதரியாக, தாயாகக் கருதி, அன்புடனும், ஆதரவுடனும் அவர்களுடைய பிரச்சினைகளைக் கேட்டு, அதற்குத் தீர்வு காண்பதற்கு, ஒரு தியாக உள்ளத்துடன் செயலாற்ற வேண்டும் என்பதே எனது பேரவா. ஒரு சேவை மனதுடன், புனிதப் பணியாக இதைக் கருதி, அவர்கள் செயல்படுவார்கள் என்று, நான் உறுதியாக நம்புகிறேன்.

வட்டார வளர்ச்சிக்கு, ஒரு எழுச்சியைக் கொடுக்க, பல கோடி ரூபாய் மதிப்புள்ள, சமுதாய வளர்ச்சித் திட்டங்களை, மாவட்டந்தோறும் செயல்படுத்தி வருகிறது, உங்கள் அரசு. அது மட்டும் போதாது என்பதால், தனி நபர் பொருளாதார, மற்றும் சமூக வளர்ச்சிக்கு வழி வகுக்க, பல்வேறு நலத் திட்ட உதவிகளை, இலட்சக்கணக்கானோருக்கு வழங்கி வருகின்றது உங்கள் அரசு.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நான் செல்லும்போது, ஆயிரக் கணக்கானவர்களுக்கு, அரசின் நலத் திட்ட உதவிகளை வழங்கி, அவர்கள் வாழ்க்கை உயர்விற்கு, அடித்தளம் அமைக்கும்போது, மகிழ்ச்சி கலந்த மன நிறைவை அடைவதோடு, பொது வாழ்க்கையில் நான் ஈடுபட்டதற்கான, ஒரு பூரணத்துவம் பெற்றதாகவும் கருதுகிறேன். அந்த வகையில், இன்று, இந்த மாவட்டத்தைச் சேர்ந்த, 40,000 க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு, 25 கோடி ரூபாய மதிப்பில், அரசின் பல்வேறு நலத் திட்ட உதவிகள், வழங்கப்பட உள்ளன.

பயனாளிகள் ஒவ்வொருவருக்கும், நானே எனது கையால், உதவிகளை வழங்க வேண்டும் என்று விரும்பினாலும் நேரத்தின் அருமையைக் கருதி, ஒரு சிலருக்கு மட்டும், இந்த மேடையில் நான் வழங்க உள்ளேன். மற்றவர்களுக்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசு அலுவலர்களும், பயனாளிகள் இருக்கின்ற இடத்திற்கே சென்று, உதவிகளை வழங்குவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெறுபவர்கள், இந்த உதவிகளை, நானே உங்கள் வீடு தேடி வந்து, உங்களை வாழ்த்திக் கொடுத்ததாக கருதி, உங்கள் வாழ்க்கையின் மேம்பாட்டிற்கு, இதை ஒரு அடிப்படையாக வைத்து உங்கள் உழைப்பை மூலதனமாகக் கொண்டு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை, நீங்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன். உங்கள் முயற்சிகளுக்குரிய அத்தனைப் பலன்களும், உங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று, எனது பேரவாவினையும் தெரிவித்துக் கொள்கிறேன.

இந்த மாவட்டம், இதுவரை காணாத அளவில், இந்த விழாவினை சீரோடும் சிறப்போடும் அமைப்பதற்காக, அனைத்து ஏற்பாடுகளையும் செய்த மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர், அன்புச் சகோதரர் திரு எஸ்.கண்ணப்பன், மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர், அன்புச் சகோதரர் திரு எஸ். ரகுபதி, மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர், அன்புச் சகோதரர் திரு வி.சத்தியமூர்த்தி ஆகியோருக்கும், இம்மாவட்டச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல்துறை அதிகாரிகளுக்கும், எனது நெஞ்சார்ந்த பாராட்டுதல்களையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னைக் காண்பதற்காகவும், எனது பேச்சைக் கேட்பதற்காகவும், பெருந்திரளாகக் கூடியுள்ள, இம்மாவட்ட வாழ் மக்கள் அனைவருக்கும், என் நெஞ்சத்து நல்வாழ்த்துக்களைக் காணிக்கையாக்குகிறேன். நீங்கள் வாழ்க்கையில், எல்லா நலன்களும், வளங்களும் பெற்று, பல்லாண்டு வாழ வேண்டுமென்ற எனது உள்ளக் கிடக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- 22.8.1994-ல், சிவகாசியில் நடைபெற்ற மாபெரும் விழாவில் ஆற்றிய உரை.

★ தான் என்ற கர்வம்
உள்ளவன் தன்னை
இழக்கிறான்;
பொறாமைக்காரன்
நண்பனை இழக்கிறான்;
கோபக்காரன் தன்னையே
இழந்துவிடுகிறான்.

. ஹால்

# படமும் செய்தியும்



மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை 'ஆஸ்திரேலியாவைத் தூய்மையாக்குவோம்' இயக்கத்தின் தலைவர் திரு இயான் பி.சி. கியார்நான் அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார். அரசு தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர் அவர்கள் அப்போது உடனிருந்தார் (26.8.1994).



இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதரான திரு பிராங்க் ஜி. விஸ்னர், சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரக உயர் அதிகாரி திரு டிமோதி பி. ஹாஸர் இருவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்து உரையாடின ர் (26.8.1994).

எனது எண்ணத்தின் வெளிப்பாடு தான், மாவட்டம் தோறும் அமைக்கப்பட்டு வரும், அனைத்து மகளிர் காவல நிலையங்கள். இம்மாவட்டத்திற்கான அனைத்து மகளிர் காவல் நிலையத்தினை, விருது நகரில் இன்று மாலை, நான் திறந்து வைக்க உள்ளேன் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரதட்சணைக் கொடுமை, பொருளாதார அடிமைத்தனம், பாலியல் ரீதியான குற்றங்கள் போன்ற சமுதாயக் கொடுமைகளிலிருந்து, இம்மாவட்ட மகளிரைக் காப்பாற்றுகின்ற அரிய பணியில், இந்த அனைத்து மகளிர் காவல் நிலையம், தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ளும் என்று நம்புகிறேன். இந்தக் காவல் நிலையத்தில் பணிபுரிய உள்ள, பெண் ஆய்வாளரும், பெண் காவலர்களும், தங்களை நாடி வருகின்ற மகளிரை, ஒரு சாதாரண மனுதாரராகக் கருதாமல், ஒரு சகோதரியாக, தாயாகக் கருதி, அன்புடனும், ஆதரவுடனும் அவர்களுடைய பிரச்சினைகளைக் கேட்டு, அதற்குத் தீர்வு காண்பதற்கு, ஒரு தியாக உள்ளத்துடன் செயலாற்ற வேண்டும் என்பதே எனது பேரவா. ஒரு சேவை மனதுடன், புனிதப் பணியாக இதைக் கருதி, அவர்கள் செயல்படுவார்கள் என்று, நான் உறுதியாக நம்புகிறேன்.

வட்டார வளர்ச்சிக்கு, ஒரு எழுச்சியைக் கொடுக்க, பல கோடி ரூபாய் மதிப்புள்ள, சமுதாய வளர்ச்சித் திட்டங்களை, மாவட்டந்தோறும் செயல்படுத்தி வருகிறது, உங்கள் அரசு. அது மட்டும் போதாது என்பதால், தனி நபர் பொருளாதார, மற்றும் சமூக வளர்ச்சிக்கு வழி வகுக்க, பல்வேறு நலத் திட்ட உதவிகளை, இலட்சக்கணக்கானோருக்கு வழங்கி வருகின்றது உங்கள் அரசு.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நான் செல்லும்போது, ஆயிரக் கணக்கானவர்களுக்கு, அரசின் நலத் திட்ட உதவிகளை வழங்கி, அவர்கள் வாழ்க்கை உயர்விற்கு, அடித்தளம் அமைக்கும்போது, மகிழ்ச்சி கலந்த மன நிறைவை அடைவதோடு, பொது வாழ்க்கையில் நான் ஈடுபட்டதற்கான, ஒரு பூரணத்துவம் பெற்றதாகவும் கருதுகிறேன். அந்த வகையில், இன்று, இந்த மாவட்டத்தைச் சேர்ந்த, 40,000 க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு, 25 கோடி ரூபாய மதிப்பில், அரசின் பல்வேறு நலத் திட்ட உதவிகள், வழங்கப்பட உள்ளன.

பயனாளிகள் ஒவ்வொருவருக்கும், நானே எனது கையால், உதவிகளை வழங்க வேண்டும் என்று விரும்பினாலும் நேரத்தின் அருமையைக் கருதி, ஒரு சிலருக்கு மட்டும், இந்த மேடையில் நான் வழங்க உள்ளேன். மற்றவர்களுக்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசு அலுவலர்களும், பயனாளிகள் இருக்கின்ற இடத்திற்கே சென்று, உதவிகளை வழங்குவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெறுபவர்கள், இந்த உதவிகளை, நானே உங்கள் வீடு தேடி வந்து, உங்களை வாழ்த்திக் கொடுத்ததாக கருதி, உங்கள் வாழ்க்கையின் மேம்பாட்டிற்கு, இதை ஒரு அடிப்படையாக வைத்து உங்கள் உழைப்பை மூலதனமாகக் கொண்டு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை, நீங்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன். உங்கள் முயற்சிகளுக்குரிய அத்தனைப் பலன்களும், உங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று, எனது பேரவாவினையும் தெரிவித்துக் கொள்கிறேன.

இந்த மாவட்டம், இதுவரை காணாத அளவில், இந்த் விழாவினை சீரோடும் சிறப்போடும் அமைப்பதற்காக, அனைதது ஏற்பாடுகளையும் செய்த மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர், அன்புச் சகோதரர் திரு எஸ்.கண்ணப்பன், மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர், அன்புச் சகோதரர் திரு எஸ். ரகுபதி, மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர், அன்புச் சகோதரர் திரு வி.சத்தியமூர்த்தி ஆகியோருக்கும், இம்மாவட்டச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல்துறை அதிகாரிகளுக்கும், எனது நெஞ்சார்ந்த பாராட்டுதல்களையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னைக் காண்பதற்காகவும், எனது பேச்சைக் கேட்பதற்காகவும், பெருந்திரளாகக் கூடியுள்ள, இம்மாவட்ட வாழ் மக்கள் அனைவருக்கும், என் நெஞ்சத்து நல்வாழ்த்துக்களைக் காணிக்கையாக்குகிறேன். நீங்கள் வாழ்க்கையில், எல்லா நலன்களும், வளங்களும் பெற்று, பல்லாண்டு வாழ வேண்டுமென்ற எனது உள்ளக் கிடக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- 22.8.1994-ல், **சிவகாசியில்** நடைபெற்ற மாபெரும் **விழாவில்** ஆற்றிய உரை.

> ★ தான் என்ற கர்வம் உள்ளவன் தன்னை இழக்கிறான்;
> பொறாமைக்காரன் நண்பனை இழக்கிறான்;
> கோபக்காரன் தன்னையே இழந்துவிடுகிறான்.
>
> - ஹால்



# படமும் செய்தியும்



இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதரான திரு பிராங்க் ஜி. விஸ்னர், சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரக உயர் அதிகாரி திரு டிமோதி பி. ஹாஸர் இருவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்து உரையாடினர் (26.8.1994).



மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை 'ஆஸ்திரேலியாவைத் தாய்மையாக்குவோம்' இயக்கத்தின் தலைவர் திரு இயான் பி.சி. கியெர்நான் அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார். அரசு தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர் அவர்கள் அப்போது உடனிருந்தார் (26.8.1994).



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைத் தமிழ்நாடு தொழில வணிக சங்கங்களின் பிரதிநிதிகள், தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்கள். அப்போது, மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு வி. சத்தியமூர்த்தி அவர்கள் உடனிருந்தார் (26.8.1994).

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம் அறிமுகப்படுத்தவுள்ள நவீன சொகுசு குளு குளு பேருந்தினைத் தலைமைச் செயலகத்தில் பார்வையிட்டு, அப்பேருந்தில் காந்தி சிலைவரை பயணம் செய்து தலைமைச் செயலகம் திரும்பினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் உடன் சென்றனர்.





மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னையில் நடைபெற்ற தமிழ்த்தென்றல் திரு.வி.க. விழாவில் பங்கேற்று புலவர் இரா. இளங்குமரன் அவர்களுக்குத் திரு.வி.க. விருது வழங்கினார். மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் உடனிருக்கிறார் (1.9.1994).



மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், திரு.வி.க. விழாவில் பங்கேற்று டாக்டர் கரு. நாகராசன் அவர்களுக்குப் பாவேந்தர் விருது அளித்தார். மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் உடனிருக்கிறார்.



# தஞ்சைத் தரணியில் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு : சிறப்பு ஏற்பாடுகளும் வளர்ச்சிப் பணிகளும்

தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்பிற்கும், சீர்மிகு வளர்ச்சிக்கும் பெருமை சேர்க்கும் வகையில் இரண்டு உலகத் தமிழ் மாநாடுகளைக் கண்ட தமிழகம் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினை நடத்தும் பேறு பெற்றுள்ளது தமிழக மக்களுக்கு மட்டுமல்லாது உலகெங்குமுள்ள தமிழர்கள் எல்லாம் பெருமைப்படத்தக்க தொன்றாகும்.

1968-ல் சென்னை மாநகரில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக் காலத்தில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடும், 1981-ல் மதுரை மாநகரில் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆட்சியின்போது ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடும் கண்ட தமிழகம், 1995-ல் தஞ்சைத் தரணியில் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளது.

"உலகத் தமிழாராய்ச்சிக் கழகம்" என்னும் பன்னாட்டு அறிஞர்கள் குழுமியதொரு அமைப்பு இலண்டன் மாநகரில் நடத்தவிருந்த இம் மாநாட்டினைத் தமிழகத்திற்குக் கொணர்ந்த பெருமை தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களையே சாரும்.

### எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் நிகழ்ச்சிகள்:

**மாநாட்டு ஊர்வலம் மற்றும் துவக்க விழா:**

1995-ஆம் ஆண்டு சனவரி முதல் நாளன்று பிற்பகல் 3 மணியளவில் தொடங்கும் மாபெரும் மாநாட்டு ஊர்வலத்திற்குப் பின்னர், மாலையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் துவக்க விழா கோலாகலமாக நடைபெறவும், இவ்விழாவில் மத்திய அரசின் முக்கியப் பிரமுகர் தலைமை விருந்தினராகவும், அயல்நாட்டுத் தலைவர்கள், அமைச்சர் பெருமக்கள், அறிஞர்கள் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொள்ளவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கென மாண்புமிகு முதலமைச்சரவர்களின் சீரிய தலைமையில் மாநாட்டு வரவேற்புக் குழு, நிதியமைச்சரவர்கள் தலைமையில் நிகழ்ச்சிகள் அமைப்புக் குழு, வருவாய்த் துறை அமைச்சர் தலைமையில் சிறப்பு மலர்க்குழு, உணவு அமைச்சர் தலைமையில் விருந்தோம்பல் குழு, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தலைமையில் ஊர்வலக்குழு மற்றும் மருத்துவக் குழு, போக்குவரத்துத் துறை அமைச்சர் தலைமையில் போக்குவரத்து சுற்றுலாக் குழு, கைத்தறித் துறை அமைச்சர் தலைமையில் விளம்பரக் குழு, பொதுப் பணித்துறை அமைச்சர் தலைமையில் அரங்க அமைப்புக் குழு, வீட்டு வசதித் துறை அமைச்சர் தலைமையில் தங்குமிட வசதி வாய்ப்புக் குழு, சமூக நலத் துறை அமைச்சர் தலைமையில் கண்காட்சிக் குழு, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் தலைமையில் செய்தி மற்றும் மக்கள் தொடர்புக் குழு, கல்வியமைச்சர் தலைமையில் கலை நிகழ்ச்சிகள் குழு, உள்ளாட்சித் துறை அமைச்சர் தலைமையில் நகர் மேம்பாட்டுக் குழு, பேரவைத் தலைவர் தலைமையில் மாநாட்டு நிறைவு விழாக் குழு ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. அனைத்துக் குழுக்களின் பணிகளையும் ஒருங்கிணைத்துச் செயலாற்ற, தலைமைச் செயலர் தலைமையில் ஒருங்கிணைப்புக் குழுவும் இயங்கி வருகிறது.

**ஆய்வரங்க நிகழ்ச்சிகள்**

உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தால் தீர்மானிக்கப்படும் ஆய்வரங்க நிகழ்ச்சிகள் (Seminars) இம்மாநாட்டின் ஐந்து நாட்களும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நடைபெறும். இம் மாநாட்டு ஆய்வரங்கத் தலைப்பு "இருபத்தியோராம் நூற்றாண்டிற்குத் தமிழ்ப் பண்பாட்டின் பங்களிப்பு" (Contribution of Tamil Culture to 21st century) என்பதாகும். இத்தலைப்பினையொட்டி, தமிழியலின் பல்வேறு பொருண்மைகளில் பேராய்வாளர்கள் ஆய்வுக் கட்டுரைகள் படித்தளிப்பார்கள். இம்மாநாட்டு நிகழ்ச்சிகளில் அரசு விருந்தினராகக் கலந்துகொள்ள உலகத் தமிழாராய்ச்சிக் கழகப் பொறுப்பாளர்கள் உள்ளிட்ட 25 அயல் நாட்டறிஞர்களுக்கு அரசு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. அவர்கள் தத்தம் விருப்பத்திற்கேற்ப தமிழகம் வந்துசெல்லப் பயணச் செலவுகளைத் தமிழக அரசே ஏற்கும்.

இம்மாநாட்டு ஆய்வரங்கக் குழுத் தலைவராக உலகத் தமிழாராய்ச்சிக் கழகத் தலைவர் பேராசிரியர் கரஷிமா அவர்களும், ஆய்வரங்க அமைப்புக் குழுத் தலைவராகத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஔவை நடராசன் அவர்களும் திகழ்கின்றனர்.

**பொது அரங்க நிகழ்ச்சிகள்:**

இம்மாநாட்டின் ஐந்து நாட்களிலும் பொது அரங்க நிகழ்ச்சிகளாகக் கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம், இன்னிசை, தமிழிசை, நாட்டிய நாடகம், வரலாற்று நாடகம் போன்றவை சிறப்பான முறையில் நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கண்காட்சி**

மாநாட்டின்போது, தஞ்சை நகரில் தமிழ் மொழியின் தொன்



மைச் சிறப்பு, தமிழர் பண்பாடு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வண்ணம் அரசுத் துறைகள், நிறுவனங்கள் பங்குபெறும் கண்காட்சி ஒன்றும் நடத்தப்படும்.

**ஒலி-ஒளிக் காட்சி**

தமிழகத்தை ஆண்ட சோழ மன்னர்களின் வீர வரலாற்றைச் சித்திரிக்கும் ஒலி -ஒளிக் காட்சியினை அயல் நாட்டறிஞர்கள் கண்டு பிரமிக்கும் வகையில், சிறப்பாகத் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாநாட்டு நிறைவு விழா**

மாநாட்டு நிறைவு விழாவில்



மிகப் பிரம்மாண்டமான அளவில் கலை நிகழ்ச்சிகள், வீர விளையாட்டுகள், சாகசங்கள், மாணவ மாணவியரின் ஆடல் பாடல், அணி வகுப்புகள் ஆகியவற்றிற்கு ஏற்பாடுகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மாநாட்டிற்கான மற்ற சிறப்பு ஏற்பாடுகள்:**

மாநாட்டிற்கு வருகைதரும் பொது மக்களின் வசதிக்காகக் கூடுதல் பேருந்து வசதிகளும், பகலில் இளைப்பாறவும், இரவில் தங்கிச் செல்லவும் பெரிய பந்தல்களும் அருகில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதிகளும் அளிக்கப்படவுள்ளன. தஞ்சை ரயில் நிலையத்தைப் புதுப்பிக்கவும், கம்ப்யூட்டர் முன்பதிவு வசதி, கூடுதல் ரயில்கள், குளிர்பதனப் பெட்டிகள் இணைப்பு ஆகிய ஏற்பாடுகளைச் செய்து தரவும் தென்னக ரயில்வே ஒப்புக் கொண்டுள்ளது.

பொது மக்களுக்கு 300 கிராம் அளவிலான இரு வகை உணவுப் பொட்டலங்கள் "ஒரு பொட்டலம் ஒரு ரூபாய்" என்ற பெயரளவு விலையில் (name - sake price) ஆங்காங்கே விற்பனைக் கூடங்கள் மூலம் விநியோகிக்கப்படும். அத்துடன் குடிநீர்ப் பொட்டலங்களும் இலவசமாக வழங்கப்படும். தனியார் உணவுவிடுதிகளிலும், தரமான பொது உணவு (Common meal) தயாரித்து நியாயமான விலையில் உணவுப் பொட்டலங்களாக விற்பனை செய்ய உணவு விடுதி உரிமையாளர்களுடன் கலந்துபேசி நடவடிக்கை எடுக்கப்படும்.

## தஞ்சை நகரில் வளர்ச்சிப் பணிகள்

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் அறிஞர்கள் வந்து கலந்துகொள்ளும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி, தஞ்சை நகரில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு அரசு முன்னுரிமை அடிப்படையில் நிதியொப்பளிப்பு வழங்கியுள்ளது.

**புதிய இரயில்வே மேம்பாலம்:**

40 ஆண்டு காலமாகத் தஞ்சை மக்களின் கோரிக்கையாக இருந்து வந்த புதிய இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி ரூபாய் 5 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

**இரயில்வே கீழ்ப்பாலம்**

போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்கும் வகையில் இரயில்வே கீழ்ப்பாலத்தை உயர்த்தி, சாலை அகலப்படுத்தும் பணிகளை இரயில்வே துறையினரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான மதிப்பீடுகளை இரயில்வே பாலங்கள் தலைமைப் பொறியாளர் திரு. ரகுநாதன் அவர்களுடன் நேரில் கலந்து பேசி மதிப்பீடுகளை விரைவில் அரசுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**புறவழிச்சாலை Bypass Road or Ring Road**

தஞ்சை நகர எல்லையில் பெரம்பலூர் மானாமதுரை சாலையிலிருந்து நாகப்பட்டினம் கடலூர் மைசூர்சாலை வரை 17.4 கிமீ. வரையிலான வளைவுச் சாலை அமைக்கும் பணி ரூ.10 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளது. ரிங் ரோடு (Ring - Road) எனும் புதிய பாணியில் அரை வட்டச் சாலையாக அமைக்கப்படும். இச்சாலையின் ஒரு பகுதி (Phase -I) மட்டுமே நடைபெற்று வருகிறது. இரண்டாவது பகுதி (Phase-II) சாலைப் பணிக்கான மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**சாலைகள்:**

உலகத் தமிழ் மாநாடு நடக்கவிருப்பதையொட்டி, தஞ்சையில் ரூ.101/2 கோடி மதிப்பீட்டில் நெடுஞ்சாலைகளை அகலப்படுத்திச் சீரமைக்கும் பணிகளும், ரூ.2 கோடி மதிப்பீட்டில் நகராட்சி சாலைகளைப் புதுப்பிக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

**குடிநீர்வசதி:**

தஞ்சைமாநகரில் குடிநீர்க் குழாய்கள் அமைக்கும் பணி ரூ.57.36 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மின்சார வசதி:**

மாநாட்டின்போது தஞ்சை நகருக்குக் கூடுதல் மின்சாரம் தேவைப்படுமல்லவா? என்வே போதுமான மின்சாரத்திற்கும் தங்குதடையின்றி மின்சார விநியோகத்திற்கும் ரூ.132 இலட்சம் மதிப்பீட்டிலான பணிகள் மின் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தஞ்சை அரண்மனையைப் புதுப்பிக்கும் பணிகள்:**

இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு முன்பணம் ரூ.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**தஞ்சை நகரில் எட்டாவது தமிழ் மாநாட்டின் நினைவுச் சின்னங்களாக** நிலை பெறத் தக்கவகையில் நகரின்நுழைவாயில்களில் 7 அலங்காரத் தோரண வளைவுகள், நினைவு கோபுரம், நினைவு மண்டபம், இராசராச சோழன் சிலை ஆகியவை நிறுவப்படவுள்ளன.

**தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சிறப்புப் பணிகள்:**

ரூ. ஒரு கோடியே 42 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாநாட்டில் நினைவுச் சின்னங்களாக மகரத் தோரண வாயில், திருவள்ளுவர் சிலை ஆகியவை நிறுவப்படவுள்ளன.

**பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படும் பணிகள்:**

பெரிய அணைக்கட்டு கால்வாய்க் கரையினை அழகுபடுத்தி மின் விளக்குகளால் அலங்கரித்தல்:

சிவகங்கைப் பூங்கா மற்றும் இராஜப்பா தோட்டம் புதுப்பிக்கும் பணிகள்; (இப்பணி நகராட்சிக்கு மாற்றப்படவுள்ளது).

கண்காட்சி நடைபெறும் புனித பீட்டர்ஸ் பள்ளித் திடலுக்குச் சாலையமைத்தல்;



குழந்தையின் எதிர்காலம் முழுவதும்
அதன் தாயின் செயலில்தான் அடக்கம்

-நெப்போலியன்

கல்லூரி விடுதிகளை புதுப்பித்தல்;

அரசுக் கட்டடங்களைப் புதுப்பித்தல்

-போன்ற பல பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**மாநிலக் கட்டுமானக் கழகத்தால் மேற்கொள்ளப்படும் பணிகள்:**

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளுடன், புறவழிச்சாலை அமைக்கும் பணிகளும், தஞ்சை நகரின் நுழைவாயில்களில் எழில் அலங்காரத் தோரண வளைவுகளும், நினைவுக் கோபுரம், நினைவு மண்டபம் அமைக்கும் பணிகளும் மாநிலக் கட்டுமானக் கழகத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

**வீட்டுவசதி வாரியத்தால் மேற்கொள்ளப்படும் பணிகள்:**

மாநாட்டிற்கு வரும் அயல்நாட்டறிஞர்கள் தங்கும் வசதிக்காகத் தமிழ்ப் பல்கலைக் கழக வளாகத்தில் 83 உயர் வருமானப் பிரிவினருக்கான வீடுகள் ரூ.3.50 கோடி மதிப்பீட்டிலும், 304 அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்பு வீடுகள் ரூ.5.20 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், பல்கலைக் கழகத்திற்கு அருகாமையில் வல்லம் என்னும் ஊரில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் 480 மத்திய வருமானப் பிரிவினருக்கான வீடுகள் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது. இம்மாநாடு முடிந்த பின்னர், இவ்வீடுகள் வீட்டு வசதி வாரியத்தின் விதிமுறைகளின்படி பொது மக்களுக்கு வழங்கப்படும்.

**தஞ்சை நகராட்சியில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள்:**

1. தஞ்சை நகர் முழுவதும் சோடியம் ஒளி விளக்குகள் அமைத்தல்;

2. சாலை சந்திப்புகளில் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் படுகைகள் (Traffic Islands) அமைத்து, அவற்றின் பராமரிப்புப் பொறுப்பைத் தனியார் / சேவை நிறுவனங்களிடம் ஒப்படைத்தல்;

3. பேருந்து நிறுத்தங்களில் நிழற்குடைகள் அமைத்தல்;

4. நகராட்சி எல்லைக்குள் இணைப்புச் சாலைகளைப் புதுப்பித்தல்;

5. கூடுதல் தேவைக்கு நகரில் ஆங்காங்கே ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்

6. புதிய பேருந்து நிலையம்;

7. மத்தியப் பேருந்து நிலையத்தைப் புதுப்பித்தல்;

8. நகரப் பேருந்து நிலையத்தைப் புதுப்பித்தல்;

9. புதிய கழிப்பிடங்கள் அமைத்தல்;

10. தற்போதுள்ள கழிப்பிடங்களைப் புதுப்பித்தல்;

11. கொசு ஒழிப்புப் போன்ற சுகாதாரப் பணிகள்;

12. மாநாட்டின்போது நகரின் தூய்மையைப் பாதுகாக்க, சிறப்பாக மேற்கொள்ள, தக்க முறையில் துப்புரவுப் பணிகள்

**பொதுச் சுகாதாரம் மற்றும் மருத்துவத் துறைப் பணிகள்:**

1. தஞ்சை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிய தீவிர சிகிச்சைப் பிரிவு (Intensive care unit) மற்றும் விபத்து சிகிச்சைப் பிரிவு (Trauma Ward) ஏற்படுத்துதல்.

2. மாநாட்டின் போது முதலுதவி அவசர சிகிச்சை மையங்கள் அமைத்தல்.

3. மாநாட்டின்போது பொது மக்களின் தேவைக்கான 2000 தற்காலிகக் கழிப்பிடங்கள் (RCAP Latrines) அமைத்தல்.

4. நோய்த் தடுப்பு, சுகாதாரப் பணிகள்.

**மாநாட்டின் சிறப்பு மலர்:**

மாநாட்டின் துவக்க விழாவில் சிறப்பு மலர் வெளியிட மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம் அவர்களின் தலைமையிலான மலர்க் குழுவால் முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல்வேறு துறைகளிலும், நிறைந்த அறிவும் அனுபவமும் பெற்ற அறிஞர் பெருமக்களை உறுப்பினர்களாகக் கொண்ட இம்மலர்க் குழுவின் பணிகள் மும்முரமாகவும் முழு வேகத்துடனும் நடைபெற்று வருகின்றன.

மாநாட்டின்போது இராஜராஜ சோழன் உருவம் பொறித்த நாணயமும், திருவள்ளுவர் நினைவு அஞ்சல் தலை ஆகியவற்றைத் துவக்க நாள் விழாவில் வெளியிட, தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

உலகத்தமிழ் மாநாட்டுப் பணிகளை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு.எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் பார்வையிட்டனர்.

**—கே.பி. நல்லதம்பி,**
**செய்தி-மக்கள்தொடர்பு அலுவலர்**
**தஞ்சாவூர்**



# சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம்

## விரைவில் செயல்படுத்த மத்திய அரசு முன்வர வேண்டும்!

## மாண்புமிகு தமிழக முதல்வர் அறிக்கை

இந்தியாவின் மேற்குக் கடற்கரையிலுள்ள துறைமுகங்களுக்கும், கிழக்குக் கடற்கரையிலுள்ள துறைமுகங்களுக்கும் இடைப்பட்ட கடல் தூரத்தைக் குறைப்பதற்கும், இலங்கையைச் சுற்றிக் கப்பல் பயணம் செய்ய வேண்டிய சூழ்நிலையைத் தவிர்க்கவும், தூத்துக்குடி துறைமுகத்தின் கடல்வழி சரக்குப் போக்குவரத்தை அதிகரிக்கவும் ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு வழிவகுக்கவும், இராமேஸ்வரம் தீவிற்கும் இலங்கையைச் சேர்ந்த தலைமன்னாருக்கும் இடையேயுள்ள கடல் பகுதியை ஆழப்படுத்தி பாக்சலசந்தி வழியாகக் கப்பல் போக்குவரத்தை ஏற்படுத்துவதே "சேது சமுத்திரம் கால்வாய் திட்டமாகும்".

இன்றைய அளவில் 400 கோடி ரூபாய் முதலீட்டில் மேற்கொள்ள வேண்டிய இந்தத் திட்டம் காலதாமதமின்றி மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நான் பதவியேற்ற நாள் முதல் கடிதம் மூலமாகவும், நேரிலும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைப் பலமுறை வற்புறுத்தி வந்துள்ளேன். ஒரு நூற்றாண்டுக் காலமாக, இத்திட்டத்தை ஆய்வு செய்து பல்வேறு குழுக்கள் இப்பிரச்சினைகள் குறித்து விவாதித்து, இத்திட்டம் செயல்படுத்தத்தக்க ஒரு திட்டம் என்று சுட்டிக் காட்டிய பின்பும் இதுவரை மத்திய அரசால் இத்திட்டத்திற்கு ஒப்புதல் தரப்படவில்லை.

1860ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டின் கப்பற்படைத் தளபதி டெய்லர் என்பவர் இத்திட்டத்திற்கு முதன்முதலாக வடிவம் தந்தபோது, திட்ட மதிப்பீடு 50



இலட்சம் ரூபாயாகத் தான் இருந்தது. பின்னர், 1956ஆம் ஆண்டு திரு ஏ. ராமசாமி முதலியார் அவர்களின் தலைமையில் மத்திய அரசு அமைத்த குழு, சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டமும், தூத்துக்குடி துறைமுகத் திட்டமும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதால், இரண்டையும் ஒரே நேரத்தில், செயல்படுத்த வேண்டும் எனப் பரிந்துரை செய்தது. அதன்படி 1963ஆம் ஆண்டு இத்திட்டம் செயல்படுத்தியிருந்தால், 21 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தி இருக்க முடியும். பின்னர், 1963ஆம் ஆண்டு மத்திய அமைச்சரவை இத்திட்டத்தை நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்ப்பது என முடிவு எடுத்து இருந்தும், 1964ஆம் ஆண்டு திரு. நாகேஸ்வர சிங் என்பவர் தலைமையில் அமைக்கப்பட்ட குழு, இத்திட்டத்தை செயல்படுத்த பரிந்துரை செய்திருந்தும் இன்று வரை இத்திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கவில்லை.

தமிழகத்தின் விரைந்த வளர்ச்சிக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் இந்தச் சூழ்நிலையில், சேது சமுத்திரம் கால்வாய்த் திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசு முன்வர வேண்டும் என்று, தமிழக மக்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் கப்பல் போக்குவரத்துத் தூரம் குறைக்கப்படுவதோடு, ஆண்டொன்றுக்கு 130 கோடி ரூபாய் அளவில் அந்நியச் செலாவணி மிச்சமாகும். தூத்துக்குடி

அனல்மின் நிலையத்திற்கு, ஹால்டியா துறைமுகத்திலிருந்து நிலக்கரி கொண்டு வரப்படும் போக்குவரத்துச் செலவில் கிட்டத்தட்ட வருடத்திற்கு 10 கோடி ரூபாய் குறையும். அதன் விளைவாக மின் உற்பத்தியும் குறைந்த செலவில் மேற்கொள்ள முடியும். 1974இல் துறைமுகம் ஆரம்பிக்கப்பட்ட பின்பு, இன்று தூத்துக்குடி பகுதியில் தொழில்கள் பெருகியுள்ளன. இந்தத் துறைமுகம் சர்வதேசக் கண்டெய்னர் போக்குவரத்தில் ஒரு முக்கியக் கேந்திரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. பனாமா கால்வாய், சூயஸ் கால்வாய் போன்று, இந்த சேது சமுத்திரம் திட்டமும், தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் வழி வகுக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆழ் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை இலங்கைக் கப்பற்படையினரின் தாக்குதலிலிருந்து காப்பாற்றுவதற்காக நான் எடுத்துள்ள முயற்சிகளின் விளைவாக மத்திய அரசு இலங்கை அரசுடன் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டிருந்தாலும், இந்தச் சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் செயல்படுத்தும்போது, தமிழக மீனவர்களுக்கு ஒரு உறுதியான பாதுகாப்பை நிச்சயமாகத் தமிழக அரசால் கொடுக்க முடியும்.

1983-ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் எனது அரசியல் ஆசான் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தத் திட்டத்தை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் எப்படியேனும் நடைமுறைப்படுத்தியாக வேண்டும் என்று, வற்புறுத்தி கேட்டுக் கொண்டார்கள். அவரது கொள்கைகளை முன்னிறுத்தி ஆட்சி நடத்திவரும் நானும், பலமுறை கடிதங்கள் மூலமாகவும், நேரிலும் மாண்புமிகு பாரதப் பிரதமரிடம் இந்தச் சேது சமுத்திரத் திட்டத்தை விரைவில் செயல்படுத்தி, தமிழகத்தின் விரைந்த வளர்ச்சிக்கு அடிகோல வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டு வந்துள்ளேன். இதுவரை மத்திய அரசு இந்தக் கோரிக்கையை ஏற்று ஒப்புதல் அளிக்கவில்லை. இந்தத் திட்டம் நிச்சயமாகச் செயல்படுத்த முடியும் என்பதால், மத்திய அரசு தமிழக மக்களின் உணர்வுகளை மதித்து, தமிழகத்தின் ஒட்டுமொத்த நலனைக் கருத்தில் கொண்டு விரைவில் இதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று, தமிழக அரசின் சார்பில் மத்திய அரசையும், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களையும் வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

ஜெ. ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்



## ‘உர ஆய்வகப் பணிகள்’ மேலும் வளர்ச்சியடைய மாண்புமிகு முதல்வ[ர்] உதவி!

பயிர்வளம் செழிக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலும், உரங்களைப் பயன்படுத்துவோர் அவற்றிலிருந்து அதிகப் பலன்களைப்பெற மேற்கொள்ளப்படும் 'உர ஆய்வகப் பணிகள்' மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காகவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இதற்காக ரூ.48.65 லட்சம் நிதியினை ஒதுக்கி ஆணையிட்டுள்ளார்.

இந்த நிதி உதவியினை அடிப்படையாகக் கொண்டு, ரூ.20 லட்சம் செலவில் ‘காம்போஸ்ட் உர மையம்’ ஒன்று நாகர்கோவிலில் நிறுவப்படவும்; 23.65 லட்ச ரூபாய் செலவில் உர, மண் மற்றும் இயற்கை உர ஆய்வகங்கள் ஆகியவற்றின் ஆராய்ச்சி மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவும்; இத்தகைய பல்வேறு ஆராய்ச்சிகளின் விளைவாகக் கிடைக்கும், கண்டுபிடிப்புகளின் பயன்களை வேளாண் பெருங்குடி மக்களுக்கு விளக்கிக் கூறுவதற்காக 5 லட்சம் ரூபாய் செலவில் சுமார் 1000 எக்டேர் நிலப்பரப்பில் நுண் ஊட்டச் சத்துக்கள் பற்றிய விளக்க நிகழ்ச்சிகள் (demonstration) நடத்தப்படவும் உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட் டுள்ளார்.



## இங்கிலீஷ் கால்வாயைக் கடந்த குற்றாலீஸ்வரனுக்கு முதல்வர் வாழ்த்து

சென்னையைச் சேர்ந்த 12-வயது சிறுவன், செல்வன் குற்றாலீஸ்வரன் இங்கிலாந்து நாட்டையும், பிரான்ஸ் நாட்டையும் இணைக்கும் இங்கிலீஷ் கால்வாயை, இந்தியச் சுதந்திரத் தினமான 15.8.1994-அன்று நீந்திக் கடந்து அரிய சாதனையை படைத்துள்ளதை அறிந்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தனது மனமார்ந்த பாராட்டுதல்களை, செல்வன் குற்றாலீஸ்வர னுக்குத் தெரிவித்துள்ளார்.

செல்வன் குற்றாலீஸ்வரன் தமிழ் நாட்டிற்குப் பெருமைத் தேடித் தரும் வண்ணம் நீண்ட தூரக் கடல் நீச்சலை மேற்கொண்டு சாதனை படைத்ததற்குத் தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டதோடு, செல்வன் குற்றாலீஸ்வரன் மேலும் பல புதிய சாதனைகளைப் படைத்து, பல்வேறு சிறப்புக்களைப் பெற வேண்டும் என்ற தனது பேரவாவினையும் தெரிவித்துக் கொண்டார்.

முதன் முதலாக 10.2.1994 அன்று செல்வன் குற்றாலீஸ்வரன் மாண்புமிகு முதல்வர், டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களைச் சந்தித்து ஆசி பெற்றபோது, நீண்ட தூர நீச்சல் போட்டிகளிலும், கடல் பகுதியை நீந்திக் கடப்பதிலும் அவனுக்கிருந்த பேரார்வத்தினை அறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அவனைத் தத்து எடுத்துக் கொள்வதற்கு ஆணையிட்டார். பின்னர், செல்வன் குற்றாலீஸ்வரன் தலைமன்னாருக்கும், ராமேஸ்வரத்திற்கும் இடைப்பட்ட கடல் பகுதியை நீந்திக் கடப்பதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளும் மாண்புமிகு



முதல்வர் அவர்களின் ஆணையின் பெயரில் செய்து தரப்பட்டன.

பின்னர், இங்கிலீஷ் கால்வாய் எனப்படும் இந்தக் கடற்பகுதியை நீந்திக் கடப்பதற்கு, மாண்புமிகு முதல்வர், டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், செல்வன் குற்றாலீஸ்வரனுக்கு 6.12 லட்ச ரூபாயையும், வழங்கி வெற்றி பெற ஆசியையும் அவனை நேரில் வரவழைத்து வழங்கினார். இலண்டனில் அமைந்துள்ள இந்தியத் தூதரகத்திற்கும் நேரடியாகக் கடிதம் மூலம் தொடர்பு கொண்டு செல்வன் குற்றாலீஸ்வரனுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கும்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டிருந்தார்.

□ நமக்குள்ளே மறைவாக உறங்கிக் கொண்டிருக்கும் சாதி, இன, மதவாத பலவீனத்தின் தன்மைகளை உணர்ந்துதான் இந்தியாவின் முதல் சுதந்திர தினத்தை வாழ்த்தி வரவேற்ற டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள், ‘நாளைக் காலை முதல் நமது தவறுகளுக்காக நாம் வெள்ளைக்காரர்களைக் குறைகூற முடியாது’ என்று கருத்தறிவித்தார்.

# ஒயில் ஆட்டம்

தமிழ்நாட்டில் நெல்லை மாவட்டங்களில் நிகழ்த்து கலைகளில் ஒன்று ஒயில் ஆட்டம். ஆண்கள் மட்டுமே பங்கு கொள்ளும் இந்த ஆட்டக் கலைக்கு ஒயில் கும்மி என்ற மற்றொரு பெயரும் உண்டு. ஒயில் என்பது அழகு எனப் பொருள்படும். [illegible] வில் போல வளைந்து நெளிந்து தாளம் மற்றும் பாட்டுக்கு ஏற்ப ஆடப்படும் கலை [illegible] உள்ளது. இது ஒரு குழு நடனம். இந்த நிகழ்ச்சியை நடத்த குறைந்த பட்சமாகப் பாடகர்கள் மற்றும் தாளககாரரைச் சேர்த்து பனிரெண்டுபேர் வேண்டும். அதிகபட்சமாக இருபதுபேர் கலந்து கொள்வர். இக்கலை பொழுது போக்கை [illegible]மாகக் கொண்டு நிகழ்த்தப்படுகிறது. அத்துடன் கோவில் திருவிழா, திருமணம், பூப்புச் சடங்கு, பெரிய மனிதர்கள் வருகை (சமய குருக்கள், அரசியல் தலைவர்கள்) ஆகிய விழாக்களிலும் நடத்தப்படுகிறது. இந்த நிகழ்த்துதல் சமயம் மற்றும் சமயச் சார்பற்ற ஆட்டக்கலையாக உள்ளது.

இராமாயணம், மகாபாரதம் ஆகிய காப்பியங்களின் கதைகளும் அதனைச் சார்ந்த கிளைக் கதைகளும் பாடு பொருட்களாக அமைகின்றன. இதுபோலக்கிறிஸ்துவ ஒயில் ஆட்டங்களில் இயேசு நாதர் வாழ்க்கை வரலாறு மற்றும் வேதாகமத்தில் உள்ள கிளைக்கதைகளும் பாடல்களாக உள்ளது. இந்தக் கதைகள் யாவும் பாடல்களாகவும் வசனங்களாகவும் அமைக்கப்பட்டு பாடப்படுகிறது. இரண்டு பாடகர்கள் உள்ளனர். முன் பாடகர் பாடலைப் பாடுவார். பின் பாடகர் கையில் இருக்கும் ஜாலராவுடன் இணைந்து பாடுவார். இவர்களுடன் குழுவில் உள்ள கலைஞர்களும் பாடுவதுண்டு. இவர்களின் ராகத்திற்குத் தகுந்தவாறு சுட்ட மண்பானையில் தாளமிடப்படும். தற்போதைய குழுக்களில் பானை தவிர்த்து தவில் மிருதங்கம் ஆகிய தோல் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

ச. அரிராமன்

ஆட்டத்தில் பங்குகொள்ளும் கலைஞர்கள் மட்டும் உடை அலங்காரம் செய்து கொள்வர். தார் பாய்ச்சுக் கட்டுவதற்கு வசதியாக வேட்டியும் பெரும்பாலும் ஒரே வண்ணத்தில் அமைந்து கண்ணிற்குப் பகட்டான மேல் ஆடையும் தேர்வு செய்வதுண்டு. உடலை வளைத்து துள்ளி அழகாக ஆடுவதற்கு வசதியாக இன்றைய குழுக்கள் அரைக் கால்சட்டையும் பனியனும் அணிந்து கொள்கிறார்கள். இவர்கள் அனைவரும் சீருடையில் காணப்படுவர். கையில் ஒரு துண்டு துணியும் தலையில் தலைப்பாகையும் அணிவதுண்டு. சில குழுக்கள் இரண்டு கைகளிலும் துணிகள் வைத்திருப்பர். காலில் வெங்கலச் சலங்கை கூட்டிக்கொள்வார்கள்.

கலைஞர்கள் சம எண்ணிக்கையில் பார்வையாளர்களை நோக்கி ஒருவர் பின் ஒருவராகச் சுமார் இரண்டு அடி தூரம் இருக்குமாறு இரண்டு வரிசைகளாக நின்று கொள்வர். வரிசைகளுக்கு இடையில் முன் பக்கமாக தனியாக ஒரு கலைஞர் மட்டும் நின்றுகொள்வார். முன் பாடகர் பாடலைப் பாடத் துவங்குவார். பின் பாடகர் கையில் உள்ள ஜாலராவைத் தட்டி அவருடன் இணைந்து பாடுவர். அதன் பின்பு வரிசைகளுக்கு முன்பக்கம் நடுவில் நிற்கும் கலைஞர் மட்டும் பாடுவார். அடுத்து கலைஞர்கள் ஒரு முறை பாடுவார்கள். மீண்டும் நடுவில் நிற்பவர் பாடியதும் கைச் சைகைகளுடன் கலைஞர்கள் ஆட்டத்தைத் துவங்குவர்.

முதலில் வரிசைகளில் நின்றவாறு ஆடி பின்பக்கமாகத் திரும்புவர் திரும்பியபடியே ஆடி மீண்டும் பார்வையாளர்களை நோக்கி நின்றுகொள்வர். அடுத்து மூன்று அடிகள் முன்னே சென்று அப்படியே குனிந்து பின்பக்கமாகத் திரும்பி வந்து பழைய நிலையில் நின்று கொள்வர். இதற்கு சாரி போடுதல் எனப்படும். இரண்டு வரிசையினரும் எதிராக நின்று கொள்வர். எதிர்த் திசையில் சில அடிகள் சென்று திரும்பி எதிராகவே நின்று கொள்வர் பின் கையில் உள்ள துணியை மார்புக்கு நேராக வைத்து துப்பாக்கி பிடிப்பது போல் இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு மூன்று அடி முன் பக்கமும் மூன்று அடிபின்பக்கமும் செல்வர். பின் பழைய நிலையில் நின்று கொள்வர். இதைத் துப்பாக்கி ஆட்டம் என்று கூறுவதுண்டு. பார்வையாளர்களை நோக்கி நின்று கொண்டு வலது கையை இடுப்பில் வைத்துக் கொண்டு இடது கையால் சைகைகள் காட்டி பக்கவாட்டில் அதாவத வலது பக்கமாக மூன்று அடி நகர்ந்து பழைய நிலையை அடைவர். இதற்கு மூணு எட்டு ஆட்டம் எனப்படும். இதே போல் இடது கையை இடுப்பில் வைத்தும் நிகழ்த்தப்படும். இது போல வட்டமாக நின்று கொண்டு கும்மி அடித்தல், வரிசையிலே பாம்பு போல் நெளிந்து சென்று ஆடுதல், பெருக்கல் வடிவில் ஆடுதல் ஆகிய பல அடைவுமுறைகளும் உள்ளன.

### வாழ்க்கை வரலாறு

ஆட்டத்தின் துவக்கத்தில் பாடலும் தாளமும் ஒரே சீராக இருக்கும். சிறிது சிறிதாக வேகம் அதிகரிக்கும். ஒரு குறிப்பிட்ட வேகத்தை அடைந்தவுடன் தலைமைப் பாடகர் விசில் ஊதுவார் அந்த வேகத்தில் கலைஞர்கள் ஆட்டத்தை நிறுத்திக் கொள்வர். மீண்டும் மெதுவாகத் துவக்கும் பின் வசனம் தொடரும். அல்லது வட்டமாக நின்று கும்மியடிப்பார். கையில் உள்ள துணியை வீசி ஆடுவது இங்கு முக்கியமாகக் கருதப்படுகிறது. இராமாயணக் கதைகள் பாடு பொருட்களாக அமையும் ஆட்டத்தில் வில் யுத்தம், மற்போர், வாய்ச் சண்டை போன்ற செயல்கள் வசனத்தின்போது பாவனையாக நடித்துக் காட்டப்படும்.

ஒவ்வொரு கலைக்குழுவும் அது சார்ந்திருக்கும் ஊர், குரு அரசியல் தலைவர்கள், மற்றும் இயக்கங்களின் பெயரில் அழைக்கப்படுகிறது. சுமார் பதினைந்து நிமிடங்கள் முதல் நான்கு மணி நேரம் வரை தொடர்ந்து நிகழ்த்தப்படுகிறது. நவீன முறை ஒயில் ஆட்டங்களில் இடையிடையே வசனங்கள், கும்மி முறைகள் அடவுகள் ஆகியவை தவிர்க்கப்பட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. இந்த வகைக் குழுக்கள் அரசியல் கருத்துக்கள் பொது நலம் மற்றும் தலைவர்களின் வாழ்க்கை வரலாறு ஆகியன வற்றைச் சித்திரிக்கக்கூடிய பாடல்கள் இயற்றி இக் கலையை நிகழ்த்துகின்றன.

## மாநகராட்சிக்குச் சொந்தமான வயதான கால்நடைகளைப் பராமரிக்க ஏற்பாடு!

மாநகராட்சிக்குச் சொந்தமான வயதான கால்நடைகளைப் பராமரிக்க சென்னை மாநகராட்சி ஏற்பாடு செய்துள்ளது. சென்னை மாநகராட்சி, குப்பை எடுப்பதற்காக மாட்டு வண்டிகளைப் பயன்படுத்துகிறது. இதற்காகப் பயன்படுத்தப்படும் கால்நடைகள் வயதானபின் இதுவரை ஏலத்தில் விற்கப்பட்டது. ஏலத்தில் விற்கப்படும் கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்படுகின்றன. இதனைத் தவிர்ப்பதற்காக மனித நேயத்தின் அடிப்படையில் மாநகராட்சி பயன்படுத்திய வயதான மாடுகளை ஏலத்தில் விற்பதற்குப் பதிலாக நீலச்சிலுவை (Blue Cross) சங்கத்தினரிடம் பராமரிப்பதற்காக அளிக்க முடிவு செய்துள்ளது. அதன்படி 15.7.94 அன்று மாநகராட்சிக்குச் சொந்தமான வயதான 29 மாடுகளை நீலச்சிலுவை (Blue Cross) சங்கத்தினரிடம் மாநகராட்சித் தனி அலுவலர் திரு பெ. செல்வம், இ.ஆ.ப., ஒப்படைத்தார்.

நீலச்சிலுவை சங்கத் தலைவர் கேப்டன் சுந்தரம், அதன் துணைத் தலைவர் எஸ். சின்னி கிருஷ்ணன் ஆகியோர் இக்கால்நடைகளை அச்சங்கத்தின் சார்பில் பெற்றுக்கொண்டார்கள். இவ்விழாவில் மாநகராட்சித் துணை ஆணையாளர் திரு ஸ்வரன்சிங், இ.ஆ.ப., கண்காணிப்புப் பொறியாளர் திரு ஆர். ராமநாதன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





தமிழ் நாட்டிலுள்ள இளைய தலைமுறையினர் விளையாட்டுத் துறையில் உன்னத நிலையினை அடைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், தமிழக விளையாட்டுத் துறையின் முன்னேற்றத் திற்காகப் பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வரும் தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், சேலம் நகரில் 'விளையாட்டுத் திட்ட வளர்ச்சி மையம்' ஒன்றினை 75 லட்ச ரூபாய் செலவில் அமைக்க ஆணையிட்டுள்ளார்.

ஏற்கெனவே தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக, சேலம் நகரில் உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு அடிப்படை வசதிகளைப் பயன்படுத்தி இந்தப் புதிய 'விளையாட்டுத் திட்ட வளர்ச்சி மையம்' (Sports Project Development Area) சேலம் மற்றும் அதன் அருகிலுள்ள இதர மாவட்டங்களைச் சார்ந்த பள்ளி, கல்லூரி, மாணவ மாணவியர் மற்றும் இளைய தலைமுறையினர் விளையாட்டுத்துறையில் சிறந்த பயிற்சிகளைப் பெற அனைத்து உதவிகளையும் நல்கும்.'

# மகளிருக்கு வாழ்வளிக்கும் மணிக்கற்கள் !

ஜோசப் சந்திரகுமார்

ரங்கன் ரூபி என்று அழைக்கப்படும் சிவப்பு மணிக்கற்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு திருச்சிராப்பள்ளியில் அறிமுகப்படுத்தப் பட்டபோது, செயற்கை மணிக்கற்களுக்குப் பட்டை தீட்டும் புதிய தொழில் தமிழ்நாட்டில் செழித்தோங்கத் தொடங்கியது. ஆனால், இது நெடுநாட்களுக்கு நீடிக்கவில்லை. கடந்த ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகளில் இத்தொழில் நலிவடைந்துவிட்டது. பட்டைதீட்டும் கைவினைஞர்கள், பழைய பட்டறைகளைப் பயன்படுத்தியதால் நாளொன்றுக்குப் பத்து ரூபாய்க்கு மேல் சம்பாதிக்க முடியாத அவலநிலை காணப்பட்டது. திருச்சியில் உள்ள மணிக்கற்கள் வர்த்தகர்களும் பெரிய அளவில் வியாபாரம் செய்ய முடியவில்லை மொத்தத்தில் இந்தத் தொழிலில் ஆண்டு வர்த்தகம் சில கோடி ரூபாய் அளவுக்கே இருந்தது. பழங்காலப் பட்டறைகள் மூலம் தீட்டப்பட்ட மணிக்கற்களும் ஒழுங்கான கோணத்திலும் அளவிலும் இல்லாததால் ஏற்றுமதி செய்ய தகுதியற்றவையாக இருந்தன.

இந்தியாவில் சூரத் அருகே உள்ள சச்சின் என்ற இடம்தான் விலை உயர்ந்த வைரக் கற்களுக்குப் பட்டை தீட்டும் தொழிலுக்குப் பெயர் போனது. ஓரளவு விலையுயர்ந்த ரத்தினக் கற்களுக்குப் பட்டைத் தீட்டும் தொழில் ஜெய்பூரில் பிரபலமடைந்துள்ளது. 1980-ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப் பட்ட அமெரிக்கன் டயமண்ட் எனப்படும் கியூபிக் ஸிர்கோனியா பெரும்பாலும் திருச்சி, புதுக்கோட்டையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் பட்டை தீட்டப்படுகிறது. மரபாக பயன்படுத்தப்பட்டு வந்த ரங்கூன் டயமண்டின் இடத்தை அமெரிக்கன் டயமண்ட் பிடித்துக் கொண்டுவிட்டது. மைசூர், கர்னூல் ஆகிய இடங்களிலும் பீகாரிலுள்ள ஜகானாபாத், உத்திரப்பிரதேசத்தில் உள்ள ஹால்ட்வானி ஆகிய இடங்களிலும் கூட இந்தத் தொழில் ஓரளவுக்குப் பிரபலமாகியிருக்கிறது.

அமெரிக்கன் டயமண்ட் செய்வதற்குத் தேவையான கச்சாப் பொருளான ஸிர்கோனியம் ஆக்ஸைட் மற்றும் ஏற்றியம் ஆக்ஸைட் ஆகியவை தூள் வடிவத்தில் பிரான்சிலிருந்தும் பிரிட்டனிலிருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றன. ஹைதராபாதில் உள்ள அணு எரிபொருள் நிறுவனம் நமது நாட்டிலேயே இந்தக் கச்சாப் பொருளைத் தயாரிக்க முயற்சி செய்து வருகிறது.

தமிழ்நாட்டில் தற்போது அமெரிக்கன் டயமண்ட் பட்டைத் தீட்டுதல் மற்றும் மெருகேற்றும் தொழில் மூலம் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வேலைவாய்ப்பு பெற்று வருகிறார்கள்.

## புதிய தொழில் நுட்பம்

மணிக்கற்களுக்குப் பட்டை தீட்டும் தொழில் நலிவடைந்து காணப்படுவது குறித்து கவலைகொண்ட அரசு, புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி இத்தொழிலுக்குப் புத்துயிரூட்ட முடிவு செய்தது. 1989-இல், தமிழ்நாடு அரசு, வைரம் மற்றும் மணிக்கற்கள் அபிவிருத்தி நிறுவனத்தை (டிஜிடிஸி) அணுகி, தமிழ்நாட்டில் இத்தொழிலை ஒட்டுமொத்தமான முறையில் வளர்ப்பதற்காக திருச்சியில் மணிக்கற்கள் தொழிற்பேட்டைப் பயிற்சி மையமொன்றை அமைக்குமாறு கேட்டுக்கொண்டது. அதைத் தொடர்ந்து 1990, ஜனவரி 29ல் மணிக்கற்கள் தொழிற்பேட்டை பயிற்சி மையம் தொடங்கிவைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் மணிக் கற்களுக்குப் பட்டை தீட்டும் தொழிலை மேம்படுத்துவதற்குத் தேவையான சரியான தொழில்நுட்ப முறைகளையும் தகுந்த நவீன இயந்திர சாதனங்களையும் திட்டமிட்டு வடிவமைக்க ஓராண்டு காலம் தேவைப்பட்டது. அதன்பிறகு, கிராமப் பகுதிகளுக்குத் தேவையான மாதிரி முறையை உருவாக்க மேலும் ஓராண்டுக் காலம் பிடித்தது. இப்போது இந்த முறை தமிழ்நாட்டில் மிகவும் பிரபலம் அடைந்து விட்டது. புதிய தொழில்நுட்பத்தையும் இயந்திரச் சாதனங்களையும் உருவாக்க முனைந்தபோது, மணிக்கற்களுக்குப் பட்டை தீட்டும் கைவினைஞர்களும், வியாபாரிகளும் கடுமையான எதிர்ப்பு தெரிவித்தார்கள். புதிய முறை பற்றி அவர்களுக்கு ஐயப்பாடு இருந்ததால், நவீனப்படுத்தும் முயற்சிகளுக்கு எதிர்த்து நின்றார்கள். ஆனால், வைரம் மற்றும் மணிக்கற்கள் அபிவிருத்தி நிறுவனம், உறுதியோடு ஒருமித்த முயற்சி எடுத்து இந்தத் தடைகளை உடைத்தது. ஆராய்ச்சி, அபிவிருத்திப் பணிகளுக்காக ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் வரை செலவிடப்பட்டு இருக்கிறது.

இந்த முனைப்பான முயற்சிகளின் பலனாக திருச்சி மணிக்கற்கள் தொழிற்பேட்டை பயிற்சி மையம் கடந்த நான்காண்டுகளில், தமிழ்நாட்டில் உள்ள 10 மாவட்டங்களில் 6000க்கு மேற்பட்டவர்களுக்கு தீவிரப் பயிற்சி அளித்திருக்கிறது. புதிதாக வடிவமைக்கப்பட்டிருக்கும் பட்டைதீட்டும் இயந்திரங்கள், மெருகூட்டும் சாதனங்கள் ஆகியவற்றைக் கையாள்வதிலும் சர்வதேசத் தேவைகளுக்கு ஏற்ப மணிக்கற்களைப் பட்டைத் தீட்டுவதிலும் அவர்கள் பயிற்சி பெற்றனர்

மத்திய அறிவியல், தொழில்நுட்ப இலாகாவைச் சேர்ந்த அறிவியல் தொழில்நுட்பத்தின் மூலம் பெருவாரி வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம் வாயிலாக, 'திருச்சி மணிக்கற்கள் தொழிற்பேட்டைப் பயிற்சி மையத்துக்குப் பயிற்சிக்காக ஓரளவு உதவித்தொகை கொடுக்கப்படுகிறது.

புதிய பொருளாதாரக் கொள்கையின்படி, அமெரிக்கன் டயமண்ட் கச்சாப் பொருள் இறக்குமதி மீதான தீர்வை கடந்த நிதிநிலை அறிக்கையில், 25 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது. ஒரு காலத்தில் இந்தத் தீர்வை 120 சதவிகிதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

திருச்சியில் உள்ள மணிக்கற்கள் தொழிற்பேட்டைப் பயிற்சி, மையம், தான் தயாரிக்கும் பட்டை தீட்டும் இயந்திரச் சாதனங்களைப் பெண் தொழிலதிபர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 20 சதவிகித மானியத்துடன் விற்பனை செய்கிறது. இந்த மகளிர், சொந்தமாகத் தொழிற்பட்டறை தொடங்குவதற்கு முன்னர் அவர்களுக்கு 3 மாதம் தீவிரப் பயிற்சி அளிக்கப்படுகிறது. சாதாரணமாக, 30 அல்லது 40 பெண்கள் ஒன்று கூடி, ஊராட்சிக்குச் சொந்தமான கட்டடங்களில் மணிக்கற்களுக்குப் பட்டைத் தீட்டும் தொழிலை ஒருங்கிணைந்த முறையில் நடத்துகிறார்கள். சுமார் 17 ஆயிரம் ரூபாய் செலவழித்து புதிய தொழில்நுட்ப இயந்திரத்தை வாங்கும் பெண்கள் செலவுகள் போக மாதம் 1,500 ரூபாய் வரை சம்பாதிக்க முடிகிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில், கடினமாக உழைக்கும் சில பெண்கள் மாதம் 2000 ரூபாய் வரை ஈட்ட முடிகிறது. சில ஆண்டுகளுக்கு முன்னர் இவர்கள் சம்பாதித்த 450 ரூபாயோடு ஒப்புநோக்கினால், இவர்களது வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மகத்தான வளர்ச்சியை உணர்ந்து கொள்ளலாம். இத்தகைய புதிய தொழில்நுட்ப இயந்திரங்களின் எண்ணிக்கை கடந்த மூன்றாண்டுகளில் 5000க்கும் கூடுதலாக அதிகரித்துவிட்டது.

## ஏற்றுமதியும் உலகச் சந்தையும்

உலகச் சந்தையில் அமெரிக்கன் டயமண்ட் மணிக்கற்கள் 600 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனையாகிறது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் பாதியை இந்தியா எளிதில் கைப்பற்ற முடியும். வைரம் மற்றும் மணிக்கற்கள் அபிவிருத்தி நிறுவனத்தின் திறமையான பணி காரணமாக அமெரிக்கன் டயமண்ட் கற்களின் ஏற்றுமதி மூன்றாண்டுகளுக்கு முன்னர் 20 இலட்சம் ரூபாய்க்கும் குறைவாக இருந்தது, இப்போது ஒரேயடியாக 10 கோடி ரூபாயைத் தாண்டிவிட்டது. சேலம், பெரியார், மதுரை, காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கனார் போன்ற மாவட்டங்களில் மரபாக மணிக்கற்கள் பட்டைத் தீட்டும் தொழிலில் ஈடுபடாத கிராமங்களிலும் கூட இப்போது இந்தத் தொழில் சூடுபிடிக்க ஆரம்பித்திருக்கிறது.

பட்டை தீட்டும் கைவினைத் தொழிலாளர்கள் மீது மணிக்கற்கள் வியாபாரிகள் கொண்டிருந்த ஆதிக்கமும் இப்போது தகர்க்கப்பட்டுவிட்டது. தமிழ்நாட்டில் செயற்கை மணிக்கற்கள் வியாபாரம் பத்து மடங்கு அதிகரித்திருக்கிறது.



அடுத்த ஐந்தாண்டுகளில் இத்தொழிலில் மேலும் 40 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், உள்ளூரில், கைகளால் பட்டைத் தீட்டப்படும் மணிக்கற்களுக்கே மவுசு அதிகம் என்பதால், நவீன இயந்திரங்களைக் கொண்டு பட்டைத் தீட்டும் தொழில் தழைக்க வேண்டுமானால் ஏற்றுமதி முயற்சிகளைத் தீவிரப்படுத்தியாக வேண்டும். அதற்கு ஏற்றுமதி செய்யப்படும் மணிக்கற்கள் தரத்தில் சிறந்தவையாக இருக்க வேண்டும். அத்தோடு தென்கொரியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், சீனா போன்ற நாடுகள் மணிக்கற்கள் ஏற்றுமதி மார்கெட்டில் பெரும் பகுதியைத் தம்வசம் வைத்துக்கொண்டிருக்கின்றன என்பதையும் கருத்தில் கொண்டாக வேண்டும்.

ஆகவே, தரம் வாய்ந்த கற்களை குறைந்த செலவில் தயாரித்தால்தான் ஏற்றுமதி மார்கெட்டைப் பிடிக்க முடியும் என்பது தெளிவு. மணிக்கற்களைப் பட்டைத் தீட்டி, மெருகூட்டும் தொழிலில் நமது கைவினைஞர்களுக்குச் சர்வதேசத் தரத்துக்கு ஏற்ப இடைவிடாத பயிற்சி கொடுத்தால் தான் இதைச் சாதிக்க முடியும்.

# செழிப்பான வாழ்விற்கு இன்றே முதலீடு செய்வீர்

# கிசான் விகாஸ் பத்திரம்

**உங்கள் முதலீடு 5½ ஆண்டுகளில் இருமடங்கு வளர்கிறது.**

**சிறப்பு அம்சங்கள்**

- ஐந்தரை ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது.
- 16.18% சாதாரண வட்டி.
- பத்திரங்கள் ரூ.100/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- மதிப்புகளில் கிடைக்கின்றன.
- அவசரத் தேவைக்கு 2½ ஆண்டுகளில் வட்டியுடன் பணம் திரும்பப்பெற வசதி.

ரூ.1000/- முதலீட்டிற்கு கிடைக்கும் தொகை

| ஆண்டுகள் | தொகை |
|---|---|
| 2½ ஆண்டுகளில் | ரூ.1,310/- |
| 3 ஆண்டுகளில் | ரூ.1,420/- |
| 3½ ஆண்டுகளில் | ரூ.1,500/- |
| 4 ஆண்டுகளில் | ரூ.1,620/- |
| 4½ ஆண்டுகளில் | ரூ.1,730/- |
| 5 ஆண்டுகளில் | ரூ.1,860/- |
| 5½ ஆண்டுகளில் | ரூ.2000/- |

1.4.1994 முதல் தமிழ்நாட்டில் செய்யப்படும் முதலீட்டிற்கு

**2%**

சிறப்பு ஊக்கத்தொகை.





தமிழ்நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு இலவச பரிசுக் கூப்பன் பெற்று, கவர்ச்சிகரமான மாருதி ஆம்னிவேன் அல்லது டிராக்டர் (இயந்திரக் கலப்பையுடன்) உட்பட 619 பரிசுகளை வெல்ல வாய்ப்பு.

மேலும் விவரங்களுக்கு
**ஆணையர்,**
சென்னை மாநகராட்சி (சி.சே.பரிவு), சென்னை-3,
தொலைபேசி: 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2.,
தொலைபேசி: 849962

மாவட்ட ஆட்சியாளர்களி, வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

**இயக்குநர், சிறு சேமிப்புத் துறை**
*சபர் மேன்ஷன், 621, அண்ணா சாலை,*
*சென்னை - 600 006.*
*தொலைபேசி: 8251784/8251685.*

DIPR/516/DISP/94

*சிறு குடும்பம் செல்வக் குடும்பம்*




# எல்லா மாவட்டங்களிலும் நீர்வரத்து மேம்பாடு!



தமிழ்நாட்டில் தற்போது 'டேனிடா' DANIDA உதவியுடன் கூடிய நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்Water Shed Development Programme வெற்றிகரமாக அமல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தினை இதர மாவட்டங்களிலும் அமல்படுத்த வேண்டும் என்ற ஒரு கருத்தினை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே தெரிவித்திருந்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆலோசனையின் பேரில், பாசன வசதி மேம்பாட்டுத் தேவைகள் நிரம்பப் பெற்றுள்ள காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் தமிழக வேளாண் துறை 'டேனிடா' குழுவோடு பார்வையிட்டு, இம்மாவட்டங்களில் நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்தப் பரிந்துரை செய்தது. அதனை முழுமையாக ஏற்றுக் கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 13.5. கோடி ரூபாய் செலவில் இம்மூன்று மாவட்டங்களில் உள்ள 11,000 எக்டேர் நிலப்பரப்பில் இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டுமென ஆணை பிறப்பித்துள்ளார்.

இந்தத் திட்டப் பணி, காமராசர் மாவட்டத்திலுள்ள அருப்புக்கோட்டை வட்டம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் சிவகங்கை, மானாமதுரை மற்றும் இராமநாதபுரம், மண்டபம், முதுகுளத்தூர் உட்பட மொத்தம் 6 வட்டங்களில் செயலாக்கப்படும்.

## மாண்புமிகு முதல்வரின் ஆசிரியர் தின வாழ்த்து

இந்தியத் திருநாட்டின் குடியரசுத் தலைவராகவும், 20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற தத்துவ மேதைகளில் ஒருவராகவும் திகழ்ந்த டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களுடைய பிறந்த நாள், ஆசிரியர் தினமாக நாடெங்கும் நன்றிப் பெருக்கோடு கொண்டாடப்படும் இவ்வேளையில், தமிழக ஆசிரியச் சமுதாயத்தைச் சேர்ந்த, அனைத்துச் சகோதர சகோதரிகளுக்கும், எனது வணக்கத்தையும், நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

'மாதா, பிதா, குரு, தெய்வம்' என, நம்மை ஈன்று வளர்த்திடும் பெற்றோர்க்கு அடுத்தபடியாக, மிக உயர்ந்த இடத்தில் வைத்து அனைவரும் தொழுகின்ற அரிய சிறப்பினைப் பெற்றுள்ள ஆசிரியர்களைச் 'சமுதாயச் சிற்பிகள்' என்று குறிப்பிடுவது மிகவும் ஏற்புடையதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். வருங்கால உலகை நன்முறையில் ஆள, உரிய பயிற்சியினையும், அறிவாற்றலையும் இன்றைய இளைய தலைமுறையினர்க்கு, உவகையோடு வழங்கிடும் ஆசிரியப் பெருமக்கள், நம் அனைவரின் போற்றுதலுக்கும் உரியவர்கள்!

'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்' என்ற நல்வாக்கிற்கேற்ப, தங்களது கல்விப் பணியில் சாதனைகள் பல புரிந்து, 'நல்லாசிரியர் விருது'களைப் பெறுகின்ற, ஆசிரிய சகோதர, சகோதரிகள் அனைவர்க்கும், எனது இதயங்கனிந்த பாராட்டுதல்களை, இந்த நேரத்தில் உரித்தாக்கிக் கொள்கிறேன். ஆசிரியச் சமுதாயத்தின் நலன்காக்கும் நற்பணி, மென்மேலும் சிறக்கும் வண்ணம், எங்களது அரசு தொடர்ந்து பாடுபடும் என்ற உறுதியினை வழங்கி, ஆசிரியர் தின நல்வாழ்த்துக்களை அனைவர்க்கும் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

**ஜெ. ஜெயலலிதா**
**தமிழ்நாடு முதலமைச்சர்**
**5-9-94**

# தாய்ப்பால்: குழந்தைக்கு நல்ல உணவு

*(ஐ.நாவின் ஆதரவில் உலக முழுவதும் ஆகஸ்ட் முதல் தேதியிலிருந்து 7ஆம் தேதி வரை உலகத் தாய்ப்பால் வாரம் கொண்டாடப்பட்டது.)*

தாயின் அன்புக்கு ஈடு இணை ஏதுமில்லை என்பது எல்லா நாட்டு மக்களும் எல்லா இனத்தவரும் எச்சமயத்தைச் சார்ந்தவரும், ஏகோபித்துச் சொல்லும் உண்மையாகும். குழந்தை பிறந்ததும் அதை நெஞ்சோடு அணைத்துப் பாலூட்டும்போதே தனது மாறாத அன்பையும் பாசத்தையும் சேர்த்தே புகட்டுபவள்தான் தாய்.

தாய்ப்பால் சிறந்த சத்துணவு மட்டுமன்று, அன்பு கலந்த அமுதம் என்றே சொல்லலாம். தாய்க்கும் சேய்க்குமிடையே துவங்கும் இந்தப் பாசப்பிணைப்பு வாழ்நாள் முழுவதும் தொடர்கிறது என்றாலும் குழந்தை பிறந்த புதிதில் உச்சி முகர்ந்து, அன்பு முத்தமிட்டு பாலூட்டும் தாய், பாசமெனும் நற்பண்பினை கலந்தே ஊட்டிவிடுகிறாள். இந்த உலகில் மனிதனாகப் பிறப்பவனுக்கு இதை விடச்சிறந்த ஆரம்பம் இருக்க முடியாதே!

## தாய்ப்பாலின் மகத்துவம்

தாய்ப்பால் என்பது பச்சிளங் குழந்தைக்கு இயற்கை வழங்கிய ஈடு இணையற்ற வரப்பிரசாதம் ஆகும். இதற்கு மாற்று உணவே கிடையாது. குழந்தை வளர்ச்சியின் போது முதல் ஆறு மாதங்களுக்குத் தேவையான எல்லா ஊட்டச் சத்துக்களும் தாய்பாலில் அடங்கியிருக்கின்றன. பசும்பால் போன்ற மற்றவகைப் பாலைப் பற்றி பெருமை பேசுவோர், இயற்கை, மனிதக் குழந்தைகளுக்கென்று தாய்ப்பாலையும், பசுவின் கன்றுகளுக்கென்று பசும்பாலையும் படைத்திருக்கிறது என்ற உண்மையை மறந்துவிடக்கூடாது.

பொதுவாக, முதல் நான்கு முதல் ஆறு மாதங்களுக்குத் தாய்ப்பால் மட்டும் குடிக்கும் குழந்தைகள், புட்டிப்பால் அருந்தும் குழந்தைகளைவிட ஆரோக்கியமாக இருக்கின்றன.

குழந்தைகளுக்குத் தாய்ப்பால் புகட்டுவதால், ஜலதோஷம், நியுமோனியா, வயிற்றுக்கடுப்பு போன்ற நோய்கள் ஏற்படாமல் தடுக்க முடியும். தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு வலிப்பு நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பும் குறைவே. புட்டிப்பால் அருந்தும் குழந்தைகளுக்கு நுரையீரல் அழற்சி, நிமோனியா போன்ற நோய்கள் தொற்றுவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது. தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகள், ஆஸ்த்மா, எக்ஸிமா, சொறி, அலர்ஜி போன்ற நோய்களினின்றும் பாதுகாப்பு பெறுகின்றன. தாய்ப்பாலில் உப்புச் சத்துக் குறைவாக இருப்பதால், அதைப் பருகும் குழந்தைக்கு எளிதில் ஜீரணமாகிவிடும். மாறாக, சற்று அடர்த்தியாகக் கலக்கப்பட்ட புட்டிப்பாலைக் கொடுத்தால், குழந்தையின் நுட்பமான சிறுநீரகங்கள், பாதிக்கப்படக்கூடிய அபாயம் ஏற்படும்.

தாய்ப்பால் அருந்தும் குழந்தைகள் அடிக்கடி அழுவதில்லை. தாயின் அரவணைப்பில் இருப்பதால், குழந்தைக்குப் பாதுகாப்பு உணர்வு ஏற்படுவதே காரணம். தாய்ப்பால் அருந்துவதால், பிற்காலத்தில் குழந்தையின் பற்கள் சொத்தையாகாமல் தடுக்க முடியும் என்று மருத்துவ ஆராய்ச்சி முடிவுகள் நிரூபிக்கின்றன. தாயிடம் பால் குடிப்பதால் குழந்தையின் தாடைகள் வலுப்பெற்று முகப் பொலிவு பெறும்.

சமீப காலத்தில்தான் இயற்கை அமுதான தாய்ப்பாலுக்குப் பதிலாக, குழந்தைகளுக்குப் புட்டிப் பால் புகட்டும் பழக்கம் ஏற்பட்டது. மேலைநாடுகளில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டதை அடுத்துப் பல தாய்மார்கள் வேலைக்குச் செல்ல நேர்ந்ததால் புட்டிப்பால் கொடுக்கும் பழக்கம் ஏற்பட்டது. உணவுத்துறையில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாகப் பவுடர் பால் உருவாகியது. குழந்தையைக் கவனிப்பதா, வேலைக்குப் போவதா என்று தடுமாறிக் கொண்டிருந்த தாய்மார்களுக்குப் பதிலாகப் பவுடர் பாலைக் குழந்தைகளுக்குப் புகட்டலாம் என்று தீவிரமான விளம்பரங்கள் அவற்றை உபயோகிக்கும்படி தாய்மார்களைத் தூண்டின.



## தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்தினால் என்ன ஆகும்?

குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்கும் பழக்கத்தைக் கைவிடுவதால், உலகில் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 10 இலட்சம் குழந்தைகள் இறந்து போவதாக யுனிசெப் நிறுவனம் கூறுகிறது. தாய்ப்பால் பாக்கியம் இல்லாத மேலும் பல லட்சம் குழந்தைகள் அப்போதைக்குப் பிழைத்துக் கொண்டாலும், பிற்காலத்தில் பல நோய்களுக்கு இலக்காகின்றன. பல தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குச் சரிவர தாய்ப்பால் புகட்டாமல் விட்டுவிடுவதால், உலகெங்கும் ஆண்டுதோறும் நான்காயிரம் குழந்தைகள் வயிற்றுப்போக்கு, மூச்சுத் திணறல் போன்ற நோய்களால் தாக்கப்பட்டு மாண்டு போயிருக்கின்றன.

அண்மைக் காலத்தில் பல நாடுகளிலும் தாய்ப்பால் கொடுக்கும் பழக்கம் குறைந்து வருவது வருந்தத்தக்க விஷயம். தாய்ப்பாலும் இல்லாமல், தாயின் அன்பும் அரவணைப்பும் கிடைக்காமல், அவலமான சூழ்நிலையில் பல குழந்தைகள் வளருகிறார்கள். நகரங்களின் தாறுமாறான வளர்ச்சி, வறுமை, பால்பவுடர் மற்றும் புட்டிப்பால் பற்றிய ஓயாத விளம்பரங்கள் ஆகியவற்றுக்குப் பலியானவர்கள்தாம் பரிதாபத்துக்குரிய இந்தக் குழந்தைகள்.

## தவறான நம்பிக்கை:

தாய்ப்பால் போதவில்லையென்றால் பால்பவுடர் அல்லது விலங்கினங்களின் பாலைக் குழந்தைகளுக்குப் புகட்டலாம் என்ற தவறாக யோசனை சொல்பவர்களுக்குச் செவிமடுக்கக்கூடாது. குழந்தைக்குத் தேவைப்படும் அளவுக்குப் பால்கொடுக்க அனேகமாக எல்லாத் தாய்மார்களாலும் முடியும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

தாய்ப்பால் குடிக்கும் குழந்தை தேவையில்லாமல் சதைபோடாது. குண்டாக இருக்கும் குழந்தைதான் ஆரோக்கியமான குழந்தை என்று கருதுவதும் தவறு. குழந்தை சரியான எடை வளர்ச்சியை அடைய தாய்ப்பால் உதவுகிறது. தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகள், தங்களுக்குத் தேவையான அளவு பாலையே அருந்தும்; புட்டிப்பால் பருகும் குழந்தைகள்தான் தேவைப்பட்டாலும் தேவைப்படாவிட்டாலும் முழு பாட்டிலையும் காலி செய்யுமாறு வற்புறுத்தப்படுகின்றன.

எந்த ஒரு குறிப்பிட்ட உணவுப் பொருள் அல்லது பானம் மற்றும் விட்டமின்களை உட்கொள்ளுவதால் தாய்ப்பால் சுரப்பது அதிகரிக்கும் அல்லது குறையும் என்று கூறுவதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

**மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புலன்களை நல்ல முறையில் தொழில்படச் செய்வதே அறிவிற்கு உண்மையான வளர்ச்சி என்பது என் கருத்து. அறிவும் உடலும் ஒன்றாக வளர்ச்சியடையும்போது, இதயத் தத்துவத்திற்கும் ஒரு விழிப்பு ஏற்பட வேண்டியது அவசியமாகும்.**



பால் கொடுக்கும் தாய், விதவிதமான உணவுப்பொருட்களைப் போதுமான அளவில் உட்கொண்டாலே போதும். குழந்தைக்குத் தேவையான பால் கொடுப்பதற்கும், தாய் தனது ஆரோக்கியத்தைப் பராமரிக்கவும், வழக்கமாக உட்கொள்வதைவிட கூடுதலான அளவு உணவு உட்கொள்ள வேண்டும். தாய்க்குச் சற்று உடல்நலக் குறைவு ஏற்பட்டாலும் குழந்தைக்கு சுகவீனம் ஏற்பட்டாலும் கூட தாய்ப்பால் கொடுக்கலாம். சொல்லப்போனால், குழந்தைக்கு உடல்நலக்குறைவு ஏற்படும்போது கண்டிப்பாகத் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். ஏனென்றால், ஏற்கெனவே பலவீனம் அடைந்திருக்கும் குழந்தையை மற்ற நோய்க்கிருமிகள் தாக்காமல் தடுக்கக்கூடிய நோய் எதிர்ப்புச் சக்தி தாய்ப்பாலில் அடங்கியிருக்கிறது.

ஒரு தாயானவள், கருவுற்றிருக்கும் போதும் தனது குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கலாம்; அதனால் தாய்க்கோ அல்லது கருவில் இருக்கும் குழந்தைக்கோ, எந்த ஊறும் ஏற்படாது.

சில பெண்கள் நினைப்பதுபோல குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பதால், தாயின் உடற்கட்டு பாதிக்கப்படாது. சிலர், இப்படித் தவறாக நினைத்துக் கொண்டு குழந்தைகளுக்குப் புட்டிப்பால் கொடுக்க ஆரம்பித்து விடுகிறார்கள். ஒரு பெண்ணுக்கு வயது ஆக ஆகத்தான் மார்பகத்தின் அமைப்பு மாறுமே தவிர, குழந்தைக்குப் பாலூட்டுவதால் உடற்கட்டு குலையாது.

## தாய்ப்பாலின் பிற நன்மைகள்

குழந்தைக்குத் தாய்ப்பாலூட்டுவதன் மூலம் அடுத்த குழந்தை பிறப்பதை ஒத்திப்போடமுடியும். குழந்தை தாயிடம் பால் குடிப்பதால் தாயின் உடலில் ப்ரோஜெஸ்டிரான் (Progestrone) என்ற ஹார்மோன் மேலும் அதிக அளவில் சுரக்கிறது. இது இயற்கையாகவே கருத்தடையாக அமைந்துவிடுகிறது. குழந்தைக்குப் பாலூட்டுவதால் தாய்க்கு மார்பகங்களிலும், கருப்பையிலும் புற்று நோய் ஏற்படக்கூடிய வாய்ப்பும் குறைகிறது. குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பதால் செலவும் மிச்சமாகும்.

ஒரு குழந்தை பாதுகாப்பான சூழ்நிலையைப் பெறுவதற்கும், முழுமையான சத்துணவையும், நோய் எதிர்ப்புச் சக்தியையும் அடைவதற்கும் தாய்ப்பாலை விடச் சிறந்த வழி இருக்கமுடியாது. தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளின் தலைமுடியும், தோலும், நகங்களும், பளபளவென்று ஆரோக்கியமாக, இருக்கும். கண்பார்வையும் நன்றாக இருக்கும்.

வேறு எந்தப் பாலும் தாய்ப்பாலுக்கு இணையாகாது. தாய்ப்பால் பருகி வளரும் குழந்தைதான் வருங்காலத்தில் ஆரோக்கியமாக இருக்கும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

# வேளாண்மையில் உயர்கல்வி வாய்ப்புகள்

டாக்டர் ஆர்.சேதுபதி இராமலிங்கம்,
இயக்குனர் (மாணவர் நலம்)
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோவை



நமது நாடு ஒரு வேளாண்மை நாடு. நம் நாட்டில் சுமார் 75 சதம் மக்கள் வேளாண்மையைச் சார்ந்து இருக்கின்றார்கள். நமது கிராமங்களிலெல்லாம் வேளாண்மை மற்றும் வேளாண் சார்புடைய தொழில்களினால்தான், கிராம மக்களின் வாழ்க்கைத்தரமும், முன்னேற்றமும் நிர்ணயிக்கப் படுகின்றன.

கடந்த 50 ஆண்டுகளில் வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்தில் பல சாதனைகளைப் படைத்திருக்கின்றோம். இதில் தமிழக உழவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது.

நம் நாட்டில், வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் உருவானது, வேளாண்மைக் கல்வியின் சரித்திரத்தில் முக்கிய மைல் கல்லாகும். 1949ஆம் ஆண்டு, டாக்டர் சர்வ பள்ளி இராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில், "பல்கலைக் கழக உயர்மட்ட கல்விக்குழு" நமது நாட்டில் கிராமியப் பல்கலைக் கழகங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. இதன் அடிப்படையில்தான், வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றாக அமைக்கப்பட்டன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 1971ல் உருவானது.

தற்போது, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நான்கு இளங்கலைப் பட்டப்படிப்புகள் உள்ளன. (பிஎஸ்ஸி (வேளாண்மை பட்டப்படிப்பு) கோவை, மதுரை, சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள கிள்ளிகுளம் மற்றும் திருச்சி ஆகிய வேளாண்மைக் கல்லூரிகளில் நடைபெறுகின்றது.

பி.எஸ்ஸி., (தோட்டக்கலை) பட்டப் படிப்பு, மதுரை மாவட்டம் பெரியகுளத்திலுள்ள தோட்டக் கலைக் கல்லூரியில் வழங்கப் படுகின்றது.

பி.எஸ்.ஸி (வனவியல்) பட்டப் படிப்பு, கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்திலுள்ள வனவியல் கல்லூரியில் வழங்கப் படுகின்றது.

பி.ஈ. (வேளாண்மை) எனப்படும் வேளாண்மைப் பொறியியல் பட்டப்படிப்பு திருச்சிக்கருகில் உள்ள குமுளூர் வேளாண்மைக் கல்லூரியில் நடைபெறுகின்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு பட்டப்படிப்புகளில் சேருவதற்காக, பல மாணவ மாணவிகள் ஆர்வத்துடன் இருப்பீர்கள். தமிழக அரசால் நடத்தப்படும் நுழைவுத் தேர்வினை எழுதியவர்களே இப்பல்கலைக்கழகத்தின் பட்டப் படிப்புகளில் சேர, விண்ணப் பிக்கத் தகுதியுடையவர்கள். இப் பல்கலைக் கழகத்தில் கற்பிக்கப் படுகின்ற நான்கு பட்டப்படிப்புகளுக்கும் ஒரே விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்பினால் போதுமானது.



விண்ணப்பதாரர், பிளஸ்-2 பாடங்களில் பெற்ற மதிப்பெண்களோடு, நுழைவுத்தேர்வில் பெற்ற மதிப்பெண்ணையும் சேர்த்து, தகுதி அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள். இப் பல்கலைக் கழகத்தின் பட்டப் படிப்பிற்கு விண்ணப்பிக்க மாணவ மாணவிகளுக்குத் தேவையான குறைந்த பட்ச மதிப்பெண்களும் வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

தொழில்முறைக் கல்வி (Vocational Stream) மாணவர்கள், குறிப்பிடப்பட்ட பாடங்களைப் படித்தவர்களாக இருக்க வேண்டும். வேளாண்மை, இரசாயனம், பயிர் உற்பத்தி, பயிர் பாதுகாப்பு, சிறிய பண்ணை மேலாண்மை, பட்டுப்புழு வளர்ப்பு, காய்கறிகள் மற்றும் பழங்கள், வாசனைப் பயிர்கள் மற்றும் தோட்டக்கலை மற்றும் வனவியல் பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

வேளாண்சார்புடைய தொழில் முறைகள், பண்ணை இயந்திரவியல், அறுவடைக்குப்பின் தொழில் நுட்ப உத்திகள், மண்வளப் பாதுகாப்பு ஆகிய பாடங்களைக் கற்றவர்கள், வேளாண்மைப் பொறியியல் பட்டப்படிப்பிற்கு விண்ணப்பிக்கலாம்.

இப்பல்கலைக் கழகத்தில், மாணவ மாணவிகளின் சேர்க்கை, அரசு விதிகளின்படி, ஆதிவாசிகள், ஆதி திராவிடர்கள், மிகவும் பின் தங்கிய மற்றும் பின்தங்கிய வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு செய்யப் படும்.

இப்பல்கலைக் கழகத்தின் பாடமுறை இரு பருவ பாடத்திட்டம் (Semester system) இப்புதிய பாடத்திட்டத்தினால், மாணவ மாணவிகள் செய்முறை தழுவிய வகுப்புகளை அதிகமாகப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவ மாணவிகள், தங்கள் திறமையினாலும், அயராத உழைப்பினாலும், நமது ஆசிரியர்களின் முயற்சியினாலும், அகில இந்திய அளவில் நடத்தப்படுகின்ற பல்வேறு போட்டித் தேர்வுகளில் அதிகமாக வெற்றிபெற்று வருகின்றனர். இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தினால் இவ்வாண்டு நடத்தப்பட்ட அகில இந்தியத் தேர்வில், இப்பல்கலைக் கழக மாணவ மாணவிகள் 38 சதம் இடங்களைப் பெற்றும், ஏழு பாடங்களில் அகில இந்திய முதன்மை நிலையைப் பெற்றும், பல்கலைக் கழகத்திற்கும், தமிழகத் திற்கும் பெருமை தேடித்தந்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

# தேனீ

தற்போது இந்தியாவில் பத்து லட்சம் தேனீ வளர்ப்புக் கிராமங்கள் உள்ளன. இவற்றின் மூலம் ஆண்டு ஒன்றிற்கு 10,000 மெட்ரிக் டன் முதல் 13,000 மெட்ரிக்டன் வரை தேன் உற்பத்தி செய்ய முடிகிறது. இதைத் தவிர, காடுகளிலிருந்து 18,000 டன் தேன் கிடைக்கிறது. கிராமங்களில் வளர்க்கப்படும் தேனீ ஒன்றின் மூலம் 6.7 கிலோ அளவுள்ள தேன் ஆண்டொன்றிற்குக் கிடைக்கிறது.

தற்போது இந்தியாவில் 1 லட்சம் தேனீ வளர்ப்புக் கிராமங்களில் இத்தாலிய நாட்டு வகைத் தேனீக்கள் வளர்க்கப்படுகின்றன. இதனால் 1400 டன் தேன் உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு தேனீயின் மூலம் கிடைக்கும் தேனின் அளவு ஆண்டொன்றிற்கு 14 கிலோவாகும். தேனீக்கள் வளர்க்கப்படும் கிராமங்களை எடுத்துக் கொண்டாலும், உற்பத்தியை எடுத்துக் கொண்டாலும், உலகில் தேனீ வளர்க்கும் தொழிலை மேற்கொள்ளும் நாடுகள் உற்பத்தி செய்யும் தேனின் அளவு இந்தியாவில் உற்பத்தியாகும் தேனைவிட மிகமிக அதிகமாகும். ஆனால், இந்தியாவில் பல்வேறு பருவங்களில் பலவகைப்பட்ட தேனீக்கள் இருந்தாலும் தேன் உற்பத்தி குறைவாகத்தான் உள்ளது.

தேனீக்கள் மனித இனத்திற்கு இரண்டு வழிகளில் உதவி புரிகின்றன. பூக்கள் கருவுறவும், தேன் உற்பத்திக்கும் தேனீக்கள் உதவியாய் உள்ளன. மரங்களும், செடிகளும் அழியாமல் இருக்க பூக்கள் கருவடைதல் மிக முக்கியம். இதைத் தேனீக்கள் செய்து வருகின்றன. நவீன விவசாய முறைகளின் மூலம் செடிகள் வளர்ந்து பூக்களாகி, பூக்கள் கருவுற்று பின்னர் காய்களும் கனிகளும், விதைகளும் கிடைக்கின்றன. விவசாய உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமெனில், தேனீக்களை வளர்ப்பது முக்கியமாகும். விவசாய உற்பத்தி தேனீக்களின் மூலம் 20 சதவிதத்தில் இருந்து 100 சதவிதமாக உள்ளது என்று அறிவியல் ஆராய்ச்சிகள் மதிப்பிட்டுள்ளன.

# மரபுச் செல்வங்கள் பாதுகாப்பு:

## மாணவர்களின் பங்கு!

தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்துறை நமது முன்னோர்களின் கலை, மரபுச் செல்வங்களைச் சேகரித்து, பார்வையாளர்களுக்குக் காட்சியில் வைத்து, அவற்றின் மீது ஆய்வுகள் மேற்கொண்டு அவற்றை நமது வருங்காலத் தலைமுறைக்குப் பாதுகாத்து வருகிறது.

மாவட்டங்களிலுள்ள மக்கள் தங்களது மாவட்டத்தைக் குறித்தும் அதன் வரலாற்றுப் பின்னணியினையும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கில் தமிழ்நாடு அரசின் கொள்கையாகிய "மாவட்டங்கள் தோறும் அருங்காட்சியகம்" என்றதன் அடிப்படையில் புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சி, வேலூர், ஈரோடு, ஊட்டி, கடலூர், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் மாவட்ட அருங்காட்சியகங்கள் தொடங்கப்பட்டு இயங்கி வருகின்றன.

அருங்காட்சியகம் ஓர் அறிவாலயம்; பள்ளி, கல்லூரி மாணவ மாணவியருக்குக் கல்விக் கூடங்களாக விளங்குவதுபோல, அருங்காட்சியகங்கள் மாணவ மாணவியர், ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், பார்வையாளர்களுக்கு அறிவுக்கூடங்களாகத் திகழ்கின்றன.

அருங்காட்சியகங்கள் சமுதாயத்துடன் தொடர்பு கொள்ளப் பாலமாக அமைவது மாணவ சமுதாயமே. எனவே, மாணவ மாணவியரின் ஈடுபாடு அருங்காட்சியகங்களின் தேவையை அதிகரிக்கின்றது. மாணவ மாணவியரைக் கொண்டு மலைப் பயணம், இயற்கை நோக்குப் பயணம், வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாப்பு விளக்கப்பயணம், நினைவுச் சின்னங்கள் அறிமுகப் பயணம் எனப் பல்வேறு பயணங்களையும், பயிற்சிகளையும் பல்வேறு


டாக்டர் வே. ஜெயராஜ்
காப்பாட்சியர்
வேதிய பாதுகாப்புப் பகுதி
அரசு அருங்காட்சியகம்
சென்னை


பணிகளுக்கிடையில் மாவட்ட அருங்காட்சியகங்கள் மாவட்ட அளவில் நடத்தி வருகின்றன.

1993 ஜனவரித் திங்களில் வேலூர் அரசு அருங்காட்சியகம் தனபாக்கியம் கிருஷ்ணசாமி முதலியார் பெண்கள் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டப் பகுதியுடன் இணைத்து ஆறு கல்லூரிகளைச் சார்ந்த மாணவ மாணவியருக்கான 10 நாள் சிறப்பு முகாமினை "நமது கலை, மரபுச் செல்வங்களைப் பாதுகாப்போம்" என்ற தலைப்பில் நடத்தியது. இம்முகாமில் அருங்காட்சியகத் தொடர்புடைய பல்வேறு தலைப்புகளில் உரை நிகழ்த்தப்பட்டு கலை மற்றும் மரபுச் செல்வங்களைப் பாதுகாக்க பயிற்சி அளிக்கப்பட்டது. களப்பணி மேற்கொள்ளப்பட்டு வரலாற்று, பண்பாட்டுத் தொடர்புடைய பொருட்கள் மாணவ மாணவியரால் சேகரித்து அருங்காட்சியகத்திற்கு வழங்கப்பட்டன. மாணவ மாணவியரின் உதவியுடன் வனத்துறையினருடன் இணைந்து வடஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தின் பல்வேறு நகரங்களில் மரம் நடுதலும் சுற்றுப்புற தூய்மைப் படுத்துதலும் பெருமளவில் நடைபெற்றன.

### நாட்டுநலப் பணித் திட்டச் சிறப்பு முகாம்:

சென்னைப் பல்கலைக்கழகத்தின் நாட்டுநலப்பணித் திட்டத்தின் கீழ், 20,000 க்கும் மேலான மாணவ மாணவியர் நாட்டு நலப்பணி செய்து வருகின்றனர். மரம் நடுதல், சாலைகள் அமைத்தல், கிராமங்களைத் தத்து எடுத்தல், எழுத்தறிவித்தல், இரத்த தானம் அளித்தல், சுகாதாரப் பணிகள் செய்தல் போன்ற பல்வேறு ஆக்கபூர்வமான பணிகளைச் செய்து வருகின்றனர்.

மரபுச் செல்வங்களைப் பாதுகாப்பதும் இத்திட்டத்தின் கீழ் இயங்கிவரும் ஒரு செயல் திட்டமாகும். அதன் அடிப்படையில் அருங்காட்சியகத்துறை சென்னைப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்டத்துடன் இணைந்து அண்மையில் "தேசிய ஒருமைப்பாடு மற்றும் நமது மரபுப் பாதுகாப்பு" என்ற தலைப்பில் சிறப்பு முகாம் ஒன்றினைச் சென்னை அருங்காட்சியக வளாகத்தில் ஏற்பாடு செய்திருந்தது.

சென்னை மாநகரிலுள்ள நந்தனம் அரசு கலைக்கல்லூரி, மாநிலக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, குருநானக் கல்லூரி மாணவர்கள் மற்றும் இராணிமேரி கல்லூரி, காயிதேமில்லத் கல்லூரியைச் சார்ந்த மாணவிகள் சுமார் 150 பேர் இச்சிறப்பு முகாமில் பங்கேற்றனர். இம்முகாம் அருங்காட்சியக வளாகத்தின் சுற்றுபுறத் தூய்மைக்காக்கவும் சுற்றுச்சூழல் வளங்காக்கவும் நமது மரபுகளைக் காக்கப் பயிற்சியளித்து பங்கு பெறும் மாணவ மாணவியர் சிறந்து விளங்க வழிவகுக்கும் வண்ணம் ஏற்பாடு செய்யப்பட்டது.

### சென்னை அருங்காட்சியகம்:

சுமார் 140 ஆண்டுகளுக்கு முன் புவியியல் பொருட்களைக் கொண்டு தொடங்கிய இந்த அருங்காட்சியகம், சுமார் 16 ஏக்கர் நிலப்பரப்பில் ஆறு கட்டடங்களில் பத்து பல்வேறு துறைகளை அடக்கி ஆயிரக்கணக்கான காட்சிப் பொருட்களுடன் ஒரு



பல்நோக்கு அருங்காட்சியகமாகச் செயல்பட்டுவருகிறது. இந்திய சாராசனக் கட்டடக் கலையின் அடிப்படையில் கட்டடப்பட்ட காவியடிக்கப்பட்ட கட்டடங்கள் சுமார் 140 ஆண்டுகளைத் தாண்டி அக்கால அரும்பொருட்களை உள்ளடக்கி வரலாற்றுச் சின்னங்களாகப் பரிமளிக்கின்றன.

1950 ல் 'தேசியக் கலைக்கூடம்' என்று நேருவால் பெயர் சூட்டப்பட்ட சிவப்புக்கல் கட்டடம் அதற்கு முன்னர் விக்டோரியா இராணியின் பெயர் பெற்றிருந்தது. 1963 க்குப் பின் மூன்று கட்டடங்கள் எழும்பியுள்ளன. இவ்வாறு வளர்ந்து வரும்கால் காலத்தாலும் இயற்கையின் சீற்றத்தாலும் பாதுகாக்கப்பட்டுவரும் அரும்பொருட்கள் கட்டடங்கள் பல்வேறு வகைகளில் பாதிக்கப்படுகின்றன. நல்ல சுற்றுப்புறம் அமைந்தால் பாதுகாக்கப்படும் மரபுச் செல்வங்கள் சிறப்பாகப் பாதுகாக்கப்பட்டு பார்வையாளரின் மனதில் அமைதியை ஏற்படுத்தி அக்கால நிலையினையும் மரபினையும் ஆழமாகப் பதித்து விடும். அதன் அடிப்படையில் தான் அருங்காட்சியக வளாகத்தில் தோட்டங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

ஆயிரக்கணக்கான சிற்பங்கள், ஆயுதங்கள் மற்றும் அரும்பொருட்கள் இவை சாற்றும் உண்மையினை மாணவ மாணவியர் புரிந்து கொண்டு அவை தொடர்பான பயிற்சி பெற்று அவற்றைப் பாதுகாத்து, வரப்போகும் தலைமுறைக்கு வைக்கும் வண்ணம் இந்தச் சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. இவ்வருங்காட்சிய வரலாற்றில் இம்முகாம் நடைபெறுவது இதுவே முதன் முறை.

### மாணவக் கண்மணிகளுக்கு அளிக்கப்பட்ட பயிற்சிகள்

மாணவ மாணவியர் நமது மரபுச் செல்வங்களைப் பாதுகாக்கப் பயிற்றுவிக்கப்பட்டால் தாங்கள் கற்றதைப் பரப்ப முடியும் என்பதை மனதில் கொண்டு தொல்பொருளியல், மானிடவியல், சிற்பவியல், வேதியப் பாதுகாப்பு ஆகிய துறைகளில் வல்லுநர்களைக் கொண்டு பயிற்சியளிக்கப்பட்டது. காகிதத்தில் மை கொண்டு எவ்வாறு கல்வெட்டுக்களைப் படி எடுப்பது என்றும் பழங்காலத் தமிழ் எழுத்துக்களை எவ்வாறு படிப்பது என்றும் கற்றுக் கொடுக்கப்பட்டது. வேதிய முறையில் சிற்பங்கள், ஆயுதங்கள் பாதுகாக்கப் பயிற்சி கொடுக்கப்பட்டு சுமார் ஆயிரம் கற்சிற்பங்களும் இரும்பு ஆயுதங்களும் பாதுகாக்கப் பயிற்சி கொடுக்கப்பட்டன. விலங்கியல் புவியியல், தொல்பொருளியல், மானிடவியல் மற்றும் கலை ஆகிய காட்சிக்கூடங்களில் பயிற்சி கொடுக்கப்பட்டு அவற்றின் பராமரிப்பு மாணவர்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்டது.

### பிற பயிற்சிகள்

பல்வேறு துறைகளைச் சார்ந்த வல்லுநர்கள் அவர்களது துறை சார்ந்த பயிற்சியினை அளித்தனர். தீயணைப்புத் துறையினைக் கொண்டு தீயணைப்புப் பயிற்சி வழங்கப்பட்டது. சென்னை சமூகவியல் பள்ளியின் இயக்குநரால் "எய்ட்ஸ்" தடுப்பது பற்றி உரை நிகழ்த்தப்பட்டது. சிறந்த எழுத்தாளர்களாகவும் பேச்சாளர்களாகவும் உருவாக வாய்ப்புகள் உரை வாயிலாக வழங்கப்பட்டன. சிறந்த தலைவர்களாகவும் ஆட்சியாளர்களாகவும் மாணவ மாணவியர் விளங்கக் குழு விவாதங்கள் - செயல்முறை விளக்கங்கள் வாயிலாகப் பயிற்சியளிக்கப்பட்டது.

### மாணவ மாணவியர் ஆற்றிய பணிகள்

### சுற்றுபுறத்தூய்மைப் பணி

தினமும் ஆயிரக்கணக்கில் சென்னை அருங்காட்சியகத்திற்கு நமது நாட்டினரும் வெளிநாட்டினரும் வருகை தருகின்றனர். சுற்றுபுறத்தூய்மை, பார்வையாளரின் மனதிற்கு இதமளித்து நமது கலை, மரபுச் செல்வங்களைச் சிறப்பாகக் கண்டு களிக்க வழி செய்கின்றது. இப்பணியில் மாணவ மாணவியர் பயன்படுத்தப்பட்டனர். பரந்த இந்த அருங்காட்சியக வளாகத்தில் பார்வையாளரின் பார்வை படும் இடங்களில் வளர்ந்திருந்த தேவையற்ற செடிகளை அகற்றியும் மேடு பள்ளங்களைச் சரிப்படுத்தியும் குப்பைக்கூளங்களை மாநகராட்சி குப்பை வாகனங்களின் மூலம் அகற்றியும் தூய்மைப்படுத்தினர்.

### தோட்டம் பராமரித்தல், மரக்கன்றுகள் நடுதல்:

அருங்காட்சியக வளாகத்தின் முன்புறத்தில் பல்வேறு இடங்களில் தோட்டங்கள் உள்ளன. சிறபத் தோட்டம் ஒன்று உள்ளது. மாணவ மாணவியர் இத்தோட்டங்களைச் சீரமைத்து உதவினர். நூற்றுக்கணக்கான மரக்கன்றுகளை அருங்காட்சியக வளாகத்தில் நட்டனர். செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றினர். வனத்துறையினரால் மரக்கன்றுகளும் இரும்புப் பாதுகாப்பு வலைகளும் வழங்கப்பட்டன.

### கட்டடப் பராமரிப்பு

அருங்காட்சியக வளாகத்தில் பெரும்பாலான கட்டடங்கள் 140 ஆண்டுகளைத் தாண்டியுள்ளன. கட்டடங்கள் உயரமான பகுதிகளிலும், கோபுரங்களிலும், செடிகள் வளர்ந்து கட்டடங்கள் பொலிவிழந்து காணப்பட்டன. பொதுப்பணித்துறையினர், தீயணைப்புத்துறையினரின் உதவியுடனும் மாணவர்களின் உதவியுடனும் செடிகள் அகற்றப்பட்டு செடி வளர்ந்திருந்த பகுதிகளில் செடி கொல்லி மருந்துகள் தெளிக்கப்பட்டன. நுழைவாயில் கட்டடத்தின் அடித்தளத்திலும் முதல் தளத்திலும் சிற்பங்கள் காட்சியில் வைக்கப்பட்டிருந்த பகுதிகள் தூய்மை செய்யப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டன. பார்வையாளர்கள் கட்டடத்தையும் சிற்பங்களையும் தொடர்ந்து பார்வையிடவேண்டும்; அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்று மாணவ மாணவியர் பார்வையாளர்களைக் கேட்டுக்கொண்டனர்.

### முகாமில் போட்டிகள்

பல்வேறு பணிகளுக்கிடையில் மாணவமாணவியர் தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கும் அளவில் கலை நிகழ்ச்சிகளை நடத்தினர். குழு விவாதங்கள் நடத்தினர். மாணவ மாணவியர்களுக்குள்ளே மறைந்து கிடக்கும் திறமையை வெளிக்கொணரும் வண்ணம் பட்டிமன்றம், பேச்சுப் போட்டி; நடனப்போட்டி, நாடகப்போட்டி, வினாடி வினாப் போட்டி, கவிதைப் போட்டி, பாடல் போட்டி, ஆகியவை நடத்தப்பட்டு சிறந்தவர்கள் கண்டறியப்பட்டனர். பெரும்பாலான மாணவ மாணவியர் அந்தந்தத் துறைகளில் இருக்கும் வல்லுநர்களை எட்டிப் பிடிக்கும் வண்ணம் சிறப்பாக இருப்பது கண்டறியப்பட்டது.

### இரத்ததான முகாம்

நாட்டு நலப்பணித் திட்ட முகாமில் சென்னை பசும்பொன் அரிமா சங்கத்தின் உதவியுடன் அருங்காட்சியக வளாகத்தில் இரத்ததான முகாம் நடத்தப்பட்டது. 85 பேர் இரத்ததானம் வழங்கினர். இவர்களில் பெரும்பாலானோர் மாணவ மாணவியர். மாணவ மாணவியரின் இச்சிறப்பு, பொதுமக்கள் பலரையும் இரத்த தானம் வழங்க வைத்தது. அருங்காட்சியக வளாகத்தில் முதல் முறையாக இரத்ததான முகாம் நடைபெற்றுள்ளது.

இவ்வித முகாம்கள் மாணவ மாணவியருக்கு நமது கலை மற்றும் மரபுச்செல்வங்களைப் பாதுகாப்பதன் சிறப்பினைத் தெரிவிப்பதோடு அவை உணர்த்தும் சிறப்பினை அறிந்து மாணவ சமுதாயம் வளர வழி வகுக்கின்றன.





# ஜெ.ஜெயலலிதா திரைப்பட நகர்

அகில உலகத் தரம் வாய்ந்த "ஜெ.ஜெயலலிதா திரைப்பட நகர்", இதோ நமது சென்னை தரமணியில் "ஆசியாவின் ஹாலிவுட்"டாக மலர்ந்து இந்தியத் திரையுலகிற்கு மணம் வீசத் தொடங்கிவிட்டது.

சாதனைகளின் சிகரமாகவும், சரித்திரத்தின் வசந்தமாகவும், சென்னை தரமணியில் ரூபாய் 21 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ள ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகரின் தொடக்கவிழா 31.8.94 அன்று மாலை கோலாகலமாக நடைபெற்றது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களைப் பாராட்டியும் வாழ்த்தியும், செய்தி விளம்பரத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு மு. தென்னவன், திரைப்பட இயக்குநர் திரு சக்தி சாமந்தா, திரைப்படத் தயாரிப்பாளர்கள் திரு ஏ.வி.எம். சரவணன், திரு இராமானந்த் சாகர், திரைப்பட இயக்குநர் திரு மிருணாள்சென், திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் இயக்குநர் திரு தாசரி நாராயண ராவ், திரைப்பட இயக்குநர்கள் திரு கிரிஷ் கர்னாட், திரு மணிரத்னம், திரு பி. வாசு, திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் இயக்குநர் திரு பாசில், திரைப்படத் தயாரிப்பாளர் திரு கே.டி. குஞ்சுமோன் ஆகியோர் பேசினார்கள்.

பின், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 'ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகரை'த் திறந்துவைத்தார்.

சாதனைகள் படைப்பதையே அன்றாட வாழ்க்கை நெறிமுறையாகக் கொண்டுவிட்ட மாண்புமிகு புரட்சித்தலைவியின், புகழ்க் கிரீடத்தில் பதிக்கப்பட்ட மற்றுமோர் வைரக்கல், "ஜெ.ஜெயலலிதா திரைப்பட நகர்" ஆகும்.

பதினைந்து ஆண்டுக்காலம் திரையுலகில் வெற்றிக் கொடி நாட்டிய புரட்சித்தலைவி அவர்கள், திரைப்படங்களில் நடித்துக் கொண்டிருந்த நாட்களில், திரைப்படத் தயாரிப்பிற்குத் தேவையான அனைத்து வசதிகளும் ஒரே இடத்தில் கிடைக்க ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமெனச் சிந்தித்து வந்தார். அந்தச் சிந்தனையின் அழகிய செயல் வடிவம்தான் "ஜெ.ஜெயலலிதா திரைப்பட நகர்".

மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலினால், பதினெட்டே மாதங்களில், சர்வதேசத் தரத்தில், ரூ.21 கோடி செலவில் 86 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாகியுள்ளது, இந்தத் திரைப்பட நகர்.

பணப்பெட்டி, திரைப்படக் கலைஞர்கள், கதை ஆகியவற்றுடன் ஒரு தயாரிப்பாளர் ஜெ.ஜெயலலிதா திரைப்பட நகருக்குள் அடியெடுத்து வைத்தால், படத்தை முடித்துக் கொண்டு, திரைப்படச் சுருள் பெட்டியுடன் வெளியேறலாம்.

வண்ணமிகு ஜெ.ஜெயலலிதா திரைப்பட நகரில் உட்புற - வெளிப்புற, படப்பிடிப்பு நடத்தத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. உட்புறப் படப்பிடிப்பு நிலையம், ஒளிப்பதிவுச் சாதனங்கள், வெளிப்புறப் படப்பிடிப்பு செட்கள், நிரந்தரக் கட்டடங்கள், வடிவங்கள், ஒலிப்பதிவுக் கூடம், டப்பிங் தியேட்டர், வீடியோ தியேட்டர், எடிட்டிங் லேப், பிரிவியூ தியேட்டர் என அனைத்து அம்சங்களும், சிறந்த தொழில் நுட்பத்துடன், இங்கே நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

ஜெ.ஜெயலலிதா திரைப்பட நகரில் அடியெடுத்து வைத்தவுடன் அதன் வண்ண வண்ண வடிவங்கள் நம்முன்னே தோன்றி நம்மை வியப்பில் ஆழ்த்திவிடுகின்றன. எங்கெங்கு நோக்கினும் அதிசயம்; அழகுப் பெட்டகங்கள்; மகிழ்ச்சிப்பிரவாகத்தில் நம்மைத் திளைக்கச் செய்யும் எழில்மிகு வடிவங்கள் அடுத்தடுத்து தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

பிரமிக்க வைக்கும் பெரியதொரு சுறாமீன் தனது வாயைத் திறந்தபடி நம்மை வரவேற்கிறது. அதன் பின்னணியில் சமுத்திரம்



வெகு நேர்த்தியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. மாயா ஜாலப் படங்களை இது நம் நினைவுக்குக் கொண்டு வருகின்றது. அதன் வாயில் குதூகலத்துடன் நுழைந்தால் நாம் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தே ஆகவேண்டும்.

ஆம்… அங்கே குழந்தைகள் உலகம் ஒன்று மலர்ந்திருக்கின்றது. குழந்தைகள் இரயில் (Caterpillartrain), டால்பின்கள், யானை வடிவில் பொம்மை இரயில்கள், பாட்டரியில் ஓடும் சிறு கார்கள், மனிதக் குரங்கு 'டிஸ்னிலேண்ட்' முகப்பு என மழலைகளை மகிழ்விக்கும் சிங்கார உலகம் உருவாகியுள்ளது. வலது பக்கம் திரும்பினால் பிரம்மாண்டமானதொரு 'செஸ்போர்டு' அனைவரையும் நிச்சயமாகக் கவர்ந்திழுக்கிறது.

அதன் பின்னணியில் இருப்பது தான் 'இத்தாலியத் தோட்டம்'. இரவில் இதன் அழகைக் காணக் கண்கோடி வேண்டும். இத்தாலிய மறுமலர்ச்சியின் நாயகன் மைக்கல் ஏஞ்சலோவின் இதயத்தைக் கொள்ளை கொண்ட இத்தாலியத் தோட்டம் சென்னையில் மலர்ந்துவிட்ட அதிசயத்தைக் காண நீங்கள் வந்தே ஆகவேண்டும். இங்குள்ள சிலைகளில், நீரூற்றுக்களில், வண்ணங்களில், மிருதுவான புல் படுக்கைகளில், இத்தாலிய மறுமலர்ச்சியின் **(Italian Renaissance)** கலைநயம் புலப்படுகிறது. வண்ண வண்ண மலர்கள், வண்ண வண்ண ஒளிவிளக்குகள், வண்ண வண்ண நீரூற்றுக்கள் வெண்மை நிறத்தில் எழிலார்ந்த சிற்பங்கள். **ஆகா! கல்லிலே இங்கு கவி புனையப் பட்டிருக்கிறது. தரமணியில் ஒரு ரோம் உருவாக்கப்பட்டுள்ளது.**

அதனையடுத்து மலர்ந்திருப்பது ஒரு மொகலாயத் தோட்டம் - இயற்கை எழுதிய கவிதை. ரம்மியமான சூழ்நிலையில் மொகலாய கலாச்சாரத்தின் கலையழகுபின்னிப் பிணைந்து உருவெடுத்துள்ளது. இரவில் இதன் ஒளி வெள்ளத்தில் இந்தத் தோட்டம் வளமானதொரு பச்சைக் கம்பளமாகக் காட்சியளிக்கும். இதன் நீரூற்றுகள், ஒளிவிளக்குகள் நம் நெஞ்சத்தைக் கிள்ளுகின்றன. திரையில் இந்தக் காட்சியைப் பார்த்தாலே, ரசிகர்களுக்குக் காதல்மலர்ந்துவிடும்.

காஷ்மீரத்து மொகலாயத் தோட்டம் இங்கே பூத்துக் குலுங்குகிறது. தீவிரவாதிகளின் அட்டகாசத்தால் காஷ்மீருக்குச் செல்லமுடியாத படத்தயாரிப்பாளர்களுக்கு **இந்த மொகலாயத் தோட்டம் ஒரு குட்டி காஷ்மீர். "If mountain doesn't come to Muhamud, Muhamud must go to mountain" என்று சொல்வார்கள். ஆனால் தயாரிப்பாளர்கள் காஷ்மீருக்குப் போக முடியாததால் எங்கள் முதல்வர் காஷ்மீரத்தை இங்கே கொண்டுவந்துவிட்டார்.**







அதுவரை வந்த தார் ரோடு, இப்போது மண் ரோடாக மாறிவிட்டது. ஏன் என்று பார்த்தால்… அங்கே பச்சைப் பசேல் என வயல் வெளிகளுடன் கிராமம் ஒன்று மண் வாசனையுடன் எழுந்துள்ளது. கிராமத்தின் முகப்பில், கிராமிய மணம் வீசும் ஐயனார் சிலை, பொம்மைக் குதிரைகளுடன் நம்மை வரவேற்கின்றது.

இக்கிராமத்தில் ஜெய கணபதி கோயில், வெற்றிவேல் முருகன் கோயில், மகாகாளி, அனுமான் ஆகிய கடவுள்களின் (படங்களின் பூஜைகளை இங்கே நடத்திவிடலாம்) விக்ரகங்கள் ஸ்தபதிகளால் ஆகம விதிப்படி வடிவமைக்கப்பட்டுள்ளன. இக் கிராமத்தில் ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு வடிவத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இங்கே கிராமத்து வீதிகள், கோயில், சர்ச், மசூதி, பள்ளிக்கூடம், தபால் நிலையம், சத்துணவுக் கூடம், வயல்வெளி, வாய்க்கால் வரப்பு, கிணறு, பம்புசெட், குடிசை, ஓட்டு வீடு என்று ஒரு கிராமம் தத்ரூபமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அழகிய கிராமியச் சூழ்நிலையில் சிவன், பார்வதி, குதிரை, தாமரைக் குளம் மிகவும் ரம்மியமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து நம்மைக் கவர்வது கிரேக்க-ரோமன் ஸ்டேடியம். அந்நாட்டு வீரர்கள் சிங்கங்களுடன் மோதிய அந்த நாட்களை ஞாபகப்படுத்துகிறது இந்த விளையாட்டு மைதானம். வட்டவடிவில் அமைக்கப்பட்டுள்ள இம்மைதானத்தை வரிசையான படிக்கட்டுகள், புல்வெளிகள் அலங்கரிக்கினறன்.

அடுத்து, படத் தயாரிப்பாளர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது, நடன அரங்கம் (Dance Floor). வட்ட வடிவில் வண்ண வண்ண விளக்குகளால் ஜொலிக்கும் இந்த டிஸ்கோ அரங்கம், முற்றிலும் குளுகுளு வசதி செய்யப்பட்டு நாட்டிலேயே, முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. அனைத்து வகை நடனங்களுக்கும் ஏற்றாற்போல் மாற்றி அமைத்துக் கொள்ளும் வசதி கொண்ட அற்புத அரங்கம் இது.

அதனையடுத்து வனச் சூழ்நிலையில் யானைகள்… ஒட்டகச் சிவிங்கிகள்… வரிக் குதிரைகள்… வாத்துக்கள்… கொட்டும் அருவி. மரப்பாலம்… ரம்மியமான இந்த இயற்கைக் காட்சிகளைக் கேமிரா எத்தனை முறை ரசித்தாலும் திகட்டாது… திகட்டாது… திகட்டவே திகட்டாது.

அடுத்ததாக நம்மை வியப்பில் ஆழ்த்தக் காத்திருப்பது ஜப்பான் தோட்டம்.

எழிலார்ந்த, காண்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும், ஜப்பானுக்கே உரித்தான பகோடா கோபுரம், இரவு ஒளி





வெள்ளத்தில் சொர்க்கபுரியாகக் காட்சியளிக்கிறது. ஜப்பான் பொம்மைகள், சீன நாட்டு டிராகன், புத்தர் சிலை, சுற்றுப்புறத்தில் புத்தர் சரிதை ஆகியவை சிலைகளில் வடிக்கப்



பட்டுள்ளன். ஒவ்வொரு அணுவிலும் ஜப்பானியக் கலாச்சாரம் மிளிரக் காணலாம். இங்குள்ள புற்கள், வெறும் புல்லா? பட்டுக் கம்பளங்களா? இவற்றை யெல்லாம் கண்டு நாம் ரசித்துக் கொண்டேயிருக்கலாம்.

வெளிப்புறப் படப்பிடிப்புக்குத் தேவையான அமைப்புகளை நாம் விவரித்துக் கொண்டே போகலாம். அங்கே ஒரு காவல் நிலையம் உண்டு. நீதிமன்றம் உண்டு. சிறைச்சாலை உண்டு. தீயணைப்பு நிலையம் உண்டு. நீண்ட சாலைகள், வளைந்த பாலங்கள், அழகிய பாதையின் இருமருங்கிலும் சோடியம் விளக்குகள், பஸ் ஸ்டாப்புகள், பள்ளிக்கூடம், மருத்துவமனை, காவல் நிலையம், தீயணைப்பு நிலையம் அப்பப்பா சொல்லிக் கொண்டே... ரசித்துக் கொண்டே... காமிராவில் பிடித்துக் கொண்டே செல்லலாம்.

உட்புறப் படப்பிடிப்பில், உபயோகப் படுத்தப்படும் மின் விளக்குகளின் வெப்பத்தால், படப்பிடிப்புக் குழுவினர் அவதியுறாமல், தங்களின் முழுக் கவனமும் படத் தயாரிப்பில் ஈடுபடுத்த ஏதுவாக, முற்றிலும் குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்பு அரங்கம்







அமைக்கப்பட்டுள்ளது.

முற்றிலும் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட 30 மேக்கப் அறைகள், கலைஞர்களின் வசதிக்காக, நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளன. இரு நூறுக்கும் மேற்பட்டவர்கள் உணவருந்திட சாப்பாட்டுக் கூடம் கவர்ச்சிகரமாக அமைக்கப் பட்டுள்ளன.

படப்பிடிப்புக் குழுவினர் தங்கிப் பணியாற்றிட ஐந்து நட்சத்திர ஓட்டலும் காட்டேஜ்களும் மிகவும் கலை நயத்துடன் உருவாக்கப்பட்டுள்ளன. 500 ஜூனியர் கலைஞர்கள் தங்குவதற்கு வசதியாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

ஜெ.ஜெயலலிதா திரைப்பட நகரில்...

பில்லியர்ட்ஸ் அரங்கம் உண்டு. டென்னிஸ் கோர்ட் உண்டு. நீச்சல் குளமுண்டு. நீருக்கடியில் சென்று படம் பிடிக்கும் வசதியும் உண்டு. இங்கு 35 மி.மீ. சினிமாஸ்கோப் திரையுடன் கூடியதொரு ஒலிப்பதிவுக் கூடம் நவீன வசதிகளுடன் உள்ளது. ஒரு பிரிவியூ தியேட்டர் உண்டு. ஒளிப்பதிவுச் சாதனங்கள் உண்டு. ஒளி வெள்ளம் பாய்ச்சும் மின் விளக்குகள் உண்டு.

வீடியோ படப்பிடிப்பு நிலையம் உண்டு. மூவியாலா (Moviola) உண்டு. ஸ்டீன்பெக் (Steinbeck) உண்டு. வீடியோவிற்குத் தேவையான மிக நவீன பீட்டகாம் (Betacam)சாதனமும் உண்டு. வெகுவிரைவில் கலர் லெபோரட்டரியும், இரயில் என்ஜின், இரயில் பெட்டிகளுடன் கூடிய ஒரு இரயில் நிலையமும் இங்கு உருவாக உள்ளன.



மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நேரடி மேற்பார்வையில் இருபது இளம் பொறியாளர்கள், நான்கு கட்டடக் கலை நிபுணர்கள், பத்துக் கட்டட வரைவாளர்கள், சேர்ந்து நான்காயிரம் படங்களைப் பார்த்து, வரை படங்களைத் தயாரித்து, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பதினெட்டு மாதங்கள் நெற்றிவேர்வை சிந்தி, அழகுற நிர்மாணிக்கப்பட்டதுதான் இந்த "ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகர்".

முடிவில்லாக் கனவுலகமோ என்று நம்மை வியக்கவைக்கும் இந்த ஜெ.ஜெயலலிதா திரைப்பட நகர் அகில இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் ஓர் அரிய வரப்பிரசாதமாகும்.

**மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் சிந்தனையில் உதித்த இந்தச் சிங்கார உலகத்தின், பிரம்மாண்டமும், கலை நுணுக்கமும், அவரது கற்பனை வளத்திற்கும், அறிவுக் கூர்மைக்கும், அனுதினமும் சாதனைகள் படைக்கும் முதல்வரின் ஆற்றலுக்கும் ஓர் எடுத்துக்காட்டு.**

**நினைத்ததை முடிக்கும் அவரது ஆற்றலுக்கு எழுப்பப்பட்டுள்ள அழியாச் சின்னம். J.Jayalalitha Film City is a monumental edifice for her incomparable brilliance, stunning initiative, electrifying dynamism and unique style of accomplishing everthing she desires.**

**எதைத் தொட்டாலும் பொன்னாகும் என்பதைக் குறிக்க ஆங்கிலத்தில் King Midas Touch என்று கூறுவார்கள். திரைப்பட நகரைப் பார்த்த பின்பு, மிகச் சிறப்பாக இமாலயச் சாதனையைச் செய்து முடிக்கும் ஆற்றலை இனிமேல் சுருக்கமாகக் கூற வேண்டுமேயானால் 'J. Jayalalitha's touch என்று கூறினால் போதும்' என்று கூறுவார்கள்.**

**—என். இளங்கோ.**




## 'இந்தியாவின் மற்றப் பகுதிகளுக்குத் தமிழ்நாடு வழிகாட்டும்; தலைமையேற்கும்!'

# ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்: மாண்புமிகு முதல்வர் உரை

இந்த மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பத்தில், 1993ம் ஆண்டு "விளையாட்டுகள் மற்றும் சுற்றுப்புறச் சூழலு"க்கான அகில உலக விருதை எனக்கு வழங்கிய சர்வதேச ஒலிம்பிக் குழுவுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் விளையாட்டு வளர்ச்சிக்கு மேலும் தொடர்ந்து உழைத்திட எனக்கு இது ஊக்கமளிக்கும். என்னைப் பற்றிப் பெருமையாகப் பேசிய திரு. அஸ்வினி குமார் அவர்களுக்கும் திரு. சிவந்தி ஆதித்தன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விருதை அடக்கத்துடன் பெற்றுக் கொள்கிறேன். நமது மாநிலத்தில் விளையாட்டின் மேம்பாட்டிற்குக் கடினமாக உழைத்திட எனக்கு இவ்விருது ஊக்கமளிக்கும். கடந்த மூன்றாண்டுகளில், இளைய விளையாட்டு வீரர்கள் சிறந்த சாதனைகளைப் புரியத் தூண்டக்கூடிய எந்தச் சந்தர்ப்பத்தையும் நாங்கள் தவறவிடவில்லை. அற்புதத் திறன் கொண்ட மாணவர்களைத் தத்து எடுத்துக் கொள்வதிலாகட்டும், கடினமான சூழ்நிலையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு உதவி புரிவதிலாகட்டும், நமது விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தி, அவர்கள் தங்களின் குறிக்கோளை அடைய துரிதப்படுத்தி வந்திருக்கிறோம்.

தமிழ்நாட்டின் விளையாட்டு வரலாற்றில், முதன் முதலாக சப்ஜூனியர் போட்டிகள் மாநிலமெங்கும் நடத்தப்பட்டு வருகின்றன. போட்டிகள் மிகுந்த சூழ்நிலையில், பன்னிரண்டு வயதுக்குக் கீழுள்ள மாணவர்கள் தங்களின் திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி கண்டிட, ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படுவதை இது உறுதி செய்கிறது. கல்விமாவட்ட அளவிலிருந்து மாநில அளவில் போட்டிகள் நடத்தப் படுகின்றன. நடுத்தரப் பள்ளிகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. அதிகமான போட்டிச் சூழ்நிலையை உருவாக்கத் தற்போது அனைத்துப் பள்ளிகளும் இப்போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுகின்றன.

அடிப்படை வசதிகள் இல்லாமையே பல்வேறு விளையாட்டுக்கள் வளர்வதற்குத் தடைக்கல்லாக உள்ளது. அனைத்துப் பள்ளிகளிலும் விளையாட்டுக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை, படிப்படியாக, பெருக்க, அரசாங்கம் சமீபத்தில் முடிவெடுத்துள்ளது. மாநிலத்தின் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு ஆதார நிலையத்தை உருவாக்க அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. இந்தக் கிராம விளையாட்டு குழுக்கள், பஞ்சாயத்து யூனியன் அளவில் போட்டிகளை உருவாக்கும். பயிற்சி வசதிகளும் வழங்கப்படும். இந்த நோக்கத்திற்காக அரசாங்கம் ஏற்கெனவே ரூ.38 இலட்சத்தை ஒதுக்கியுள்ளது. பஞ்சாயத்து யூனியன் மட்டத்தில், விளையாட்டுக்களுக்குச் சிறந்த அடிப்படை வசதிகள் இருந்தால், நம் மாநிலத்தின் கிராமங்களில் ஒளிந்து கொண்டிருக்கும் திறமைகளை வெளிக்கொணரலாம். இவ்வாறாக, அரசின் முறையான முயற்சிகள் விளையாட்டுக்களை இன்னும் சில ஆண்டுகளில் பெருமளவு முன்னேற்றமடையச் செய்யும்.

அனைத்து மாவட்டத் தலைநகர்களிலும் விளையாட்டு அரங்குகளைக் கட்ட அரசு உறுதி பூண்டுள்ளது. இன்றைய தினம் பன்னிரண்டு மாவட்டங்களில் விளையாட்டரங்கம் உண்டு. மேலும் மூன்று கட்டப்பட்டு வருகின்றன. மிகக் குறுகியக் காலத்தில் கட்டப்பட்ட எழிலார்ந்த ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம், நமது மாநில விளையாட்டு வீரர்களுக்குச் சர்வதேசத் தரம் வாய்ந்த மைதானத்தை வழங்குவதில் அரசாங்கத்திற்கு உள்ள ஈடுபாட்டைக் காட்டுகிறது.

விளையாட்டுத் துறையில் கூட்டு முயற்சிக்கான நேரம் வந்துவிட்டது. சர்வதேசத் தரம் வாய்ந்த விளையாட்டுத் தளங்களை உருவாக்க, தனியார் நிறுவனங்கள் முழு ஆதரவு வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். வருமான வரியில் சமீபத்தில் ஏற்படுத்தப்பட்ட திருத்தம் காரணமாக, கம்பெனிகள் தங்கள் இலாபத்தை விளையாட்டு மேம்பாட்டுத் திட்டங்களில் மறு முதலீடு செய்யலாம். அவர்கள் கட்டலாம்; சொந்தமாக்கிக் கொள்ளலாம்; நிர்வாகிக்கலாம். தனியார் துறையினரின் ஈடுபாடு அதிகமாவதற்கு இது போதுமான சலுகையாகும். இந்த சந்தர்ப்பத்தில், சர்வதேச விளையாட்டுத் தளங்களை மேம்படுத்துவதில் தலைமையேற்குமாறு நமது மாநிலத்திலுள்ள பெரிய நிறுவனங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏழாவது தெற்காசிய விளையாட்டுக்கள் 1995, நமது அண்டை நாடுகளின் சர்வதேசக் குழுக்களை உபசரிக்கும் அரிய வாய்ப்பினை நமக்கு வழங்கும். இதுவரை காணாத மிகப்பெரிய விளையாட்டு நிகழ்ச்சிகளைச் சென்னை மாநகரம் காணப் போகிறது. நமது மாநகரம் இப்பொழுதுதான் முதன் முறையாக 14 போட்டிகளில் 9 நாடுகள் பங்கேற்கப்போவதைக் காணப்போகிறது.

இதற்காக, சர்வதேசத் தரம் வாய்ந்த கூடுதல் அடிப்படை வசதிகளைச் செய்திட முடிவு செய்துள்ளது. நீச்சல் குள வளாகம், பன்னோக்கு உள்விளையாட்டரங்கம், ஓட்டப்பந்தயப் பாதை ஆகியவை உள்ளிட்ட தன்னிகரற்ற விளையாட்டு வளாகத்திற்கு, ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம் ஒரு முன்னோடியாகும். விரைவில், விளையாட்டு மருத்துவ நிலையத்துடன் கூடிய நூலகம், விளையாட்டு வளாகத்தை, ஒரு முன்மாதிரியான விளையாட்டு ஆதார நிலையமாக உருவாக்கும்.



பங்கேற்கும் அனைத்து நாடுகளும் ஒரு வாரத்தை, ஒன்றாக உண்மையான கலாச்சார பரிமாற்றத்தில் கழித்திட விளையாட்டுத் கிராமம் அற்புதமான இடமாக அமையும். நுங்கம்பாக்கத்திலுள்ள டென்னிஸ் ஸ்டேடியம், சர்வதேச டென்னிஸ் விளையாட்டு வீரர்களை உருவாக்கிய சென்னைக்கு ஒரு நிரந்தரப் பரிசாகும். மேயர் இரர்தாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் போடப்படவுள்ள ஆஸ்ட்ரோடர்ப் சென்னையில் முதன்முதலில் அமையவுள்ளது. இத்தகைய அடிப்படை வசதிகள் தமிழகத்தில் வளர்ந்துவரும் அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் பரபரப்பானதொரு எதிர்காலத்திற்குப் பாதை அமைத்துத் தரும். ஏற்கெனவே நிரூபிக்கப்பட்டுவிட்ட எங்கள் அரசின் சாதனைப் பின்னணியில், ஏழாவது தெற்காசியப் போட்டிகளுக்கு, நான் அடிக்கல் நாட்டிய அனைத்துத் திட்டங்களும் குறித்த காலத்தில் நிறைவேற்றப்படும் என நம்புகிறேன். சிங்கக் குட்டியை நமது சின்னமாக நிரந்தரமான விளையாட்டுச் சின்னமாகக் கொண்டு, ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் ஆரவாரமிக்க சர்வதேசப் போட்டியாகத் திகழும் எனக் கருதுகின்றேன். நமது தேசிய கௌரவத்தை உயர்த்தும் வண்ணம் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதை உறுதிசெய்ய அனைத்து முயற்சிகளையும் நாம் எடுப்போம். எனினும் நமது கனவு என்னவென்றால் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் அனுபவமும், சர்வதேசத் தரம் வாய்ந்த நிரந்தர அடிப்படை வசதிகளும் சேர்ந்து, தேசிய மற்றும் சர்வதேச அளவில் தமிழக விளையாட்டு வீரர்கள் முன்னணியில் நிற்கும் காலத்தை விரைவில் கொண்டுவரும். எனது அரசு தமிழகத்தில் விளையாட்டை வளர்ப்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளதென்பதை, பிரபல விளையாட்டு வீரர்கள் குழுமியுள்ள இந்தக் கூட்டத்தில் உறுதியாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சிந்தனையைத் தூண்டும் வகையில் பேசிய திரு. அஸ்வினி குமார், உற்சாகமளிக்கும்

# முதலமைச்சருக்குச் சர்வதேச ஒலிம்பிக் சங்க விருது



**வி**ளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் புரிந்த சேவைக் காகவும், உலகம் முழுவதும் சர்வதேசச் சுற்றுப்புறச் சூழல் ஆண்டாகக் கொண்டாடப்பட்ட 1993 இல் சுற்றுப்புறச் சூழல் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய அரும்பணிக்காகவும், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு 24.8.94 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் சிறப்பு விருது வழங்கப்பட்டது. சர்வதேச ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு சமரஞ்ச் சார்பில், சர்வதேச ஒலிம்பிக் சங்க உறுப்பினர் திரு அஸ்வினி குமார் இந்த விருதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார்.

விழாவில் திரு அஸ்வினி குமார் அவர்கள் பேசுகையில் "விளையாட்டுத் துறைக்கு அரிய சேவைகள் செய்து சாதனைகள் புரிந்துள்ள, உங்களது செயலாற்றல் மிக்க முதலமைச்சர், இந்தியாவில் மட்டுமின்றி சர்வதேச அளவிலும் புகழ்பெற்றுள்ளார்" என்று குறிப்பிட்டார்.

பேச்சையும், ஊக்கத்தையும், மதிப்புவாய்ந்த ஆலோசனைகளையும் நல்கினார். இந்த நூற்றாண்டின் இறுதியில், 2000வது ஆண்டில், ஒவ்வொரு ஆறாவது மனிதனும் இந்தியனாக இருப்பான் என்பதை நம் நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். மக்கள்தொகை வளர்ந்துவரும் விகிதத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் 2000வது ஆண்டில் ஒவ்வொரு ஆறாவது மனிதனும் இந்தியனாக இருப்பான். ஆனால் இது எண்ணி மகிழத்தக்க விஷயமா? இது மகிழ்ச்சிக்குரிய விஷயமா? இது பெருமைப்படக்கூடிய விஷயமா? நாம் அனைவரும் சிந்திக்க வேண்டிய விஷயம் இது. நம் நாட்டில் 80 கோடி மக்களின் மிகுந்த ஆற்றல் உள்ளது. நம் நாட்டில் மேம்படுத்தப் படாத ஆற்றல் நிறைய உண்டு.

தமிழ்நாட்டில் தலைசிறந்த 2 விளையாட்டு வீரர்களைப் பற்றி திரு. அஸ்வினி குமார் குறிப்பிட்டார். இலண்டனில், ஹெல்சின்கியில், மெல்போர்ன் ஒலிம்பிக்ஸில் தங்கப் பதக்கம் பெற்ற திரு. பிரான்சிஸ் பற்றிக் குறிப்பிட்டார். அவர் இப்போது எங்கே இருக்கிறார் எனத் தெரியவில்லை என்று கூறினார். திரு. பிரான்சிஸ் 1968ல் காவல்துறை ஆய்வாளராக ஓய்வுபெற்றார் என்று அவருக்குக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அவர் இப்போது உயிரோடு இல்லை. ஆனால் அவரது மருமகன் திரு. ராஜு இப்பொழுது சிறப்பு பாதுகாப்புக் குழு துணைக் காவல் துறைக் கண் காணிப்பாளராகப் (D.S.P.) பணியாற்றுகிறார். அவர் ஒரு மரியாதைக்குரிய பதவியில் எங்களுடன் இருக்கிறார்.

இரண்டாவதாக, திரு. அஸ்வினி குமார் திரு. ஜே.பி. ஜோசப் பற்றிக் குறிப்பிட்டார். டோக்கியோ ஆசியட் 1954ல் அவர் ஆசியத் தங்கப் பதக்கத்தைப் பெற்றவர். அவர் 1989ல் காவல் துறைக் கண்காணிப்பாளராக ஓய்வு பெற்றார். எங்களது இளைஞர்களிடையேயுள்ள ஏராளமான ஆற்றலைக் கொண்டு, நாங்கள் இன்னும் பல பிரான்சிஸ்களையும் ஜோசப் களையும் உருவாக்க இயலும். இதில் என் அரசாங்கம் மிகுந்த கவனம் செலுத்துகிறது. மாநில அளவில் விளையாட்டின் வளர்ச்சிக் காகவும் நம் மாநிலத்தில் வளர்ந்துவரும் விளையாட்டுத் திறமைகளுக்கு நிறையச் சந்தர்ப்பங்கள் வழங்கவும் எங்களால் முடித்த அனைத்தையும் நாங்கள் செய்து வருகின்றோம்.

இப்போது தேவைப்படுவதெல்லாம், இந்தியா முன்னேற தேசிய அளவில் ஓர் உறுதி. ஜப்பான் இதைச் செய்ய முடியுமானால், சீனா இதைச் செய்ய முடியுமானால், நிச்சயமாக நாம் இதைச் செய்ய முடியும். ஹிரோஷிமா அணுகுண்டு வெடிப்பினால் சிதைந்து போனதற்குப் பின்பு ஜப்பான் இதைச் செய்து முடித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். சீனா, பல்லாண்டுக் காலமாக, கலாச்சாரப் புரட்சி தீவிர சமூகக் குழப்பங்களைக் கடந்து வந்துள்ளது. சீனாவுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், அதைவிட நிலையான காலத்தை நாம் அனுபவித்திருக் கிறோம். இப்போதும் ஒரு அரசியலில் உறுதியான காலக் கட்டத்தை நாம் கடந்து கொண்டிருக்கிறோம். எனவே, நமக்குத் தேவைப்படுவதெல்லாம் சாதிக்க வேண்டு மெனும் மன உறுதி. விளையாட்டுத் திறமையை, ஆற்றலை இங்கே வளர்க்க வேண்டுமெனும் மன உறுதி - மட்டுமே. இந்தியாவின் மற்ற பகுதி களுக்குத் தமிழ்நாடு வழிகாட்டும் தலைமையேற் கும் என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நன்றி.

[illegible] இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



Verified M.

தூய
பட்டு
தூய
சரிகை





ஜகம்பீரமான ஊதா...
...ரப்பூபோல் சிகப்பு...
...கரமான மஞ்சள்...
...வெளிபோல் நீலம்...
...க் கடங்கா
... வண்ணங்களில்
...தியான பட்டு,
...வது கோ-ஆப்டெக்ஸ்.


தமிழர
Licence No. TN MS
YING OF THE F NDATION
UTH ASIAN FE RA ON


ING OF THE NDATION
H ASIA RA ON G